SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

ஆண்டறிக்கை 2023

# முன்னேற்றத்தின் இறக்கைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# உள்ளடக்கம்

மூலோபாயத் திசை ....................................................2

நிறைவேற்றுனர் மீளாய்வுகள்

தலைவரின் மீளாய்வு....................................................4

மூலதனச் சந்தை சீர்திருத்தல் நிகழ்ச்சிநிரல் 2023-2025 ....................................8

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு....................................10

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ....................................15

பணிப்பாளர்களும் உதவிப் பணிப்பாளர்களும் .............19

சிரேஷ்ட முகாமையாளர்கள்.............................................20

முகாமையாளர்கள் ...........................................................20

நிகழ்வு காட்சியகம் ..........................................................21

செயற்பாட்டு மீளாய்வு

மூலோபாய இலக்கு 1 .......................................................24

மூலோபாய இலக்கு 2.......................................................39

மூலோபாய இலக்கு 3.......................................................51

மூலோபாய இலக்கு 4.......................................................55

மூலோபாய இலக்கு 5.......................................................58

மேலதிகத் தகவல்கள் .......................................................63

நிதியியல் அறிக்கைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ..........................68

நிதி நிலைமைக் கூற்று....................................................73

நிதிச் செயற்திறன் கூற்று ................................................74

தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று..........75

காசுப் பாய்ச்சல் கூற்று ....................................................76

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் .............................77

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ..........................90

நிதி நிலைமைக் கூற்று....................................................94

நிதிச் செயற்திறன் கூற்று ................................................95

தீர்வை நிதியத்தில் மாற்றங்களிலான கூற்று................96

காசுப் பாய்ச்சல் கூற்று ....................................................97

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் .............................98

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ..........................103

நிதி நிலைமைக் கூற்று....................................................107

நிதிச் செயற்திறன் கூற்று ................................................108

இழப்பீட்டு நிதியத்தில் மாற்றங்களிலான கூற்று.........109

காசுப் பாய்ச்சல் கூற்று ....................................................110

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் .............................111

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ..........................116

நிதி நிலைமைக் கூற்று....................................................120

நிதிச் செயற்திறன் கூற்று ................................................121

தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று.......122

காசுப் பாய்ச்சல் கூற்று ....................................................123

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் .............................124

கூட்டாண்மைத் தகவல்கள்..............................................IBC

# முன்னேற்றத்தின் இறக்கைகள்

முன்னேற்றத்தின் இந்த இயக்காற்றலான நிலத்தோற்றத்தில், சாத்தியமான மாற்றத்திற்கான ஒரு வினையூக்கியின் பங்கினை நாம் பெருமையுடன் ஏற்றுக்கொள்கின்றோம். ஒரு நியாயமான, வினைத்திறனான மற்றும் நெறிமுறையான சூழலுக்கான ஒரு உறுதியான அர்ப்பணிப்புடன், நாம் முன்னேற்றத்தின் இறக்கைகளுடன் உயரப்பறந்து, வணிகங்கள் மற்றும் முதலீட்டாளர்களிடையே மூலதனப் பாய்ச்சலுக்கு வசதியளிக்கின்றோம்.

முன்னேற்றத்தின் எமது இறக்கைகள், பிணையங்கள் சந்தை முழுவதையும் முன்னோக்கி உந்தும் எமது தீர்மானத்தினை அடையாளப்படுத்துகின்றது. இந்த "இறக்கைகள்" முன்னோக்கி சிந்தித்தல் மற்றும் இணக்கத்திறன் கலாச்சாரத்தின் மூலம் வலுவளிக்கப்படுவதுடன், வளர்ச்சியின் புதிய வழிகளில் எமது பயணத்திற்கான உந்து சக்தியாக சேவையாற்றுகின்றது.

இந்த செயலூக்கமான நிலைப்பாடானது சந்தை போட்டித்தன்மையினை மேம்படுத்துவது மாத்திரமன்றி, பிணையங்கள் சந்தையின் எதிர்காலத்தினை வடிவமைப்பதில் எம்மை ஒரு முக்கிய பங்குபற்றுநராக நிலைப்படுத்தியுள்ளது. முன்னேற்றத்தின் எமது இறக்கைகளில் நாம் பறந்து செல்லும்போது, புத்தாக்கம் மற்றும் தொழில்துறை செழிக்கின்ற ஒரு எதிர்காலத்திற்கான கட்டடக் கலைஞராக நாம் மாறுகின்றோம்.

# மூலோபாயத் திசை

## தொலைநோக்கும் பணிக்கூற்றும்

### மூலோபாய இலக்குகள்

2023 ஆம் ஆண்டானது இ.பி.ப.ஆ. இன் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கு எமது முன்னுரிமைகளை வழிநடத்திய மூன்றாண்டு மூலோபாயத் திட்டத்தின் இறுதி ஆண்டாகக் காணப்பட்டது. இந்த ஆண்டறிக்கையானது எமது மூலோபாயத் திட்டத்தின் ஐந்து மூலோபாய கருப்பொருள்கள் ஒவ்வொன்றிலும் எமது முன்னேற்றத்திலான ஒரு புதுப்பிப்பினை வழங்குகின்றது.

**தொலைநோக்கு**

பிராந்தியத்தில் ஒரு அளவுகோலான மூலதனச் சந்தை முறைமைப்படுத்துபவர் நிலையினை அடைதல்

1. ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்
2. முதலீட்டாளர் நலன்களைப் பாதுகாத்தல்
3. மூலதனச் சந்தை அபிவிருத்தியினை வளர்த்தல்
4. அறிவுபூர்வமான முதலீட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்வதை மற்றும் மூலதனச் சந்தையிலான ஆர்வத்தினை ஊக்குவித்தல்
5. நிறுவன தனிச்சிறப்பினை மேம்படுத்துதல்

**பணிக்கூற்று**

நியாயமான, செயற்திறனான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான ஒரு மூலதனச் சந்தையினை ஊக்குவிப்பதற்கு, விருத்தி செய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு

**விழுமியங்கள்**

- புத்தாக்கம், ஆக்கத்திறன் மற்றும் அபிவிருத்தி
- நேர்மை, புறநிலைத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை
- பங்காளிகள் மற்றும் வாடிக்கையாளர் முன்னிறுத்தமான பொறுப்புக்கள்
- வினைத்திறன் மற்றும் நெகிழ்வுத்தன்மை
- செயற்திறன் மற்றும் தரத்தினால் உந்தப்பட்ட

# ஒரு பரந்த தோற்றம்

## நிறைவேற்றுநர் மீளாய்வுகள்

தலைவரின் மீளாய்வு 4 | மூலதனச் சந்தை சீர்திருத்தல் நிகழ்ச்சிநிரல் 2023-2025 8 | பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 10
ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் 15 | பணிப்பாளர்களும் உதவிப் பணிப்பாளர்களும் 19
சிரேஷ்ட முகாமையாளர்கள் 20 | முகாமையாளர்கள் 20 | நிகழ்ச்சி காட்சிக்கூடம் 21

# தலைவரின் மீளாய்வு

**இந்த சோதனையான நெருக்கடிக்கு மத்தியில், நாம் மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்தல், முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல், பொதுமக்கள் நலனை நிலைநிறுத்துதல், நிதியியல் குற்றங்களை குறைத்தல் மற்றும் ஒரு நியாயமான, ஒழுங்கான மற்றும் செயற்திறனான சந்தையினை நிலைநிறுத்தல் எனும் எமது பணியில் நிலையுறுதியாய் இருந்தோம்.**

கடந்த வருடத்தில் எமது நாட்டின் சுதந்திரத்திலிருந்து ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து உருவாகிய இணையற்ற சவால்களை தெளிவாக அவதானிக்கக்கூடியதாய் இருந்ததுடன், இவை எமது நிதியியல் சந்தைகள் மற்றும் நிறுவனங்களின் மீளெழுச்சியினை தீவிரமாக பரிசோதித்தது. இந்த சோதனையான நெருக்கடிக்கு மத்தியில், நாம் மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்தல், முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல், பொதுமக்கள் நலனை நிலைநிறுத்துதல், நிதியியல் குற்றங்களை குறைத்தல் மற்றும் ஒரு நியாயமான, ஒழுங்கான மற்றும் செயற்திறனான சந்தையினை நிலைநிறுத்தல் எனும் எமது பணியில் நிலையுறுதியாய் இருந்தோம்.

பொருளாதார நெருக்கடி பூராவும் நாம் முக்கிய விடயங்கள் மற்றும் முக்கிய முன்னுரிமைகளில் செயலூக்கத்துடன் பணியாற்றினோம். கடினமாக மற்றும் சிரமமான நேரங்களே, பிரதிபலிப்பு, எதிர்காலத்திற்கு தயாராவதற்கு நிறுவனங்களை மீள்கட்டியெழுப்பி தயார்படுத்தல் ஆகியவற்றுக்கு சிறந்த நேரங்களாகும் என நாம் நம்புவதுடன், இவை பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது ஆரம்ப ஆதாயங்களைப் பெறுவதற்காகும்.

ஒரு வலுவான மூலதனச் சந்தை சூழலமைப்பினை வளர்க்கும் எமது அர்ப்பணிப்பிற்கு இணங்க, நாம் 12 முக்கிய முன்னெடுப்புகளுடன் 2023-2025 காலத்திற்காக ஒரு விரிவான மூலதனச் சந்தை சீர்திருத்த நிகழ்ச்சிநிரலை அறிமுகப்படுத்தினோம். இவை பிணையங்கள் சந்தையில் வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் நிலைபேறுடைமையினை ஊக்குவிப்பதனை இலக்காகக் கொண்டதாகும். 2023 இற்கான ஒரு முக்கிய முன்னுரிமையாக நிறுவன கொள்திறன் கட்டியெழுப்பலை இனங்கண்டுள்ளதுடன், இது இ.பி.ப.ஆ. இன் ஒட்டுமொத்த வினைத்திறன் மற்றும் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்துவதற்கு, குறிப்பாக புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் கீழான அதன் முறைமைப்படுத்தல் பங்கு மற்றும்

**2023 இற்கான ஒரு முக்கிய முன்னுரிமையாக நிறுவன கொள்திறன் கட்டியெழுப்பலை இனங்கண்டுள்ளதுடன், இது இ.பி.ப.ஆ. இன் ஒட்டுமொத்த வினைத்திறன் மற்றும் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்துவதற்கு, குறிப்பாக புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் கீழான அதன் முறைமைப்படுத்தல் பங்கு மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகும்.**

பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகும். நேரகாலத்துடனான மற்றும் துரிதமான நடவடிக்கை அவசியமான இக்கட்டான பிரிவுகள் எமது செயற்பாடுகளின் மனித வளம் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளிலாகும். இவை கையகப்படுத்தல், தக்கவைத்தல், திறமை மற்றும் நிபுணர் மனித திறனது மறுசீரமைப்பு, முக்கிய வணிகச் செயன்முறையின் தன்னியக்கமாக்கல், நிபுணத்துவ நியமங்கள் நிறுவும் மற்றும் முறைமைப்படுத்தல் நிறுவனத்திற்கு பொருத்தமான தொழில்நுட்ப அமைப்புமுறையினை கொள்முதல் செய்தல், மற்றும் செயற்பாட்டு செயன்முறை வினைத்திறன்கள் நோக்கிய நிறுவன உருமாற்றல், செயற்திறன் நெறிப்படுத்தல் மற்றும் ஒரு கொள்கையான சந்தை நடத்தைக் கலாச்சாரம் என்பவற்றை உள்ளடக்கும். கொள்திறன் கட்டியெழுப்புதல் செயன்முறையானது எமது 3 முக்கிய செயற்பாட்டு தூண்களுக்கிடையே நிலவுகின்ற இடைவெளிகளை குறிப்பாக கவனத்திலெடுத்தது. சந்தை கண்காணிப்பு, புலனாய்வுகள் மற்றும் வலியுறுத்தல் என்பன இந்த 3 தூண்களாகும். ஆணைக்குழுவானது, இடைவெளிகளை விளித்துரைப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன், வெளிவாரி சூழல்களினால் வழங்கப்பட்ட சவால்களையும் கவனத்திலெடுத்தல் வேண்டும். எமது நிறுவன உருமாற்றல் முன்னெடுப்பானது எமது டிஜிட்டல் உருமாற்றல் முன்னெடுப்புடன் மூலோபாயமாக இடையிணைந்துள்ளது. இது பெறுமதி உருவாக்கம் மற்றும் இடர் தணிப்பு கண்ணோட்டங்கள் ஆகிய இரண்டிலிருந்தும் அர்த்தமுள்ள விளைவுகளை உருவாக்குவதற்காகும்.

சில சீர்திருத்த முன்னெடுப்புகள் வெற்றிகரமான நிறைவேற்றப்பட்ட வேளை, ஏனையவை திடமாக முன்னேறுகின்றன. டிஜிட்டல் உருமாற்றலின் தழுவலானது சீர்திருத்தல் நிகழ்ச்சிநிரலுக்கு மையமாக இருப்பதுடன், இது எமது சந்தை உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல் மற்றும் அனைத்து பங்காளிகளுக்குமான அணுகலை மேம்படுத்தல், ஒரு மூலாதாரங்கள் பரிவர்த்தனை, ஒரு காபன் வரவு பரிவர்த்தனை, ஒரு பல்நாணய பரிவர்த்தனையினை நிறுவுதல் என்பவை முக்கிய கூறுகளாகும். மேலும் உலகளாவிய நிலைபேறுடைமை இலக்குகளுக்கு இணையும்வேளை பன்முகமான முதலீட்டு வாய்ப்புகளுக்கு வசதியளிப்பதற்கான எது கடப்பாட்டின் ஒரு பகுதியாக புதிய கருவிகளின் அறிமுகம் உள்ளது.

சிறந்த ஆளுகை, சிறந்த வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மை, ஆகியவற்றை பின்தொடர்வதில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொ.ப.ப.) பரஸ்பரமற்றமயமாக்கல் சீர்திருத்தல் நிகழ்ச்சிநிரலில் முதல் முன்னுரிமையாக காணப்படுகின்றது. உலகில் ஒரு பரஸ்பரமான பரிவர்த்தனையாக செயற்படும் சில சந்தைகளில் எமது மூலதனச் சந்தையும் காணப்படுகின்றது. சந்தை நிறுவன மட்டத்தில் நிலைபேறுடைய நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை கட்டியெழுப்புவதற்கு பரஸ்பரமற்றமயமாக்கல் முக்கியமானதாகும். 2018 இலிருந்து அபிப்பிராய பேதங்களின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலத்தினை துரிதப்படுத்துவதற்காக நாம் 2023 இல் தீர்மானமான நடவடிக்கைகளை எடுத்தோம். பாராளுமன்றத்தினூடாக பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலத்தினை மீள்செயல்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் இப்போது பெறப்பட்ட ஒத்துழைப்பிற்கு நாம் பங்குத்தரகுத் துறைக்கு நன்றியினைத் தெரிவிக்கின்றோம். இந்த கூட்டு முயற்சியின் வெற்றியானது கொ.ப.ப. இன் எதிர்கால செயற்பாடுகளுக்கு சாத்தியமான விளைவுகளைக் கொண்டுவருவதுடன் அதன் அடுத்த கூட்டிணைவிற்கு அதனை உயர்த்துவதை இயலுமையாக்கும்.

ஒரு மெய்நேர சந்தை கண்காணிப்பு முறை மற்றும் ஒரு தன்னியக்கமாக்கப்பட்ட சந்தை மேற்பார்வை முறையினதும் கொள்முதலானது தற்போது செயன்முறையிலுள்ளதுடன், இது சந்தை கண்காணிப்பு மற்றும் சந்தை மேற்பார்வை ஆகிய இரண்டு முக்கியமான முறைமைப்படுத்தல் செயற்பாடுகளை பலப்படுத்துவதுடன், முறைமைப்படுத்தல் மேற்பார்வை செயன்முறையினை வலுப்படுத்தி முதலீட்டாளர் நலன்களை பாதுகாக்கும்.

கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து நாம் புத்தாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு உகந்த ஒரு சூழலை வளர்த்ததுடன், இது பல உருமாற்றல் முன்னெடுப்புகளினால் ஏற்படுத்தப்பட்டது. பிணையங்கள் கடன் பெறுதல் மற்றும் கடன் வழங்கல் (பி.க.பெ.க.வ.) ஊடாக முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனையினை (மு.கு.வி.) இயலுமையாக்கும் ஒரு முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை உருவாக்கினோம். இது சந்தை திரவத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்தும் ஒரு குறிப்பிட்ட மைல்கல்லாகும் என்பதுடன் இது முதலீட்டாளர்களுக்கு இடர் முகாமைப்படுத்தலுக்கான புதிய வழிமுறைகளை வழங்குகின்றது. பசுமை மற்றும் நீல முறிகள் உள்ளடங்கலான நிலைபேறுடைய முறிகளுக்கான ஒரு முறைமைப்படுத்தல்

**அரச உடைமை நிறுவனங்களின் (அ.உ.நி.) சீர்திருத்தத்தில் அரசாங்கத்தின் கொள்கைக்கு துணையளிப்பதில், அ.உ.நி. இன் பட்டியலிடலை இயலுமையாக்குவதற்காக ஒரு தனியான உருமாற்றல் பட்டியல் பலகையின் உருவாக்கத்தினை நாம் அங்கீகரித்தது. இது அ.உ.நி. துறையில் வெளிப்படைத்தன்மையினை ஊக்குவிப்பதற்கு மற்றும் சந்தையின் திரவத்தன்மையினை படிப்படியாக அதிகரிப்பதற்கான ஒரு முக்கியமான படியாகும்.**

# தலைவரின் மீளாய்வு

வரம்புறுகையின் உருவாக்கத்தினூடாக நாம் நிலைபேறுடமையினை பாதுகாக்கின்றோம். இவை முதலீட்டு வாய்ப்புக்களை பன்முகப்படுத்துவது மாத்திரமன்றி சூழல் மற்றும் சமூக பொறுப்பினையும் ஊக்குவிக்கும். ஷரியா இணக்கப்பாடான கடன் பிணையங்களின் அறிமுகத்துடன் நிதியியல் உள்ளடக்கத்திற்கான எமது அர்ப்பணிப்பானது தெளிவாகின்றது. இது நெறிமுறையான கொள்கைகளுடன் பொருந்தும்வேளை முதலீட்டாளர்களின் பன்முகமான தேவைகளுக்கு வசதியளிக்கின்றது. பொருளாதார வளர்ச்சியினை இயக்குவதில் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் பங்களிப்பின் முக்கிய பங்கினை அங்கீகரித்து, நாம் உட்கட்டமைப்பு முறிகளின் வழங்கல்களை இயலுமையாக்கியுள்ளதுடன், இது அவசியமான திட்டங்களுக்கான நீண்டகால நிதியியல் தீர்வுகளையும் வழங்குகின்றது.

அரச உடைமை நிறுவனங்களின் (அ.உ.நி.) சீர்திருத்தத்தில் அரசாங்கத்தின் கொள்கைக்கு துணையளிப்பதில், அ.உ.நி. இன் பட்டியலிடலை இயலுமையாக்குவதற்காக ஒரு தனியான உருமாற்றல் பட்டியல் பலகையின் உருவாக்கத்தினை நாம் அங்கீகரித்தோம். இது அ.உ.நி. துறையில் வெளிப்படைத்தன்மையினை ஊக்குவிப்பதற்கு மற்றும் சந்தையின் திரவத்தன்மையினை படிப்படியாக அதிகரிப்பதற்கான ஒரு முக்கியமான படியாகும். கொ.ப.ப. இல் அ.உ.நி. களை பட்டியலிடுதல் நிறுவனங்களுக்கு சிறந்த ஆளுகை வெளிப்படைத்தன்மை மற்றும் முதலீட்டாளர் அக்கறை என்பவற்றை பொறுத்தளவில் பல நலன்களை வழங்குகின்றது.

விழிப்புடனான கண்காணிப்பு மற்றும் முழுமையான புலனாய்வுகளூடாக ஆணைக்குழுவானது, மோசடியான நடவடிக்கைகள் அல்லது சந்தை கையாளுகையில் ஈடுபட்டுள்ளதாக கண்டறியப்பட்ட தனிநபர்கள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக விரைவான மற்றும் தீர்மானமான வலியுறுத்தல் நவடிக்கைகளை எடுத்தது. இந்த முயற்சிகள் சட்டத்தை நிலைநிறுத்துவதற்கும் மற்றும் சந்தை ஒழுக்கம் மற்றும் நேர்மையினை பாதுகாப்பதற்கான எமது அர்ப்பணிப்பிற்கான தெளிவான எடுத்துக்காட்டாக அமைகின்றது. 2023 இல், ஆணைக்குழுவானது பல வலியுறுத்தல் நடவடிக்கைகளை அங்கீகரித்ததுடன், இது நெறிமுறையற்ற, சட்டவிரோதமான, குற்றவியல் நடத்தையுடைய சந்தை சொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தவறுகள் மூலதனச் சந்தையினுள் பொறுத்துக்கொள்ளப்படாது என்ற திடமான செய்தியினை அனுப்புகின்றது. வலியுறுத்தலுக்கான எமது செயலூக்கமான அணுகுமுறையானது, ஒரு நியாயமான, வெளிப்படையான மற்றும் ஒழுங்கான சந்தைச் சூழலை வளர்க்கும் எமது அர்ப்பணிப்பினை வற்புறுத்துவதுடன், இங்கு எமது முறைமைப்படுத்தல் வரம்புறுகையின் நேர்மையில் முதுலீட்டாளர்கள் நம்பிக்கை கொள்ளலாம். இவ்வாண்டின்போதான ஒரு குறிப்பிடத்தக்க முன்னிறுத்தப் பிரிவாக, குறிப்பாக சமூக ஊடக வழிகளூடாக முதலீட்டு ஆலோசனையினை வழங்கும் உரிமமற்ற தனிநபர்களின் பெருக்கமாகும். அத்தகைய அங்கீகரிக்கப்படாத ஆலோசனையின் மூலம் ஏற்படுத்தப்படும் சாத்தியமான இடர்களை கருத்திற்கொண்டு, இ.பி.ப.ஆ. அத்தகைய தனிநபர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதற்கும் முதலீட்டு ஆலோசனை வழங்குவதனை ஆளுகை செய்யும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் பற்றி பொதுமக்களை கற்பிப்பதற்கும் செயலூக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

மூலதனச் சந்தையின் திசை மற்றும் பலாபலனை வடிவமைப்பதில் பங்காளிகளின் முக்கியத்துவத்தினை அறிந்து, நாம் பல்வேறு பங்காளிகளுடன் வழமையான ஈடுபாடு, கலந்துரையாடல், ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பிற்கு வசதியளித்தோம். சந்தை பங்குபற்றுநர்கள், துறைசார் சங்கங்கள், மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் அங்கங்களுடன், வழமையான ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மற்றும் வெளிக்களத் திட்டங்களின் ஊடாக நாம் பங்காளிகளது வெளித்தோன்றும் தேவைகள் மற்றும் சவால்களை புரிந்துகொள்வதற்கு முனைவதுடன், அதேவேளை முக்கியமான முறைமைப்படுத்தல் இற்றைப்படுத்தல்கள் மற்றும் வழிகாட்டிகளை பரப்புகின்றோம். உள்ளூர் வட்டத்திற்கு அப்பால், இ.பி.ப.ஆ. சர்வதேச பிணைங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பின் (ச.பி.ஆ.ஒ.) வருடாந்த கூட்டங்கள் உள்ளடங்கலான சர்வதேச மன்றங்களில் செயலூக்கமாக பங்குபற்றியதுடன், உலகளாவிய சந்தை மற்றும் முறைமைப்படுத்தல் நிலத்தோற்றத்தில் இலங்கையின் நிலையினை அதிகரிப்பதற்காக வினைத்திறனான பங்குடைமைகளை கட்டியெழுப்புதல் மற்றும் அறிவுப் பரிமாற்றங்கள் என்பற்றிலும் பங்கெடுத்தோம்.

விரிவான பங்காளிகள் ஆலோசனைகளூடாக, சந்தை பங்குபற்றுநர்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் முறைமைப்படுத்தல் எதிர்தரத்தவர்கள் உள்ளடங்கலாக, நாம் 2023 இல் கூட்டாண்மை ஆளுகையிலான விதிகளை விழிப்பாக மீளாய்வு செய்து இற்றைப்படுத்தினோம், இது 2008 இலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு விரிவான திருத்தமாகும். பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபை மற்றும் சபை குழுக்களின் ஆளுகை கட்டமைப்புகள், பங்குகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வற்புறுத்துவதற்காக எமது தொடர்ச்சியான முயற்சிகளில் கூட்டாண்மை ஆளுகை விதிகளிலான திருத்தமானது ஒரு முக்கிய மைல்கல்லாகும். இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் துறைக்கு இடையேயான ஒத்துழைப்பான முயற்சியானது, இலங்கையின் கூட்டாண்மை நிலத்தோற்றத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறையான பாரபத்தியமான ஒரு கலாச்சாரத்தினை வளர்ப்பதில் எமது கூட்டான தீர்மானம் பிரதபலிக்கப்படுவதுடன், இதன்மூலம் எமது பிணையங்கள் சந்தையில் முதலீட்டாளர் நம்பிக்கை, நம்பகத்தன்மை மற்றும் மீளெழுச்சியானது வலுவூட்டப்படுகின்றது.

இ.பி.ப.ஆ. இன் சந்தை மேற்பார்வை பங்கின் நிலைபேறுடமை மற்றும் பயனுறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக ஒரு செயலூக்கமான நடவடிக்கையாக, நாம் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கான உரிமமளித்தல் கட்டணத்தில் நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட திருத்தத்தினை முன்னெடுத்தோம். நிதியியல் துறையின் இயக்காற்றல் தன்மை மற்றும் வெளித்தோன்றும் முறைப்படுத்தல் தேவைப்பாடுகளை அறிந்து இந்த முன்னெடுப்பானது நடைமுறை சந்தை யதார்த்தங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களை உரிமமளித்தல் கட்டணங்களுடன் இணைப்பதற்கான நீண்டநாள் தாமதமானது விளித்துரைத்தது. ஒரு தசாப்தத்திற்கும் மேலாக எவ்விதமான யதார்த்தமான செம்மையாக்கலுமின்றி காணப்பட்டதன் பின்னர், இந்த திருத்தமானது தற்போதைக்கு ஓரளவிற்கு

**2024 பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான பாதையினை பொறுத்தளவில் ஒரு சவால்மிக்க ஆண்டாகக் காணப்படும். சுரங்கப்பாதையின் முடிவில் தெளிவாக ஒரு வெளிச்சம் உண்டு என்பதுடன், பொருளாதாரமானது சரியான பாதையில் உள்ளது. நேர்மறையான மற்றும் சாத்தியமான ஒரு மனநிலையானது இந்த நெருக்கடியிலிருந்து எம்மை விடுவிப்பதற்கு ஒரு முக்கியமான காரணியாகும்**

உரிமமளித்தல் கட்டண கட்டமைப்பிற்கு துணையளித்துள்ளது. முதலீட்டாளர் நம்பிக்கையினை நிலைநிறுத்துவதற்காக, இடர்களை தணித்து நெறிமுறையான வணிக நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக நாம் சந்தை இடையீட்டாளர்களுக்கு ஆகக்குறைந்த ஆளுகை நியமங்களை அறிமுகப்படுத்தினோம். இந்த நியமங்களின் அமுலாக்கலினூடாக, சந்தை இடையீட்டாளர்கள் மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் மற்றும் பொறுப்புக்கூறலுடன் செயற்படுதவற்கும் நெறிமுறையான வணிக நடத்தையினை உறுதிசெய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

பாடசாலை மட்டத்தில் மூலதனச் சந்தை விழிப்புணர்வினை வளர்ப்பதற்காக ஒரு இலட்சியமான முயற்சியில் நாம் இறங்கியுள்ளதுடன், இது ஒரு நிதியியல் அறிவுக் கலாச்சாரத்தினை உருவாக்குதில் கல்வியின் இன்றியமையாத பங்கினை அங்கீகரிக்கின்றது. நாடு பூராவும் நிதியியல் அறிவினை வளர்ப்பதில் நாம் முக்கியமான முன்னேற்றங்களை அடைந்தோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்களின் தொலைநோக்குடைய தலைமையில் கட்டப்படுகின்ற விதத்தில் நாம் ஒன்பது மாகாணங்களிலும் கவனமாக தெரிவுசெய்யப்பட்ட 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தை கழகங்களை முன்னெடுத்தோம். ஜனாதிபதி அவர்களினாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்ட முதலாவது கழகமானது எமது இளைஞர்களை அவசியமான நிதியியல் அறிவு மற்றும் திறனுடன் வலுவளிப்பதற்கான ஒரு அடையாள அர்ப்பணிப்பாக குறிப்பிடப்படுகின்றது. மேலும், நிதியியல் கல்வி முன்னெடுப்புகளை விரிவாக்கும் எமது தொடர்ச்சியான முயற்சிகளில் நாம் அரசாங்க பல்கலைக்கழகங்களின் மாணவர்களை இலக்குவைத்து பல்கலைக்கழக சமர்கள் எனப்படும் ஒரு மூலதனச் சந்தை புதிரை ஆரம்பித்தோம். இந்த புத்தாக்கமான திட்டமானது மூலதனச் சந்தைகளில், முதலீட்டுக் கொள்கைகளில், மற்றும் நிதியியல் முகாமைத்துவத்தில் மாணவர்களை ஈடுபடுத்தி, சவால் விடுத்து அவர்களது புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்கு முனைகின்றது. இந்த முன்னெடுப்புகளூடாக, நாம் ஒரு தகவலறிந்த முதலீட்டாளர்கள் சந்ததியினையும் பொறுப்பான நிதியியல் தீர்மானம் மேற்கொள்பவர்களையும் உருவாக்குவதற்கு எதிர்பார்ப்பதுடன், இது மிகவும் மீளெழுச்சியான மற்றும் ஒரு செழிப்பான எதிர்காலத்திற்கும் வழிவகுக்கும்.

2023 இல் காணப்பட்ட பொருளாதார சூறாவளியினை இ.பி.ப.ஆ. சமாளித்தது என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைவதுடன், நிறுவன மற்றும் சந்தை மட்டங்களில் யாதார்த்தமான முன்னுரிமைகளுடன் ஒரு அர்த்தமுள்ள சீர்திருத்தல் நிகழ்ச்சிநிரலை நிறுவியுள்ளதுடன் அதன் மேம்பட்ட பங்கு மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் நோக்கி காலத்திற்கேற்ற தீர்மானங்களையும் எடுத்தோம். 2023 இல் எமக்கு ஒரு தெரிவு காணப்பட்டது, அதாவது எங்கிருக்கிறோமா அங்கேயே இருப்பது அல்லது எதிர்காலத்திற்கு தயாரான, செயலூக்கமான, செயற்திறனான மற்றும் வினைத்திறனான மூலதனச் சந்தை முறைமைப்படுத்துபவர்களாக பிராந்தியத்தில் ஒரு அளவுகோளினை நிறுவுகின்ற அடுத்த கட்டத்திற்கு தாவுவதா என்பதாகும். நாம் 2023 இல் தாவுவதற்கான தெரிவினை உணர்வுபூர்வமாக மேற்கொண்டதுடன், 2024 இல் புதுப்பிக்கப்பட்ட வலிமை மற்றும் அர்ப்பணிப்புடன் அந்தப் பாதையினை தொடர்வோம்.

2024 பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான பாதையினை பொறுத்தளவில் ஒரு சவால்மிக்க ஆண்டாகக் காணப்படும். சுரங்கப்பாதையின் முடிவில் தெளிவாக ஒரு வெளிச்சம் உண்டு என்பதுடன், பொருளாதாரமானது சரியான பாதையில் உள்ளது. நேர்மறையான மற்றும் சாத்தியமான ஒரு மனநிலையானது இந்த நெருக்கடியிலிருந்து எம்மை விடுவிப்பதற்கு ஒரு முக்கியமான காரணியாகும். தற்போதைய நெருக்கடியானது எமது சரியான திசையுடன் வெளிவருவதற்கான ஒரு சந்தர்ப்பத்தினை எமக்கு வழங்குகின்றது என்பதுடன் நாம் அதனை செய்தல் வேண்டும். நீண்டகால ஸ்திரத்தன்மை நோக்கி சரியான காரியங்களை செய்வதற்கான நேரம் இதுவாகும்.
நாம் முன்னோக்கிப் பார்க்கும்போது, முதலீட்டாளர்களை பாதுகாத்தல், பொதுமக்களின் அக்கறைகளை பாதுகாத்தல், வழங்குநர்கள், சந்தை பங்குபற்றுநர்கள் மற்றும் பங்காளிகளை வழிநடத்துதல் மற்றும் துணையளிப்பதில் எமது அர்ப்பணிப்பில் நாம் அசைக்கவியலாது இருப்போம் மற்றும் சிறந்த ஆளுகை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறையான நடைமுறைகள் கொள்கைகளை நிலைநிறுத்துவோம்.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள், பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலகத்தின் அனைத்து பணியாட்களுக்கும் இ.பி.ப.ஆ. இன் பணிக்கு அவர்களது தனித்தனியான அர்ப்பணிப்பிற்கும், அயராத முயற்சிகளுக்கும் கூட்டான பங்களிப்பிற்கும் நான் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் நான் மான்புமிகு ஜனாதிபதி மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றம் தேசிய கொள்கைகளின் அமைச்சர், இராஜாங்க நிதி அமைச்சர், நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர்களது வழிகாட்டுதலுக்கும் உறுதுணைக்கும் மற்றும் துறையிலுள்ள எமது அனைத்து பங்காளிகளுக்கும் அவர்களது ஒத்துழைப்பு மற்றும் உறுதுணைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வைசால் சாலி**
தலைவர்

17 ஏப்ரல் 2024

# மூலதனச் சந்தை சீர்திருத்தல் நிகழ்ச்சி நிரல் 2023-2025

### கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல்

ஒரு செயற்திறனான மற்றும் வினைத்திறனான பங்குப் பரிமாற்றகத்தின் செயற்பாட்டிற்குத் தேவையான ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்புகளை பரஸ்பரமற்றமயமாக்கல் விளைவிக்கும். பங்குப் பரிவர்த்தனைகள் அவை அதிகரித்த போட்டித்தன்மையான சூழலில் இருப்பதனை கருத்திற்கொண்டு மற்றும் இலங்கையின் மூலதனச் சந்தையின் முன்னேற்றத்திற்கு அவசியமானதாகும்.

### மெய்நேர சந்தை கண்காணிப்பு முறைமை

எமது மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் பங்கின் வினைத்திறனை மேம்படுத்தி கண்காணித்தல் செயற்பாட்டிற்கு துணைபுரிதல் ஒரு தீவிரமான முக்கியமான கூறாகும்.

### டிஜிட்டல் உருமாற்றம்

இ.பி.ப.ஆ. இன் மையமான செயற்பாடுகளை டிஜிட்டல் ரீதியாக உருமாற்றுதல்

### முறைமைப்படுத்துபவர் மட்டத்தில் மற்றும் சந்தை இடையீட்டாளர் மட்டத்தில் கொள்திறனைக் கட்டிபெழுப்புதல்

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் பங்கு மற்றும் பொறுப்புக்களின் பயனுறுதி மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு அவசியமான உள்ளக கொள்திறனை கட்டியெழுப்புதல் மற்றும் சந்தை இடையீட்டாளர்களின் கொள்திறன் மற்றும் நியமங்களை மேம்படுத்துதல்.

### அரச உடைமை நிறுவனங்களின் பட்டியலிடலினை இயலுமையாக்குதல்

ஒரு இயலுமையாக்கும் வரம்புறுகையின் ஊடாக அ.உ.நி. இன் பட்டியலிடலுக்கு வசதியளித்தல்.

### வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக ஒரு பல்நாணய பரிமாற்றகத்தினை நிறுவுதல்

போர்ட் சிட்டியில் ஒரு பல்நாணய பிணையங்கள் சந்தையினை நிறுவுவதற்கு வசதியளித்தல். இது பல் நாணயங்களில் குறிப்பிடப்பட்ட பிணையங்களின் வர்த்தகத்தினை இயலுமையாக்கும்.

### ஒரு மூலாதாரப் பரிவர்த்தனையினை நிறுவுதல்

ஒரு பல் சொத்து வகுப்பு மூலாதார பரிவர்த்தனையினை நிறுவுவதற்கான ஒரு முறைமைப்படுத்தல் வரம்புறுகைக்கு வசதியளித்தல்.

### ஆதனத்துறை முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புகள் (REITs)

REITs இனை வழங்குவதற்கான ஒரு உகந்த சூழலுக்கு வசதியளித்தல்.

### உட்கட்டமைப்பு முறிகள்

சந்தையில் உட்கட்டமைப்பு முறிகளின் அறிமுகத்திற்கும் பட்டியலிடலுக்கும் இயலுமையான முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை நிறுவுதல்.

### வலுவளித்தல் பலகை

மூலதனச் சந்தையில் சி.ந.நி. இன் பட்டியலிடலை இனங்காண்பதற்கு, கற்பிப்பதற்கு மற்றும் வசதியளிப்பதற்கு கொ.ப.ப. இனை இயக்குதல்.

### புதிய கருவி அபிவிருத்தி

நிலைபேறுடைய முறிகள், இஸ்லாமிய மூலதனச் சந்தைக் கருவிகள், உரித்துவ கூட்டுநிதி நல்கை மேடைகள் போன்றவற்றின் அறிமுகத்திற்கும் பட்டியலிடலினை இயலுமையாக்கும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை நிறுவுதல்.

### பாடசாலை மட்டத்தில் மூலதனச் சந்தை விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல்

கல்வித் திட்டங்களினூடாக மாணவர்களிடையே நிதியியல் அறிவினை பகிர்ந்து ஒரு திடமான எதிர்கால முதலீட்டாளர்கள் சந்ததியினை கட்டியெழுப்புதல்.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

"இலங்கை ஏனைய நாடுகளின் வெற்றிகரமான சீர்திருத்தத் திட்டங்களிலிருந்து கற்றுகொள்ள இயலும். அவை பொருளாதார வளர்ச்சியினை அடைதல் மற்றும் அரச துறை பருமனைக் குறைப்பதன் மூலம் ஸ்திரத்தன்மையடைதல், வினைத்திறன் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துதல் மற்றும் போட்டியினை ஊக்குவித்தல் என்பவற்றை அடைவதனை நோக்கியிருந்தன."

2023 ஆம் ஆண்டானது நாட்டிற்கு ஒரு நிலைமாற்றமான ஆண்டாகக் காணப்பட்டது. இலங்கை இவ்வாண்டின்போதான மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மெல்ல மெல்ல மீட்சியடைய ஆரம்பித்தது. மார்ச் 2023 இல், சர்வதேச நாணய நிதியமானது (ச.நா.நி.) பொருளாதார ஸ்திரத்தன்மையினை மீட்டெடுப்பதற்காக ஒரு USD 2.9 பில்லியன் நான்கு வருட மீட்புத் திட்டத்தினை அங்கீகரித்தது.

எவ்வாறாயினும், இலங்கையின் பொருளாதார மீட்டலுக்கான பாதை 2023 இல் பாரிய சவால்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. இவ்வருடமானது அர்ப்பணிப்பான, வெளிப்படையான மற்றும் மூலோபாயத் தெரிவுகளை மேற்கொள்வதன் மதிப்பினை சுட்டிக்காட்டியது. சவால்களை சமாளிப்பதற்கும் இந்த நிதியியல் மற்றும் பொருளாதார இக்கட்டான நிலையினை வெற்றிகொள்வதற்கும், எந்த சீர்திருத்தங்கள் தேவையானது மற்றும் அவை எவ்வாறு மேற்கொள்ளப்படலாம் என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாக வந்தது.

தேவையான சீர்திருத்தங்கள், பொது நிதியியல் முகாமைத்துவத்தினை பலப்படுத்துதல், உள்ளூர் வளங்கள் திரட்டலை மேம்படுத்துதல், அரச உடைமை நிறுவனங்களின் (அ.உ.நி.) நிதியியல் சுமையினை குறைப்பதற்கு அவற்றின் செயற்திறனை மேம்படுத்துதல் மற்றும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதனூடாக தனியார் துறை நடவடிக்கைகளை ஊக்கமளித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இருந்தாலும், பொருளாதார சீர்திருத்தங்களை அமுலாக்குவதிலான அளவுகடந்த தாமதமானது 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட சிக்கலாகும். உதாரணமாக, அ.உ.நி. இன் மீள்கட்டமைப்புச்

> **இந்தச் சூழமைவில், மூலதனச் சந்தையானது, வங்கிகளுடன் ஒப்பிடும்போது வணிக நிறுவனங்களுக்கான நீண்டகால மூலதன நிதிகளை திரட்டுவதற்கான உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேடையாக காணப்படுகின்றது.**

செயன்முறையின் தாமதமானது, அது பொது மக்களுக்கு கணிசமான பாரியபொருளாதார விளைவுகளுடன் ஒரு கனமான நிதியியல் சுமையினை உருவாக்கி ஆபத்தானதாக மாறியது.

இலங்கை ஏனைய நாடுகளின் வெற்றிகரமான சீர்திருத்தத் திட்டங்களிலிருந்து கற்றுகொள்ள இயலும். அவை பொருளாதார வளர்ச்சியினை அடைதல் மற்றும் அரச துறை பருமனைக் குறைப்பதன் மூலம் ஸ்திரத்தன்மையடைதல், வினைத்திறன் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துதல் மற்றும் போட்டியினை ஊக்குவித்தல் என்பவற்றை அடைவதனை நோக்கியிருந்தன. இந்த நகர்வானது நேரடியாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதிலும் பார்க்க பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதிலும் முறைமைப்படுத்துவதிலும் முழுக் கவனஞ்செலுத்துவதற்கு அரசாங்கத்தினை அனுமதிக்கின்றது.

இந்தச் சூழமைவில், மூலதனச் சந்தையானது, வங்கிகளுடன் ஒப்பிடும்போது வணிக நிறுவனங்களுக்கான நீண்டகால மூலதன நிதிகளை திரட்டுவதற்கான உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேடையாக காணப்படுகின்றது. மேலும், மூலதனச் சந்தையானது பட்டியலிடல் செயன்முறையினூடாக வணிகங்களுக்கு மூலோபாய மற்றும் ஏனைய வகையான முதலீட்டாளர்களை கவர்வதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. பங்குப் பரிவர்த்தனையில் பட்டியடலிடுவதன் மூலம் இந்த அ.உ.நி. அவற்றின் உள்ளக ஆளுகை, செயற்பாட்டு வினைத்திறன்களை மேம்படுத்தி வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீட்டாளர் மூலதனத்தினை கவரக்கூடியதாகவும் இருக்கும்.

அந்தச் சூழமைவில், இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியன அ.உ.நி. துறையில் நிலவுகின்ற நடைமுறை மட்டத்திலான ஆளுகை, நிறுவனக் கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு சவால்கள் என்பவற்றுக்கு உரிய கவனத்தையளித்து, ஒரு தனியான பட்டியலிடல் பலகை மற்றும் பட்டியலிடல் விதிகளை உருவாக்கின. இது அ.உ.நி. தற்போதுள்ள நிலையிலிருந்து அவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்னும் முன்னேற்றகரமான நிலைமாற்றலினை இயலுமையாக்கும் நோக்கத்திலாகும். எவ்வாறாயினும், அ.உ.நி. இந்த பாதையினை இன்னமும் பயன்படுத்தவில்லை.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டெழுவதற்கான ஒரே வழி அடுத்த பத்து வருடங்களில் ஒரு கணிசமான பொருளாதார வளர்ச்சியான ஐந்து முதல் ஏழு சத வீதம் வரை அல்லது அதற்கு மேலாக அடைவதனூடாக என்பது இப்போது மிகவும் தெளிவாகின்றது. எவ்வாறாயினும், நாம் இன்று பார்க்கும் எண்களிலிருந்து எதிர்வரும் வருடங்களில் பொருளாதாரமானது ஒரு கணிசமான வீதத்தில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கவில்லை என்பதுடன், அது மிகவும் பலவீனமான மற்றும் ஒரு இடர் செறிந்த நிலைமையிலேயே இருக்கும். அத்தகைய ஒரு நிலவரத்தில், முறையாகப் பயன்படுத்தப்பட்டால் மூலதனச் சந்தை ஒரு வினையூக்கியாக இருக்கலாம்.

உதாரணமாக, இலங்கையின் பொருளாதார மீட்டலை இயக்குவதில், டொலர் உழைக்கும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கலாம். இந்த கருத்தில், எமது ஏற்றுமதி சார்ந்த டொலர் உழைக்கும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சாத்தியம், இயக்கம் மற்றும் கடப்பாட்டினை பார்ப்பதன் மூலம் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேரம் இதுவாகும். எனவே, அத்தகைய வெற்றியாளர்களை நாம் ஊக்கமளித்து போஷிக்கவேண்டும் என்பதுடன் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு முன்னேற்றத்தினை மேற்கொள்வதற்கு அத்தகைய கம்பனிகளை வெளியில் சென்று உலகளாவிய மாபெரும் நிறுவனங்களுடன் போட்டியிடுவதற்கான சுதந்திரத்தை வழங்குவதன் மூலம் எமது நாட்டின் முழுத் தோற்றத்தையும் மாற்றவியலும். அது எம்மை ஒரு இயக்காற்றலான முயற்சியாண்மை நாடாக மாற்றுவதுடன், நாடு அதன் உண்மையான உள்ளாற்றலை எய்தப்பெறுவதற்கு துணைபுரியும்.

இருந்தாலும், தற்போது அறிமுகப்படுத்தப்படுகின்ற நன்கு கட்டமைக்கப்பட்ட, கணிசமான பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அனைத்து பிரிவினரும் துணையளித்தல் வேண்டும் என்பதில் எவ்விதமான கேள்வியும் இல்லை என்பதுடன், இந்த நெருக்கடியினை பயன்படுத்தி முன்னெப்போதும் மேற்கொண்டிராத முயற்சியினை மேற்கொண்டு அரச உடைமை நிறுவனங்களின் மீள்கட்டமைப்பிற்கு பின்னடைவான மானியங்களை விளித்துரைத்தல் வேண்டும்.

இந்தப் பின்னணியில், அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் இ.பி.ப.ஆ. இனால் பொறுப்பேற்கப்பட்ட பணியினை நான் அதிக திருப்தியுடன் மீளாய்வு செய்கின்றேன்.

## சந்தைச் செயற்திறன்

இக்காலத்தின்போது, அனைத்து பங்கு விலைச்சுட்டி (அ.ப.வி.சு.) 2022 உடன் ஒப்பிடும்போது இருபத்தைந்து சத வீதத்திற்கும் (25%) அதிகமான வளர்ச்சியினைக் கண்டது. 2022 ஆம் ஆண்டின்போது பதிவுசெய்யப்பட்ட நட்டங்களில் அனேகமானவற்றை அழிப்பதற்கு இ.ப.வி.சு. இன் மீளுருவாக்கம் உதவியது. அதேபோன்று, S&P SL 20 சுட்டி பதினாறு சதவீதத்திற்கும் (16%) அதிகமான வளர்ச்சியுடன் சாத்தியமான வருடத்தினை நிறைவுசெய்தது. மாறாக, 2023 இல் நாளாந்த சராசரி புரள்வானது ரூபா 1.69 பில்லியனாகக் குறைவடைந்தது. மூலதன உருவாக்கலில் பிணையங்கள் சந்தையானது முன்னணியில் காணப்படுவதுடன் இது மீளாய்வாண்டின்போது ரூபா 56.7 பில்லியனை திரட்டுவதற்கு உதவியது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வமாகக் காணப்பட்டதுடன் 2023 இல் மொத்த தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலானது ரூபா 6

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

## இ.பி.ப.ஆ. இன் நடவடிக்கைகள் இரு மடிப்புக்களைச் சுற்றியுள்ளது, அதாவது, முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தியாகும். புதிய மூலதனச் சந்தை சீர்திருத்தங்கள் நிகழ்ச்சிநிரல் 2023-2025 ஆனது இவ்விரு அம்சங்களையும் முழுவதுமாக சூழ்ந்துகொண்டுள்ளதுடன், மூலதனச் சந்தையின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளுக்கு வசதியளிக்கும்

பில்லியன் இலக்கினைக் கடந்தது. மேலும், இவ்வாண்டில் மொத்த சந்தைப் புரள்விற்கான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பில் ஒரு சிறிய அதிகரிப்பு காணப்பட்டவேளை, வருடம் பூராவும் உள்ளூர் முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் சந்தை நடவடிக்கை மட்டங்களில் ஒரு ஆதிக்கமான பங்கினை வகித்தார்கள். மொத்த உள்ளூர் உற்பத்திக்கு (மொ.உ.உ.) சந்தை மூலதனவாக்கமானது ஒரு மத்திமமான மட்டத்தில் 18% ஆக காணப்பட்டது.

இந்தச் சூழமைவில், இ.பி.ப.ஆ. இல் உள்ள நாம் நாட்டில் மூலதனச் சந்தை அடிச்சுவட்டினை மேம்படுத்தும் நோக்கில் வலுவான முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றோம். ஒரு ஆழமான மற்றும் திரவத்தன்மையான சந்தையினை கட்டியெழுப்புவதற்கான திறவுகோலாக சந்தையில் முதலீட்டாளர் நம்பிக்கையினையும் நம்பகத்தன்மையினையும் கட்டியெழுப்புதல் காணப்படுகின்றது. வணிகங்கள் அவற்றின் மூலதனத் தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு ஒரு நிதியளித்தல் மூலமாகவும் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டிற்கான வழிகளை உருவாக்குவதிலும் மூலதனச் சந்தை ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது என்பதனை புரிந்துகொள்வது முக்கியமாகும்.

### கூட்டாண்மை ஆளுகை நடப்புமுறையினை பலப்படுத்துதல்

தற்போதைய சூழமைவில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் கூட்டாண்மை ஆளுகை விதிகளை மறுசீரமைப்பது அவசியமாகும். பலவீனமான ஆளுகைக் கட்டமைப்பானது ஒரு நிறுவனத்திற்கு அதன் செயற்பாட்டு நிலைமையினை மோசமடையச் செய்யலாம். நிதியியல் நெருக்கடியின்போது பலவீனமான ஆளுகைக் கட்டமைப்பினைக் கொண்ட கம்பனிகள் நின்றுபிடிப்பதற்கு தவறியவேளை வலுவான கூட்டாண்மை ஆளுகையினைக் கொண்ட கம்பனிகள் மீளெழுச்சியுடன் இருப்பதற்கு இயலுமையாயிருந்தது மிகவும் தெளிவாகின்றது.

விதிகளின் உள்ளடக்கத்தின் தகவல்களை வழங்குவது முக்கியமானதாகும் ஏனெனில், இது சந்தையின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கும் முக்கியமானதாகும். இந்த நோக்கத்தோடு கூட்டாண்மை ஆளுகை விதிகள் பலப்படுத்தப்பட்டன. இந்த மாற்றங்களை தழுவுவதற்கு துறையினால் காண்பிக்கப்பட்ட சாத்தியமான அணுகுமுறையினை நான் பாராட்டுக்கின்றேன்.

தற்போது, கூட்டாண்மை ஆளுகை விதிகளுக்கு அப்பால், பட்டியலிடல் விதிகளின் ஏனைய அம்சங்களும் மேலதிக மேம்பாடு மற்றும் மீள்வலியுறுத்தலுக்காக பரிசீலிக்கப்பட்டுக்கொண்டுள்ளன

### செயலூக்கமான மற்றும் தடுப்புக்குரிய தலையீடுகள்

மீளாய்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. இன் கண்காணிப்பு, மேற்பார்வை, புலனாய்வு மற்றும் வலியுறுத்தல் திணைக்களங்கள் பலப்படுத்தப்பட்டதுடன், சந்தை துர்நடத்தைகளை தடுப்பதற்கு விரைவான விதத்தில் வலியுறுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இ.பி.ப.ஆ. இன் நிலைப்பாட்டிலிருந்து நாம் சந்தையினை திருத்தியமைத்து சந்தை செயற்படும் விதத்தில் மிகவும் தெளிவு, நிலைத்தன்மை மற்றும் முன்கணிப்புத்தன்மையினை கொண்டு வந்து சந்தை துர்நடத்தை விடயங்களை விரைவாகவும் தீர்மானமாகவும் விளித்துரைக்கவுள்ளோம்.

கடந்த ஆண்டின்போது இ.பி.ப.ஆ. கணிசமான எண்ணிக்கையிலான வலியுறுத்தல் நடவடிக்கைகளை எடுத்தது. வலியுறுத்தல் பதிவுகள் பல குற்ற வழக்கீடு தீர்மானங்கள், வழக்குகளைத் தாக்கல் செய்தல், ஒத்திணங்குதல் மற்றும் ஏனைய வலியுறுத்தல் வழிமுறைகளை உள்ளடக்கின. மேற்கொள்ளப்பட்ட வலியுறுத்தல் நடவடிக்கைகள் உயர்ந்த வினைத்திறனாக இருந்ததுடன் அவை இவ்வாண்டின்போதான சந்தை துர்நடத்தைகளை கணிசமாக குறைத்தது.

மேலும், சமூக ஊடகங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக இ.பி.ப.ஆ. ஒரு திடமான பொறிமுறையினை நிறுவியுள்ளது. சந்தை குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், இது எச்சரிக்கைக் கடிதங்கள் மற்றும் முன்னெச்சரிக்கைக் கடிதங்களையும் மேலதிக நடவடிக்கை எடுப்பதனையும் உள்ளடக்கும்.

இவ்வாண்டின்போது, மேற்பார்வைத் திணைக்களமானது உரிமம் வைத்திருப்பவர்கள் முறைமைப்படுத்தப்பட்ட வரம்புறுகையினுள் அவர்களது வணிகத்தை நடாத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக பல தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான பரிசீலனைகளை நடாத்தியது. தொடர்ச்சியான வழமையான கண்காணிப்பானது அடிப்படையில் முறைமைப்படுத்தும் நியமங்களை அவர்கள் சந்திப்பதனை உறுதிப்படுத்துகின்றது.

கூட்டாண்மை ஆளுகை விதிகளின் திருத்தம் போன்று, சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான ஆகக்குறைந்த ஆளுகைத் தேவைப்பாடுகளை இ.பி.ப.ஆ. வழங்கியது. இந்த வரம்புறுகையானது சந்தை இடையீட்டாளர்களின் நியமங்களை உயர்த்துவதற்கு மிகவும் தேவையான உத்வேகத்தினை வழங்கும்.

எந்தவொரு நிறுவனத்தினதும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஒரு நிறுவனத்தினை மேம்படுத்துவதில் மூலைக்கல்லாக செயலாற்றுகின்றார்கள். ஒரு கம்பனியில் அவர்கள் வகிக்கும் அவசியமான பங்கினைக் கருத்திற்கொண்டு, இ.பி.ப.ஆ., சந்தை இடையீட்டாளர்களின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுவதற்கான ஒரு வரம்புறுகையினை முறைப்படுத்தியது. அத்துடன் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணாத முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு நியமமாக்கப்பட்ட அணுகுமுறையும் விருத்திசெய்யப்பட்டது.

மேலும், இவ்வாண்டின்போது இ.பி.ப.ஆ. இன் புலனாய்வுகள் கையேடானது ஒரு புதிய புலனாய்வு மற்றும் வலியுறுதல் கையேட்டினால் மாற்றீடு செய்யப்பட்டது. இந்தக் கையேடானது புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் அதிகாரத்திற்குள் வருகின்ற புதிய வலியுறுத்தல் முறைகளை புகுத்தியது. இக்கையேடானது புலனாய்வுகளை நடாத்துவதில் இ.பி.ப.ஆ. இனால் எடுக்கப்பட்ட நியமமாக்கப்பட்ட, வெளிப்படைத்தன்மையான அணுகுமுறையினை மேலும் பலப்படுத்தி

மேம்படுத்துகின்றது. இந்த இறுதி முன்னெடுப்புகளின் இறுதிக் குறிக்கோளானது எமது சந்தையின் நேர்மையினை உயர்த்துவதற்காகும் ஏனெனில், இது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும்.

## பன்முகமான மூலோபாய அணுகுமுறை

இ.பி.ப.ஆ. இன் நடவடிக்கைகள் இரு மடிப்புக்களைச் சுற்றியுள்ளது, அதாவது, முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தியாகும். புதிய மூலதனச் சந்தை சீர்திருத்தங்கள் நிகழ்ச்சிநிரல் 2023-2025 ஆனது இவ்விரு அம்சங்களையும் முழுவதுமாக சூழ்ந்துகொண்டுள்ளதுடன், மூலதனச் சந்தையின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளுக்கு வசதியளிக்கும். பன்னிரண்டு முக்கிய சீர்திருத்தங்கள் பின்வருமாறு அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### ▪ இ.பி.ப.ஆ. இற்கு தனித்தனியான மெய்நேர கண்காணிப்பு அமைப்புமுறை

இது இ.பி.ப.ஆ. இன் மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் பங்கின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான ஒரு தீவிரமான முக்கியமான கூறாகக் கருதப்படுகின்றது. மேலும், புதிய அம்சங்களுடனான வலுவான கண்காணிப்பு அமைப்புமுறைகள் தற்போதைய அதிகரித்த வர்த்தகப் பருமன்களை சந்திப்பதற்கு வசதியளிப்பதுடன் செயற்திறனான மற்றும் வினைத்திறனான சந்தை கண்காணிப்பினை பலப்படுத்தி சரியான நேரத்திலான தலையீடுகளை பலப்படுத்தும்.

### ▪ டிஜிட்டல் உருமாற்றம்

இ.பி.ப.ஆ. பெரும்பாலும் தாள்களற்ற சூழலினூடாக செயலாற்றுவதற்கு முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் இரண்டையும் டிஜிட்டல் மயமாக்குவதில் முன்னிறுத்தம் செய்தது.

**இ.பி.ப.ஆ. பெரும்பாலும் தாள்களற்ற சூழலினூடாக செயலாற்றுவதற்கு முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் இரண்டையும் டிஜிட்டல் மயமாக்குவதில் முன்னிறுத்தம் செய்தது**

சீர்திருத்தத்தின் கீழான முக்கிய முன்னெடுப்புகளில் சில முறைமைப்படுத்தல் அறிக்கையிடலுக்கான இ-கோப்பிடல் முறையின் டிஜிட்டல் மயமாக்கலை உள்ளடக்குகின்றது. சந்தை இடையீட்டாளர்கள் அவர்களது அறிக்கைகளை இயங்கலையூடாக ஒரு தரப்படுத்தப்பட்ட அமைப்புமுறையினூடாக சமர்ப்பிப்பதனை இயலுமையாக்குகின்றது.

### ▪ கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல்

ஒரு செயற்திறனான மற்றும் வினைத்திறனான பங்குப் பரிமாற்றகத்தின் செயற்பாட்டிற்குத் தேவையான ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்புகளை பரஸ்பரமற்றமயமாக்கல் வழங்கும்.

### ▪ முறைமைப்படுத்துபவர் மட்டத்தில் மற்றும் சந்தை இடையீட்டாளர் மட்டத்தில் கொள்திறனைக் கட்டிபெழுப்புதல்

முறைமைப்படுத்தல் மட்டத்தில் மற்றும் சந்தை இடையீட்டாளர் மட்டத்தில் கொள்திறனைக் கட்டியெழுப்புதல் புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் சட்டமயமாக்கலுடன் தீவிரமாக முக்கியமானதாக வந்துள்ளது. இந்த சீர்திருத்தத்தின் கீழ் வருகின்ற முன்னெடுப்புகளுள் சில, இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் செயற்பாடு மற்றும் பொறுப்புக்களின் பயனுறுதித்தன்மை மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கு உள்ளகக் கொள்திறனை கட்டியெழுப்புதல், சந்தையின் ஒட்டுமொத்த செயற்பாட்டு தரங்களை மேம்படுத்துவதற்காக சந்தை இடையீட்டாளர்களின் ஆகக்குறைந் மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்தல், மற்றும் உரிமத்திற்கு குறிப்பிட்ட தகைமை மற்றும் நிதியியல் உறுதியினைக் கொண்ட சந்தை செயற்பாட்டாளர்கள் மாத்திரம் உரித்துடையவர்களாவதை உறுதிப்படுத்துவதற்காக மேம்படுத்தப்பட்ட முறைமைப்படுத்தல் மேற்பார்வை செலவுகளை சமாளிப்பதற்கு உரிமமளித்தல் கட்டணங்களை திருத்தியமைத்தல் என்பவையாகும்.

### ▪ அரச உடைமை நிறுவனங்களின் (அ.உ.நி.) பட்டியலிடலை இயலுமையாக்குதல்

இலங்கை அரசாங்கமானது பொருளாதாரம் முழுவதும் ஆக்கத்திறன், போட்டித்தன்மை மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கு அ.உ.நி. இன் ஆழமான பொருளாதார சீர்திருத்தங்களை அமுலாக்கும் செயன்முறையில் உள்ளது. மூலதனச் சந்தையினுள் அ.உ.நி. இன் உள்நுழைவானது அ.உ.நி. இற்கு பல்வேறு வகைகளில் நன்மை பயக்கும். இதனால், இ.பி.ப.ஆ. அ.உ.நி. இன் பட்டியலிடலுக்கு பொருத்தமான விதிகளை ஏற்கனவே அங்கீகரித்துள்ளதுடன், கொ.ப.ப. ஆனது அத்தகைய அ.உ.நி. இற்கு வசதியளிப்பதற்காக 'வினையூக்கிப் பலகை' என்றழைக்கப்படும் ஒரு தனியான உருமாற்றல் பலகையினை ஆரம்பித்துள்ளது.

### ▪ வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக ஒரு பல்நாணய பரிமாற்றகத்தினை நிறுவுதல்

சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு புதுமையான சீர்திருத்தமாக ஒரு பல்நாணய பரிமாற்றகத்தினை நிறுவுதல் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்தகைய பரிமாற்றகமானது பல நாணயங்களில் குறிப்பிடப்பட்ட பிணையங்களின் வர்த்தகத்திற்கு வசதியளிக்குமு என எதிர்பார்ப்பதுடன், இதன் மூலம் நாட்டிற்கு வெளிநாட்டு முதலீட்டுத் தேக்க முதலீடுகள் அதிகரிக்கப்படும்.

### ▪ ஒரு கார்பன் வரவு வர்த்தக பரிமாற்றகத்தினை நிறுவுதல்

காலநிலை நெருக்கடியினை விளித்துரைப்பதற்கு அவசியமான உருமாற்றத்தினை விரைவுபடுத்துவதற்கு கார்பன் சந்தைகள் துணைபுரியலாம். வினைத்திறனான, வெளிப்படைத்தன்மையான, மற்றும் செயற்திறனான கார்பன் சந்தைகள் மாசுபடுவதில் ஒரு விலையினை இடுவதுடன் உமிழ்வுகளைக் குறைப்பதற்காக பொருளாதார ஊக்குவிப்பினை உருவாக்குகின்றது. ஒரு கார்பன் வரவு வர்த்தகப் பரிமாற்றகத்தினை நிறுவுவதானது 2050 அளவில் தேறிய பூச்சிய நிலையினை அடைவதில் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாணையினை மேலும் பலப்படுத்தும் என இ.பி.ப.ஆ. நம்புகின்றது.

### ▪ ஆதனத்துறை முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புகள் (சுநுஜவுள)

இந்த சீர்திருத்தத்தின் கீழ் இ.பி.ப.ஆ. வழங்குநர் மற்றும் முதலீட்டாளர் ஆகிய இரு சாராருக்கும் சுநுஜவுள இனை ஒரு கவர்ச்சிகரமான முதலீடாக்குவதற்கு மாற்றீட்டு வழிகளை தேடுகின்றது. தற்போது, பிரதான நகரங்களில் பல ஆதனங்கள் காணப்படுவதுடன், அத்தகைய ஆதனங்களில் உரித்துடைமையினை வைத்திருப்பதற்கான நிதியியல் கொள்திறனை சிற்றளவு முதலீட்டாளர்கள் கொண்டிருக்கவில்லை. சுநுஜவுள ஆதனத் துறைச் சந்தையில் சிற்றளவு முதலீட்டாளர்கள் பங்குபற்றுவதற்கான ஒரு பொறிமுறையினை

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

வழங்குவதுடன், அத்தகைய ஆதனங்களிலிருந்து உருவாக்கப்படும் பொருளாதார பெறுமதியிலிருந்து நலனடையலாம்.

### ▪ உட்கட்டமைப்பு முறிகள்

பரிமாற்றகத்தில் பட்டியலிடப்படும் உட்கட்டமைப்பு முறிகள் உட்கட்டமைப்பு திட்டங்களில் முதலீட்டாளர்களான தனியார் துறையினரது பங்குபற்றலைக் கவரும். அத்தகைய முறிகள், அரசாங்க முகவர்களான, மாநகர சபைகள், உள்ளூர் அரசாங்கச் சபைகள் போன்றவற்றால் வழங்கப்படலாம்.

### ▪ வலுவளித்தல் பலகையில் பட்டியலிடல்களுக்கு வசதியளித்தல்

இந்த விசேட பட்டியலிடல் பலகையானது மூலதனச் சந்தைக்கு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (சி.ந.நி.) நுழைவிற்கு வசதியளிப்பதற்கும் கவர்வதற்காக மாத்திரம் உருவாக்கப்பட்டன. எவ்வாறாயினும், இது இன்னமும் செயலூக்கமாக சந்தைப்படுத்தப்படவில்லை.

நாட்டின் வளர்ச்சிக்கு சி.ந.நி. ஒரு முக்கியமான கூறாகும். இவை நாட்டின் மொ.உ.உ. இன் 52% இற்கு பங்களிப்பு செய்வதுடன், இலங்கையில் உள்ள நிறுவனங்களில் 75% இனை கணக்கீடு செய்கின்றன. இதனால், அத்தகைய நிறுவனங்கள் கொ.ப.ப. இல் பிரதிநிதித்துவப்படுத்தப்படல் முக்கியமாகும். வலுவளித்தல் பலகை பட்டியலிடலானது அவர்களை அடுத்த மட்டத்திற்கு வளர்ச்சியடையச் செய்யும்.

### ▪ கருவி அபிவிருத்தி

உலகெங்கிலும் இடம்பெறுகின்ற புதிய சந்தை அபிவிருத்திகளுடன் இணையாக இருப்பதற்கு இ.பி.ப.ஆ. முயற்சிக்கின்றது. இதனால், கொ.ப.ப. உடன் இணைந்து இ.பி.ப.ஆ. இந்த சீர்திருத்தத்தின் கீழ் மூலதனச் சந்தைக்கு பல புதிய கருவிகளையும் சந்தை உட்கட்டமைப்பினையும் அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. இந்தக் கருவிகள் மற்றும் சந்தை உட்கட்டமைப்புகள், பசுமை முறிகள் / நீல முறிகள் (பொதுவாக நிலைபேறுடைய முறிகள் என தெரிந்துகொள்ளப்படுகின்றன), முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனை, சுக்குக் போன்ற இஸ்லாமிய மூலதனச் சந்தைக் கருவிகள், உரித்துவ கூட்டு நிதி நல்கைகள் போன்றவற்றின் அறிமுகத்தினை உள்ளடக்கும்.

### ▪ பாடசாலை மட்டத்தில் மூலதனச் சந்தை விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல்

இ.பி.ப.ஆ. தொடர்ந்தும் பொது மக்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்துகின்றது. இது தொடர்பில், இ.பி.ப.ஆ. தேசிய கல்வி நிருவகத்துடன் கூட்டுசேர்ந்து அடுத்த ஆண்டிலிருந்து மாணவர்களது கல்வி பாடத்திட்டத்தில் பிணையங்கள் சந்தையினை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தும் செயன்முறையிலுள்ளது. இது மூலதனச் சந்தை நிலத்தோற்றத்தினை மாற்றியமைக்கும் ஒரு காரணியாக இருக்கும் என நான் நம்புகின்றேன். ஏனெனில் இது ஒரு இளம் வயதில் மூலதனச் சந்தை அறிவினை வளர்ப்பதுடன், ஒரு பாரம்பரிய சேமிப்புக் கலாச்சாரத்திலிருந்து ஒரு சமகால முதலிடுதல் கலாச்சாரத்திற்கு மாற்றும் நோக்கத்தைக் கொண்டதுடன் நாட்டின் அபிவிருத்திக்கும் தவிர்க்கவியலாததாகும்.

## நிதியியல் அறிவினை விரிவாக்குவதில் புதிய உச்சங்களை எட்டுதல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இளம் சந்ததியினரிடையே பங்குச் சந்தையினை பிரபல்யமாக்குவதற்கு நாடு பூராவும் 100 மூலதனச் சந்தை கழகங்களை உருவாக்குவதன் மூலம் பாடசாலை மாணவர்களிடையே நிதியியல் அறிவினை ஊக்குவிக்கும் தீர்மானமானது மிகவும் பொருத்தமானதாகும் என நான் கூறுவது முக்கியமாகும். ஜனாதிபதியின் தொலைநோக்கிற்கு பயன்விளைவிப்பதற்கு இ.பி.ப.ஆ. ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு மற்றும் கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து நாட்டில் உள்ள 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தை கழகங்களை நிறுவுவதன் மூலம் கல்வி முறை முழுவதும் நிதியியல் அறிவினை ஊக்குவிப்பதற்கு ஒரு புதிய முன்னெடுப்பானது ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது மூலதனச் சந்தை கழகமானது நுகவெல மத்திய கல்லூரியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையின் கீழ் 31 ஆகஸ்ட் 2023 இல் நிறுவப்பட்டது.

இ.பி.ப.ஆ. இன் தொழிற்சேனை – ஒரு இன்றியமையாத சொத்து

எமது அனைத்து ஊழியர்களையும் நாம் எமது மதிப்புமிக்க சொத்தாகக் கருதுகின்றோம். நாம் இ.பி.ப.ஆ. இன் செயற்பாட்டுச் செயல்திறனை பலப்படுத்தி அதன் நிறுவனக் கொள்திறனை மேம்படுத்துவதற்கு புதிய ஊழியர்களை சேர்த்துள்ளதை கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த கடினமான நேரங்களில் காணப்பட்ட சவால்களை வெற்றிகாண்பதில் ஊழியர்களின் முற்றான உறுதுணைக்கும் கடப்பாட்டிற்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இ.பி.ப.ஆ. இன் தலைவர் திரு. வைசால் சாலி அவர்களுக்கு எந்நேரமும் வழங்கப்பட்ட அவரது வழிகாட்டலுக்கும் அயராத உறுதுணைக்கும் எனது நன்றியினைத் தெரிவிக்கின்றேன். நான் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அவர்களது ஆலோசனை, கூட்டு நிபுணத்துவம் ஊடான உறுதியான உறுதுணைக்கும், ஆணைக்குழு மற்றும் ஏனைய உப குழுக்களது கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் நேரத்தின் தியாகத்திற்கும், இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாணையினை அடைவதற்கு ஊழியர்களுக்கு அவர்களது முயற்சிக்கு வழங்கிய ஊக்கத்திற்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிந்தக்க மெண்டிஸ்
பணிப்பாளர் நாயகம்

20 ஏப்ரல் 2024

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

திரு. வைசால் சாலீ
தலைவர்

திரு. மனில் ஜயசிங்க

திரு. சுஜீவ முதலிகே

திரு. என்டன் கொட்விரி

திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க

திருமதி. ஈவட் பர்னாந்து

திரு. சஞ்சீவ திசாநாயக்க

திருமதி, ஏ. நிலந்தி ஜயகி டி அல்விஸ்

திரு. ஹேசன குருப்பு

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

**திரு. வைசல் சாலி**
(தலைவர்)

திரு. வைசல் சாலி அவர்கள் 15 பெப்ரவரி 2023 முதல் தலைவர் பதவியினை பொறுப்பேற்றார். இவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கியியலில் நீண்ட மற்றும் விரிவான அனுபவமுடைய ஒரு மூத்த இளைப்பாறுதலடைந்த வங்கியாளார் ஆவார். இவர் கிரீன்ட்லேஸ் வங்கி, ANZ வங்கி, என்.டி.பி. மற்றும் அமானா வங்கி போன்ற உள்ளூர் மற்றும் உலகளாவிய வங்கிகளில் உயர் முகாமைத்துவ பதவிகளில் இருந்துள்ளார். ஒரு பணிப்பாளர் சபை அங்கத்தவராக இவரது பரந்த அனுபவங்கள் வங்கியியல், நிதி, காப்புறுதி, நிதி முகாமைத்துவம், பங்குத்தரகு, உற்பத்தி, வர்த்தகம் மற்றும் கல்வி ஆகிய வணிகங்களிலுள்ள பல கம்பனிகளை உள்ளடக்குகின்றன.

இவர் தேசிய பல்கலைக்கழக சபைகள் மற்றும் நிதியியல், பொருளாதார அலுவல்கள், வீடமைப்பு அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆகிய துறைகளைச் சார்ந்த பல அரசாங்க மற்றும் அரச சார்பற்ற குழுக்களில் சேவையாற்றியுள்ளார். அத்துடன் இவர் இலங்கை வர்த்தகச் சம்மேளனம், இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் மற்றும் வரையறுக்கப்பட்ட (தனியார் ) லங்கா கிளியர் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளிலும் சேவையாற்றியுள்ளார்.

திரு. சாலி அவர்கள் வங்கியியல் மற்றும் நிதியியலில் விசேடத்துவத்துடன் பொருளாதாரத்தில் முதலாம் வகுப்பு கௌரவ பட்டம் பெற்ற பட்டதாரி, வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டதாரி மற்றும் FCPM பட்டத்தையும் கொண்டுள்ளார். இவரது கூட்டாண்மைத்துறை அனுபவமானது 40 வருடங்களை விஞ்சுவதுடன், இவை 20 வருடங்களுக்கும் மேலான சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலும், முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி மட்டத்தில் 14 வருடங்களும் மற்றும் சபை மட்டத்தில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தையும் உள்ளடக்குகின்றன. இவர் பல கம்பனிகளில், நிறைவேற்று, நிறைவேற்றதிகாரமற்ற மற்றும் சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர் போன்ற பணிப்பாளர் பதவிகளை வகித்துள்ளார்.

இவர் இலாப நட்டப் பகிர்வு மாதிரி அடிப்படையில் இலங்கையில் வட்டியற்ற வங்கியியல் நடைமுறையினை முன்னெடுப்பதில், விருத்திசெய்வதில் மிகச் சிறப்பான மூலோபாய மற்றும் செயற்பாட்டு தலைமைத்துவத்தினை வழங்கி அமானா வங்கியினை நிறுவுவதில் முக்கிய பங்காற்றினார். இதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட வட்டியற்ற உரிமமளிக்கப்பட்ட முதலாவது வர்த்தக வங்கி என்பதுடன் இவரே அதன் ஸ்தாபக முகாமைப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஆவார்.

இவர் இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் உடனடியாகக் கடந்த தலைவர்; சபை தலைமைத்துவம் மற்றும் ஆளுகையில் ஒரு IFC சான்றளிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர் மற்றும் பட்டப்படிப்பின் பின்னரான மட்டத்தில் பல தேசிய பல்கலைக்கழகங்களில் வணிக மூலோபாயத்தினை கற்பிப்பதில் பரவலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

**திரு. மனில் ஜயசிங்க**

திரு. மனில் ஜயசிங்க அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஒரு சமூக அங்கத்தவரும், பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின (ஐக்கிய இராச்சியம்) சமூக அங்கத்தவரும், CMA இலங்கையின் சமூக அங்கத்தவரும் மற்றும் அரச நிதியியல் மற்றும் கணக்கீட்டுக்கான பட்டய நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார்.

இவர் 41 வருடங்கள் பரவலான அனுபவத்தினை இலங்கை எர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் கொண்டுள்ளதுடன் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கு வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளுக்குப் பொறுப்பான தேசத்தின் முகாமைத்துவ பங்காளி மற்றும் உறுதித் தலைமைப் பதவியினை வகிக்கின்றார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்புச் சபை ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், CMA இலங்கையின் சபை அங்கத்தவரும் ஆவார்.

இவர் தற்போது சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர், சட்டரீதியான கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் வேறு பல குழுக்களிலும் சேவையாற்றுவதுடன் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவரும் ஆவார்.

இவர் தற்போது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஒரு அங்கத்தவராகவும், இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் மற்றும் டீமோ, சிலோன் ஹொஸ்பிட்டல், சி.டபிள்யு மெக்கி மற்றும் சாசிய இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டட் ஆகியவற்றின் சுயாதீன பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு. மனில் ஜயசிங்க அவர்கள் லங்காபே டெக்னோவேஷன் விருதுகள் 2024 இன் நீதிபதிக் குழுவின் அங்கத்தவரும் ஆவார்.

**திரு. சுஜீவ முதலிகே**

திரு. முதலிகே அவர்கள் ஒரு பட்டயக் கணக்காளராக 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவரது தகமைகள் பின்வருமாறு: FCA (ICA - இலங்கை), FCMA (CIMA – UK), FCCA (ACCA – UK) மற்றும் FCPA (CPA – அவுஸ்திரேலியா).

இவர் PwC ஸ்ரீலங்காவின் முகாமைப் பங்காளியாக சமீபத்தில் இளைப்பாறுதலடைந்தார். இவர் மோர்கன்டைல் சேரிவிஸஸ் ப்ரொவிடன்ட் சொசையிட்டியின் (MSPS) நிறைவேற்றுனரல்லா தலைவரும் ஆவார். இவர் என்.டி.பி. வங்கி பி.எல்.சி., சி.ஐ.சி. ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., சி.ஐ.சி. வீட்ஸ் குழுமம், என்.எஸ்.பி.எம். பசுமை பல்கலைக்கழகம், லிங்க் நெச்சுரல் ப்ரடக்ட்ஸ் லிமிட்டட், செர்வூட் கெப்பிட்டல் மற்றும் ஐடியல் வைனான்ஸ் லிமிட்டட் ஆகியவற்றின் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளரும் ஆவார். இவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் ஒரு குழு அங்கத்தவரும் ஆவார்.

திரு. முதலிகே அவர்கள் ஒரு கணக்காய்வுக் குழுவின் தலைவராக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பரந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் மற்றும் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பின் (CAPA) முன்னாள் தலைவர் மற்றும் இ.ப.க.நி. இன் சபையின் அங்கத்தவர் மற்றும் CIMA ஐ.இ. இன் இலங்கைப் பிரிவிற்கு ஆளுமைச் சபையின் அங்கத்தவர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (2010-2011) அங்கத்தவர் என்பதுடன் இவரது தொழில் வாழ்வில் உள்ளூரிலும் உலகளாவிய ரீதியிலும் பல ஏனைய அத்தகைய பதவிகளை வகித்துள்ளார்.

இவர் 2012 முதல் 2019 வரை ஹட்டன் நெஷனல் வங்கி பி.எல்.சி. இன் ஒரு நிறைவேற்றனரல்லா சுயாதீன பணிப்பாளராய் இருந்தார். இவர் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அமைப்புமுறை ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழுவின் பிரதித் தலைவராகவும், தேசிய பொருளாதாரச் சபைக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர் மற்றும் தோல்வியடைந்த உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளை புதுப்பிப்பதற்கான ஆலோசனைக் குழுவினதும் அங்கத்தவராய் இருந்துள்ளார்.

திரு. அன்டன் கொட்விரி

நிறைவேற்றதிகாரமுடைய தலைவர் - எக்ஷா குளோபல் மற்றும் ஏ.ஜி. இன்டர்நெஷனல்

எக்ஷா – ஏ.ஜி. இன்டர்நெஷனல் ஆகியவற்றின் ஸ்தாபகர் / நிறைவேற்றதிகாரமுடைய தலைவர், வணிக மதிநுட்பமுடைய சிறந்த தொழில்முனைவர், கம்பனியின் உலகளாவிய வணிக முன்னெடுப்புகளின் எல்லைகளது விரிவாக்கலின் பின்னால் காணப்பட்ட உத்வேகமானவர். இவர் உயர்ந்த தொழில்சார் நியமங்களை நிலைநிறுத்துபவர் மற்றும் அனைத்து பங்காளிகள் நோக்கிய பொறுப்புக்களை பராமரிப்பவராவார். இவர் சாதனையினை நெறிப்படுத்துபவர், புத்தாக்கத்தில் முன்னிறுத்தல் செய்பவர் மற்றும் நடைமுறையிலுள்ள வணிக வலையமைப்புகளை மேலும் விரிவாக்குவதனை ஊக்கமளிப்பதற்கான கடப்பாடுடையவர் ஆவார். அவரது தொலைநோக்கு மற்றும் புத்தாக்க சக்தியின் விளைவாக, ஒரு வெளிக்கள பிரசன்னத்துடன் எக்ஷா குளோபல் உலகில் முன்னணியிலுள்ள வணிக நாமங்களை பின்வரும் துறைகளில் பிரதிநிதித்துவம் செய்கின்றது. வர்த்தகம், வலு, இரசாயனங்கள், கூழ் மற்றும் தாள், தொழில்நுட்பம், கூட்டாண்மைச் நுகர்வுச் சேவைகள் மற்றும் வெளிவளம்பெறல் துறைகள் என்பனவாகும். துணை நிறுவனங்கள், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் காணப்படுவதுடன், பிரதான வலையமைப்புகள் ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் பரந்துள்ளன. வெளிநாட்டு பொது பட்டியலிடல்களுடன் வொன்ட்டே ரிசோசஸ் மற்றும் வியூசனெக்ஸ் உள்ளடங்கலான கூட்டு முயற்சிகளும் காணப்படுகின்றன. இவரது சாதனைகளின் அங்கீகாரமாக, திரு. கொட்விரி அவர்கள் முதன்மையான ஆசிய பசிபிக் தொழில்முனைவர் விருதினை ஆ.ப.தொ.வி. 2013 இல் பெற்றார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிருவகத்தின் பட்டய சந்தைப்படுத்துநர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிருவகத்தின் மற்றும் அவுஸ்திரேலிய முகாமைத்துவ நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். திரு. அன்டர் கொட்விரி அவர்கள் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவின் வர்த்தக சம்மேளனங்கள் உள்ளடங்கலாக சர்வதேச வர்த்தக சங்கங்களில் தீவிரமான ஈடுபாட்டினைக் கொண்டவர் ஆவார். இவர் இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் வியட்நாம் இலங்கை வணிகச் சபை, இந்தோனேஷியா இலங்கை வணிகச் சபை மற்றும் கொழும்பு அப்டவுன் ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமாவார். இவர் 2015 முதல் 2019 வரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் சபையிலும் சேவையாற்றியுள்ளார்.

திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க

திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் ஒரு விசேட தரத்திலான அதிகாரியாவார். இவர் தற்போது நிதி அமைச்சின் திறைசேரிக்கு பிரதி செயலாளராக தொழில் புரிகின்றார். இவர் பல்வேறு முக்கிய பதவிகளில் 30 வருடங்களாக அரச சேவையில் உள்ளார். திரு. ரத்நாயக்க அவர்கள் நோர்வேயின் விவசாயப் பல்கலைக்கழகத்தில் ஒரு முதுமானி பட்டத்தினையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் (விசேட) இளமாணி விஞ்ஞான பட்டத்தையும் கொண்டுள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் 1994 இல் அரச சேவையில் இணைந்து பொது திறைசேரியில் பல்வேறு பதவிகளில் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிவாரி வளங்கள் திணைக்களம் ஆகியவற்றில் தொழில்புரிந்துள்ளார். இவர் அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் பாதீட்டில் விரிவான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இவர் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாயிருந்தார். அபிவிருத்தி பங்காளிகள், சர்வதேச நிதியியல் நிறுவனங்கள் மற்றும் மூலதனச் சந்தை ஆகியவற்றுடன் தேசம் குறித்த அபிவிருத்தி திட்டங்களை விருத்திசெய்வதற்கும் மற்றும் வெளிநாட்டு நிதியினை திரட்டுவதற்கும், இருதரப்பு பேரம்பேசுதலை வழிநடத்தவும் மற்றும் பலதரப்பு மற்றும் இருதரப்பு திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதி வழங்கல்கள் உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு வசதியளித்தல் என்பனவாகும்.

திறைசேரிக்கான பிரதி செயலாளரான அவரது கடமைகளுக்கு அப்பால், திரு. ரத்நாயக்க அவர்கள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகியவற்றில் ஒரு பணிப்பாளராக சேவையாற்றுகின்றார். இவர் ஏனைய பல முக்கியமான தலைமைத்துவ பதவிகளையும் வகித்துள்ளார். தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர், கொழும்பு லோட்டஸ் டவர் முகாமைத்துவ கம்பனியின் தலைவர், மக்கள் வங்கியின் பணிப்பாளர், பட்டப்படிப்பின் பின்னரான மருத்துவ நிருவகத்தின் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர், இலங்கை அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிருவகத்தின் பணிப்பாளர், தேசிய மருந்து முறைமைப்படுத்தல் அதிகார சபையின் அங்கத்தவர் என்பனவாகும்.

திருமதி. ஈவட் பர்னாந்து

திருமதி. ஈவட் பர்னாந்து அவர்கள் தற்போது இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநராக சேவையாற்றுவதுடன் நிதியியல் துறை ஸ்திரத்தன்மை குழுவுக்கு பொறுப்பாயுள்ளார். இவர் இலங்கை மத்திய வங்கியில் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், பின்வரும் பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல், நிதியியல் துறை ஸ்திரத்தன்மை, அந்நிய செலாவணி முகாமைத்துவம், நாணய முகாமைத்துவம், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் ஆகிய பிரிவுகளிலாகும். இக்காலப்பகுதியில், திருமதி. பர்னாந்து அவர்கள் வங்கி மேற்பார்வை பணிப்பாளராகவும் மற்றும் அந்நிய செலாவணி கட்டுப்பாட்டாளராகவும் சேவையாற்றியுள்ளதுடன், சர்வதேச நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கேற்ப வங்கிகளுக்கான ஒரு திடமான முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை செயல்படுத்துவதில் தலைமைத்துவம் வழங்கியதன் மூலம் நிதியியல் துறை ஸ்திரத்தன்மைக்கு முக்கிய பங்காற்றியுள்ளார். தற்போது இவர் வங்கி மேற்பார்வை, வங்கியல்லாத மேற்பார்வை, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், நாணயம், அந்நிய செலாவணி, நிதி, பிராந்திய அபிவிருத்தி மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகிய திணைக்களங்களுக்கு பொறுப்பாயுள்ளார்.

திருமதி. பர்னாந்து அவர்கள் நிதியியல் துறை ஸ்திரத்தன்மை குழு, இலங்கையில் நிலைபேறுள்ள நிதியளிப்பிற்கான வரைபடத்தின் அமுலாக்கல் இயக்கக்குழு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தேசிய கொடுப்பனவுகள் சபை, இலங்கை வங்கியாளர்கள் நிருவகம், இலங்கையின் கடன் தகவல் மையம் ஆகியவற்றின் தலைவராக தற்போது கடமையாற்றுவதுடன் இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

திருமதி. பர்னாந்து அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் பொருளியலில் ஒரு முதுமானி பட்டத்தையும்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகத்தில் (விசேட) இளமானி பட்டத்தையும் வைத்துள்ளார்.

### திரு. சஞ்ஜீவ திசாநாயக்க

திரு. சஞ்ஜீவ திசாநாயக்க அவர்கள் டிசம்பர் 1997 இல் இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்ட வழக்கறிஞராக அனுமதிக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டார். இவர் ஹொங்கொங் பல்கலைக்கழகத்திலிருந்து மனித உரிமைகளில் ஒரு முதுமானி பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்துள்ள பிரதி மன்றாடி அதிபதி ஆவார் மற்றும் தற்போது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை பொறுப்பேற்பதற்காக விடுவிக்கப்பட்டுள்ளார்.

திரு. சஞ்ஜீவ திசாநாயக்க அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றவியல் மற்றும் குடியியல் பிரிவுகளில் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், பெப்ரவரி 2010 முதல் ஜூலை 2011 வரை ஊழல்களுக்கு எதிரான விஜி சுயாதீன குழுவில் ஒரு வழக்கு தொடருநராக பணிபுரிந்துள்ளார். இவர் கணக்கீட்டு நியமங்கள் சபை, இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை ஆகியவற்றின் பதவிவழி அங்கத்தவராவார்.

### திருமதி. ஏ. நிலந்தி ஜயகி டி அல்விஸ்

திருமதி. ஜயகி டி அல்விஸ் அவர்கள் சட்டத் துறையில் ஏறத்தாழ 35 வருடங்களாக செயலூக்கமாக ஈடுபடுவதுடன் இலங்கையில் குடியியல் மற்றும் குற்றவியல் சட்டத்தில் பரவலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து குற்றவியல் நீதி, தீங்கியல் மற்றும் பெண்களது மற்றும் பிள்ளைகளது உரிமைச் சட்டத்தில் ஒரு முதுமானி பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் 1985 இல் நுழைந்து இறுதிப் பரிட்சையில் சித்தி எய்தியதன் பின்னர், ஜனாதிபதி சட்டத்தரணி திரு. கோசல விஜேதிலக்க அவர்களது அனுசரணையின் கீழ் ஏப்ரல் 1989 இல் இலங்கையின் உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராக அனுமதிக்கப்பட்டு இணைந்தார்.

1989 இலிருந்து 1991 வரை இவர் மெனேஜ்மன்ட் ஹவுஸ் லிமிட்டட்டில் ஒரு சட்ட அதிகாரியாக தொழில்புரிந்தார், மற்றும் கம்பனி செயலகப் பிரிவினை கையாண்டார்.

1991 இல் இவர் உத்தியோகபூர்வமற்ற வாரியத்தில் அவரது குற்றவியல் நடைமுறையினை ஆரம்பித்து ஒரு வழக்கறிஞராக இருந்தார். ஏழு வருடங்கள் செயலூக்கமான நடைமுறையின் பின்னர், இவர் 1998 இல் இலங்கையின் நீதித்துறையில் ஒரு நீதவான் / மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டு மேல் நீதிமன்றத்தின் (குற்றவியல்) நீதிபதியாக பதவி உயர்த்தப்பட்டு மற்றும் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாக வெவ்வேறு நியாயாதிக்கங்களில் சேவையாற்றினார்.

இவர் ஒரு குழு அங்கத்தவர், உதவி செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளை நீதிச் சேவைகள் சங்கத்தில் வகித்தார் (நீ.சே.ச. - இச் சங்கமானது அனைத்து நீதவான்கள் மற்றும் இலங்கையின் மாவட்ட நீதிபதிகள், (மே.நீ.நீ.ச. - இச்சங்கமானது நாட்டிலுள்ள மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளை உள்ளடக்கும்)

திருமதி. டி அல்விஸ் அவர்கள் பல சர்வதேச கல்வியில் திட்டங்களில் 2011 இல் இந்தியாவின் தேசிய நீதிபதிகள் கல்லூரி போபாலில், 2015 இல் மலேஷியாவின் நீதி மற்றும் பயிற்சி நிருவகத்தில், 2016 இல் இந்தியாவின் புதுடெல்லி நீதி மற்றும் பயிற்சி நிருவகம், 2017 இல் இந்தியாவின் பஞ்சாப், ஹரியானா நீதி மற்றும் பயிற்சி நிருவகம் சந்திகார், 2019 இல் இந்தியாவின் மஹாராஸ்திரா நீதி கல்வியகம் ஆகியவற்றில் பங்குபற்றியுள்ளார். இவர் 2008 இல் பாங்கொக்கில் இடம்பெற்ற “கிரீன் பெஞ்” உள்ளடங்கலான பல்வேறு உலகளாவிய நிகழ்வுகளில் தெற்காசிய குழுமத்தின் சட்டத்துறையில் ஒரே நீதி அதிகாரியாக இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

தற்போது, திருமதி. டி அல்விஸ் அவர்கள் விமன்ஸ் இந்தியன் சேம்பர் ஒவ் கொமர்ஸ் அன்ட் இன்டஸ்ட்ரி – WICCI இனால் ஒழுங்குசெய்யப்பட்ட இயங்கலை மேடைகளில் அறிவினை பகிரும் ஒரு வருகை பேச்சாளராக ஈடுபடுகின்றார்.

திருமதி. டி அல்விஸ் அவரது மதிப்பிற்குரிய பதவிகளுடன் மிகவும் நீதியான மற்றும் சமத்துவமான சமூகத்தினை வளர்ப்பதற்கு ஒரு அசைக்கவியலாத கடப்பாட்டுடன் தொடர்ச்சியாக மதிக்கவியலாத நுண்ணறிவினை பகிர்வதற்கு பங்களிப்பு செய்துள்ளார்.

### திரு. ஹேசன குருப்பு

FCA, MBA (வங்கியியலும் நிதியியலும்) PIM, MA (நிதியியல் பொருளாதாரம்) (கொழும்பு),B. Sc (Accy) விசேட 1ஆம் வகுப்பு (ஸ்ரீ ஜயவர்தனபுர), ACMA

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் மற்றும் டேவிட் பீரிஸ் குழுமக் கம்பனிகளின் குழும நிதியியல் பணிப்பாளர் ஆவார்.

திரு. குருப்பு அவர்கள் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் (SAFA) தலைவர் ஆவார். இவர் 2023 இல் SAFA இன் துணைத் தலைவராகவும், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஆளுகையில் முன்னேற்றத்திற்கான குழுவின் 2020/2021 இற்கான தலைவராகவும் சேவையாற்றினார்.

இவர் வணிகத்திலுள்ள SAFA தொழில்சார் கணக்காளர்கள் குழுவின் ஒரு அங்கத்தவராகவும், சார்க் நாடுகளில் அரச நிதிசார் ஆட்சிகள் மற்றும் வணிகங்களின் ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகளில் கற்கைக்கான குழுவின் அங்கத்தவராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. குருப்பு அவர்கள் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் ஒரு சபை அங்கத்தவரும் ஆவார்.

# பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள்

**இடமிருந்து வலம் நிற்பவர்கள்:** சர்மிளா பண்டிதரத்ன – உதவிப் பணிப்பாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், துஷாரி ரம்புக்பொத்த – உதவிப் பணிப்பாளர், மனித வளங்கள் மற்றும் நிறுவன நிலைமாற்றல், மனூாரி வீரசிங்க – பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள், சுனெத் பெரேரா – உதவிப் பணிப்பாளர், மேற்பார்வை, மதுகயனி பலப்பிட்டிய – உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள், டி.எம்.ஜி.பிரியந்த – உதவிப் பணிப்பாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி, துஷார ஜயரத்ன – பிரதிப் பணிப்பாளர் நாயகம், சிந்தக்க மெண்டிஸ் - பணிப்பாளர் நாயகம், ரியாஸ் பெரி – பணிப்பாளர், புலனாய்வுகள் மற்றும் வலியுறுத்தல், ஜி.எச். நிரோஷா கொடிகார - பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம், மதுர வணிகசேகர – பிரதான டிஜிட்டல் அதிகாரி, சிரந்தி குரெ – பணிப்பாளர், மனித வளங்கள் மற்றும் நிறுவன நிலைமாற்றல், டிலும் மாவத்த – பணிப்பாளர், மேற்பார்வை.

சமூகமளிக்காதோர் : தம்மிக்க பெரேரா – பிரதிப் பணிப்பாளர் நாயகம்

# சிரேஷ்ட முகாமையாளர்கள்

இடமிருந்து வலம் நிற்பவர்கள் : ஷீனா குணரத்ன – சிரேஷ்ட முகாமையாளர், வெளிவாரி உறவுகள், ரன்மினி ஜயதிலக்க – சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம், சவுமி கொடிப்பிலி – சிரேஷ்ட முகாமையாளர், மேற்பார்வை, சஜீவனி பக்மீதெனிய – சிரேஷ்ட முகாமையாளர், மூலதனச் சந்தை கல்வி, மஞ்சுளா சந்திரரத்ன – சிரேஷ்ட முகாமையாளர், கண்காணிப்பு

# முகாமையாளர்கள்

இடமிருந்து வலம் நிற்பவர்கள்: பிரியந்த ஹேரத் - முகாமையாளர், புலனாய்வுகள், நொமானி செனவிரத்ன – முகாமையாளர், மேற்பார்வை, புத்தினி ஹேரத் - முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், ஆர்.கே.வசந்த சுனிமல் - முகாமையாளர், மேற்பார்வை, மேகலா ஜயபால – முகாமையாளர், மேற்பார்வை, வை.டி.சந்தமாலி – முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், நிமால் குமாரசிங்க – முகாமையாளர், வெளிவாரி உறவுகள், அனுலா விஜேசிங்க – முகாமையாளர், புலனாய்வுகள்

இடமிருந்த வலம் அமர்ந்திருப்பவர்கள் : தக்ஷிலா பிரான்சிஸ் - முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி, பி.எம்.நிரோஷிகா உதயங்கனி – முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், லக்ஷ்மி விக்கிரமநாயக்க – முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், அசோகா கே. தயாரத்ன – முகாமையாளர், மனித வளங்கள்

# நிகழ்ச்சி காட்சிக்கூடம்

மூலதனச் சந்தை கழகங்களின் அங்குரார்ப்பண வைபவம்

මූලධන වෙළෙඳපොළ සංගමය

மூலதனச் சந்தை கழகங்களின் அங்குரார்ப்பண வைபவம்

ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை விதிகளிலான திருத்தத்தில் கருத்தரங்கு

பங்குத்தரகு உரித்துடைமையாளர்கள் மற்றும் பி.நி.அ. உடனான ஈடுபாடு

நிதியியல் அறிவுக்காக மணி அடித்தல்

கணக்காய்வாளர்களுடனான ஈடுபாடு

# நிகழ்ச்சி காட்சிக்கூடம்

நீர்கொழும்பு முதலீட்டாளர் மன்றம்

பல்கலைக்கழக இறுதிச் சமர்

பாடசாலை கரத்தரங்கு

பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்

அநுராதபுரம் முதலீட்டாளர் மன்றம்

இலங்கை CFA சங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் புதுப்பித்தல்

# ஒரு துணிவான தொலைநோக்கு

செயற்பாட்டு மீளாய்வு

மூலோபாய இலக்கு 1 24 | மூலோபாய இலக்கு 2 39 | மூலோபாய இலக்கு 3 51 | மூலோபாய இலக்கு 4 55
மூலோபாய இலக்கு5 58 | மேலதிகத் தகவல்கள் 63

மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்

இன்றைய இயக்காற்றல் மிக்க நிதியியல் நிலத்தோற்றத்தில், ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலானது இன்றியமையாதது, குறிப்பாக பிணையங்கள் முறைமைப்படுத்தல் துறையிலாகும். சந்தைகளின் நேர்மை மற்றும் ஸ்திரத்தன்மை என்பன வினைத்திறனான மேற்பார்வையில் தங்கியிருப்பதுடன், இது நியாயமான நடைமுறைகள், முதலீட்டாளர் பாதுகாப்பு மற்றும் அமைப்புசார் மீளெழுச்சி என்பவற்றை உறுதிப்படுத்துகின்றது.

பிணையங்கள் முறைமைப்படுத்தலானது பிணையங்களின் வழங்கல், வர்த்தகம் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றை ஆளுகை செய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு பன்முகமான வரம்புறுகையினை உள்ளடக்குகின்றது. இது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சந்தை நடத்தைக்கான நியமங்களை நிறுவுவதுடன் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையினை வளர்க்கும் மற்றும் சந்தை செயற்திறனை ஊக்குவிக்கும் இலக்கினைக் கொண்டதாகும்.

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் ஆட்சியின் முக்கிய கூறுகள் கடுமையான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள், வலியுறுத்தல் பொறிமுறைகள், மற்றும் சந்தை நடவடிக்கைகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இந்த நடவடிக்கைகள் மோசடியான நடைமுறைகளை தவிர்க்கவும், அமைப்புசார் இடர்களை தணிக்கவும், மற்றும் நிதியியல் சந்தைகளின் நேர்மையினை நிலைநிறுத்தவும் சேவையாற்றுகின்றன.

## உரிமமளித்தல்

பிணையங்கள் சந்தையின் முறைமைப்படுத்துபவராக இ.பி.ப.ஆ. ஒரு நியாயமான, ஒழுங்கான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையினை உறுதிசெய்வதுடன், இத்துறையினுள் செயற்படுவதற்காக நிறுவனங்களுக்கு உரிமங்களை வழங்கும் பங்கினையும் செயலாற்றுகின்றது. கடுமையான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை சந்திக்கும் மற்றும் அதன்பின்னர் தொடர்ச்சியான மேற்பார்வை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களுக்கு உரிமங்களை வழங்குவதன் மூலம், இ.பி.ப.ஆ. நிதியியல் சந்தைகளின் நம்பகத்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையினை பராமரிப்பதற்கும், முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையினை வளர்ப்பதற்கும் நியாயமான மற்றும் ஒழுங்கான வர்த்தக நடைமுறைகளை ஊக்குவிக்கவும் துணைபுரிகின்றது.

சந்தை பங்குபற்றுனர்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களின் உரிமமளித்தல் இரண்டு கட்ட செயன்முறையாகும், முதலாம் நிகழ்வில் வாய்ப்புள்ள விண்ணப்பதாரிகள் கொள்கையளவு அங்கீகாரத்தினை பெறுவதற்கு வேண்டப்படுவதுடன், செயற்படுவதற்கான பொருத்தமான உரிமத்தினை வழங்குவதற்கு ஒவ்வொரு பிரிவிற்கும் பொருத்தமான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் அனைத்தையும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

சந்தை இடையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களை இ.பி.ப.ஆ., உரிய விதிகளுடனான இணக்கப்பாடு, வாடிக்கையாளர்களுடன் ஈடுபடும் நபர்கள் மற்றும் பணிப்பாளர்கள் உள்ளடங்கலான முக்கிய முகாமைத்துவ நபர்களின் வலியதும் பொருத்தமும் தேவைப்பாடுகள் மற்றும் போதுமையான உள்ளகக் கட்டுப்பாடுகள் போன்றவற்றை மீளாய்வு செய்ததன் பின்னர் புதுப்பிக்கின்றது.

மீளாய்வாண்டின்போது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட புதிய உரிமங்களும் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையும் கீழ்காணும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன. (உருவம்: 01, 02, 03)

உருவம் 01: 2023 இல் நிறுவனங்களின் உரிமமளித்தல்

| உரிமத்தின் வகை | 2023 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட புதிய உரிமங்கள் | 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| பரிமாற்றகங்கள் | - | 01 |
| தீர்வக இல்லங்கள் | - | 01 |
| மத்திய வைப்பகங்கள் | - | 01 |
| பங்குத் தரகர்கள் | - | 27 |
| பங்கு வர்த்தகர்கள் | - | 11 |
| முகாமைத்துவக் கம்பனிகள் * | 06 | 16 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 01 | 22 |
| எல்லைக்கடன் வழங்குனர்கள் | 01 | 20 |
| ஒப்புரவாளர்கள் | - | 08 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | - | 02 |
| கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்கள் | 04 | 04 |

* அங்கீகரிக்கப்பட்ட கூட்டு முதலீட்டு திட்டங்களை (கூ.மு.தி.) செயற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கம்பனிகள்

மீளாய்வாண்டின்போது உரிய முகாமைத்துவக் கம்பனிகளின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்படும் ஆறு கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டன.

31 டிசம்பர் 2023 இல் மொத்தமாக 84 அங்கீகரிக்கப்பட்ட கூ.மு.தி. செயற்படுகின்றன.

உருவம் 02: 2023 இல் உள்ள உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை

| உரிமத்தின் வகை | உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | |
|---|---|---|
| | 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறானது | 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறானது |
| பரிமாற்றகங்கள் | 01 | 01 |
| தீர்வக இல்லங்கள் | 01 | 01 |
| மத்திய வைப்பகங்கள் | 01 | 01 |
| பங்குத் தரகர்கள் | 28 | 27 |
| பங்கு வர்த்தகர்கள் | 12 | 11 |
| முகாமைத்துவக் கம்பனிகள் | 17 | 16 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 23 | 22 |
| எல்லைக்கடன் வழங்குனர்கள் | 20 | 20 |
| ஒப்புரவாளர்கள் | 08 | 08 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 03 | 02 |
| கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்கள் | - | 04 |

மீளாய்வாண்டின்போது நிறுவனங்கள் உரிய செயற்பாடுகளை தொடர்வதற்கு விரும்பாததனால் ஐந்து உரிமங்கள் நிறுத்தப்பட்டதுடன், அவை கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| எல்லைக்கடன் வழங்குனர் | - ஜே பி கிரடிட் (பிரைவேட்) லிமிட்டட் |
| முதலீட்டு முகாமையாளர் | - என் எஸ் பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் |
| கடன் தரப்படுத்தல் முகவர் | - இக்ரா லங்கா லிமிட்டட் |
| பங்குத் தரகர் | - என் எஸ் பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் |
| பங்கு வர்த்தகர் | - என் எஸ் பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் |

இ.பி.ப.ஆ. இரண்டு முகாமைத்துவக் கம்பனிகளின் ஒருங்கிணைப்புக்கு வசதியளித்தது; கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் மற்றும் சிடிசிஎல்எஸ்ஏ எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் ஆகிய இரு நிறுவனங்களும், இதில் இறுதியாக காணப்படும் நிறுவனம் செயலாற்றும் நிறுவனமாகும்.

தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகங்கள்

உருவம் 03: 2023 இல் கூட்டு முதலீட்டு திட்டங்களின் மொத்த எண்ணிக்கை

| | கூட்டு முதலீட்டு திட்டங்களின் மொத்த எண்ணிக்கைய | |
|---|---|---|
| | 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறானது | 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறானது |
| அங்கீகரிக்கப்பட்ட கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் | 81 | 84 |

## கொள்கை முன்னெடுப்புகள்

### சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான கட்டணங்களின் திருத்தம்

சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பில் முன்மொழியப்பட்ட திருத்தியமைத்த கட்டணக் கட்டமைப்பானது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், நடைமுறையில் பிரயோகிக்கப்படுகின்ற கட்டண கட்டமைப்பினை இ.பி.ப.ஆ. திருத்தியமைப்பதனை இயலுமையாக்குவதற்காக மதிப்பிற்குரிய நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல்

26 ஜனவரி 2018 திகதியிடப்பட்ட வர்த்தமானியின் பகுதி II இற்கான இணைப்பில் (1 பெப்ரவரி 2018 இல் வழங்கப்பட்டது) பிரசுரிக்கப்பட்ட கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலத்திற்காக கொ.ப.ப. இனால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட திருத்தங்களை இ.பி.ப.ஆ. மீளாய்வு செய்தது.

கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்களை விரிவாக ஆழ்ந்து ஆராய்ந்ததன் பின்னர், ஆணைக்குழுவானது பின்வரும் தீர்மானத்திற்கு வந்தது. முன்மொழியப்பட்ட கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமானது உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனியினை பங்குகளால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக மாற்றுவதற்கு வசதியளிக்கும் நோக்கத்திற்கு மாத்திரமே மற்றும் கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கலின் பின்னரான வணிகச் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் விடயங்கள் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பரிவர்த்தனையின் அமைப்பு விதிகளினூடாக நிறைவேற்றப்படல் வேண்டும் மற்றும் ஏதேனும் பாரிய திருத்தங்களை பாராளுமன்றத்தில் குழு நிலையில் உள்ள சட்டமூலத்திற்கு அறிமுகப்படுத்த இயலாது.

ஆணைக்குழுவானது அதன் நிலைப்பாட்டினை கொ.ப.ப. இற்கும் அரசாங்கத்திற்கும் தெரிவித்ததுடன், நாட்டின் மூலதனச் சந்தை சீர்திருத்தல் நிகழ்ச்சிநிரலின் அவசர நிலையினை கருத்திற்கொண்டு பரஸ்பரமற்றமயமாக்கல் செயன்முறையினை துரிதப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தினை குறிப்பிட்டது.

மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்

சட்ட மற்றும் வலியுறுத்தல் அணி

## அங்கீகாரங்கள்

### தேச, பிராந்திய மற்றும் உலகளாவிய நிதியங்கள்

வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டத்தின் (ம.வை.தி.) பரிந்துரையின் பேரில் இ.பி.ப.ஆ., கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு அங்கீகாரம் வழங்குகின்றது. அங்கீகாரங்கள், அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 இன் 05 ஆம் இலக்க பணம் சலவை செய்தல் தடுப்புச் சட்டம், 2006 இன் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் மற்றும் இலங்கையில் பிணையங்கள் தொடர்பான சட்டங்களுடன் இணக்கப்பாட்டிற்கு உட்பட்டு வழங்கப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டின்போது, இ.பி.ப.ஆ. 48 உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரங்களை வழங்கியதுடன் 30 பெயர் மாற்றங்களையும் குறித்துக்கொண்டது.

### கொ.ப.ப. இன் வர்த்தகப் பங்குபற்றுநர் விதிகளின் மீளாய்வு (முன்னர் பங்குத் தரகர் விதிகள் என அழைக்கப்பட்டன)

03 ஏப்ரல் 2023 இல் அமுலுக்குவந்த கொ.ப.ப. இன் வர்த்தப் பங்குபற்றுநர் விதிகள் பின்வரும் நிகழ்வுகளில் கொ.ப.ப. இனால் திருத்தியமைக்கப்பட்டு 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 64 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைய இ.பி.ப.ஆ. இன் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது:

- விதிகளை சிறப்பாக சீராக்கி அதன் பயனுறுதிறனை மேம்படுத்துவதற்கான திருத்தங்கள்.
- வர்த்தகப் பங்குபற்றுநர்களினால் வர்த்தகப் பங்குபற்றுநர் விதிகளின் முக்கிய மீறல்களுக்கு அபராதம் விதிப்பதற்கு வசதியளிப்பதற்கான விதிகளின் அறிமுகம்.
- வர்த்தகப் பங்குபற்றுநர்களினால் வர்த்தகப் பங்குபற்றுநர் விதிகளின் பொருண்மையான மீறல்களை கொ.ப.ப. இன் இணையத்தளத்தில் பிரசுரித்தல் தொடர்பான விதிகளுக்கான திருத்தங்கள்.

### கொ.ப.ப. இன் வர்த்தக விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டின்போது, பின்வருவனவற்றிற்கு வசதியளிப்பதற்காக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வர்த்த விதிகளுக்கு அதனால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு இ.பி.ப.ஆ. அங்கீகாரம் வழங்கியது:

- பங்கு கடன்பெறல் மற்றும் கடன் வழங்கல் ஊடாக முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனையின் வர்த்தகம்;
- ஷரியா இணக்கப்பாடான கடன் பிணையங்களின் வர்த்தகம்; மற்றும்
- கடன் பிணையங்களின் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிரந்தரமான கடன் பிணையங்கள்

### கொ.ப.ப. இன் தீர்வக இல்ல விதிகளுக்கான திருத்தங்கள்

பங்கு கடன்பெறல் மற்றும் கடன் வழங்கல் ஊடாக முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனைக்கு வசதியளிப்பதற்காக ம.வை.தி. இன் தீர்வக இல்ல விதிகளுக்கு கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு இ.பி.ப.ஆ. அங்கீகாரம் அளித்தது.

### கொ.ப.ப இன் பட்டியலிடல் விதிகளின் மீளாய்வு

2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கத்தின் காரணமாக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் அனைத்தும் திருத்தியமைக்கப்படவேண்டியுள்ளதுடன், பிரேரிக்கப்பட்ட விதிகள் இ.பி.ப.ஆ. இனால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஆணைக்குழுவானது பட்டியலிடல் விதிகளுக்கு முன்மொழியப்பட்ட மாற்றங்களை அங்கீகரித்துள்ளது.

- பட்டியலிடல் கட்டணம் தொடர்பான பிரிவு 12
- ஷரியா இணக்கப்பாடான கடன் பிணையங்களின் பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்
- பங்கு கடன்பெறல் மற்றும் கடன் வழங்கல் ஊடாக முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனைக்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்
- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுடன் இணக்கப்பாடு காணாத பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிப்பாளர்களுக்கு எதிராக நிர்வாக வலுவளிப்புகள் மற்றும் ∴ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை விதிப்பதற்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்
- நிலைபேறுடைய முறிகளின் பட்டியலிடல் மற்றும் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் விதிகளுக்காக முன்மொழியப்பட்ட திருத்தங்கள்
- கொ.ப.ப. இல் உட்கட்டமைப்பு முறிகளின் வழங்கல் மற்றும் பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்காக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள்

### பட்டியலிலிருந்து அகற்றுதல்

மீளாய்வுக் காலத்தின்போது இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 5 இன் பிரகாரம் பின்வரும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட மனமுவந்த பட்டியலிலிருந்து அகற்றல் விண்ணப்பங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன.

- நெஸ்ட்லே லங்கா பிஎல்சி
- இந்தோ-மெலே பிஎல்சி
- குட் ஹோப் பிஎல்சி
- செலின்சிங் பிஎல்சி
- ஷலிமார் (மெலே) பிஎல்சி

ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலின்பேரில், விண்ணப்பதாரி கம்பனியினால் வழங்கப்பட்ட காரணிகளை கருத்திலெடுத்து ஆணைக்குழுவானது, கொ.ப.ப. இன் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து அதன் பிணையங்களை அகற்றுவதிலிருந்து ஆறு மாதங்களுக்கான ஒரு ஒத்திவைப்பினை வழங்கியது.

## ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதற்காக நீடிக்கப்பட்ட காலம்

மீளாய்வுக் காலத்தின்போது, பட்டியலிடல் விதிகளின் விதி 7.13.3.(iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு அசாதாரணமான நிலைமாற்றல் சூழ்நிலைகளின் காரணமாக தங்கொட்டுவ போர்சிலேன் பிஎல்சி தேவைப்பாடுகளை சந்திக்கவியலாது காணப்பட்டதுடன், ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக நீடிக்கப்பட்ட காலத்தினை வழங்குவதற்கு கொ.ப.ப. இற்கு இ.பி.ப.ஆ. அதன் உடன்பாட்டினை வழங்கியது.

## பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் நிர்வகிப்பு

1995 இன் கம்பனி பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரகாரம் 2023 ஆம் ஆண்டின்போது பின்வரும் பொறுப்பேற்பு கொடைமுனைவுகள் நிர்வகிக்கப்பட்டன: (உருவம்: 04)

உருவம் 04: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்

| கொடைமுனையளிப்பவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடைமுனைவின் தன்மை | நிலைமை |
|---|---|---|---|
| சீலைன் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | தங்கொட்டுவ போர்சிலேன் பிஎல்சி | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |
| ப்ளு ஓசியன் ரெசிடன்சீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | கெல்சி டெவலப்மன்ட்ஸ் பிஎல்சி | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |

இ.பி.ப.ஆ. 01 சுயாதீன ஆலோசகரின் அறிக்கையினை மீளாய்வு செய்து வெளிப்படுத்தல் உட்கூறுகளை மேம்படுத்துவதற்கு முறைமைப்படுத்தல் அவதானிப்புகளை வழங்கியது.

## கொ.ப.ப. இன் வலியுறுத்தல் விதிகளின் ஒத்திவைப்பு

இவ்வாண்டின்போது கொ.ப.ப. இல் பிணையங்களின் வர்த்தகத்தினை இடைநிறுத்துவதிலிருந்து ஒத்திவைத்தல் தொடர்பாக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் கீழ் 4 ஒத்திவைத்தல் விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ. மீளாய்வு செய்தது.

- நவலோக்க ஹொஸ்பிட்டல் பிஎல்சி
- பிம்புத் வைனான்ஸ் பிஎல்சி
- கோர்ப்பரெட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி பிஎல்சி
- அனிலானா ஹொட்டல்ஸ் அன்ட் ப்ரொப்பர்ட்டீஸ் பிஎல்சி

## கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி 5.4 பி இன் பிரகாரமான தள்ளுபடிகள்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி 5.4 பி இன் பிரகாரம் தள்ளுபடிகளை வேண்டி பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ. செயல்முறைப்படுத்துகின்றது. இது ஒரு தனிப்பட்ட இடுகையின் மூலம் ப.பொ.க. இன் புதிய பங்குகளை வழங்குவதற்கு, அத்தகைய பங்குவழங்கலின் பின்னர் உடனடியாக, அது வழங்கலிலுள்ள பிணையங்களின் 20% இனை விஞ்சும்.

மீளாய்வாண்டின்போது அத்தகைய ப.பொ.க. ஆல் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் இரண்டு விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது.

- த கெண்டி ஹோட்டல்ஸ் கம்பனி (1938) பிஎல்சி
- எக்மி பிரின்டிங் அன்ட் பெக்கேஜிங் பிஎல்சி

## தளத்திற்கப்பாலான பங்கு கொடுக்கல் வாங்கல்களின் அங்கீகாரம்

பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 84 (1) இன் பிரகாரம், "ஒரு பரிமாற்றகத்தின் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு கம்பனியின் பிணையங்களை வைத்திருக்கும் ஒருவர் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வர்த்தக நடைமுறைகளுக்கு இணங்க அத்தகைய பிணையங்களை கொள்வனவு செய்யலாம், விற்பனை செய்யலாம் அல்லது இல்லாவிடின் வர்த்தகம் செய்யலாம்". எவ்வாறாயினும், அத்தகைய பரிமாற்றகத்தினால் தெளிவான வர்த்தக செயன்முறை கடைப்பிடிக்கப்படாதவிடத்து, ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

மீளாய்வாண்டின்போது 530 விதிவிலக்கான மாற்றல்களுக்கும் 159 பங்குக் கொடைகளுக்கும் வழங்கப்பட்ட அங்கீகாரமானது இ.பி.ப.ஆ. இன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த விதிவிலக்கான மாற்றல்கள் எல்லைக்கடன் வர்த்தகம், தனியான கணக்கிலிருந்து கூட்டுக் கணக்கிற்கு /கூட்டுக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்கிற்கு / கூட்டுக் கணக்கிலிருந்து தனியான கணக்கிற்கு, நிதியளித்தல் வசதிகள், கொடைகள் (விசேட), கட்டாயக் கொடைமுனைவுகள், பட்டியலிலிருந்து அகற்றுதல் கொடைமுனைவுகள் ஆகியவற்றிற்கு வசதியளிப்பதற்காகும்.

## பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 80 இன் கீழான அங்கீகாரங்கள்

ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி அல்லது ஒரு பரிவர்த்தனையில் ஒரு பட்டியலிடலைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஏதேனும் பொதுக் கம்பனி பொதுமக்களிடமிருந்து நிதியினை திரட்டும் நோக்கத்திற்காக ஒரு முன்விவரணக்கோவையின் மூலம் அல்லது அதனையொத்த ஒரு ஆவணத்தின் மூலம் அல்லது வேறுவிதத்தில் நேரடியாக அல்லது ஒரு மூன்றாம் தரப்பினரூடாக பிணையங்களின் ஒரு பொது வழங்கலை மேற்கொள்ளலாகாது. இவ்வாண்டின்போது அகரபத்தான பிளான்டேசன்ஸ் லிமிட்டட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், ஜே எவ் எஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் மற்றும் ட்ரெசர் ரிபப்ளிக் கார்டியன்ஸ் லிமிட்டட் ஆகியவற்றின் விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்டன.

## மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு

### பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களினுள் அவர்களது பங்குதாரர்களுக்கும் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டியுள்ளது.

இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்து இணக்கப்பாடு காணப்படாத விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறிவிக்கின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் மறுமொழிகள் மிகவும் சாத்தியமாகக் காணப்படுகின்றன.

இந்த செயன்முறையின் குறிக்கோள் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் அறிக்கையிடல் மற்றும் தகவல் பரப்புதல் ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்துவதாகும். பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பொருண்மையான தகவல்களை உடனடியாக பரப்பவேண்டும் என்பதுடன் இது பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை நிறுவுவதற்கும் மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குமாகும்.

## மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்

ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்யும்போது இ.பி.ப.ஆ. கீழ்காணும் விடயங்களில் முன்னிறுத்தம் செய்தது:

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- நிதியியல் சிறப்பம்சங்கள்
- தலைவரது அறிக்கை
- பணிப்பாளர்களது அறிக்கை
- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்
- சபை உப குழுக்களின் அறிக்கைகள்

இச்செயன்முறையானது கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கமைவாக ஆண்டறிக்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களது தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தல் ஆகியவற்றில் கம்பனிகளில் சுமத்தப்பட்டுள்ள கடப்பாடுகள் குறித்து விழிப்பணர்வு மட்டத்தினை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்யும்.

இவ்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் 102 ஆண்டறிக்கை மீளாய்வுகளை நடாத்தியுள்ளது. இணக்கப்பாட்டினை சீர்படுத்தவும் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தவும் 65 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டதுடன் 21 மீளாய்வுகள் முடிவாக நிறைவுசெய்யப்பட்டன.

மேலாக, இ.பி.ப.ஆ. 03 கடன் மற்றும் 02 உரித்துவ முன்விவரணக்கோவைகளில் மீளாய்வினை நடாத்தியதுடன், நடைமுறையிலுள்ள பங்குதாரர்களிடமிருந்து மேலதிக நிதியினை திரட்டுவதற்கு விண்ணப்பித்துள்ள 09 கம்பனிகளின் பங்குதாரர் சுற்றறிக்கைகளிலும் மீளாய்வினை நடாத்தியது.

### பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கை

இவ்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட நிறுவனங்களினால் சந்தை அறிவித்தல்களூடாக மேள்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களை மீளாய்வு செய்ததுடன், 65 சந்தர்ப்பங்கள் தொடர்பாக கொ.ப.ப. இடமிருந்து விளக்கங்கள் கோரப்பட்டன. அத்தகைய விளக்கங்கள் பின்வரும் வெளிப்படுத்தல்கள் தொடர்பானதாகும். (உருவம் 05)

உருவம் 05: பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை

| விளக்கத்தின் தன்மை | நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ப.பொ.க. அவதானிப்பு பட்டியலில் / இரண்டாம் பலகையில் காணப்படும்வேளை பணிப்பாளர்களினால் வர்த்தகம் மேற்கொண்டமை | 1 |
| பணிப்பாளர்களது வர்த்தகம் - தாமதமாக வெளிப்படுத்தல் | 14 |
| பணிப்பாளர்களது வர்த்தகம் - இருட்டடிப்பு காலத்திலான வர்த்தகம் (பட்டியலிடல் விதி 8.6) | 10 |
| தாமதமான வெளிப்படுத்தல்கள் | |
| ▪ பணிப்பாளர் சபையிலான மாற்றங்கள் | 30 |
| ▪ ஏனைய உடனடி கூட்டாண்மை வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் | 10 |

கூட்டாண்மை அலுவல்கள் அணி

### ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு / கொ.ப.ப. / அரசாங்க நிருவகங்களுக்கு குறிப்பிடப்பட்ட விடயங்கள்

பின்வரும் விடயங்கள் பிரயோகிக்கத்தக்க நியமங்களுடன் அங்கீகாரங்கள், அளவீடு மற்றும் வெளிப்படுத்தல் என்பன இணக்கப்பாடு காணப்பட்டுள்ளனவா என்பதற்காக ஏனைய முறைமைப்படுத்துபவர்களிடமிருந்து விளக்கங்களை கோருவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன. (உருவம் 06)

உருவம் 06: ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு குறிப்பிடப்பட்ட விடயங்கள்

| முறைமைப்படுத்துபவர் | கம்பனிகளின் எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAASMB) | 1 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | 2 |
| இலங்கை மத்திய வங்கி | 4 |
| நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு | 2 |
| கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 1 |

## சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களின் மேற்பார்வை

சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கான முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வரம்புறுகையானது 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்திலும் சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான விதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 183 இன் பிரகாரம் மூன்று வகையான சந்தை நிறுவனங்களான, பரிமாற்றகம், மத்திய வைப்பகம் மற்றும் தீர்வக இல்லத்திற்கும் எட்டு வகையான சந்தை இடையீட்டாளர்களான, முதலீட்டு முகாமையாளர்கள், எல்லைக் கடன் வழங்குநர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள், பங்குத் தரகர்கள், பங்கு வர்த்தகர்கள், முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்கள் ஆகியோருக்கு பொருத்தமான விதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விதிகளும் ஒழுங்குவிதிகளும், முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை பலப்படுத்தும் ஒரு பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான சந்தை இடத்தை பேணும் குறிக்கோளுடன் நிறுவப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டின்போது, பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய வகையான கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்களுக்கு (கூ.நி.ஆ.) இ.பி.ப.ஆ. உரிமங்களை வழங்கியது. இதன் பிரகாரம் நான்கு நிறுவனங்களுக்கு, என்.டி.பி. இன்வெஸ்ட்மன்ட் பேங்க் லிமிட்டட், கெப்பிட்டல் எலாயன்ஸ் பார்ட்னர்ஸ் லிமிட்டட், அட்டாரா கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் CTCLSA கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட், கூ.நி.ஆ. தகுதியில் ஒரு சந்தை இடையீட்டாளராக செயற்படுவதற்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. மேலாக, இந்த புதிய பிரிவின் கீழான ஆளுகை தேவைப்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஒரு வழிகாட்டியாக கூ.நி.ஆ. இற்கு ஒரு நடத்தை விதிமுறை பிரசுரிக்கப்பட்டது. இவ்விதிமுறையின் முக்கிய கூறுகள், ஏனையவற்றுக்கிடையில், நெறிமுறையான நடத்தையிலான நியமம், வணிக நடத்தை, திறமை, முரண்பாட்டு அக்கறை, வாடிக்கையாளருக்கான கடமை, முறையீடுகளை கையாளுதல் மற்றும் தனிப்பட்ட கணக்கு கையாளுதல் என்பனவாகும். இவ்விதிமுறையானது, கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்கள் வணிக நடத்தையில் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்காகவும் மற்றும் ஒரு முறையான மூலதனச் சந்தைக்கு வசதியளிப்பதற்கான பிரதான கொள்கைகளான, நம்பிக்கைக்குரிய கடமை, நேர்மை மற்றும் தொழில்சார் பண்பு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது

சந்தை இடையீட்டாளர்களின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தகுதியும் மற்றும் பொருத்தத்தினை மதிப்பிடுவதற்காக இ.பி.ப.ஆ. ஒரு வரம்புறுகையினை முறைப்படுத்தியதுடன், இது நிறுவப்பட்டுள்ள அளவுகோள்களை தவறுகின்ற பணிப்பாளர்கள், வாடிக்கையாளர்களுடன் ஈடுபடும் நபர்கள் மற்றும் ஏனைய நபர்கள் உள்ளடங்கலான முக்கிய முகாமைத்துவ நபர்களை தகுதி நீக்கம் செய்வதற்காக அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான உள்ளக செயன்முறையினை தரப்படுத்துவதற்காகும். இது தொடர்பில் முறைமைப்படுத்தல் நடவடிக்கையினை இறுக்கமாக்குதல், இந்த முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களினால் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அனைத்து முக்கிய ஆளணியினரதும் தொழில்சார் நியமங்கள் மற்றும் வணிக நடத்தையினை தரமுயர்த்தும் நோக்கினைக் கொண்டதாகும்.

**மீளாய்வாண்டின்போது, பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய வகையான கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்களுக்கு (கூ.நி.ஆ.) இ.பி.ப.ஆ. உரிமங்களை வழங்கியது.**

மேலும், புதிய பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், இ.பி.ப.ஆ. சந்தை துர்நடத்தைகளுக்கு வெளியிலான தவறுகளுக்கு நிர்வாக வலுவளிப்புகளை விதிப்பதற்கு ஒரு வரம்புறுகையினை முறைப்படுத்தியது. இதன் பிரகாரம், தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடின்மைகளை இனங்காண்பதற்கும் மற்றும் நிகழ்வெண் மற்றும் அத்தகைய மீறல்களின தாக்கம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு வலுவளிப்புகளை விதித்தல் ஆகியவற்றுக்கான ஒரு தரநிலையான செயன்முறையானது நிறுவப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின்போது, இ.பி.ப.ஆ. சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான ஆகக்குறைந்த ஆளுகை தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியதுடன், இது தொடர்பில் ஒரு பணிப்புரையினை வழங்கியது. முக்கிய தேவைப்பாடுகள், சந்தை இடையீட்டாளர்களுக்கான ஆகக்குறைந்த பணிப்பாளர்கள எண்ணிக்கைகளினை குறிப்பிடுதல், ஒரு 'சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரின்' நியமனம் குறிப்பிட்ட நிகழ்வுகளை வழங்கி, உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களது பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு பொருத்தமான தேவைப்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கும். இந்த பணிப்புரையானது பொறுப்பான, நெறிமுறையான, மற்றும் வெளிப்படையான வணிக நடைமுறைகளை ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்டதுடன், இவை முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை உண்டுபண்ணும் ஒரு நியாயமான மற்றும் ஒழுங்கான சந்தையின் உருவாக்கத்திற்கு வழியிடும்.

### பங்குத் தரகர்கள்

மீளாய்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வை நடவடிக்கைகள், பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள், பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டின் நிலையினை மதிப்பிடுவதற்காக பங்குத்தரகர்களின் நடத்தையினை கண்காணித்தல் நோக்கி மேற்கொள்ளப்பட்டன. பங்குத்தரகர்களின் மேற்பார்வையானது ஒரு இடர் அடிப்படையிலான அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டதுடன், இது நிறுவனம் குறிப்பிட்ட இடர் தரப்படுத்தல் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினதும் ஒப்பீட்டு சந்தைப் பங்களிப்பு ஆகியவற்றை கருத்திற்கொண்டு நிறுவனங்களின் ஒப்பீட்டு இடர் தோற்றுருவங்களை மதிப்பிடுகின்றது. பங்குதரகர்கள் வெளிப்பாடுடைய இடர்கள், விவேகமானவை, திரவத்தன்மை, எதிர்தரத்தவர், நிதியியல், கடன், செயற்பாடு மற்றும் சட்ட இடர்கள் என இனங்காணப்படலாம்.

இ.பி.ப.ஆ. குறித்த நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பயனுறுதிமிக்க கண்காணிப்பிற்காக பங்குத்தரகர்களிலான சுயாதீன தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வைகள் மேற்கொள்வதனை தொடர்ந்தது. நிதிக் கூற்றுக்கள், இணக்கப்பாட்டு அதிகாரியின் அறிக்கைகள் மற்றும் சில முக்கிய மாறிகளிலான காலமுறையான வெளிப்பாட்டு அறிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பங்குத் தரகர்களினால் மேற்கொள்ளப்படும் காலமுறையான சமர்ப்பிப்புகளின் மீளாய்வு மற்றும் பகுப்பாய்வினை தளத்திற்கப்பாலான மேற்பார்வை கொண்டுள்ளது. தளத்திற்கப்பாலான மீளாய்வுகளின்போது கண்டுபிடிக்கப்படும் ஏதேனும் இணக்கப்பாடின்மைகள் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டு அவை தொடர்பான திருத்தியமைத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தளத்திற்கப்பாலான / தளத்திலான மேற்பார்வையினூடாக பங்குத்தரகர்களை கண்காணித்து கொ.ப.ப. இன் பொருத்தமான விதிகளுடன் இணக்கப்பாடின்மைக்கு உடனடியான முறைமைப்படுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக, கொ.ப.ப. இன் செயன்முறையிலான மேற்பார்வையினை மேம்படுத்துவதற்காக, இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இற்கு ஒரு மேற்பார்வை வரம்புறுகையினை அறிமுகப்படுத்தியது. இந்த வரம்புறுகையின் கீழ் பங்குத்தரகர்களின் இணக்கப்பாட்டினை கண்காணிக்கும் முதன்மைப் பொறுப்பானது கொ.ப.ப. இற்கு உடைமையாக்கப்பட்டுள்ளது.

மேலாக, இ.பி.ப.ஆ. இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுண்ணறிவு அலகின் (நி.நு.அ.) பிரதிநிதிகளுடன் சேர்ந்து கூட்டுப் பரிசீலனைகளை மேற்கொண்டது, இது 2006 இன் 6 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடும் சட்டம் மற்றும் அதன்கீழான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டு நிலையினை தீர்மானிப்பதற்காகும். இவ்வாண்டின்போது, அத்தகைய ஐந்து பரீசீலனைகள் நடாத்தப்பட்டன.

## மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்

இவ்வாண்டின்போது, துறைசார் செயற்திறனானது, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பங்குத் தரகர்களின் மொத்த புரள்வானது 42% ஆல் வீழ்ச்சியடைந்ததை குறிப்பிட்டதுடன், 2022 ஆம் ஆண்டானது துறைக்கு ஒரு விதிவிலக்கான சாதனையினையுடைய ஆண்டாகும். துறையின் இலாபகரத்தன்மையானது 39% ஆல் வீழ்ச்சியடைந்து 2023 இல் வரிக்கு பிந்திய தேறிய இலாபமாக ரூபா 1,216 மில்லியனை பதிவுசெய்ததுடன், 2022 இல் வரிக்கு பிந்திய தேறிய இலாபமானது ரூபா 3,001 மில்லியன் ஆகும். பங்குத்தரகுத் துறையின் செயற்திறனிலான ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம்: 07)

உருவம் 07: பங்குத்தரகர்களின் சிறப்பம்சங்கள்

| | 2023 (ரூபா '000) | 2022 (ரூபா '000) | மாற்றம் % |
|---|---|---|---|
| புரள்வு | 4,635,144 | 7,989,609 | (42) |
| தேறிய தரகு | 4,166,262 | 7,383,356 | (44) |
| ஏனைய வருமானம் | 3,846,382 | 3,567,382 | 8 |
| செயற்பாட்டு இலாபம்/நட்டம் | 2,787,191 | 3,812,946 | (27) |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் / நட்டம் | 1,838,886 | 3,001,569 | (39) |
| வரிக்கு பிந்திய தேறிய இலாபம் /நட்டம் | 1,216,551 | 2,094,232 | (42) |
| மொத்த சொத்துக்கள் * | 24,280,733 | 24,805,524 | (2) |
| மொத்த பொறுப்புக்கள் * | 11,432,918 | 11,631,100 | (2) |
| பங்குதாரர் நிதியங்கள் * | 12,847,816 | 13,174,424 | (2) |

*டிசம்பர் 31 இல் உள்ளவாறானது

மூலம்: பங்குத்தரகர்களால் இ.பி.ப.ஆ. இற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்கள்

மேற்பார்வை அணி

## 2023 ஆம் ஆண்டின்போது இ.பி.ப.ஆ. சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான ஆகக்குறைந்த ஆளுகைத் தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியதுடன் இது தொடர்பில் ஒரு பணிப்புரையினை வழங்கியது

### முகாமைத்துவ கம்பனிகளும் கூட்டு முதலீட்டு திட்டங்களும்

தளத்திலான பரிசீலனைகளுக்கு முகாமைத்துவக் கம்பனிகளை தெரிவுசெய்வதில் ஒரு இடர் அடிப்படையான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த இடர் அடிப்படையிலான முறையில், பல முக்கிய காரணிகளான, நிதியியல் பலம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவப் பொறிமுறைகளின் போதுமை, பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் ஆளுகை நியமங்களுடனான இணக்கப்பாடு என்பன கருத்திலெடுக்கப்பட்டன.

தளத்திற்கப்பாலான மீளாய்வுகளினூடாக, மூலதனச் சந்தையின் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, முகாமைத்துவக் கம்பனிகளின் நிதியியல் பலம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயற்திறனான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் காணப்படுகின்றதா என்பவற்றை மதிப்பிடுவதற்காக கண்காணிக்கப்பட்டன. தளத்திற்கப்பாலான மேற்பார்வையானது முகாமைத்துவக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வினூடாக மேலும் பலப்படுத்தப்பட்டதுடன், இது கம்பனிகளின் நிதியியல் நிலைமை திடமாக காணப்படுவதனையும் இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த பங்குதாரர் நிதியத் தேவைப்பாட்டுடன் இணங்கி செயற்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காகும்.

மேலாக, திட்டங்களின் மாதாந்த அறிக்கை சமர்ப்பிப்புகள் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் பரிசீலனை செய்து கண்காணிக்கப்படுகின்றன. இது முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காக பொருத்தமான விதிகளினால் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த எண்ணிக்கையிலான அலகுடைமையாளர்கள் தேவைப்பாடு, திட்டங்களின் முதலீடுகளிலான கட்டுப்பாடுகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகள் ஆகியவற்றை திட்டங்களை பின்பற்றுவதனை உறுதிசெய்வதற்காகும்.

முகாமைத்தவக் கம்பனிகளுக்கான விதிகள் ஒரு இணக்கப்பாட்டு அதிகாரியினது முழுநேர அடிப்படையிலான நியமனத்திற்கான தேவைப்பாட்டினை கொண்டுவந்ததுடன், இவரது பொறுப்பானது முகாமைத்துவக் கம்பனி பொருத்தமான சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் எந்நேரமும் அமைவுறுவதனை உறுதிப்படுத்துவதுடன் இ.பி.ப.ஆ. இன் மீளாய்விற்கு ஒரு காலாண்டு இணக்கப்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதாகும்.

அத்தகைய திட்டங்களின் நிதியியல் ஸ்திரத்தன்மை மட்டத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் மற்றும் குறிப்பிடப்பட்ட முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்காக இ.பி.ப.ஆ. முகாமைத்துவ கம்பனிகள் மற்றும் திட்டங்களின் நம்பிக்கை பொறுப்பாளர்களுடன் வழக்கமான ஊடாட்டங்களை பராமரிக்கின்றது. இவ்வாண்டின்போது திட்டங்களின் முதலீட்டு வரையறைகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகளில் சில மீறுதல்கள் இனங்காணப்பட்டவுடன், இ.பி.ப.ஆ. குறித்த முகாமைத்துவக் கம்பனிகளை மட்டங்களை முறைப்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகளை பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தியதுடன் இது எழக்கூடிய சாத்தியமான இடர்களை குறைப்பதற்காகும். இதன் பிரகாரம், பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவக் கம்பனிகளுக்கு துணைபுரிவதற்காக இ.பி.ப.ஆ. தொடர்ந்தும் காலத்திற்கேற்ற வழிகாட்டியினை வழங்குகின்றது.

இவ்வாண்டின்போது ஆறு திட்டங்கள் இ.பி.ப.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்டதுடன், இவற்றுள் ஒன்று ஒரு மூடிய திட்டம் என்பதுடன் இதன் அலகுகள் கொ.ப.ப. இல் பட்டியலிடப்படும். (உருவங்கள் : 08, 09)

உருவம் 08: திட்டங்களின் ஒட்டுமொத்த நிலைமை

| | 31.12.2023 இல் உள்ளவாறானது | 31.12.2022 இல் உள்ளவாறானது | மூ மாற்றம் |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 84 | 81 | - |
| யுனிட் ட்ரஸ்ட்களின் தேறிய சொத்தின் பெறுமதி (ரூ. பில்லியனில் அண்ணளவாக) | 407.74 | 143 | 185.13 |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | 93,450 | 67,912 | 37.60 |
| வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (அண்ணளவான மில்லியனில்) | 13,371 | 6,283 | 112.81 |
| உரித்துவத்திலான முதலீடு (ரூ. மில்லியனில் அண்ணளவாக) | 18,506 | 11,856 | 56.08 |
| அரசாங்கப் பிணையங்களிலான முதலீடு (ரூ. மில்லியனில் அண்ணளவாக) | 315,239 | 88,879 | 254.68 |
| ஏனைய கருவிகளிலான முதுலீடு * (ரூ. மில்லியன் அண்ணளவாக) | 70,175 | 48,187 | 46.63 |

*வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புகள் முதலானவை.

மூலம்: முகாமைத்துவக் கம்பனிகளின் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

உருவம் 09: முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தைப் பங்களிப்பு




- சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
- சிடி சிஎல்எஸ்ஏ எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
- சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்
- ஆர்ப்பிக்கோ அட்டரக்சியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
- ஏசியா செக்கியுரிட்டீஸ் வெல்த் மெளேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- சொவ்ட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

## ஏனைய சந்தை இடையீட்டாளர்கள்

மேலாக, இ.பி.ப.ஆ. ஏனைய சந்தை இடையீட்டாளர்களான எல்லைக்கடன் வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்களிலும் முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை மேற்கொள்கின்றது. இது இந்நிறுவனங்கள் அனைத்தும் பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காகும். சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான இடர்களை இனங்காண்பதற்கு, கண்காணிப்பதற்கு, தணிப்பதற்கு மற்றும் முகாமைப்படுத்துவதற்கு, தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வையின்போது ஒரு வினைத்திறனான இடர் அடிப்படையான மேற்பார்வை வரம்புறுகை கடைப்பிடிக்கப்பட்டது.

மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்

## சந்தை தொழில்வல்லுநர்களின் தொழில்சார் நியமங்கள் மற்றும் நடத்தையினை மேம்படுத்துதல்

சந்தையின் நேர்மை மற்றும் முதலீட்டாளர்கள் நம்பகத்தன்மையினை பராமரிப்பதில் சந்தை தொழில்வல்லுநர்களது முக்கிய பங்கினை இனங்கண்டு, இ.பி.ப.ஆ. துறைசார் நியமங்களை உயர்த்தவும் நெறிமுறையான நடைமுறைகளை வலுவூட்டும் எண்ணத்தில் ஒரு விரிவான வரம்புறுகையினை நிறுவியது. மேலாக, இ.பி.ப.ஆ. இன் தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சியிலான அழுத்தமானது சந்தை தொழில்வல்லுநர்களை அவசியமான திறன்களுடனும் அறிவுடனும் சிக்கலான சந்தை இயக்கவியல்களை நெறிமுறையாகவும் பொறுப்பாகவும் சமாளிப்பதற்கு வலுவளிக்கின்றது.

இந்த இலக்கினை அடையும் எண்ணத்துடன், இ.பி.ப.ஆ. தொழில்சார் கல்வியினை விருத்திசெய்து நிர்வகிப்பதுடன் இலங்கையின் மூலதனச் சந்தைக்கான உரிமமளித்தல் ஆட்சிமுறையின் ஒரு பகுதியாக தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ.) திட்டங்களையும் நடாத்துகின்றது. மேலாக, இ.பி.ப.ஆ. பொது மக்களுக்கு முதலிடுவதில் அடிப்படை கோட்பாடு மற்றும் நடைமுறை அம்சங்களை பகிர்ந்துகொள்வதற்காக கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை விநியோகிக்கின்றது. (உருவம் : 10)

உருவம் 10: மூலதனச் சந்தை தகைமை வரம்புறுகை



மீளாய்வுக் காலத்தின்போது, இ.பி.ப.ஆ. 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனச் சந்தை தகைமை வரம்புறுகையினை தொடர்ந்தும் அமுல்படுத்தியதுடன், இது முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஆகக் குறைந்த மட்டத்திலான திறமை மற்றும் தகுதியினை வழங்கும் நோக்கத்திலாகும் என்பதுடன், பங்குத்தரகுத் துறையின் முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஒரு தரமான நியமத்தினை வழங்குவதற்கு சேவையாற்றுகின்றது. குறிப்பிட்ட வரம்புறுகையானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்து வகுப்புக்களுக்கு தனித்தனியான சான்றளிப்புகளை சான்றளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களுக்கு வழங்குகின்றது, அதாவது, உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், மூலாதாரங்கள் மற்றும் யுனிட்ட்ரஸ்ட்கள்.

இத் தனித்தனியான சான்றளிப்புகள் ஒவ்வொன்றும், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் பதிவீடு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களுக்கு (ப.மு.ஆ.) தகைமைகளை வழங்குவதுடன் இது ஒரு உச்சநிலை தகைமைக்கு மேம்படுத்துவதுடன் பிணையங்கள் துறையிலுள்ள அனைத்து வகையான சொத்துக்களையும் உள்ளடக்கும்.

பின்வரும் அட்டவணையானது ஒவ்வொரு சொத்து வகைக்குமான தனித்தனியான சான்றளிப்புகளையும் அதற்கேற்ப இ.பி.ப.ஆ. இனால் வழங்கப்படும் உரிமங்களையும் எடுத்துக்காட்டுகின்றது. (உருவம்: 11)

### உருவம் 11: சான்றளிப்பின் மட்டம் மற்றும் வழங்கப்பட்ட உரிமங்கள்

| தொடர் இல. | தொடரின் பெயர் | சான்றளிப்பின் மட்டமும் உரிமமும் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | உரித்துவம் | கடன் | மூலாதாரங்கள் | யுனிட் ட்ரஸ்ட்ஸ் / கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் | மூலதனச் சந்தைகள் |
| தொடர் 01 | பிணையங்கள் சந்தைகளும் கருவிகளும் | ● | ● | ● | ● | ● |
| தொடர் 02 | உரித்துவப் பிணையங்கள் | ● | | | | ● |
| தொடர் 03 | கடன் பிணையங்கள் | | ● | | | ● |
| தொடர் 04 | மூலாதாரங்கள் | | | ● | | ● |
| தொடர் 05 | யுனிட் ட்ரஸ்ட்கள் | | | | ● | ● |
| தொடர் 06 | நிதியியல் திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் | ● | ● | ● | ● | ● |
| தொடர் 07 | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறைகள் | ● | ● | ● | ● | ● |
| | சான்றளிப்பு | உரித்துவப் பிணையங்களில் சான்றிதழ் (CES) | கடன் பிணையங்களில் சான்றிதழ் (CDS) | மூலாதாரப் பிணையங்களில் சான்றிதழ் (CDvS) | யுனிட் ட்ரஸ்ட்கள் / கூட்டு முதலீட்டுத் திட்டங்களில் சான்றிதழ் (CUT / CCIS) | மூலதனச் சந்தையில் சான்றிதழ் (CCM) |
| | பொருத்தமான துறைசார் அனுபவம் | 6 மாதங்கள் | 6 மாதங்கள் | 6 மாதங்கள் | 6 மாதங்கள் | 1 வருடம் |
| | நேர்முகத்தேர்வு பரீட்சை | தேவையானது | தேவையானது | தேவையானது | தேவையானது | தேவையானது |
| | துறைசார் பதவிப்பெயர் | சான்றளிக்கப்பட்ட உரித்துவப் பிணையங்கள் ஆலோசகர் (CESA) | சான்றளிக்கப்பட்ட கடன் பிணையங்கள் ஆலோசகர் (CDSA) | சான்றளிக்கப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் ஆலோசகர் (CDvSA) | சான்றளிக்கப்பட்ட யுனிட் ட்ரஸ்ட் ஆலோசகர் (CUTA) | பதிவுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (RIA) |
| | தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (CPD) | வருடாந்தம் 4 CPD வரவுகள் | | | | |

## மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்

தொற்றினாலும் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமையில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களுக்கு பொருந்துவதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டும் புரிந்துகொண்டும், இ.பி.ப.ஆ. இயங்கலை மேடைகளினூடாக தடையற்ற விரிவுரைகளை வழங்குவதற்காக இயங்கலை விநியோக முறைகளுக்கு மாற்றுவதன் மூலம் அதன் சான்றளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தது.

மீளாய்வுக் காலத்தின்போது இந்த சான்றளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் இணைந்துகொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையில் ஒரு வளர்ச்சியடையும் போக்கானது அவதானிக்கப்பட்டது.

உரிமமளித்தல் ஆட்சிமுறையின் ஒரு பாகமாக, இ.பி.ப.ஆ., பங்குத்தரகுத் துறையில் ஒரு முதலீட்டு ஆலோசகராக கடமையினை செயலாற்றுவதற்கு கட்டாயமாக்கப்பட்ட சான்றளிப்பு திட்டங்களான பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) மற்றும் சான்றளிக்கப்பட்ட உரித்துவ பிணையங்கள் ஆலோசகர் (சா.உ.பி.ஆ.) ஆகியவற்றை நிர்வகித்தது. மேலும், இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணாததன் நிமித்தம், இவை சந்தைக்கு சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகளுடாக அறிவிக்கப்பட்டன, காலாவதியான உரிமங்களையுடைய முதலீட்டு ஆலோசகர்களுக்கு இ.பி.ப.ஆ. மீண்டும் உரிமமளிப்பதனை தொடர்ந்தது. துறையிலுள்ள உரிமமளித்தல் செயன்முறையின் முக்கிய பங்கினை கருதி, எவ்விதமான இடையூறுமின்றி வருடம் பூராவும் முதலீட்டு ஆலோசகர்களுக்கு தொடர்ச்சியாக வாய்மொழித்தேர்வுகள் நடர்த்தப்பட்டன. இந்த தேர்வுகள் நான்கு சொத்து வகுப்புக்களை உள்ளடக்கும், அதாவது. உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், யுனிட் ட்ரஸ்ட்ஸ் மற்றும் மூலாதாரங்கள், ப.மு.ஆ. உரிமத்தினை தொடரும் மாணவர்களை மற்றும் ஒரு சொத்து வகுப்பான உரித்துவப் பிணையங்களுக்கான சா.உ.பி.ஆ. உரிமத்திற்கான மாணவர்களையும் உள்ளடக்கின.

தொழில்வல்லுநர்கள் மற்றும் சந்தையில் தொழில் புரிபவர்களது அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காகவும் நிலைபேறுடையதாக்குவதற்காகவும் இணையவழி கருத்தரங்குகள் ஊடாக தொடர்ச்சியான தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் (தொ.தொ.நி.) நடாத்தப்பட்டன.

இதற்கும் மேலாக,. 2023 ஆம் ஆண்டின்போது இ.பி.ப.ஆ. நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு அறிவுபூர்வமான முதலீட்டுத் தீர்மானங்களுக்கு வசதியளிப்பதற்கு அறிவினை வழங்குவதில் முன்னிறுத்தம் செய்யப்பட்ட முதலிடுவதிலான நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டது. இது தமிழ் மொழியில் நடாத்தப்பட்டதுடன் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் இயங்கலையில் நடாத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தில், மூலதனச் சந்தை தொழில்வல்லுநர்களுக்கும் மேலாக துறைசாரா தனிநபர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை விலகியவர்கள் மற்றும் தொழில்வல்லுநர்கள், ஏனைய துறைகள் உள்ளடங்கலான பன்முகமான மாணவர் தளம் பங்குபற்றுவதனை அவதானிக்கக்கூடியதாயிருந்தது.

### மூலதனச் சந்தையில் சான்றிதழ் (மூ.ச.சா.), உரித்துவப் பிணையங்களில் சான்றிதழ் (உ.பி.சா.) கடன் பிணையங்களில் சான்றிதழ் (க.பி.சா.) மற்றும் யுனிட் ட்ரஸ்ட்டில் சான்றிதழ் (யு.ட்.சா.)

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஆங்கில மொழியில் நடாத்தப்பட்டதுடன் இவை 2023 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. தொகுதி 26 தொடர்பான விரிவுரைகள் ஒக்டோபர் 2022 இல் ஆரம்பிக்கப்பட்டு, வெற்றிகரமாக நடாத்தப்பட்டு செப்டம்பர் 2023 இல் நிறைவுற்றன. இதில் 87 மாணவர்கள் பங்குபற்றினார்கள். 27 ஆம் தொகுதியானது ஒக்டோபர் 2023 இல் 73 பதிவுசெய்யப்பட்ட பங்குபற்றுநர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. (உருவம் : 12)

உருவம் 12: தொடர் நிறைவேற்றலின் புள்ளிவிபரங்கள் 2023




### பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.), சான்றளிக்கப்பட்ட உரித்துவப் பிணையங்கள் ஆலோசகர் (சா.உ.பி.ஆ.) மற்றும் மீள் உரிமமளிக்கப்படுதல்

இவ்வாண்டின்போது ப.மு.ஆ. உரிமம், சா.உ.பி.ஆ. உரிமம், யு.ட்.சா. உரிமம் மற்றம் வருடாந்த தொ.தொ.அ. திட்டங்களுடன் இணக்கப்பாடு காணாமையினால் காலாவதியான உரிமத்தினையுடைய முதலீட்டு ஆலோசகர்களை மீள் உரிமமளித்தல் ஆகியவற்றை வேண்டிய மாணவர்களுக்கு உரிமங்களை வழங்குவதற்காக 15 வாய்மொழித் தேர்வுகள் இடம்பெற்றன.

இதன் பிரகாரம், இந்த வாய்மொழித் தேர்வுகளில் மொத்தமாக 42 மாணவர்கள் பங்பற்றியதுடன் சராசரி சித்தி எய்தல் வீதம் 62% ஆக காணப்பட்டது. சித்தி எய்திய மாணவர்களுள், 12 மாணவர்கள் ப.மூ.சா. உரிமத்தினை பெற்றதுடன் இது 66% ஆகும், 2 மாணவர்கள் சா.உ.பி.ஆ. உரிமத்தினை பெற்றதுடன் இது 6% இனை குறிப்பிட்டதுடன், 3 மாணவர்கள் யு.ட்.சா. உரிமத்தினை பெற்றதுடன் இது 9% ஆகும். 6 முதலீட்டு ஆலோசகர்கள் மாத்திரமே மீள்உரிமம் பெற்றதுடன் இது 19% இனை குறிப்பிட்டது. (உருவம்: 13)

உருவம் 13: உரிமம் அடைதல் புள்ளிவிபரங்கள் 2023

| உரிமத்தின் வகை | உரிமம் அடைதல புள்ளிவிபரங்கள் 2023 | மூ ஆக |
|---|---|---|
| பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசர் (ப.மு.ஆ.) | 21 | 66 |
| சான்றளிக்கப்பட்ட உரித்துவ பிணையங்கள் ஆலோசகர் (சா.உ.பி.ஆ.) | 2 | 6 |
| சான்றளிக்கப்பட்ட யுனிட் ட்ரஸ்ட் ஆலோசகர் (சா.யு.ட.ஆ.) | 3 | 9 |
| மீள்-உரிமமளித்தல்கள் | 6 | 19 |
| மொத்தம் | **32** | **100** |

## தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தித் (தொ.தொ.அ.) திட்டங்கள்

மீளாய்வாண்டின்போது, 5 தொ.தொ.அ. திட்டங்கள், நடைமுறையிலுள்ள பங்குத்தரகு நிறுவனங்களின் முதலீட்டு ஆலோசகர்களுக்கு நடாத்தப்பட்டதுடன் இவை அவர்களை உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தையில் காணப்படுகின்ற நவீன போக்குகளுடன் எந்நேரமும் அணுகி இற்றைப்படுத்திக்கொள்வதனை இயலுமையாக்குகின்றது. இத்திட்டங்கள், பங்குத் தரகு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள், பகுப்பாய்வாளர்கள் மற்றும் நிதியில் துறையில் வேறு துறையில் இருந்தாலும் உரிமத்தினை தக்கவைத்துக்கொள்ள விரும்பும் தனிநபர்கள் உள்ளடங்கலாக 1400 இற்கும் அதிகமான பங்குபற்றுநர்களை கவர்ந்தது. அனைத்து தொ.தொ.அ. திட்டங்களும் இணையவழி கருத்தரங்காக இயங்கலையில் நடாத்தப்பட்டன.

இ.பி.ப.ஆ., நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் அவர்களது ப.மு.ஆ. நிலையினை அடுத்த வருடத்திற்கு புதுப்பிப்பதற்காக ஒரு வருடத்தில் ஆகக்குறைந்தது ந தொ.தொ.தி. கருத்தரங்கு வரவுகளை பெற்றிருக்கும் கட்டாயத் தேவையினை பராமரிக்கின்றது. (உருவம் : 14)

**உருவம் 14: தொ.தொ.அ. திட்டங்களின் சுருக்கம் : 2023 ஆம் ஆண்டு**

| தொ.தொ.அ. திட்டத்தின் தலைப்பு | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பி.ப.ஆ. சட்டத்தின் சூழலில் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களின் முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை | 326 |
| தொடர் 01 – பிணையங்கள் சந்தைகளும் கருவிகளும் | 261 |
| "கொ.ப.ப. இன் மொபைல் செயலி மற்றும் ஏனைய ம.வை.தி. சேவைகளைப் பயன்படுத்தி ம.வை.தி. கணக்கு திறக்கும் செயல்முறை" இலான விழிப்புணர்வு அமர்வு | 51 |
| தொடர் 6 – நிதியியல் திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் | 158 |
| தொழில்நுட்ப பகுப்பாய்வு | 121 |

### முதலிடுவதிலான நிகழ்ச்சித்திட்டம்

முதலிடுவதிலான நிகழ்ச்சித்திட்டமானது சாத்திமான முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தில் அடிப்படையான கோட்பாடு மற்றும் நடைமுறை அம்சங்களை வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாண்டின்போது ஆறு கிழமைகள் தொடரும் ஒரு தொகுதி ஆரம்பிக்கப்பட்டது. தொகுதி 30 தமிழ் மொழியில் நடாத்தப்பட்டதுடன் இது ஜூன் 2023 இல் 24 பதிவுசெய்யப்பட்ட பங்குபற்றுநர்களுடன் துறைசார் தேவைப்பாடுகளுடனாகும்.

### தங்கப் பதக்கம் மற்றும் பண விருதுத் திட்டங்கள்

பல்கலைக்கழக மாணவர்களிடையே மூலதனச் சந்தையினை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இ.பி.ப.ஆ. இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களிடையே ஒரு நெருக்கமான உறவினை பராமரித்தது. மீளாய்வாண்டின்போது தங்கப் பதக்க மற்றும் பண விருது திட்டமானது நிர்வகிக்கப்பட்டதுடன், இது பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களை கற்பதனை தூண்டுவதற்காக முன்னெடுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றும் பல்கலைக்கழக மாணவனுக்கும் ஒரு தங்க விருதும் பணப் பரிசும் வழங்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக பதினொரு தேசிய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டின்போது பின்வரும் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தங்கப் பதக்கங்களும் காசுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- களணியப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக போட்டிகள்

"பல்கலைக்கழக போட்டிகள் 2023" என்று தலைப்பிடப்பட்ட தேசிய பல்லைக்கழகங்களின் மாணவர்களுக்காக பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டியினை இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஒழுங்குபடுத்தி நடாத்தின.

இந்த புதிர் போட்டியினை ஒழுங்குசெய்வதன் பிரதான குறிக்கோள் இலங்கையின் மூலதனச் சந்தையினைப் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குதல், இதன்மூலம் இலங்கையின் பல்கலைக்கழக மாணவர்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்துவதாகும். இந்த முன்னெடுப்பானது பல்கலைக்கழக மாணவர்கள் மூலதனச் சந்தையினை பற்றி அதிக அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கும் மாணவர்களை பங்குச் சந்தையில் முதலிடுவதற்கும் மற்றும் மூலதனச் சந்தைத் துறையில் வேலைவாய்ப்பினை தேடுவதற்கும் ஊக்கமளிக்கும்.

இந்த நிகழ்வானது 13 தேசிய பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவம் செய்யும் அணிகளை கவர்ந்ததுடன், பங்குபற்றுநர்கள், உலகளாவிய சந்தைகள், பொது அறிவு, இலங்கையின் பொருளாதாரம் மற்றும் வணிகங்கள், நடைமுறை அலுவல்கள், விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்கு உள்ளடங்கலான பல்வேறு அறிவுக் களங்களில் பரிசீலிக்கப்பட்டார்கள்.

களணிய பல்கலைக்கழகத்தின் வணிக மற்றும் முகாமைத்துவப் பீடத்திலிருந்த அணியானது (களணிய மாவீரர்கள்) ஒட்டுமொத்த போட்டியின் வெற்றியாளராக பணப் பரிசாக ரூபா 300,000/- இனை வென்றது. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திலிருந்த அணியானது (மோர சுறாக்கள்) இரண்டாம் இடத்தை வெற்றிபெற்று ரூபா 200,000/- இனை வென்றதுடன் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் அணியானது (பேரா மேதைகள்) மூன்றாம் இடத்தை வெற்றிபெற்று ரூபா 100,000/- காசுப் பரிசினை வென்றது.

மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்

செய்திகளில் இ.பி.ப.ஆ.

## Faizal Salieh assumes duties as new SEC Chairman

THE Securities and Exchange Commission of Sri Lanka (SEC) yesterday announced that Faizal Salieh assumed duties as the Chairman on 20 February 2023.

The Daily FT on 10 February exclusively reported the impending appointment.

Salieh is currently the Chairman of the Sri Lanka Institute of Directors, which is committed to empowering Directors from both the private and public sectors with insights and skills to assume their roles ...

Faizal Salieh

... ing over 40 years of extensive experience in commercial and development banking both in Sri Lanka and overseas. He was Chief of Cor... and Merchant Bank... ANZGrindlays Bank; ... NDB; Executive Directo... of NDB Housing Bank; ... MD/CEO of Amana Ba... Senior Independent Di...

## New SEC Chairman starts stakeholder meetings

- Says SEC mindful in playing balanced regulatory role with due consideration to both market development and market facilitation
- Stresses need to safeguard investors while helping market grow by doing 'the right thing the right way'
- Urges stock brokers to move away from short-termism towards long-term sustainability collectively to build investor trust and confidence in capital market
- Moots formation of Compliance Officers Forum
- Brokers call for listing of identified SOEs, attract captive funds such as pension and retirement funds to market and listing of Green and Blue bonds, ...

THE Securities and Exchange Commission of Sri Lanka (SEC) new Chairman Faizal Salieh met with representatives of the stock broking industry last week and deliberated issues that currently impact the capital market and the way forward.

SEC Director General Chinthaka Mendis, Colombo Stock Exchange (CSE) Chairman Dilshan Wirasekara, CEO Rajeeva Bandaranaike and other officials of both the SEC and CSE, participated at the meeting.

SEC Chairman Faizal Salieh (right) with DG Chinthaka Mendis

More Page 2

## President launches visionary program to propel Sri Lanka into developed nation by 2048

- Inaugurates 'Capital Market Club' program in Nugawela Central College in Kandy
- Stresses dual importance of technology, financial literacy for future generations
- Stresses need for SL to break free from its stagnant position, ... approach

PRESIDENT Ranil Wickremesinghe yesterday highlighted the dual importance of technology and financial literacy for the next generations, as Sri Lanka moves towards becoming a developed nation by 2048.

Speaking at the inauguration of the 'Capital Market Club' program at the Nugawela Central College in Kandy yesterday, Wickremesinghe emphasised the need for Sri Lanka to break free from its stagnant position and embrace a forward-thinking approach to secure its global standing.

President Ranil Wickremesinghe

MONDAY, SEPTEMBER 11, 2023

NEWS/ADVERTORIAL

University of Moratuwa Winning Team – Varsity Battles 2023 (inter-faculty quiz competition)

## SEC and CSE inter-faculty quiz competition concludes at Moratuwa University

The Varsity Battles 2023, inter-faculty quiz organized by the Securities and Exchange Commission of Sri Lanka (SEC) and the Colombo Stock Exchange (CSE), was completed at the Moratuwa University on August 29.

The quiz concluded, three winning teams emerged from the Faculty of Engineering itself. The Faculty of Engineering Team 3 emerged as the winning team, whilst Faculty of Engineering Team 1 and Faculty of Engineering Team 2, received certificates for being 1st and 2nd runners- up.

The Varsity Battles 2023 intend to create awareness and educate university students, on capital markets and to increase financial literacy among university students. The ... initially launched in May 2023 with Rajarata University of Sri Lanka and University of Jaffna, followed by the ...

create awareness on the importance of financial, investor, and capital market education. Thus, this initiative highlights the importance of financial literacy for every undergraduate in Sri Lanka."

A group of organizations have come together as sponsors to make this inter university competition a reality. The Varsity Battles 2023 is sponsored by the following organizations.

Platinum sponsors: First Capital Holdings PLC and Bartleet Religare Securities.

Gold sponsors: AICPA and CIMA Sri Lanka, Capital Trust Holdings Ltd, London Stock Exchange Group Sri Lanka, CT CLSA Securities (Pvt) Ltd, and Senfin Securities Limited

Silver sponsors: Lanka Securities (Pvt) Ltd, LOLC Holdings PLC, Asha Securities ...

## SEC announces enhanced Corporate Governance rules

... required to ... ain and disclose ... Policies for ... Management ... nternal ... rols, Relations ... Shareholders ... Investors, ... stleblowing, ... porate Disclosures, ... vironmental, Social ... Governance ... stainability and Anti-... ibery and Corruption

... Securities and ... hange Commission of ... Lanka has announced ... to Corporate ...

Exchange with effect from 1 October 2023.

High standards of Corporate Governance with accountability and transparency are critical to building investor confidence in the capital market and is therefore a priority on the SEC's regulatory agenda. The SEC recognising the need to improve the level of ... in the market initiated a process of amending the Rules on Corporate Governance through a process of stakeholder and public consultations. Based on the stakeholder and public responses the Rules were revised to enhance the governance structures and responsibilities of the Board of Directors and Board Committees of the compa...

## SEC, CSE host another Investor Forum in Negombo

The Securities and Exchange Commission of Sri Lanka (SEC) and Colombo Stock Exchange (CSE) successfully conducted another investor forum in Negombo at Jetwing Blue on August 12.

... ck Market. A session to create awareness on the CSE Mobile ... was conducted by a CSE ... cutive from the Kandy ... ch, Madhawa Aramandeni-...

... rthermore, an analysis of sectoral performance and ... t opportunities was pre-... by Softlogic Stockbrokers ... Ltd Co-Head of Research ... Wickremeratne. ... anel discussion was held ... e participation of Tushara ... ne, Raynal Wickremer-... nd CSE Kandy Branch Manager Dhananjaya Abeysiri-wardena, providing an opportunity for participants to clarify any doubts from the panelists.

The participants were also given the opportunity to meet investment advisors from stock brokerage firms and representatives of unit trust management companies.

The SEC and CSE have conducted a number of forums this year in Badulla, Panadura, Trincomalee, Ampara and Batticaloa to create awareness on investor education and protection while highlighting the importance of financial literacy ...

## SEC cracks down on manipulation via social media

THE Securities and Exchange Commission (SEC) has cracked down suspected market and price manipulation via the use of social media by several persons.

In a series of actions last week, the SEC issued caution and warning notices on four persons found to have engaged in alleged manipulation. One case was a publication of certain comments on the securities of Softlogic Life Insurance PLC (AAIC) listed on the Colombo Stock Exchange, in a WhatsApp social media group named – "Investing", in and around January 2023 that tantamount to recommendations being made to influence other investors to make investment decisions regarding those securities without a proper basis.

More Page 2

சமூக ஊடக மேடைகளூடாக முதலீட்டாளர்களுக்கு வலுவளித்தல்










மூலோபாய இலக்கு 1

# ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலை நிறுவிப் பராமரித்தல்








மூலோபாய இலக்கு 2

# முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

இயக்காற்றலான பிணையங்கள் சந்தை உலகில் முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் ஒரு தடுப்பரணாக இ.பி.ப.ஆ. சேவையாற்றுகின்றது. ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வையின் கடுமையான வலியுறுத்தலினூடாக, இ.பி.ப.ஆ., முதலீட்டாளர்களை மோசடி, கையாளுகை மற்றும் ஏனைய துர்நடத்தைகளிலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் வேளை நிதியியல் சந்தைகளில் நம்பகத்தன்மை மற்றும் நேர்மையினை நிலைநாட்டுவதற்கு முயற்சிக்கின்றது.

## கண்காணிப்பு

சந்தைக் கண்காணிப்பானது, சந்தை / விலை கையாளுகை, உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் ஏனைய சந்தை துர்நடத்தைகள் போன்ற ஒழுங்கற்ற வர்த்தக நடவடிக்கையினால் ஏற்படுகின்றன சாத்தியமான மூலதனச் சந்தை பாதிப்புகளை கண்டுபிடித்தல் மற்றம் தடுப்பதில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இதன் பிரகாரம், இ.பி.ப.ஆ. பிணையங்கள் சந்தை மற்றும் அதன் பங்குபற்றுநர்களின் நேர்மையினை பாதுகாப்பதற்காக அசாதாரணமாக சந்தை அசைவுகள் மற்றும் கையாளுகைகளை கண்டுபிடிப்பதற்காக சந்தையினை கண்காணிப்பதில் ஈடுபடுகின்றது. ஏதேனும் முறைகேடுகள் இனங்காணப்பட்டதன் பின்னர், வர்த்தகத் தரவுகள், டெபிலியு பகுப்பாய்வு மேடை போன்ற பல்வேறு பகுப்பாய்வுக் கருவிகள் மற்றும் முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்படுவதுடன், இதற்கும் மேலாக இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இன் தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு உள்வாரி தரவு நிபுணத்துவ முறையினை பயன்படுத்துவதுடன், அறிக்கைகளை உருவாக்குவதற்காக பன்முகமான வகையான சந்தை தகவல்களை மீட்டெடுப்பதுற்கு இணைய அடிப்படையிலான சேவைகளை வழங்கும் S & P கெப்பிட்டல் IQ மேடையினையும் பயன்படுத்தியது. நாங்கள் எந்நேரத்திலும் சந்தை நேர்மையினை நிலைநிறுத்துவதற்காக சந்தை துர்நடத்தையினை கண்டுபிடித்ததும் முறைமைப்படுத்தல் வழிமுறைகளை வலியுறுத்துகின்றோம். இதன் விளைவாக, கண்காணிப்பு செயற்பாடானது ஒழுங்கான சந்தை செயற்பாடுகளை விருத்திசெய்வதற்கு உதவுவதுடன் மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை ஊக்குவிக்கின்றது.

கண்காணிப்பு அணி

## கண்காணிப்பு அவதானிப்புகள், பரிந்துரைத்தல்கள் மற்றும் குறிப்புகள்

ஏப்ரல் 2023 இலிருந்து இ.பி.ப.ஆ. ஒரு முகப்புப்பெட்டி அடிப்படையிலான அவதானிப்பு முகாமைப்படுத்தல் முறையினை கடைப்பிடிக்கின்றது, இது தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கான போக்கினை இனங்காண்பதற்காகும். இதன் பிரகாரம், நாம் மீளாய்வாண்டின்போது முகப்புப்பெட்டி ஊடாக 169 அசாதாரணமான வர்த்தக நடத்தைகளை அறிக்கையிட்டதுடன், விடயத்தின் தீவிரத்தன்மையினைப் பொறுத்து சந்தேகத்திற்கிடமான தவறுகள் தொடர்பாக செயலூக்கமான நடவடிக்கைகளை பொறுப்பேற்றது. கண்காணிப்பு அவதானிப்புகள் மற்றும் அதன்பின்னர் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மாதாந்தம் ஆணைக்குழுவின் கூட்டங்களில் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்படுகின்றது. இ.பி.ப.ஆ. பங்குத்தரகர்கள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் முதலீட்டாளர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புகளூடாக, கடிதங்களூடாக, மற்றும் இது தொடர்பான கூற்றுப் பதிவுசெய்தல்கள் ஊடாக விளக்கங்களைக் கோரியது. (உருவம்: 15)

### உருவம் 15: கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள் மற்றும் குறிப்புகள்




மீளாய்வாண்டின்போது இ.பி.ப.ஆ. பல்வேறு சந்தேகத்திற்கிடமான தவறுகளில் முதலீட்டாளர்களுக்கு, முதலீட்டு ஆலோசகர்களுக்கு மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரிகளுக்கு 79 தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளது. (உருவம் : 16)

### உருவம் 16: தொலைபேசி அழைப்புகளூடாக கோரப்பட்ட விளக்கங்கள்

| தொடர்புகொண்ட நபர் | மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| முதலீட்டாளர்கள் | 58 |
| முதலீட்டு ஆலோசகர்கள் | 17 |
| இணக்கப்பாட்டு அதிகாரிகள் | 4 |

2023 ஆம் ஆண்டின்போது இ.பி.ப.ஆ. 12 கண்காணிப்பு பரிந்துரைத்தல்களையும் ஒரு கண்காணிப்பு குறிப்பினையும் உருவாக்கியது. இவற்றுள், 11 பரிந்துரைத்தல்களுக்கு முற்றான புலனாய்வுகள் தேவைப்பட்டதுடன், சில கண்காணிப்பு கண்டுபிடிப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக முன்னதான மற்றும் நேரகாலத்துடனான வலியுறுத்தல் நடவடிக்கைகளை கடைப்பிடிக்கும் வேளை, இவை உடனடியாகவும் செயலூக்கமாகவும் விளித்துரைக்கப்படுதல் வேண்டும்.

# மூலோபாய இலக்கு 2

## முதலீட்டாளர் நலனைப் பாதுகாத்தல்

இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இடமிருந்த நான்கு கண்காணிப்பு பரிந்துரைத்தல்களைப் பெற்றது; மேலதிக புலனாய்வுகள் தேவைப்படும் விடயங்கள் பரிந்துரைத்தல்கள் அல்லது அறிக்கைகளாக தொகுக்கப்பட்டு ஆணைக்குழுவுக்கும் இ.பி.ப.ஆ. இன் ஏனைய பிரிவுகளுக்கும் தெரிவிக்கப்பட்டன. வருடம் பூராவும், கொ.ப.ப. இன் பரிந்துரைத்தல்களின் விபரங்களை மேலும் கலந்துரையாடுவதற்காகவும் இந்த பரிந்துரைத்தல்களிலான முன்னேற்றங்களில் இற்றைப்படுத்தல்களை வழங்குவதற்காகவும் ஒரு நிலையான வழக்கமாக கொ.ப.ப. உடன் பல்வேறு கூட்டங்கள் இடம்பெற்றன. (உருவம்: 17)

**உருவம் 17: கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள் - சாத்தியமான தவறுகள்**




கண்காணித்தல் பரிந்துரைத்தல்களுக்கு மேலாக, ஆணைக்குழுவினால் வேண்டப்பட்டவாறு புலனாய்வுப் பிரிவிற்கு குறிப்பாக வடிவமைக்கப்பட்ட பல்வேறு வர்த்தகப் பகுப்பாய்வுகளும் ஒரு முன்னுரிமை அடிப்படையில் உருவாக்கப்பட்டு அனுப்பிவைக்கப்படுகின்றன. இ.பி.ப.ஆ. இலங்கை கணினி அவசர தயார்நிலை அணி (SL CERT) மற்றும் கம்பனிகள் பதிவாளர் நாயகம் போன்ற நிறுவனங்கள் மற்றும் சக முறைமைப்படுத்துபவர்களிடமிருந்து பின்வரும் காரணத்திற்காக மேலதிக உறுதுணையினை நாடியது. அதிகரித்த மட்டத்திலான சமூக ஊடக /சமூக வலையமைப்பு அடிப்படையிலான கையாளுகைகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான தரப்பினர்களிடையேயான பழக்கங்களை இனங்காண்பதில் அவதானித்த சிக்கல்களினால் அவசியமாக்கப்பட்டுள்ள கண்காணிப்பு செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காகும். இந்த நடவடிக்கைகள், சாத்தியமான துர்நடத்தைக்காக உரியநேரத்தில் உடனடியான பதில்களுக்காக மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் மூலம் ஆரம்ப கட்டத்திலேயே சந்தை பாதிப்பினை தவிர்ப்பதற்காகும்.

ஒரு பரந்த சாத்தியமான சந்தை துர்நடத்தையினை கண்டுபிடிப்பதற்காகவும், நவீன தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றுக்கேற்ப கண்காணிப்பு செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. ஒரு விரிவான தன்னியக்கமான கண்காணிப்பு முறைக்கான பிரேரணைகளை கோருக்கின்றது. இ.பி.ப.ஆ. புதிய முறையினை 2024 இல் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

### சமூக ஊடகங்களை கண்காணித்தல்

சாத்தியமான சந்தை துர்நடத்தை சந்தர்ப்பங்களை இனங்காணவும் தகவல் அடிப்படையிலான கையாளுகைகள் தொடர்பாக செயல்திறனான வழிமுறைகளை எடுப்பதற்காகவும் இ.பி.ப.ஆ. பல்வேறு சமூக ஊடக மேடைகளில் பகிர்ந்துகொள்ளப்பட்ட தகவல்களை ஆராய்ந்தது. இதன் பிரகாரம், வெவ்வேறு முதலீட்டாளர்களினால் பல்வேறு சமூக ஊடக மேடைகளில் மற்றும் முகப்புத்தகம், யுடியூப், வட்ஸ்ஸப், ரெலிகிராம் மற்றும் ஓ போன்ற ஏனைய சமூக வலையமைப்பு வழிகளில் பிரசுரிக்கப்பட்ட பல்வேறு இடுகைகளை அவதானித்தது. மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சமூக ஊடக இடுகைகளை நாம் அவதானித்தோம். இவை பரிந்துரைத்தல்கள் அல்லது விலை இலக்குகள், அத்தகைய பிணையங்களின் சந்தை மற்றும் / அல்லது விலை தொடர்பாக ஒரு பொய்யான சந்தையினை உருவாக்குவதற்கு சாத்தியமாக இட்டுச்செல்லுதல் ஆகியவற்றை உள்ளடக்கலாம். மேலாக, சமூக ஊடக ஊக்கமளிப்பில் “பங்குப் பரிவர்த்தனை” என்ற தலைப்பு அல்லது குறிப்பின் பயன்பாடு ஆகியவை காணப்பட்டன.

இதன் விளைவாக, துர்நடத்தைகளுடன் இணைந்த சமூக ஊடகத்தின் தவறான பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. நேரகாலத்துடனான மற்றும் அளவுவாரியான வலியுறுத்தல் நடவடிக்கையினை தூண்டியது. இதன் பிரகாரம், 27 அவதானிப்புகள் தொடர்பாக முதலீட்டாளர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புகளூடாக உடனடியாக விளக்கங்கள் கோரப்பட்டன. இவற்றுள் நான்கு அவதானிப்புகள், உரிய சமூக ஊடக மேடைகளுக்கு இ.பி.ப.ஆ. அன் உத்தியோகபூர்வ முகப்புத்தகம் / யுடியூப் கணக்குகளினால் “பொருத்தமற்ற உள்ளடக்கங்களை இடுகை” செய்தமைக்காக அறிவிக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பின் தீவிரத்தினைப் பொறுத்து, 10 விடயங்களில் கூற்றுக்களது பதிவு ஊடாக விளக்கங்கள் கோரப்பட்டன. 2023 ஆம் ஆண்டின்போது, ஆறு முதலீட்டாளர்களுக்கு எச்சரிக்கைகளும் எட்டு இனங்காணப்பட்ட முதலீட்டாளர்களுக்கு முன்னெச்சரிக்கை கடிதங்களும் வழங்கப்பட்டன.

### புலனாய்வுகள்

இலங்கையின் பிணையங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதிகள், விதி. அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிப்புரை, ஆகியவற்றின் கூறப்பட்ட ஏதேனும் மீறல்கள் அல்லது அதன் கீழ் யாரேனும் நபரினால் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்களில் புலனாய்வுகளை நடாத்துவது ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளாகும். மீளாய்வாண்டின்போது, இ.ப.பி.ஆ. அதன் பொறுப்பாணையினை நிறைவேற்றுவதற்கான அதன் முயற்சிகளை தொடர்ந்ததுடன், இதன்மூலம் ஒரு நியாயமான, ஒழுங்கான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையின் உருவாக்கம், பராமரிப்பு மற்றும் முறைமைப்படுத்தலுக்கு வசதியளிப்பதுடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நலன்களையும் பாதுகாக்கின்றது.

2023 இன் ஆரம்பத்தில், இ.பி.ப.ஆ. முன்னைய ஆண்டிலிருந்த முன்கொண்டுவரப்பட்ட 57 நடந்துகொண்டிருக்கும் புலனாய்வுகளை கொண்டிருந்தது. மேலும், 2023 இல் 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டம், 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) மற்றும் 2001 இன் இ.பி.ப.ஆ, விதிகளின் கீழான சந்தேகத்திற்கிடமான தவறுகளில் 24 புலனாய்வுகளை முன்னெடுப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது. இவ்வாண்டின்போது முன்னெடுக்கப்பட்ட மொத்த புலனாய்வுகளுள் 12, 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் கீழான மீறுகைகள் தொடர்பானதாகும். இந்த மீறுகைகள் உள்ளுறைபவர் வர்த்தகம், மற்றும் பொய்யான வர்த்தகம், சந்தை செயற்கை ஏற்ற இறக்கம் மற்றும் பிணையங்கள் மோசடி போன்ற பல்வேறு வகையான சந்தை கையாளுகைகளையும் உள்ளடக்குகின்றது.

மேற்குறிப்பிட்ட 81 புலனாய்வுகளில், இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டின்போது 26 புலனாய்வுகளை நிறைவுசெய்தது. அத்தகைய 14 புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், ஆணைக்குழு பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானித்தது:

- 25 தனிநபர்களுக்கும் 5 நிறுவனங்களுக்கும் காரணங் காட்டல் அறிவித்தல்கள் வழங்குவதற்கு.
- ஒரு தனிநபருக்கு ஒரு எச்சரிக்கை கடிதம் வழங்குவதற்கு.
- 2 தனிநபர்களுக்கு முன்னெச்சரிக்கை கடிதங்களை வழங்குவதற்கு; மற்றும்
- 4 புலனாய்வுகளின் உரிய கண்டுபிடிப்புகளை இலங்கையின் மத்திய வங்கியின் அவசியமான நடவடிக்கைக்காக பரிந்துரைத்தல்.

மேற்குறிப்பிட்ட 26 புலனாய்வுகளுக்கும் மேலாக, மீளாய்வாண்டின்போது நடாத்தப்பட்ட ஏனைய நான்கு புலனாய்வுகளின் அடிப்படையில், ஆணைக்குழுவானது ஏழு தனிநபர்களுக்கும் நான்கு நிறுவனங்களுக்கும் காரணங் காட்டு அறிவித்தல்களை வழங்குவதற்கு தீர்மானித்தது. மேலும், அத்தகைய இரண்டு

புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகள் இலங்கை மத்திய வங்கியின் அவசியமான நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது முன்னர் குறிப்பிட்ட புலனாய்வுகளின் சில ஏனைய அம்சங்களில் மேலும் புலனாய்வுகளை நடாத்துவதற்கு தீர்மானித்ததுடன் அந்த புலனாய்வுகள் வருடத்தின் இறுதியியல் தீர்க்கப்படாது உள்ளன.

மேலும், 2023 இல் நிறைவுசெய்யப்பட்ட 12 புலனாய்வுகள் தொடர்பாக, உரிய புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகள் தொடர்புடைய தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் ஏதேனும் தவறினை இழைத்துள்ளதாக நிலைநாட்டாததன் காரணமாக எவ்விதமான வலியுறுத்தல் நடவடிக்கைகளையும் எடுக்காதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில், 5 புலனாய்வுகள் நடந்தவண்ணமுள்ளன. இவற்றுள், எட்டு புலனாய்வுகள் தொடர்பாக இ.பி.ப.ஆ. புலனாய்வு அறிக்கைகளை முடிவுறுத்தியுள்ளதுடன், இவை 2024 ஆம் ஆண்டின் ஆணைக்குழுவின் முதலாவது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், டிஜிட்டல் யுகத்தில் ஏற்படுகின்ற அபிவிருத்திகளுக்கு இணையாக, இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டின்போது டிஜிட்டல் உருமாற்றத்தினை தழுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. இது இதநாள்வரைக்கும் புலனாய்வுகளுக்காக சேகரித்த தகவல்களை ஒரு டிஜிட்டல் மேடைக்கு இடம்பெயர்தல், மற்றும் புலனாய்வுகளின் ஒட்டுமொத்த வினைத்திறனை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய மேம்பட்ட பகுப்பாய்வுக் கருவிகளை ஆராய்வதன் மூலம் மற்றும் புலனாய்வுப் பிரிவின் செயற்திறனை உகப்பாக்குவதற்கும் ஆகும்.

மேலும், 2023 இல் ஒரு உள்வாரி வழிகாட்டியாக பயன்படுத்தப்பட்ட இ.பி.ப.ஆ. இன் புலனாய்வுகள் கையேடு, ஒரு புதிய புலனாய்வுகள் மற்றும் வலியுறுத்தல் கையேட்டினால் மாற்றீடு செய்யப்பட்டது. முன்னைய கையேட்டுடன் ஒப்பிடும்போது, இந்த புதிய கையேடானது 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ச. இலிருந்தான மாற்றங்களை உள்ளடக்குவதற்காக விருத்திசெய்யப்பட்டது. இந்த புதிய கையேட்டினை விருத்திசெய்வதற்கு சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்களுக்கான ஒழுங்கமைப்பினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உறுதுணையானது காரணியாயிருந்தது.

புலனாய்வுகள் அணி

## வலியுறுத்தல் நடவடிக்கைகள்

புலனாய்வுகள், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், இ.பி.ப.ஆ. ஆல் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் தீர்மானம் மற்றும் பணிப்புரையின் பிரகாரம் வலியுறுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### காரணங் காட்டு அறிவித்தல்களின் வழங்கல்

- இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறும் சந்தை கையாளுகைக்காக மூன்று முதலீட்டு ஆலோசகர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறும் சில பட்டியலிடப்பட்ட பங்குகளில் சந்தை கையாளுகைக்காக ஒன்பது முதலீட்டாளர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

*இ.பி.ப.ஆ. இன் பிரசுரித்தல் கொள்கையின் பிரகாரம் யாருக்கெதிராக வலியுறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோ அவர்களின் பெயர்கள் இ.பி.ப.ஆ. இன் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன..

- 1995 இன் கம்பனி பொ.இ.கோ. இன் விதி இலக்கம் (திருத்தியமைக்கப்பட்டது) 30 (1) இனை மீறி ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பானதாகும். 2014 இன்போது கம்பனி அதன் எஞ்சிய பங்குதாரர்களுக்கு ஒரு கட்டாயக் கொடைமுனைவினை நீடித்தது, கம்பனிக்கும் அதன் சபையில் சேவையாற்றிய ஏழு பணிப்பாளர்களுக்கும் மற்றும் கம்பனியின் ஒரு ஊழியருக்கும் எதிராக 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (3) இன் பிரகாரம் காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 137 (2) (a) இனை மீறும் பிரசுரிக்கப்படாத விலை உணர்திறனான தகவல்களை வைத்திருக்கும் வேளை, கம்பனியின் தொடர்புடைய நபர்கள் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளை அவர்கள் கொள்வனவு செய்தமைக்காக, மூன்று தனிநபர்களுக்கு காரணங் காட்டு அறவித்தல்கள் வழங்கப்பட்டன.
- கொ.ப.ப. இல் சந்தை மற்றும் / அல்லது பிணையங்களின் விலை தொடர்பாக ஒரு பொய்யான சந்தையினை உருவாக்குவதற்கான ஒரு முயற்சிக்கு இட்டுச்செல்லும், பரிந்துரைத்தல்களுக்கு நிகரான தகவல்களை உள்ளடக்கிய ஒரு ஆவணத்தினை பிரசுரித்தமைக்காக மற்றும் ஒரு முன்னிலைப்படுத்தலை /செயலமர்வினை நடாத்தியமைக்காக ஒரு தனிநபருக்கு காரணங் காட்டு அறவித்தல் வழங்கப்பட்டது.
- 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இ.பி.ப.ஆ. விதிகளின் இலக்கம் 12 இனை மீறியமைக்காக அவர்களுக்கு எதிராக இ.பி.ப.ஆ. ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என விளக்கமளிக்குமாறு ஒரு தனிநபருக்கும் இரண்டு கம்பனிகளுக்கும் காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் முன்னோடியமைக்காக, ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.
- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் முன்னோடுதலை இழைக்கும் சதிக்கு உடந்தையிருந்ததற்காக ஒரு முதலீட்டாளருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.
- சந்தை இடையீட்டாளர் உரிமத்தின் புதுப்பிக்கும் நோக்கத்திற்காக, இ.பி.ப.ஆ. இற்கு சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசியில் தவறான மற்றும் பொய்யான தகவல்களை வழங்கியமைக்காக ஒரு சந்தை இடையீட்டாளரின் ஒரு முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

# மூலோபாய இலக்கு 2

## முதலீட்டாளர் நலனைப் பாதுகாத்தல்

- சந்தை கையாளுகையினை இழைப்பதற்கு சதிசெய்தமைக்காக மற்றும் அவரது முதலீட்டு ஆலோசகர்களை சந்தை கையாளுகையினை இழைப்பதற்கு உதவி செய்தல் மற்றும் உடந்தையாயிருந்தமைக்காக ஒரு முதலீட்டாளரக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.
- 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 128 (1) மற்றும் பிரிவு 129 (1) இனை மீறும் சந்தை கையாளுகையாக கருதப்படும் ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் அவரது வர்த்தகப் போக்கிற்காக ஒரு முதலீட்டாளருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.
- இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 12 இனை மீறும் சந்தை கையாளுகைக்காகவும் மற்றும் அதில் சதிசெய்தமைக்காகவும் ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் ஒரு பணிப்பாளர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் இவர்களுடன் தொடர்புடைய ஒரு முதலீட்டாளருக்கும் காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (a) இன் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளாக 2015 இல் இ.பி.ப.ஆ. இனால் ஒரு பணிப்புரை மூலம் வழங்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான முறைமைப்படுத்தல் நியமங்களை மீறியுள்ளதற்காக, அப்போதைய 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் இ.பி.ப.ஆ. இனால் பதிவேடளிக்கப்பட்ட ஒரு முதலீட்டு முகாமையாளருக்கும் அதன் பணிப்பாளர்கள் மற்றும் அதன் பிரதம முதலீட்டு அதிகாரிக்கும் காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- ஒரு முதலீட்டாளரின் முதலீடுகளுக்குப் பொறுப்பாக ஒரு சுயாதீன ஒப்பந்ததாரராக பணிபுரியும்வேளை, இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 14 இனை மீறும் முன்னோடுதல் இனை இழைத்தமைக்காக ஒரு தனிநபருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.
- கொ.ப.ப. இன் வர்த்தகப் பங்குபற்றுநர் விதிகளின் விதி 13.3 (3) மற்றும் 13.3 (4) இனை மீறியதன் மூலம் 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 175 (1) (a) இன் கீழ் ஒரு தவறினை இழைத்ததன் மூலம், ஒரு பங்குத் தரகு நிறுவனத்திற்கு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது..
- இ.பி.ப.ஆ. இன் விதிகளின் விதி 14 இனை மீறும் முன்னோடுதல் மற்றும் விதி 12 இனை மீறும் சந்தை கையாளுகை உள்ளடங்கலான அவரது நடத்தைக்கு ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.
- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகள் தொடர்பாக இ.பி.ப.ஆ. இன் விதிகளின் விதி 12 இனை மீறும் சந்தை கையாளுகையினை இழைப்பதற்கு மற்றுமொருவருக்கு உடந்தையாயிருப்பதற்கு சதி செய்தமைக்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் மூன்று முன்னாள் ஊழியர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 128 மற்றும் 132 இனை மீறும் மற்றுமொருவரின் ம.வை. தி. கணக்கினை அவரது வர்த்தகத்திற்காக பயன்படுத்தியமைக்காக ஒரு முதலீட்டாளருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

### வழக்கறிவித்தல் வழங்குதல்

- 2014 ஆம் ஆண்டின்போது கம்பனி அதன் எஞ்சிய பங்குதாரர்களுக்கு ஒரு கட்டாயக் கொடைமுனைவினை நீடித்த காலத்தின்போது, இ.பி.ப.ஆ. இற்கு பொய்யான தகவல்களை வழங்கியமையானது 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) பிரிவு 51 (1) (b) இன் பிரகாரம் ஒரு தவறுக்கு நிகராக காணப்படுவதனால், ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கும் அதன் பணிப்பாளர் சபையின் ஏழு அங்கத்தவர்களுக்கும் வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- இ.பி.ப.ஆ. இன் விதிகளின் விதி 12 இனை மீறும் சந்தை கையாளுகையாக கருதப்படும் அவர்களது வர்த்தகத்திற்காக மூன்று முதலீட்டு ஆலோசகர்களுக்கு வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- ஒரு முதலீட்டாளரின் முதலீடுகளுக்குப் பொறுப்பான ஒரு சுயாதீன ஒப்பந்ததாரராக பணிபுரியும்வேளை, இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 14 இனை மீறும் முன்னோடுதல் தவறினை இழைத்தமைக்காக ஒரு தனிநபருக்கு ஒரு வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது.
- ஒரு முன்னாள் முதலீட்டு ஆலோசகர் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட சில முதலீட்டாளர்களின் ம.வை.தி. கணக்குகளை பயன்படுத்தியதன் மூலம் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 12 இனை மீறும் சந்தை கையாளுகையினை இழைத்தமைக்காக அவருக்கு ஒரு வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது.
- 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 32 (1) இனை மீறியமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு பணிப்பாளருக்கு ஒரு வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது.
- ஒரு கட்டாயக் கொடைமுனைவில், கொடை முனையும் கம்பனியானது, மற்றுமோர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியினால் அதன் எஞ்சிய பங்குதாரருக்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டாயக் கொடைமுனைவுடன் இணைந்த, 1995 இன் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் விதி (திருத்தியமைக்கப்பட்டது) 31 (3) இனை மீறியமைக்காக பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கும் அதன் பணிப்பாளர்கள் சபைக்கும் வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- ஒரு கட்டாயக் கொடைமுனைவில், கொடை முனையும் கம்பனியானது, மற்றுமோர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியினால் அதன் எஞ்சிய பங்குதாரருக்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டாயக் கொடைமுனைவுடன் இணைந்த, 1995 இன் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் விதி (திருத்தியமைக்கப்பட்டது) 31 (3) இனை மீறுவதற்கு சதி செய்தமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் நிறைவேற்று தலைவருக்கு (அந்த நேரத்தில்) ஒரு வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது.
- ஒரு கட்டாயக் கொடைமுனைவில், பொறுப்பேற்கப்படும் கம்பனியின் ஒரு பங்குதாரரான ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு முதலீட்டாளர் /தலைவர், மற்றுமோர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியினால் அதன் எஞ்சிய பங்குதாரருக்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டாயக் கொடைமுனைவுடன் இணைந்த, 1995 இன் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் விதி (திருத்தியமைக்கப்பட்டது) 31 (3) இனை மீறுவதற்கு கொடைமுனைவு அளித்த கம்பனியின் நிறைவேற்று தலைவருக்கு உதவி செய்வதற்கும் உடந்தையாய் இருப்பதற்கும் சதி செய்தமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு முதலீட்டாளர் /தலைவருக்கு வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- இ.பி.ப.ஆ. இன் விதிகள் விதி 12 இனை மீறுகின்ற சில பட்டியலிடப்பட்ட பங்குகளில் சந்தை கையாளுகையாக கருதப்படும் அவர்களது வர்த்தகத்திற்காக இரண்டு முதலீட்டாளர்களுக்கு வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- இ.பி.ப.ஆ. இன் விதிகள் விதி 12 இனை மீறுகின்ற பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் சந்தை /விலை கையாளுகைக்காக, பட்டியலிப்பட்ட பொதுக் கம்பனியின் நிறைவேற்றுனரல்லா தலைவர், நிறைவேற்று பணிப்பாளர் /பொது முகாமையாளர், அதன் பிரதம நிதியியல் அதிகாரி மற்றும் இரண்டு தொடர்புடைய நபர்களுக்கு வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

- இ.பி.ப.ஆ. இன் விதிகள் விதி 12 இனை மீறுகின்ற சந்தை கையாளுகைக்காக மற்றும் அதற்கு சதி செய்தமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு பணிப்பாளர் மற்றும் அதன் முகாமைப் பணிப்பாளர்களுக்கு வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- குறிப்பிட்ட பட்டியலிடப்பட்ட பங்குகள் தொடர்பாக ஒரு வைபர் குழுவில் அவர்கள் மேற்கொண்ட சில இடுகைகளினூடாக சந்தை கையாளுகையினை இழைத்தமைக்காக இரண்டு முதலீட்டாளர்களுக்கு வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன.
- 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 137 (2) (a) இனை மீறுகின்ற பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை வைத்திருக்கும்போது அவர் தொடர்புடையவராய பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்தமைக்காக ஒரு தனிநபருக்கு வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது.

### எச்சரிக்கை வழங்கல்

- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியில் ஒரு பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகங்கள் ஒரு உள்ளுறைபவர் வர்த்தகமாக கருதப்படலாமா என உறுதிப்படுத்துவதற்காக நடாத்தப்பட்ட ஒரு புலனாய்வினைத் தொடர்ந்து, குறித்த பணிப்பாளர் எச்சரிக்கப்பட்டார்.
- பட்டியலிடல் விதிகளின் விதி 7.8 உடன் இணக்கப்பாட்டினை உறுதி செய்வதற்காக, பரிமாற்றகத்திற்கு வெளிப்படுத்தப்படவுள்ள விலை உணர்திறன் தகவல்களுடன் தொடர்புள்ள பணிப்பாளர்களின் வர்த்தகங்களை ஆளுகை செய்வதற்கு ஒரு தரமான உள்ளகப் பொறிமுறையினை கொண்டிருக்குமாறு ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
- ஒரு சமூக ஊடகக் குழுவான "வட்ஸ்அப்" இல் "பங்குப் பரிவர்த்தனையின்" பெயர், தலைப்பு, விபரம் மற்றும் இலச்சினையினை பயன்படுத்தியமைக்காக, ஏனெனில் இது இ.பி.ப.ஆ. ஆல் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குப் பரிமாற்றகத்துடன் அத்தகைய குழுவிற்கு தொடர்புடையது என்ற நம்பிக்கையினை உருவாக்குவதாக குறிப்பிடும் அல்லது அத்தகைய போக்கிலான தோற்றத்தினை வழங்கியமைக்காக ஒரு முதலீட்டாளருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
- கொ.ப.ப. இன் அப்போதைய பங்குத்தரகர் விதிகளின் விதி 2.5.1 இனை மீறியமை தொடர்பாக ஒரு பங்குத் தரகுக் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு ஒரு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
- தங்களது தகப்பனாரின் ம.வை.தி. கணக்குகளை பயன்படுத்தி வர்த்தகம் செய்தமைக்காவும், ஏனைய முதலீட்டாளர்களில் செல்வாக்கு செலுத்துவதாகப் பொருள்படும்விதமாக பரிந்துரையாக கருதப்படும் விதமாக சமூக ஊடகத்தில் இடுகைகளை மேற்கொண்டமைக்காக இரண்டு தனிநபர்களுக்கும் ஒரு தனிநபரின் தகப்பனாருக்கும் அவரது ம.வை.தி கணக்கினை முறையான செயன்முறையினை பின்பற்றாது பயன்படுத்துவதற்கு அவரது மகனை அனுமதித்தமைக்காக எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.
- 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 77 இனை மீறும் 'பங்குப் பரிவர்த்தனை' இனை பெயர், தலைப்பு மற்றும் இலச்சினையினை பயன்படுத்தியமைக்கு எதிராக இரண்டு முதலீட்டாளர்கள் எச்சரிக்கப்பட்டார்கள்.
- ஒரு முதலீட்டு ஆலோசகரினாலும் அவரது குடும்ப அங்கத்தவர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட அசாதாரணமான வர்த்தக நடவடிக்கைகளில் நடாத்தப்பட்ட ஒரு புலனாய்வினைத் தொடர்ந்து, அந்த சமயத்தில் பொருத்தமான கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளின் பிரிவு 3.1 உடன் இணக்கப்பாடு காண்பதற்கு தவறியமைக்காக முதலீட்டு ஆலோசகர் எச்சரிக்கப்பட்டார்.

### முன்னெச்சரிக்கை கடிதங்கள் வழங்கல்

- ஒரு பட்டிலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு முன்னாள் பணிப்பாளருக்கு, இவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக சேவையாற்றிய நேரத்தின்போது பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை பயன்படுத்தி குறித்த கம்பனியின் பங்குகளில் வர்த்தகம் செய்தமைக்காக, ஒரு முன்னெச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டது.
- ஒன்பது சிற்றளவு முதலீட்டாளர்கள், கொ.ப.ப. இல் வர்த்தகம் செய்யப்படும் சில பிணையங்களைப் பற்றி சமூக ஊடகத்தில் கருத்துக்களை மேற்கொள்வதானது, அந்த பிணையங்கள் தொடர்பாக ஒரு பொய்யான சந்தையினை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்யக்கூடிய, அப்பிணையங்கள் தொடர்பாக முதலீட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்வதற்கு ஏனைய முதலீட்டாளர்களில் செல்வாக்கு செலுத்தக்கூடிய விதமாக அமையும் என்பதனால் அவர்களுக்கு எதிராக முன்னெச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன.
- சந்தையில் ஒரு பொய்யான மற்றும் தவறாக இட்டுச்செல்லும் தோற்றத்தினை உருவாக்கும் விதத்தில் பல பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் அவர்களது வர்த்தகப் போக்கிற்காக நான்கு சிற்றளவு முதலீட்டாளர்களுக்கு முன்னெச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன.
- ஒரு பங்குத்தரகுக் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு, நான்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் பங்குத்தரகுக் கம்பனியின் இரண்டு வாடிக்கையாளர்களான அவரது குடும்ப அங்கத்தவர்களின் பிணையங்கள் கணக்கில் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்கள் தொடர்பாக ஒரு சாத்தியமான முன்னோடுதலாகக் கருதப்படக்கூடிய அவரது நடத்தைக்கு முன்னெச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டது.
- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் ஒரு முதலீட்டாளரது வர்த்தகப் போக்கானது சந்தை அல்லது அக்குறிப்பிட்ட பங்கின் விலையில் ஒரு பொய்யான தோற்றத்தை வழங்கலாம் என்பதற்காக அவருக்கு ஒரு முன்னெச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டது.

### ஒரு பொதுக் கண்டனம் வழங்கல்

இ.பி.ப.ஆ. இன் விதிகளின் விதி 12 இனை மீறுகின்ற ஒரு பங்கின் சந்தை /விலை கையாளுகையாக கருதப்படும் ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின பங்குகளில் அவரது வர்த்தகப் போக்கிற்காக ஒரு முதலீட்டாளருக்கு பொதுக் கண்டனம் வழங்கப்பட்டது.

### ஏனைய முகவர்களுக்கு பரிந்துரைத்தல்

- 1998 -2017 காலப்பகுதியின்போது இடம்பெற்ற சில பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் நடாத்தப்பட்ட புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகளில், ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் அவசியமான நடவடிக்கைகளுக்காக இ.ம.வ. இற்கு பரிந்துரைக்கப்பட்டது.
- ஒரு முதலீட்டு ஆலோசகர் மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அசாதாரணமான வர்த்தக நடவடிக்கைகள் கொ.ப.ப. இற்கு அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் அந்நேரத்தில் பொருத்தமான கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளின் பிரிவு 3.1 உடன் இணக்கப்பாட்டினை காணத் தவறியமைக்காகும்.

### நிர்வாகத் தண்டப்பணம் விதிப்பு

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி 7.13 (b) (ii) இன் பிரகாரம் குறித்த கம்பனியானது வெளிப்படுத்தாமைக்காக / தாமதமாக வெளிப்படுத்தியமைக்காக, இ.பி.ப.ஆ. இனால் வழங்கப்பட்ட காரணங் காட்டு அறிவித்தலுக்கான பதில்களை கேட்டறிந்ததனை தொடர்ந்து, 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (ii) இன் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கு ஒரு நிர்வாக தண்டனையாக ரூபா 5,000,000/- விதிக்கப்பட்டது.

### 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 16 (c) உடன் சேர்த்து பிரிவுகள் 26 (5), 178(5a), 81 (3), 175 (1) (a), மற்றும் 175 (4) இன் பிரகாரம் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிப்பாளர்களினால் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுடன் இணக்கப்பாடின்மை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் /அல்லது நிர்வாக வலுவளிப்புகளை பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் கொ.ப.ப. இற்கு வழிகாட்டல்களுடன் ஒரு பணிப்புரை வழங்கப்பட்டது.

# மூலோபாய இலக்கு 2

## முதலீட்டாளர் நலனைப் பாதுகாத்தல்

### 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 16 (c) இன் பிரகாரம் இரண்டு முதலீட்டு ஆலோசகர்களுக்கும் அவர்களது பங்குத் தரகு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

இரண்டு முதலீட்டு ஆலோசகர்களுக்கு பணிப்புரைகளை வழங்குவதன் மூலம் அவர்கள் இ.பி.ப.ஆ. இனால் உரிமமளிக்கப்பட்ட ஒரு சந்தை இடையீட்டாளரின் வாடிக்கையாளர்களுடன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினாராக அல்லது ஊழியர்களாக ஈடுபடுவதற்கு தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டார்கள். இது 15 மார்ச் 2022 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2271/09 மற்றும் 15 மார்ச் 2022 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2271/10 இல் பிரசுரிக்கப்பட்ட விதி இலக்கம் 6 (g) இன் அட்டவணை II – தகுதியும் பொருத்தமும், முறையே ஒரு சந்தை இடையீட்டாளரின் முக்கிய முகாமைத்துவ நபரும் மற்றும் ஒரு சந்தை நிறுவனத்தின் முக்கிய நபரும், இவை கொ.ப.ப. இன் வர்த்தக பங்குபற்றுநர்கள் விதிகளது வர்த்தக பங்குபற்றுநர்களுக்கான ஆகக் குறைந்த நியமங்களின் விதி (5) (a) (ii) உடன் இணைத்து வாசிக்கும்போது, இன் பிரகாரங்களாகும்.

அவர்களது உரிய பங்குத் தரகு நிறுவனங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள் மூலமாக இது அறிவிக்கப்பட்டது.

### தவறுகளின் ஒத்திணங்கல்கள்

- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 32 (1) இனை மீறி செயற்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் மேல், ஆணைக்குழுவானது குறித்த தவறினை ரூபா 3 மில்லியனுக்கு ஒத்திணங்குவதற்கு அங்கீகாரத்தினை வழங்கியது. குறிப்பிட்ட நபருக்கு எதிரான இத்தவறானது இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு முன்னர் குறிப்பிட்ட தொகையினை செலுத்தியதன் பின்னர் ஒத்திணங்கப்பட்டது.

- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) பிரிவு 32 (1) மற்றும் 32 (6) இன் பிரகாரம் உள்ளுறைபவர் வர்த்தகத்திற்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு பணிப்பாளரின் நான்கு தவறுகளுக்கு எதிராக, அவரால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் ஒத்திணங்குவதற்கு மேற்கொண்ட ஒரு தீர்மானமானது, பின்னர் ஆணைக்குழுவினால் திரும்பப் பெறப்பட்டது. இது இ.பி.ப.ஆ. ஆல் விடயத்தினை ஒத்திணங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட தொகையுடன் குறித்த நபர் உடன்படாமையினாலாகும்.

- இதன் காரணமாக, இ.பி.ப.ஆ. அப்போதைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 32 (1) மற்றும் 32 (6) இன் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ள உள்ளுறைபவர் வர்த்தகத்திற்காக குறித்த நபருக்கெதிராக இ.பி.ப.ஆ. கோட்டை, நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. குறித்த நபர் ஒத்திணங்கல் தொகையினை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆணை விண்ணப்பங்களை தாக்கல் செய்துள்ளார். (கீழே பின்வரும் வழக்கு இலக்கங்களை பார்க்கவும் CA (W) 301/2023 and CA (W) 797/2023).

- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் நிறைவேற்றதிகாரமற்ற தலைவரினால் இழைத்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்ட சந்தை /விலை கையாளுகை தவறுக்கு ஒத்திணங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் அடிப்படையில், இவ்விடயமானது ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்திற்கு இவர் ரூபா 3.3 மில்லியனை செலுத்தியதன் பின்னர் ஒத்திணங்கப்பட்டது.

- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு நிறைவேற்று பணிப்பாளர் / பொது முகாமையாளரினால் இழைத்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்ட சந்தை /விலை கையாளுகை தவறுக்கு ஒத்திணங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் அடிப்படையில் இவ்விடயமானது ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்திற்கு இவர் ரூபா 3.3 மில்லியனை செலுத்தியதன் பின்னர் ஒத்திணங்கப்பட்டது.

- 2001 இன் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 12 இனை மற்றுமொருவர் மீறுவதற்கு உதவியாயும் உடந்தையாயும் மற்றும் அதற்காக சதி செய்தமையாகவும் காணப்பட்ட அவரது தவறு தொடர்பாக ஒத்திணங்கல் தொகையினை செலுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டில் ஒரு வருட காலஅவகாசம் வழங்கப்பட்டதுடன், அவர் இவ்வாண்டின்போது ஒத்திணங்கல் தொகையினை செலுத்தினார்.

- 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 32 (6) இனை மீறும் உள்ளுறைபவர் வர்த்தகத் தவறிற்கு ஒத்திணங்குவதற்கு ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு, ஆணைக்குழுவானது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒத்திணங்கல் தொகையாக ரூபா 100 மில்லியனை விதிப்பதற்கு தீர்மானித்தது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட நபர் தவறினை ஒத்திணங்குவதற்கு அத்தொகையினை இன்னமும் தீர்ப்பனவு செய்யவேண்டியுள்ளது.

- இரண்டு பட்டியலிடப்பட்ட பொது கம்பனிகளின் பங்குகள் தொடர்பாக சந்தை கையாளுகை தவறினை இழைத்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நபரினால் அத்தவறினை ஒத்திணங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், ஆணைக்குழுவானது குறித்த தவறுகளுக்கு ஒத்திணங்குவதற்காக ரூபா 6.6 மில்லியனை செலுத்தவேண்டும் என தீர்மானித்தது. எவ்வாறாயினும், இவர் ஒத்திணங்கல் தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு தவறியதன் விளைவாக, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

- ஒரு பட்டியலிடப்பட்ட பொது கம்பனியின் பங்குகள் தொடர்பாக சந்தை கையாளுகை தவறினை இழைத்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நபரினால் அத்தவறினை ஒத்திணங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், ஆணைக்குழுவானது குறித்த தவறுகளுக்கு ஒத்திணங்குவதற்காக ரூபா 3.3 மில்லியனை செலுத்தவேண்டும் என தீர்மானித்தது. இவர் ஒத்திணங்கல் தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு தவறியதன் விளைவாக, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

### நிலுவையிலுள்ள வழக்குகள்

#### இ.பி.ப.ஆ. எதிர் எம்.ஐ.சம்சுதீன் மற்றும் எம். பி. நிஷார் - MC S/5322/17

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 113 (பி) மற்றும் 102 இனை 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனையும் சேர்த்து வாசித்து இவற்றின் கீழ் தண்டிக்கத்தகு சந்தை/விலை கையாளுகைக்கு சதி செய்தமை மற்றும் சந்தை/விலை கையாளுகையினை செய்தமைக்காக மேற்குறிப்பிட்ட வழக்கினை இ.பி.ப.ஆ. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் எம். இம்தியாஸ் சம்சுதீன் மற்றும் பாவிக் நிஷார் என்பவர்களுக்கெதிராக தாக்கல் செய்தது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

#### இ.பி.ப.ஆ. எதிர் லங்கா கன்னங்கர, கபில சேனாரத், பாரிக் ஹர்கான், மற்றும் ரவீந்திர மல்லவாரச்சி, MC/Fort/13736/19

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக 2019 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### சிந்தக்க மெண்டிஸ் எதிர் டபிள்யு.கே.எச். வெகாபிட்டிய, திலக் டி சில்வா மற்றும் தக்ஷிலா ஹூலங்கமுவ, MC Fort/16967/20

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக மேற்குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு எதிராக 2020 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி, MC/Fort/12639/19

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 32 இனை தண்டனைக் கோவையின் பிரிவு 102 உடன் சேர்த்து வாசிக்கும்போது உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கெதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### சிந்தக்க மெண்டிஸ் எதிர் நிஹால் ரதெல்ல நீ.நீ/கோட்டை/23337/22

ஒரு புலனாய்வின்போது எடுக்கப்பட்ட கூற்றுக்களது பதிவின்போது இ.பி.ப.ஆ. க்கு ஒரு கூற்றினை வழங்கும்போது பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தகவலை வழங்கியமைக்காக திரு. நிஹால் ரத்தெல்லவிற்கு எதிராக 2022 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன் சட்ட நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 46ஏ (1) இனை மீறியமைக்காகும்.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### டபிள்யு.கே.எச். வெகாபிட்டிய மற்றும் திலக் டி சில்வா எதிர் சிந்தக்க மெண்டிஸ் HCRA 28/22

இ.பி.ப.ஆ. இனால் தாக்கல் செய்யப்பட்ட நீ.நீ /கோட்டை / 16967 / 20 இலக்கத்தினை கொண்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இருவரினால் அறிவுபடைத்த நீதிவான் அவர்களது விசாரணையினை தொடர்வதற்கான கட்டளைக்கு எதிராக ஒரு மீட்டல் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

இ.பி.ப.ஆ. இற்கு சார்பாக வழங்கப்பட்ட தீர்ப்பின் பின்னர், மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு தெரிவுசெய்துள்ளதுடன், இது இதுநாள்வரைக்கும் நிலுவையிலுள்ளது.

### இ.பி.ப.ஆ. எதிர் ரியாஷ் மொஹமட் சங்கானி நீ.நீ 28266/2023

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவுகள் 32 (1) மற்றும் 32 (6) இனை மீறும்வகையில் விதுல்லங்கா பிஎல்சி இன் பங்குகளில் நான்கு சந்தர்ப்பங்களில் வர்த்தகம் செய்தமைக்காக திரு. ரியாஷ் மொஹமட் சங்கானி இக்கு எதிராக இ.பி.ப.ஆ. இனால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது..

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### சிந்தக்க மெண்டிஸ் எதிர் டபிள்யு.ஈ.எம். வீரசிங்க, ஈ.ஏ.குணவர்தன மற்றும் எஸ்.எம். டி ஆர். குணசேகர – நீ.நீ. (கோட்டை)

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) உடன் பிரிவு 51(2) இனையும் சேர்த்து வாசித்து இதன் கீழ் தண்டிக்கத்தக்கதான 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனை மீறி சந்தை கையாளுகை தவறினை இழைத்தமைக்காக திரு. டபிள்யு.ஈ.எம். வீரசிங்க, திரு. ஈ.ஏ.குணவர்தன மற்றும் திரு. எஸ்.எம். டி ஆர் குணசேகர ஆகியோருக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டது. தரப்பினர்களுக்கு இன்னமும் அழைப்பாணைகள் வழங்கப்படவுள்ளன.

### சிந்தக்க மெண்டிஸ் எதிர் கே.ஏ.எல்.டி. லங்கா கன்னங்கர – நீ.நீ. கோட்டை (28706/23)

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் தண்டிக்கத்தக்கதான 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனை மீறி ஒரு தவறாகக் காணப்பட்ட சந்தை கையாளுகைக்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

### சிந்தக்க மெண்டிஸ் எதிர் கே.ஏ.எல்.டி. லங்கா கன்னங்கர – நீ.நீ. கோட்டை (28707/23)

18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனை மீறியமைக்காக திரு. கே.ஏ.எல்.டி. லங்கா கன்னங்கரவுக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. திரு. கே.ஏ.எல்.டி. லங்கா கன்னங்கரவுக்கு அழைப்பாணைகள் வழங்கப்பட்டன.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### சிந்தக்க மெண்டிஸ் எதிர் கோவிந்தசாமி ரமணன் மற்றும் திரு. கனகரத்தினம் நவீன்காந்த் நீ.நீ./ கோட்டை/28553/23

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறுகளான சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை மேற்கொள்வதற்கு சதி செய்தமை மற்றும் தவறிழைப்பதற்கு உதவியாயும் உடந்தையாயும் இருந்தமைக்காக திரு. கோவிந்தசாமி ரமணன் மற்றும் திரு. கனகரத்தினம் நவீன்காந்த் ஆகியோருக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அழைப்பாணைகள் வழங்கப்பட்டு வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

## ஏனைய வழக்காடல்கள்

### ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் ஏசியா கெப்பிட்டல் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் ஏனையோர் (மே.நீ. (சிவில்) 12/2023/IP)

இவ்வழக்கானது 1ஆவது எதிராளிக்கு எதிராக வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், இ.பி.ப.ஆ. ஒரு தரப்பாக பெயரிடப்பட்டுள்ளது ஆனால் இ.பி.ப.ஆ. இற்கு எதிராக எவ்விதமான நிவாரணமும் கோரப்படவில்லை. வழக்காளிக்கும் 1ஆம் எதிராளிக்கும் இடையே ஒரு சமரசம் எட்டப்பட்டதன் பின்னர் இவ்விடயமானது முடிவுறுத்தப்பட்டுள்ளது.

### டலிப் தவ்வீக் அல் நகீப் எதிர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (வழக்கு இலக்கம் WP/ HCCA/LA/COL/158/17 (LA), மா.நீ. வழக்கு இலக்கம் DSP/20/2016)

மேற்குறிப்பிட்ட வழக்கானது இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இற்கு எதிராக கொழம்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது விண்ணப்பதாரி ஹீத் அன்ட் கம்பனி (சிலோன்) லிமிட்டட்டினால் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கட்டாயப்படுத்தும் ஏற்பாடுகளை மீறி பங்கு வழங்கலினை மேற்கொண்டுள்ளமையானது ஹன்டர் அன்ட் கம்பனி லிமிட்டட்டில், விண்ணப்பதாரி (தற்போது காலமாகியுள்ளார்) 14% பங்குதாரர் என்பதனால் அதன் தாக்கத்தையிட்டு ஒரு புலனாய்வினை நடாத்துமாறு வேண்டியுள்ளார். 26 ஒக்டோபர் 2017 திகதியிடப்பட்ட கட்டளையின் மூலம், மாட்ட நீதிமன்றமானது அவ்விடயத்தினை கேட்பத்ற்கு அதற்கு நியாயாதிக்கம் இல்லையென வழக்கினை தள்ளுபடி செய்தது. விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் அந்த கட்டளைக்கு எதிராக மேன்முறையிடுவதற்கான அனுமதி வேண்டி விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இவ்வழக்கானது குறித்த நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

# மூலோபாய இலக்கு 2

## முதலீட்டாளர் நலனைப் பாதுகாத்தல்

### கெப்பிட்டல் ட்ரஸ்ட் ஹோல்டிங்ஸ் மற்றும் துஷான் ஹர்ச மெண்டிஸ் விக்கிரமசிங்க எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் (CA)

இ.பி.ப.ஆ. இற்கு எதிராக விண்ணப்பதாரிகளினால் தாக்கல் செய்யப்பட்ட பேராணை விண்ணப்பமானது ஏனையவற்றுக்கிடையில், திரு. விக்கிரமசிங்க இ.பி.ப.ஆ. இன் விதி இலக்கம் 12 இனை மீறியுள்ளார் மற்றும் அவருக்கெதிராக குற்றவியல் நடவடிக்கைகளை தாக்கல் செய்யும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை நீக்குமாறு உறுதிகேள் பேராணையினை வழங்குமாறு வேண்டியுள்ளது.

இவ்வாண்டின்போது மேன்முறையீட்டு நீதிமன்றமானது இரண்டாவது விண்ணப்பதாரிக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை தாக்கல் செய்வதற்கு இ.பி.ப.ஆ. இனால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை மற்றும் அதன் வழக்கறிவித்தலையும் நீக்குமாறு தீர்மானம் வழங்கியது.

### ரியாஷ் மொஹமட் சங்கானி எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர் (CA (W) 301/2023)

விண்ணப்பதாரியினால் இழைக்கப்பட்ட உள்ளுறைபவர் வர்த்தகத்தில் நான்கு தவறுகளை ஒத்திணங்குவதற்கு ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட மொத்த தொகைக்கு எதிராக ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்ததுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆணையீட்டெழுத்தாணையினை வேண்டி ஏனையவற்றுக்கிடையில் இ.பி.ப.ஆ. இனை பின்வருவனவற்றை பணிப்புறுத்தும் மற்றும் / அல்லது கட்டாயப்படுத்துமாறு வேண்டியுள்ளது:

- விண்ணப்பதாரியின் நான்கு தவறுகளை விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் இலாபத்திற்கு விகிதாசாரமான மற்றும் நியாயமான தொகைக்கு ஒத்திணங்குவதற்கு; மற்றும்
- விண்ணப்பதாரிக்கு எதிராக விடயத்தினை ஒத்திணங்குவதற்கு இ.பி.ப.ஆ. இனால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பாக, விண்ணப்பதாரி தொடர்பாக இ.பி.ப.ஆ. எந்தவிதமான தகவல்களையும் பிரசுரிக்காமல் இருப்பதற்கு.

இவ்வழக்கானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### ரியாஷ் மொஹமட் சங்கானி எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர் (CA (W) 797/2023)

விண்ணப்பதாரி அவரது மேன் முறையீட்டு நீதிமன்ற பேராணை விண்ணப்ப இலக்கம் 301/2023 தொடர்பாக, மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் தாக்கல் செய்தார். இவர் ஏனையவற்றுக்கிடையில், விண்ணப்பதாரியினால் இழைக்கப்பட்ட உள்ளுறைபவர் வர்த்தகத்தின் நான்கு தவறுகளை ஒத்திணங்குவதற்கு இ.பி.ப.ஆ. அதன் முன்னைய தீர்மானத்தினை திரும்பப்பெறுவதற்கு எடுத்துள்ள தீர்மானத்தினை ஒழித்துவிடுவதற்கும் மற்றும் விண்ணப்பதாரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதனை தொடரும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை ஒழித்துவிடுவதற்கும் உறுதிகேள் பேராணையினை வேண்டினார். மேலும் விண்ணப்பதாரி, விண்ணப்பதாரியின் நான்கு தவறுகளை விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் இலாபத்திற்கு விகிதாசாரமான மற்றும் நியாயமான தொகைக்கு ஒத்திணங்குவதற்கு இ.பி. பஆ. இனை கட்டாயப்படுத்துவதற்கு ஒரு ஆணையீட்டெழுத்தாணையினை வேண்டியுள்ளார்.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### இதிரிஸ் சபீர் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர் (CA (W) 444/2023

1995 இன் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 30 (1) இனை மீறியதில் கம்பனியின் நடத்தை தொடர்பாக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளர் என்ற தரத்தில் அவருக்கு வழங்கப்பட்ட வழக்கறிவித்தலை ஒழிக்குமாறு ஏனையவற்றுக்கிடையில் மேற்குறிப்பிட்ட உறுதிகேள் பேராணையினை தாக்கல் செய்தார். அத்துடன் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (3) இன் பிரகாரம் வழங்கப்பட்ட காரணங்காட்டு அறிவித்தலை ஒழிக்குமாறு வேண்டியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட மீறுகைகள் தொடர்பாக, இவ்விடயத்தில் ஏற்பட்ட புதிய முன்னேற்றங்கள் காரணமாக, இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கு எதிராக நடவடிக்கையினை தொடராதிருப்பதற்காக இ.பி.பஆ. இனால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை கருத்திற்கொண்டு, விண்ணப்பாரி அவரினால் தாக்கல் செய்யப்பட்ட பேராணை விண்ணப்பத்தினை திரும்பப்பெற்றார்.

### நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ.) எதிர் ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. – மே.நீ. (சிவில்)/11/2021/CO)

ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. இன் 5% இற்கும் குறையாத வாக்குரிமையுள்ள பங்குகளை வைத்துள்ள ஓர் பங்குதாரரான ந.அ.அ. கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 225 இன் கீழ் அதே சட்டத்தின் பிரிவுகள் 226, 520 மற்றும் 521 உடன் சேர்த்து வாசித்து, ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. க்கு எதிராக ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தது. இங்கு ஒனாலி ஹோல்டிங்ஸ் இன் நடவடிக்கைகள் கம்பனியின் நலன்களுக்கு முரணான விதத்தில் நடாத்தப்படுவதாகவும் சமீபத்தில் ஒரு கட்டாயக் கொடைமுனைவின் மூலம் ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி இனை பொறுப்பேற்ற லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இனால் பங்குகளது உரித்துவத்தினூடாக கம்பனியின் கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என குற்றம் சுமத்தப்பட்டது. ந.அ.அ., ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி, ரேணுகா கெப்பிட்டல் பி.எல்.சி, பி.டபிள்யு கோர்ப்பரேட் செக்கடேரியல் (பிரைவேட் ) லிமிட்டட் ஆகியோரை முறையே 1 முதல் 5 ஆவது பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளதுடன் இ.பி.ப.ஆ. 06ஆவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

31 டிசம்பர் 2023 இல் இவ்வழக்கானது நிலுவையிலுள்ளது.

### சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ., மே.நீ. /பேராணை/417/2017

### சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ., உநீ/விசேடம்/LA 100/19 (இவ்விரண்டும் இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி, நீநீ/கோட்டை/12639/19 உடன் இணைந்ததாகும்)

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கெதிராக உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு மறுமொழியாக முதலாவது குற்றம் சுமத்தப்பட்டவர் இ.பி.ப.ஆ. க்கு எதிராக ஓர் பேராணை விண்ணப்பத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வேண்டி தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றமானது நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மறுப்பு தெரிவித்து கட்டளையினை வழங்கியதுடன் அறிவித்தல் வழங்கலில் எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு வேண்டியது.

அதன்பின்னர், பேராணை விண்ணப்பம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைக்கு எதிர்ப்பு தெரிவித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் உயர்நீதிமன்றத்திற்கு விசேட அனுமதிக்கான மேன்முறையீடு செய்தார். உயர்நீதிமன்றமானது விண்ணப்பதாரியின் விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்கியதுடன் விசாரணைக்காக விடயத்தினை நிர்ணயித்ததுடன் இது நிலுவையிலுள்ளது.

### ஷோ வொலஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி மற்றும் சமிந்திர இராஜையா எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய நால்வர் - CA Writ 460/2023

விண்ணப்பதாரிகள் ஏனையவற்றுக்கிடையில் 1ஆவது பிரதிவாதியினால் வழங்கப்பட்ட வழக்கு அறிவித்தலுக்கு எதிராக ஒரு உறுதிகேள் பேராணையினை வழங்குவதற்காகவும், 1ஆம் பிரதிவாதி மற்றும் /அல்லது 2ஆம் பிரதிவாதி மற்றும் /அல்லது 3ஆம் பிரதிவாதிகளை விண்ணப்பதாரிகளுக்கு எதிராக குற்றவியல் அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைகளை தாக்கல் செய்வதிலிருந்து கட்டுப்படுத்தும் ஒரு தடைப்பேராணையினை வேண்டியும் ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார்கள். இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### வழக்கு இலக்கம் : உநீ (விசேட) LA விண்ணப்பம் இலக்கம் 177/2020

விண்ணப்பதாரி கம்பனியான பஞ்சலிங்கம் எசோஸியேஸன் (பிரைவேட் ) லிமிட்டட் எச்.என்.பி. பி.எல்.சி. இன் கம்பனியினால் வைத்திருக்கும் பங்குகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சில பணிப்புரைகளுக்கு எதிராக உறுதிகேள் பேராணைக்காக ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தது. விண்ணப்பதாரி கம்பனி இலங்கை மத்திய வங்கியினது பணிப்புரைகளை ஒதுக்கிவைக்குமாறு வேண்டுகின்றது. நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், வங்கி மேற்பார்வை பிரிவின் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் இ.பி.ப.ஆ. உள்ளடங்கலாக ஏனைய நால்வர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பேராணையினை வழங்குவதற்கு மறுக்கப்பட்டதனால், விண்ணப்பதாரி கம்பனி உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான விசேட அனுமதிக்கு தாக்கல் செய்துள்ளது. இ.பி.ப.ஆ. இடமிருந்து எவ்வித நிவாரணமும் கோரப்படவில்லை. இந்த விடயமானது உயர்நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### மே.நீ. (பேராணை) விண்ணப்பம் இலக்கம் 148/2021: எம்.ஏ.சி.ஈ. மந்திரிரத்ன எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் 14 ஏனையோர்.

விண்ணப்பதாரி இந்த விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதிகேள் பேராணை மற்றும் ஆணையீட்டெழுத்தாணை வழங்குவதற்காக ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். இது ஓர் பணியாளருக்கு பதவியுயர்வினை வழங்கும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை நீக்குமாறும் மற்றும் அதற்குப்பதிலாக விண்ணப்பதாரியை பதவியுயர்த்துமாறு இ.பி.ப.ஆ. இல் ஓர் பணிப்புறுத்தலை வேண்டியும் அல்லது மாற்றுவழியாக விண்ணப்பதாரியை முகாமையாளர் பதவிக்கு, முகாமையாளர் பதவிக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்ட பணியாளருக்கு மேலாக விண்ணப்பதாரியை நியமிப்பதன்மூலம் பதவியுயர்வினை வழங்குவதை வேண்டியதாகும். இவ்வாண்டின்போது விண்ணப்பதாரி இ.பி.ப.ஆ. இல் பதவி விலகியதன் நிமித்தம் விண்ணப்பதாரியினால் இவ்வழக்கானது வாபஸ் பெறப்பட்டது.

## புலனாய்வு, கண்காணிப்பு, மேற்பார்வை கண்டுபிடிப்புகள் போன்றவற்றின் அடிப்படையில் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் வழிநடத்தல் மற்றும் தீர்மானத்தில் இ.பி.ப.ஆ. இனால் வலியுறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### S.C.F.R. விண்ணப்ப இலக்கம் 182/2021 – பொறியியலாளர் ஜி. கபில ரேணுக்க பெரேரா எதிர் மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் இ.பி.ப.ஆ. உள்ளடங்கலான 32 ஏனையோர்

விண்ணப்பதாரி உயர் நீதிமன்றத்தில் செலன்டிவா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் மற்றும் இ.பி.ப.ஆ. (07ஆவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது) உள்ளடங்கலாக ஏனைய 32 பேருக்கு எதிராக பின்வருவனவற்றை வேண்டி ஓர் அடிப்படை உரிமை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். ஏனையவற்றுக்கிடையில், அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட (இலங்கையின் சகல அனைத்து பிரஜைகளும் உள்ளடங்கலாக) விண்ணப்பதாரியின் 1 அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை உரிமைகளில் ஓர் உடன்நிகழக்கூடிய மீறலாக வெளிப்படுத்தலுக்காகும். விண்ணப்பதாரி செலந்திவ இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் இனை (இது பொருத்தமான மறுசீரமைப்பினூடாக உச்ச செயற்திறன் மட்டத்திற்கு அரச உடைமையான விருந்தோம்பல் நிறுவனங்களை மாற்றுவதற்கான பிரதான குறிக்கோளினைக் கொண்டுள்ள ஓர் புதிய அரச உடைமையான ஆதன அபிவிருத்தி கம்பனியாகும் ) நிறுவிய 06 மார்ச் 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தினை வெற்றும் வரிதுமானதாக்குமாறு ஓர் வெளிப்படுத்தலை வேண்டுகின்றார். திறைசேரியானது கம்பனியின் 100% உரித்துவத்தினைக் கொண்டுள்ளது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் செலந்திவ இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்டினை இ.பி.ப.ஆ. பட்டியலிடுவதற்கு அனுமதிப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்யும் ஓர் இடைக்காலக் கட்டளை வேண்டப்பட்டது. இவ்விடயமானது உச்ச நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

ஒக்டோபர் 2023 இல், விண்ணப்பதாரியின் வழக்கறிஞர், செலந்திவ இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்டினை கலைக்கப்படுதற்கான தீர்மானத்தினை அமைச்சரவை அமைச்சர்கள் மேற்கொண்டுள்ளார்கள் எனவும் கலைத்தல் செயன்முறையினை ஆரம்பிக்குமாறு மேலதிக அறிவுறுத்தல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்திற்கு அறிவித்தார். எனவே, விண்ணப்பதாரியின் வழக்கறிஞர் இவ்விடயம் வாபஸ் பெறப்படும் என நீதிமன்றத்திற்கு அறிவித்தார். இதன் பிரகாரம், இவ்விடயத்திற்கான பிரதிவாதியினால் வாபஸ் பெறுவதற்கு எவ்வித எதிர்ப்பினையும் கொண்டிராததனால் இவ்விண்ணப்பத்தினை வாபஸ் பெறுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

## முறையீடுகள் குறைதீர்த்தல் முறைமை

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறையீடுகளது நிலவரம் மற்றும் அவற்றுக்கான குறைதீர்த்தல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: (உருவம்: 18)

**உருவம் 18: பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான முறையீடுகள் மற்றும் விடயங்களை கையாண்டமை**

| முறையீட்டின் தன்மை | கையாண்ட முறையீடுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ∴ தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையினது நடத்தை | 3 | 03 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன |
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நடத்தை | 11 | 09 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன / 02 விடயங்கள் தற்போது நிலுவையிலுள்ளன |
| இ.பி.ப.ஆ. இன் விதிகள் /கொ.ப.ப. இன் விதிகளுடன் இணக்கப்பாடின்மை | 6 | 05 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன / 01 விடயம் தற்போது நிலுவையிலுள்ளது |
| ஏனைய நிர்வாக விடயங்கள் | 5 | 05 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன |
| பொருத்தமான நிதியியல் அறிக்கையிடல் வரம்புறுகையுடன் இணக்கப்பாடின்மை | 4 | 04 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன |
| மொத்தம் | 29 | |

# மூலோபாய இலக்கு 2

## முதலீட்டாளர் நலனைப் பாதுகாத்தல்

### ஆணைக்குழுவின் நிதியங்கள்

#### தீர்வை நிதியம்

தீர்வை நிதியமானது 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14பி, 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ), என்பவற்றின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இவை 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 156 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவுகள் 155 (1) மற்றும் (2), 156 (1), (2) மற்றும் (3) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தினை செயற்படுத்துவதற்கான செயல்முறை மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு.

155 (1) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் அமைச்சரினால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய வீதத்தில், உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு மற்றும் விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் ஓர் தீர்வை விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டு மற்றும் செலுத்தப்படல் வேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

(2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படல்வேண்டும்.

156 (1) பிரிவு 155 இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படல்வேண்டும்.

(2) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள பணமானது பின்வரும் நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படலாம் -

(அ) பிணையங்கள் சந்தையினை விருத்தி செய்வதற்கு

(ஆ) இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துவதற்கு அல்லது இந்த பகுதியின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்திற்கு

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் நிறைவேற்றுவதில் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் செயற்பாடு என்பவற்றுக்கான ஆணைக்குழுவினால் ஆட்பட்ட அனைத்து செலவினங்களையும் சந்திப்பதற்கு

(ஈ) ஆணைக்குழு பொருத்தமானது எனக் கருதும் பிரகாரம் ஆணைக்குழுவின் பணியாட்களுக்கு வீடமைத்தல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்கு கடன்கள் வழங்குவதற்கு

(உ) பணிப்பாளர் நாயகம் மற்றும் அதன் அதிகாரிகள் மற்றும் சேவகர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் நியமிக்கப்பட்டோர் ஆகியோரது நலனுக்காக நிறுவப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு பங்களிப்புகளை மேற்கொள்வதற்கு மற்றும்

(ஊ) ஆணைக்குழுவினால் தகுதியானவர்கள் என தீர்மானிக்கப்பட்டவாறு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சேவகர்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கற்கைக்கான செலவினங்களுக்கு பணங்கொடுத்து தீர்ப்பதற்கு

(3) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள ஏதேனும் மேலதிக பணத்தை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய விதத்தில் தீர்வை நிதியத்தினை விருத்திசெய்யும் நோக்கத்திற்காக ஆணைக்குழு முதலீடு செய்யலாம்.

#### உரித்துவ பிணையங்களுக்கான தீர்வை

கொ.ப.ப. இன் வழிகாட்டல்களின் பிரகாரம், 1 ஆகஸ்ட் 2010 முதல் இ.பி.ப.ஆ. ஆல் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வீதமானது இரண்டாவது தடவையாக ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.072% ஆக குறைக்கப்பட்டுள்ளது. முன்னைய குறைப்பானது 1 டிசம்பர் 2003 முதல் பிரயோகத்திலுள்ள தீர்வைக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

மேலும், மேற்குறிப்பிட்ட வீதங்களுக்கு பிரயோகிக்கப்படும் குறுமட்டமானது 27 ஜூன் 2017 முதல் ரூபா 100 மில்லியனாக மாற்றியமைக்கப்பட்டது. முன்னர், 1 ஜனவரி 2011 முதல், ரூபா 50 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 50 மில்லியனுக்கு மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072 % மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன. அதன் பின்னர் 27 ஜூன் 2017 தொடக்கம், மாற்றியமைக்கப்பட்ட குறுமட்டத்தின் பிரகாரம் ரூபா 100 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 100 மில்லியனுக்கும் மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072மூ மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன.

இதற்கும் மேலாக, ஒரே நாளிலான வர்த்தகங்களுக்கு, அதாவது ஒரு வாடிக்கையாளர் ஒரே தினத்தில் ஒரே தரகரூடாக ஒரே பிணையத்தினை வாங்கி விற்றால் (அல்லது நேர்மாறாக) இ.பி.ப.ஆ, க்கு சேரவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணம் 15 பெப்ரவரி 2006 முதல் ஒரு பக்க கொடுக்கல் வாங்கலுக்கு விதிக்கப்படமாட்டாது. கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது. வாங்கிய பங்குகளின் மொத்த எண்ணிக்கை விற்ற பங்குகளின் மொத்த எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது. ஒரு வாடிக்கையாளரின் ஒரே பிணையத்திலான மொத்த கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் இ.பி.ப.ஆ. கொடுக்கல் வாங்கல் கட்டணத்தின் விலக்களிப்பினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக கருத்திலெடுக்கப்படும். இருப்பினும், அரசாங்க பங்குக் கொடுக்கல் வாங்கல் கட்டணமான 0.30% ஆனது கொடுக்கல் வாங்கலின் இரு பக்கங்களுக்கும் அறவிடப்படும்.

#### தீர்வை நிதியத்தின் செயற்பாடு

இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்கு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 50 மில்லியன் வீதம் மாற்றல் செய்யப்பட்டது.

திரட்டிய நிதியத்திற்கு ஐந்து தடவைகள் மேற்கொண்ட மாற்றல்கள் முறையே ரூபா 276 மில்லியன், ரூபா 380 மில்லியன், ரூபா 94 மில்லியன், மற்றும் ரூபா 52 மில்லியன் மற்றும் 312 மில்லியன் என்பன முறையே 2010, 2012, 2013, 2019 மற்றும் 2020 ஆகும்.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் இத்தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 5,237.8 மில்லியனை எட்டியது என்பதுடன் இதில் பன்னிரண்டு மாதங்களினுள் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 2,962.3 மில்லியன் முதலீடு செய்யப்பட்டும், பன்னிரண்டு மாதங்களின் பின்னர் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 2,181.9 மிலலியன் முதலீடு செய்யப்பட்டும், ரூபா 51.9 மில்லியன் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டும் உள்ளன. 2014 முதல் 2023 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் நடவடிக்கையின் பிரதிநிதித்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் : 19)

உருவம் 19: தீர்வை நிதியம்



நிதி மற்றும் நிர்வாக அணி

## இழப்பீட்டு நிதியம்

1987 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு இழப்பீட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 இன் கீழ், ஓர் இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் இ.பி.ப.ஆ. இன் சட்டரீதியான ஓர் பொறுப்பாகும். இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அதனைப் பராமரிப்பதற்கான வழிகாட்டிகள் பின்வருமாறு:

158 (1) யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு

வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்படுகின்றார் என்று கண்டறிவதன் விளைவாக யாரேனும் முதலீட்டாளர் பணவகையான நட்டத்தினை அடைந்தால் அவருக்கு இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காக இழப்பீட்டு நிதியம் என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.

(2) இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிப்பு செய்யக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(ஆ) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்; மற்றும்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(3) இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 159 ஆனது ஆணைக்குழு ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிலிருந்து மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிய இழப்பீட்டு குழுவினை நியமித்தல் வேண்டும் என வேண்டுகின்றது.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் இழப்பீட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது இழப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை இழப்பீடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இதுநாள்வரை இழப்பீட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.

## இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாடு

இழப்பீட்டு நிதியத்தினை பலப்படுத்துவதற்காக 2009 ஆம் வருடத்தில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள மீதி ரூபா 687.5 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களில் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 369.4 மில்லியனும், பன்னிரண்டு மாதங்களுக்கு பின்னர் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 316.3 மில்லியனும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 1.2 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன. 2014 முதல் 2023 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் செயற்பாடுகளின் பிரதிநிதித்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம்: 20)

# மூலோபாய இலக்கு 2

## முதலீட்டாளர் நலனைப் பாதுகாத்தல்

உருவம் 20: இழப்பீட்டு நிதியம்




தீ.உ.நி. 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் (கொ.ப.ப.) மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது

### தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)

தீ.உ.நி. 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் (கொ.ப.ப.) மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீ.உ.நி. இன் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் ரி+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை ரி+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு இடர்நேர்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது.
- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளார்கள். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம்.
- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகையானது அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள் நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.

எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இத் தீர்ப்பனவு இடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையினை (ம.எ.பொ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை.

### தீ.உ.நி. இன் செயற்பாடு

இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தலா ரூபா 50 மில்லியன் வீதம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிவர்த்தனையும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்தது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் தீ.உ.நி. இன் வரவிலுள்ள மீதியானது ரூபா 1,279.2 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களினுள் முதிர்வடையும் என எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 90.6 மில்லியனும், திறைசேரி உண்டியல்களில் ரூபா 1,146.6 மில்லியனும், மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 3.2 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன. 2014 முதல் 2023 வரையுமான காலப்பகுதியில் நிதியத்தின் செயற்பாட்டின் பிரதிநிதித்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் : 21)

உருவம் 21: தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்



## மூலோபாய இலக்கு 3

# மூலதனச் சந்தை அபிவிருத்தி

இ.பி.ப.ஆ. புதிய கருவிகள், சேவைகள் மற்றும் சந்தை உட்கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதன் மூலம் பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்வதில் மற்றும் விரிவாக்குவதில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இது சந்தை திரவத்தன்மையினை மேம்படுத்தல், புத்தாக்கமான நிதியியல் கருவிகளை அறிமுகப்படுத்தல், மற்றும் புதிய முதலீட்டாளர்களை கவருதல் ஆகிய முன்னெடுப்புகளை உள்ளடக்குகின்றது.

ஒரு பயனுறுதியான மற்றும் செயற்திறனான மூலதனச் சந்தை பொறிமுறையானது முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் ஆகிய இரு சாராருக்கும் பொருளாதாரத்தின் வளர்ச்சி நோக்கி வளங்கள் பாய்ச்சப்படுவதற்கான வாய்ப்புக்களுடனான ஒரு நியாயமான தளத்தினை வழங்குகின்றது.

மீளாய்வுக் காலப்பகுதி பூராவும், உரிய இயலுமை கற்கைகள் மற்றும் மதிப்பீடுகளை நடாத்தியதன் பின்னர், இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தை நிலத்தோற்றத்தில் பல்வேறு புதிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகளை அமுலாக்குவதில் ஈடுபட்டது.

### சந்தைக்கு புதிய கருவிகளின் அறிமுகம்

சந்தைக்கு பன்முகமான நிரலான புதிய மூலதனச் சந்தை கருவிகளின் அறிமுகத்திற்கு வசதியளிக்கும் முயற்சியாக, இ.பி.ப.ஆ. – கொ.ப.ப. ஆகியவற்றின் ஒரு கூட்டுக் குழுவானது, இந்த உருமாற்றலான முயற்சியினை முன்கொண்டு செல்வதற்காக நிறுவப்பட்டதுடன் இது ஆணைக்குழுவின் சிறப்பான ஒரு அங்கத்தவரான திரு. மனில் ஜயசிங்க அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் வழிநடத்தப்படுகின்றது.

இந்தக் கூட்டுக் குழுவானது ஒரு உந்து சக்தியாக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகிய இரண்டினதும் கூட்டு நிபுணத்துவத்தினை தடையின்றி ஒருங்கிணைப்பதுடன், ஒரு புதிய யுகமான சந்தை புத்தாக்கத்தினை தூண்டுவதற்கான ஒரு மூலோபாய அணுகுமுறையினை உள்ளடக்கியுள்ளது. குழுவானது அதன் முயற்சியில் கணிசமான முன்னேற்றத்தினை குறிக்கும் விதமாக பலதரப்பட்ட கருவிகளை வெற்றிகரமாக முன்னெடுத்தது. குழுவின் வழிகாட்டலின் கீழ், நிறைவு செய்யப்பட்ட முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: பிணையங்கள் கடன் பெறல் மற்றும் கடன் வழங்கல் ஊடாக முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனையினை இயலுமையாக்குதல், நிலைபேறுடைய முறிகளை அறிமுகப்படுத்துதல் (பசுமை மற்றும் நீல), ஷரியா இணக்கப்பாடான கடன் பிணையங்கள், உட்கட்டமைப்பு முறிகள், இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களினால் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட உரித்துவப் பிணையங்களை வழங்குதல், மற்றும் அரச உடைமை நிறுவனங்களினால் உரித்துவ /கடன் பிணையங்களை பட்டியலிடுதல் என்பவையாகும்.

மூலதனச் சந்தை அபிவிருத்தி அணி

தற்போது, குழுவானது இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களினால் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன் பிணையங்களின் வழங்கல் மற்றும் பட்டியலிடல், சந்தை நிறுவனம் சாரா மேடையில் (OTC) உயர் விளைவிலான கூட்டாண்மை கடன் பிணையங்களின் வர்த்தகம், மற்றும் கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளுக்காக XBRL அடிப்படையிலான அறிக்கையிடல் மேடையின் அமுலாக்கம் உள்ளடங்கலான பல்வேறு முக்கியமான முன்னெடுப்புகளின் அமுலாகத்தினை செயலூக்கமாக மேற்பார்வை செய்கின்றது.

### கொ.ப.ப. இல் ஒரு மத்திய எதிர் தரத்தவர் (ம.எ.த.) பொறிமுறையின் அமுலாக்கம்

ஆகஸ்ட் 2021 இல் கொ.ப.ப. இனால் ஒரு வி.எ.கொ. பொறிமுறையின் வெற்றிகரமான அமுலாக்கத்தினைத் தொடர்ந்து, இ.பி.ப.ஆ. அடுத்த கட்டத்திற்கு முன்னோக்கி நகர்ந்ததுடன், சந்தையில் வர்த்தகத்தின் பின்னரான இடரினை வினைத்திறனாக முகாமைப்படுத்துவதற்கு முழு அளவிலான ம.எ.த. பொறிமுறையினை அமுல்படுத்துவதாகும்.

கூட்டுக் குழுவின் ஒத்துழைப்பான வழிகாட்டலின் கீழ், மற்றும் உலக வங்கியின் நிதியில் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தினூடாக (நி.து.ந.தி.) ஈடுபடுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசகரின் தொழில்நுட்ப உறுதுணையுடன், ம.எ.த. முறையின் அமுலாக்கத்திற்கான கொள்கை வரம்புறுகையானது முடிவுறுத்தப்பட்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. கொ.ப.ப. ம.எ.த. இற்கு வசதியளிப்பதற்காக அதன் அமைப்புமுறை உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான பயணத்தினை ஆரம்பித்துள்ளது. தற்போது கொ.ப.ப. அவசியமான அமைப்புமுறை திருத்தங்களை முடிவுறுத்தல் மற்றும் தீர்வக இல்லத்திற்கு தேவையான விதிகளை செம்மைப்படுத்துதல் நோக்கி செயற்படுகின்றது. ம.எ.த. முறையினை நேரலையாக்குவதற்கு எதிர்பார்க்கும் காலவரிசை 2024 ஆம் ஆண்டின் 2ஆம் காலாண்டாகும்.

# மூலோபாய இலக்கு 3

# மூலதனச் சந்தை அபிவிருத்தி

### பிணையங்கள் கடன் பெறல் மற்றும் கடன் வழங்கல் (பி.க.பெ.க.வ.) ஊடான முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனையின (மு.கு.வி.) அறிமுகம்

பி.க.பெ.க.வ. ஊடான மு.கு.வி. இன் அறிமுகமானது 06 நவம்பர் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மூலோபாய இயலுமையாக்கியாக பார்க்கப்படுகின்றது. மேலும், இந்த முன்னெடுப்பானது திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் சந்தை வினைத்திறனை ஊக்குவிக்கவும் மற்றும் கொ.ப.ப. இன் சந்தை நுண்கட்டமைப்பினை மேலுயர்த்துவதற்காகவும், சர்வதேச நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் ஒத்திருப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் மூலம் இயலுமையாக்கப்பட்டு, இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து மற்றும் உலக வங்கியின் தொழில்நுட்ப உறுதுணையுடன், பி.க.பெ.க.வ. பொறிமுறையூடான மு.கு.வி. இயலுமையாக்குவதற்கான கொள்கை வரம்புறுகையினை விருத்திசெய்தது.

ஆரம்பித்த அதே நேரத்தில், இ.பி.ப.ஆ. விழிப்புணர்வினை கட்டியெழுப்புவதற்கான முன்னெடுப்பில் செய்தித்தாள் கட்டுரைகளை பிரசுரித்ததுடன், கொ.ப.ப. மு.கு.வி. மற்றும் பி.க.பெ.க.வ. இல் பங்காளிகளை பழக்கப்படுத்திக்கொள்வதற்காக மற்றும் இந்த முன்னெடுப்பின் ஒரு விரிவான புரிந்துணர்வினை வளர்ப்பதற்காகவும் செயலமர்வுகளையும் விழிப்புணர்வு கட்டியெழுப்புதல் அமர்வுகளையும் நடாத்தியது.

### சந்தைக்கு ஷரியா இணக்கப்பாடான கடன் பிணையங்களின் அறிமுகம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஆ.அ.வ.) மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டத்தின் (மூ.ச.அ.தி.) கீழ் ஒரு கூறாக இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையில் ஒரு இனங்காணப்பட்ட கேள்வியுடன் இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகளுக்கான ஒரு முறைமைப்படுத்தப்பட்ட வரம்புறுகையினை விருத்தி செய்வதற்கு தொழில்நுட்ப உதவியினை பெற்றது. ஒரு சந்தை மதிப்பீட்டினை நடாத்தியதன் பின்னர், ஆ.அ.வ. ஆலோசகர்கள் பாரம்பரிய கடன் பிணையங்களுக்கு சமனான இஸ்லாமிய கருவியாக சுக்குக் இற்கு முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்களிடம் ஒரு பாரிய ஆர்வம் காணப்படுவதனை இனங்கண்டார்கள். இதன் பிரகாரம், கடன் பிணையங்களுக்கு பொருத்தமான நடைமுறையிலுள்ள கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் மூலதனச் சந்தைக்கு சுக்குக் கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டது.

## வணிக நடவடிக்கைகள் அல்லது முதலீட்டு தீர்மானங்களில் சூழல், சமூக மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ.) வரன்முறைகளை ஒருங்கிணைக்கும் நிலைபேறுடைய நிதியளித்தல் முன்னெடுப்புகளின் செல்வாக்கிலான வளர்ச்சியுடன், நிலைபேறுடைய மூலதனச் சந்தை கருவிகளுக்கான கேள்வியும் வளர்ச்சியடைந்துள்ளது.

சுக்குக் என்பது இஸ்லாமிய மூலதனச் சந்தையில் மிகவும் பிரபல்யமான கருவியாகும், ஒரு சுக்குக் ஆனது ஒரு உள்ளார்ந்த சொத்துடன் (வழக்கமாக புலனாகும்) இணைக்கப்பட்டுள்ளதுடன், முதலீட்டாளர்களது கண்ணோட்டத்தில் ஒரு சுக்குக்கினை வைத்திருப்பது உரிய சொத்தின் ஒரு பகுதியளவு உரித்துவத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இஸ்லாமிய நிதியியல் கொள்கைகளின் பிரகாரம், உள்ளார்ந்த சொத்துக்கள் உள்ளடங்கலான ஒரு சுக்குக் கருவியினை கட்டமைப்பானது, தரப்பினர்களிடையேயான உறவுமுறையும் நிதிகளின் பாய்ச்சல்களும் ஷரியா விதிகள் மற்றும் கொள்கைகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும் மற்றும் எனவே இஸ்லாமிய சட்டவியலில் தகைமையடைந்த அறிஞர்களினால் முதலீட்டிற்கு ஷாரியா இணக்கப்பாடானதாக சான்றளிக்கப்படுகின்றது.

பங்காளிகளுடனான ஒரு கலந்துரையாடல் செயன்முறையின் பின்னர், ஆ.அ.வ. ஆலோசகர்களும் இ.பி.ப.ஆ. உம் சேர்ந்து கொ.ப.ப. உடன் இணைந்து சுக்குக் கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்தி செய்ததுடன் இது ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் அங்கீகாரத்துடன் கருவியின் ஆரம்பத்திற்கு வசதியளித்தது.

மேலாக, ஷரியா அறிஞர்களினால் சுக்குக் கருவிகள் முதலீட்டிற்கு ஷரியா இணக்கப்பாடுடையதாக சான்றளிப்பு வழங்கப்படுவதனால், அவர்களால் வழங்கப்படும் தொழில்சார் சேவைக்கு உரிய அங்கீகாரத்தினை வழங்கி, இ.பி.ப.ஆ. ஷரியா அறிஞர்களை 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் "துணைச்சேவை வழங்குநர்கள்" என அங்கீரித்தது. இதன் பிரகாரம், ஷரியா அறிஞர்களுக்கான வழிகாட்டிகள் இ.பி.ப.ஆ. இனால் பிரசுரிக்கப்பட்டன.

பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டிகள், ஒரு ஷரியா அறிஞரின் கடமைகள், தகைமைகள் மற்றும் அனுபவம் போன்ற கூறுகளையும் அறிக்கைகள் சமர்ப்பிக்கும் தேவைப்பாடுகள் மற்றும் பதிவுகள் பராமரித்தல், ஆளுகைக்கான தேவைப்பாடு மற்றும் முரண்பாட்ட அக்கறை மற்றும் தகுதியும் பொருத்தமும் வரன்முறைகளையும் உள்ளடக்கியுள்ளன.

### சூழல், சமூக மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ.) தொடர்பான முன்னெடுப்புகளின் அறிமுகம்

வணிக நடவடிக்கைகள் அல்லது முதலீட்டு தீர்மானங்களில் சூழல், சமூக மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ.) வரன்முறைகளை ஒருங்கிணைக்கும் நிலைபேறுடைய நிதியளித்தல் முன்னெடுப்புகளின் செல்வாக்கிலான வளர்ச்சியுடன், நிலைபேறுடைய மூலதனச் சந்தை கருவிகளுக்கான கேள்வியும் வளர்ச்சியடைந்துள்ளது.

### வழங்கல் பக்க முன்னெடுப்புகள்

சூழமைவினை கருத்திற்கொண்டு, பல மூலதனச் சந்தைகள் பசுமை முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகைகளை நிறுவியுள்ளன. இதன் விளைவாக, இ.பி.ப.ஆ. ஆ.அ.வ. இன் தொழில்நுட்ப உறுதுணையுடன் கொ.ப.ப. இல் பசுமை முறிகளின் பட்டியலிடல் மற்றும் வர்த்தகத்திற்காக முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை அமுல்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து, பசுமை முறிகளுக்கான முறைமைப்படுத்தல் வரம்புறுகையானது நீல முறிகளின் அறிமுகத்திற்கு வசதியளிப்பதற்காக திருத்தங்களுக்கு உட்பட்டது. இந்தப் பிரிவுனுள் ஏனைய தகுதியான வகையுள்ள முறிகளை உள்ளடக்குவதற்காக முன்னோக்கிய திட்டத்துடன், பசுமை மற்றும் நீல முறிகள் தற்போது "நிலைபேறுடைய முறிகள்" எனும் குடையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், முன்மாதிரியான சூ.ச.ஆ. நடைமுறைகளை வெளிப்படுத்தும் கம்பனிகளுக்கான ஒரு அளவுகோலினை நிறுவுவதற்காக, கொ.ப.ப. இல் ஒரு சூ.ச.ஆ. சுட்டியினை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர், தெரிவுசெய்வதற்கான உரிய செயன்முறையினை பின்பற்றியதன் பின்னர், கொ.ப.ப. ஒரு பிரசித்திபெற்ற மூன்றாம் தரப்பு சூ.ச.ஆ. தரப்படுத்தல் கம்பனியுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதுடன், சுட்டியின் முறையினை உருவாக்குவதிலான செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, கொ.ப.ப. உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்ட சுட்டி முறையினை, சுட்டியின் முறையான ஆரம்பித்தலுக்கு முன்னர் பொதுமக்களின் பின்னூட்டத்திற்காக வெளியிட்டுள்ளது.

## பரவலாக அங்கீகரிக்கப்பட்ட XML அடிப்படையிலான கணினி மென்பொருள் மொழியினூடாக XBRL பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பினை தன்னியக்கமாக்கும் சாத்தியத்தினை ஆராயும் நோக்கத்தில், இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடனும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்துடனும் ஒரு கூட்டுக் குழுவினை நிறுவியுள்ளது.

### கேள்வி பக்க முன்னெடுப்புகள்

இ.பி.ப.ஆ. /கொ.ப.ப. புதிய கருவிகள் குழுவினூடாக வழிநடத்தப்பட்ட விழிப்புணர்வினை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளின் பிரகாரம், கொ.ப.ப. சாத்தியமான வழங்குநர்களுடன் தொடர்ச்சியான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இ.பி.ப.ஆ. உம், அதன் முதலீட்டாளர் விழிப்புணர்வினை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளாக பசுமை முறிகளிலான செய்தித்தாள் கட்டுரைகளை பிரசுரித்துள்ளது.

### நீட்டிப்பு வணிக அறிக்கையிடல் மொழி (XBRL) அடிப்படையிலான பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான அறிக்கையிடலின் அமுலாக்கம்

பரவலாக அங்கீகரிக்கப்பட்ட XML அடிப்படையிலான கணினி மென்பொருள் மொழியினூடாக XBRL பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பினை தன்னியக்கமாக்கும் சாத்தியத்தினை ஆராயும் நோக்கத்தில், இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடனும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்துடனும் ஒரு கூட்டுக் குழுவினை நிறுவியுள்ளது. இது நிதியியல் அறிக்கைகளின் தயாரிப்பு, பகிர்தல் மற்றும் பகுப்பாய்வு, கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு அட்டவணைகளை ஒத்திசைவாக்கல் மற்றும் தரப்படுத்தல் செய்வது மாத்திரமன்றி, நடாத்தப்படும் பகுப்பாய்வின் துல்லியம் மற்றும் தரத்தையும் மேம்படுத்தும்.

இக்குறிக்கோளினை அடைவதற்கு, XBRL அமுல்படுத்தப்பட்டுள்ள ஏனைய நியாயாதிக்கங்களிலுள்ள முறைமைப்படுத்துபவர்களுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இது அந்த நியாயாதிக்கங்கள் அறிக்கையிடல் மேடைகளை எவ்வாறு பயன்படுத்தியுள்ளன என்பதனை புரிந்துகொள்ளும் நோக்கத்திலாகும். கொ.ப.ப. பரிவர்த்தனையிலுள்ள 20 – 30 பாரிய கம்பனிகளிடையே ஒரு மதிப்பாராய்வினை நடாத்தியதுடன், இந்த முன்னெடுப்பில் அவர்களது பின்னூட்டத்தினை சேகரித்தது. ஆணைக்குழுவிடமிருந்து கொள்கையளவிலான அங்கீகாரத்தினை பெற்றதன் பின்னர், கூட்டுக் குழுவானது இந்த முன்னெடுப்புக்கான ஒரு விரிவான திட்ட வழிகாட்டியினை உருவாக்கியதுடன், இது அவசியமான மேடை செயற்பாட்டாளரை தேடுதல் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு மேடையினை வெற்றிகரமாக அமுல்படுத்துவதனையும் உள்ளடக்குகின்றது.

### உட்கட்டமைப்பு முறிகளின் அறிமுகம்

உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக கிடைக்கக்கூடிய மூலதனத் திரட்டல் வழிமுறைகளை விரிவாக்கும் ஒரு குறிக்கோளுடன், மூலதனச் சந்தைக்கு அறிமுகப்படுத்தக்கூடிய உட்கட்டமைப்பு தொடர்பான புதிய கருவிகளிலான ஒரு கற்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம், இ.பி.ப.ஆ. – கொ.ப.ப. புதிய கருவிகள் கூட்டுக் குழுவின் வழிகாட்டலின் கீழ், சந்தைக்கு உட்கட்டமைப்பு முறிகளின் அறிமுகத்திற்கு வசதியளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், இதற்கான முறைமைப்படுத்தல் வரம்புறுகையானது கொ.ப.ப. இனால் முடிவுறுத்தப்பட்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

உட்கட்டமைப்பு முறிகளை இயலுமையாக்குவதன் சில நன்மைகள், உட்கட்டமைப்பு முதலீடுகளில் அரசாங்கததின் நிதியியல் சுமையினை குறைக்கும் மற்றும் முதலீட்டாளர்களுக்கு ஒரு புதிய முதலீட்டு சொத்து வகுப்பினை வழங்குவதுடன் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கான ஒரு மாற்றீட்டு வழியாகவும் காணப்படுகின்றது.

### இலங்கையில் கார்பன் வரவு பரிவர்த்தனையின் அறிமுகம்

ஒரு கார்பன் வரவு பரிவர்த்தனையினை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை இ.பி.ப.ஆ. விருத்திசெய்யும் செயல்முறையில் உள்ளது. இந்த முன்னெடுப்பானது நாட்டில் பரிமாற்றக வர்த்தகம் செய்யப்படும் மூலாதாரங்களின் அபிவிருத்தி நோக்கிய ஒரு சாத்தியமான முதலாம் படியாக பார்க்கப்படுகின்றது. கார்பன் வரவுகளை ஒரு மூலாதாரமாக இயலுமையாக்குவதன் மூலம், இலங்கை மூலதனச் சந்தையின் அகலத்தினை ஆழமாக்கும் வேளை, வணிகங்கள் மற்றும் ஒழுங்கமைப்புகளுக்கு மிகவும் நிலைபேறான வணிக வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கினையும் கொண்டதாகும். மேலாக, சாத்தியமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சந்தையில் நுழைவதற்கான வழிகளை திறக்கும் என எதிர்பார்க்கபப்டுவதுடன், நாட்டிற்கு மிகவும் அவசியமான வெளிநாட்டு நாணயப் பாய்ச்சல்களையும் கொண்டுவரும். மேலாக, இது கார்பன் வரவு அலகுகளுக்கான விலை கண்டுபிடித்தல் பொறிமுறைக்கு வசதியளிப்பதுடன், கம்பனிகள் அவற்றின் கார்பன் வரவுகளை வர்த்தகம் செய்வதற்கும் அனுமதிக்கின்றது. மேலும், இந்த முன்னெடுப்பானது கார்பன் நிதியளித்தலுக்கான அணுக்கத்தினை மேம்படுத்தும் நாட்டின் முயற்சிகளை வலுவாக்கும் எனவும் எண்ணப்படுவதுடன், இதன்மூலம் முதலீட்டு முன்னெடுப்புகளுக்கும் பல்வேறு கைத்தொழில்கள் பூராவும் பாதுகாத்தல் முயற்சிகளுக்கும் உறுதுணையளிக்கும்.

இலங்கையில் கார்பன் வரவு பரிவர்த்தனையினை அறிமுகப்படுத்தும் சூழமைவில், முக்கிய கொள்கை கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு நியாயாதிங்களுக்கிடையேயான பகுப்பாய்வு நடாத்தப்பட்டுள்ளது. இந்த பகுப்பாய்வானது இந்த முன்னெடுப்பிற்கு வசதியளிப்பது நோக்கிய ஒரு மூலோபாய வழிகாட்டலை வழங்குவதற்காகும் மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையானது சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்ததாக இருப்பதனை உறுதிசெய்வதற்கும் ஆகும். இந்தப் பகுப்பாய்வானது, முறைமைப்படுத்தல் மற்றும் கொள்கை சூழல், சந்தை இயக்கவியல்கள் மற்றும் சாத்தியமான இடர்கள் உள்ளடங்கலான பல்வேறு அம்சங்களை கருத்திலெடுத்துள்ளதுடன், மற்றும் ஒரு கார்பன் வரவு பரிவர்த்தனையின் அறிமுகத்துடன் இணைந்த சவால்களும் ஆகும். மேலும், இ.பி.ப.ஆ. இல் தலைமை தாங்கப்படும் ஒரு உயர் மட்டத்திலான குழுவினை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இந்த முன்னெடுப்பினை முன்னோக்கி எடுத்துச்செல்வதற்கு கார்பன் வரவு வர்த்தகம் மற்றும் மூலாதாரங்களில் நிபுணர்கள் மற்றும் பல்வேறு அமைச்சுகளின் அங்கத்தவர்களையும் உள்ளடக்கும்.

# மூலோபாய இலக்கு 3

# மூலதனச் சந்தை அபிவிருத்தி

ஒட்டுமொத்தத்தில், இந்த அபிவிருத்தி முன்னெடுப்பானது மூலதனச் சந்தையின் வளர்ச்சியினை தூண்டிவிடுதல் நோக்கி பங்களிப்பு செய்வது மாத்திரமன்றி நாட்டின் பொருளாதா மீட்டலுக்கும் நிலைபேறுடைய அபிவிருத்திக்கும் பங்களிக்கும்.

## பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளில் நியதிச் சட்ட கணக்காய்வுகளை நடாத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர்கள் பட்டியலை விருத்திசெய்தல்

இ.பி.ப.ஆ. 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் கீழான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நியதிச் சட்ட கணக்காய்வினை நடாத்துவதற்கு தகைமையுடைய கணக்காய்வாளர்கள் பட்டியலினை விருத்தி செய்து அங்கீகரித்துள்ளன. இது பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் கணக்காய்வாளர்களாக அவர்களது பங்கினை, கடமைகளை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றும் போதாகும். இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையிடமிருந்து (SLAASMB) பெறப்பட்ட உள்ளீடுகள் மற்றும் ஏனைய முறைமைப்படுத்துபவர்களினால் பின்பற்றப்படும் ஒத்த அணுகுமுறைகள், ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, கணக்காய்வாளர்களை மதிப்பிடுவதற்காக ஒரு மதிப்பிடுதல் வரன்முறையானது விருத்திசெய்யப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பு பற்றி கலந்தாராய்வதற்காக கணக்காய்வாளர்களுடன் சில கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நியதிச்சட்ட கணக்காய்வுகளின் தரத்தின் மட்டத்தினை மேம்படுத்தும் நோக்கம் விபரிக்கப்பட்டு முன்னோக்கிய பாதையும் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்த முன்னெடுப்பானது 1 ஜனவரி 2024 முதல் ஆரம்பிக்கும் நிதியாண்டுகளுக்கு செல்லுபடியாவதுடன், இது வலுவளித்தல் பலகையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு செல்லுபடியாகாது.

## அரச உடைமை நிறுவனங்களை (அ.உ.நி.) பட்டியலிடுவதற்கான முறைமைப்படுத்தல் வரம்புறுகை

அ.உ.நி. ஆல் வழங்கப்படும் பங்குகளை கொ.ப.ப. இல் பட்டியலிடப்படுவதற்கு வசதியளிப்பதற்காக ஒரு முறைமைப்படுத்தல் வரம்புறுகை விருத்திசெய்யப்பட்டுள்ளது. இது மூலதனச் சந்தையினூடாக மிகவும் நெகிழ்வான வரம்புறுகையுடன் கணிசமான மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அ.உ.நி. க்கு ஒரு வழியினை உருவாக்குவதுடன், இது அரசாங்கப் பாதீடுகளில் மாத்திரம் தங்கியிருக்காது அவர்கள் வளர்ச்சியடைவதனை இயலுமையாக்குவதுடன் மிகவும் நிலைபேறுடைய பொருளாதார அபிவிருத்திக்கும் வழி சமைக்கின்றது. இது தொடர்பான விதிகள் மீளாய்வாண்டின்போது ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இதற் வசதியளிப்பதற்காக கொ.ப.ப. இல் “வினையூக்கிப் பலகை” எனப் பெயரிடப்பட்ட ஒரு பிரத்தியேக பலகை உருவாக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்ட கடன் பிணையங்களைப் பட்டியலிடுதல்

பல் நாணயப் பலகையினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்ட கடன் பிணையங்களை பட்டியலிடுவதற்கு வசதியளிப்பதற்கான நடைமுறையிலுள்ள பட்டியலிடல் விதிகள் திருத்தியமைக்கப்பட்டன. மீளாய்வாண்டின்போது திருத்தியமைக்கப்பட்ட விதிகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

## பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் கூட்டாண்மை ஆளுகை விதிகளின் திருத்தம்

சந்தையிலுள்ள பட்டியலிடப்பட்ட கம்பனிகளிடையே கூட்டாண்மை ஆளுகை மட்டத்தினை மேம்படுத்துவதற்காக கூட்டாண்மை ஆளுகையில் புதிய பட்டியலிடல் விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இவை முதலீட்டாளர் மற்றும் பங்காளியின் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு துணைபுரியும் சிறந்த சபை மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளில் தெளிவான வழியினை வழங்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். இந்த திருத்தங்கள், பங்காளிகள் மற்றும் பொதுமக்கள் பதிலளிப்புகளின் அடிப்படையில் உள்ளதுடன், உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இணையாயுள்ளன. முக்கிய பண்புகள், ஏனையவற்றக்கிடையில், பணிப்பாளர்கள் மற்றும் பி.நி.அ. களுக்கான “ தகுதி மற்றும் பொருத்தம்” மதிப்பீட்டு வரன்முறை, உட்குறை உரைத்தலிலான ஒரு கொள்கை, சூழல், சமூகம், மற்றும் ஆளுகை நிலைபேறுடைமையில் ஒரு கொள்கை ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

## நிரந்தர கடன் பிணையங்களை பட்டியலிடுவதற்கான விதிகளின் அறிமுகம்

இ.ம.வ. இனால் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அல்லது விசேட வங்கிகளினால் வழங்கப்படும் நிரந்தர கடன் பிணையங்களின், இவை ஒரு முதிர்வு திகதி அற்றவை, பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்காக புதிய பட்டியலிடல் விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட விதிகள் மீளாய்வாண்டின்போது ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. நிரந்தர கடன் பிணையங்களின் வழங்கலானது “தகைமையுடைய முதலீட்டாளர்களுக்கு” மாத்திரம் வரையறை செய்யப்பட்டுள்ளது.

## ஏனைய முன்னெடுப்புகள்

- கூட்டாண்மை பிணையங்களிலான மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல் வாங்கலுக்கான திருத்தியமைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கட்டணத்திற்கான அங்கீகாரம் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்டதன் பின்னர், இதில் அவசியமான ஒழுங்குவிதிகளை வழங்குவதற்காக நிதி அமைச்சிற்கு பிரதிநிதித்துவங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் , நிதி அமைச்சினால் ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன.
- கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்டுள்ளவாறு கூட்டாண்மை கடன் கொடுக்கல் வாங்கல்களுக்கு பிரயோகிக்கப்படும் கொடுக்கல் வாங்கல் கட்டணத்தினை 1 அடிப்படை புள்ளியாகக் குறைப்பதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதுடன், இதில் அவசியமான ஒழுங்குவிதிகளை வழங்குவதற்காக நிதி அமைச்சிற்கு பிரதிநிதித்துவங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மூலோபாய இலக்கு 4

# மூலதனச் சந்தையில் ஆர்வத்தையும் தகவலறிந்த முதலீட்டு தீர்மானம் மேற்கொள்ளுவதனையும் ஊக்குவித்தல்

மூலதனச் சந்தையினுள் முதலீட்டாளர் நம்பிக்கையினை வளர்த்தலும் விழிப்புணர்வினை மேம்படுத்தலும் முதலீட்டாளர்கள் தகவலறிந்த நிதியியல் மற்றும் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வலுவளிப்பதில் முக்கியமானதாகும். இ.பி.ப.ஆ. மூலோபாய முன்னெடுப்புகளூடாக முதலீட்டாளர் வலுவளிப்பிற்கு முன்னுரிமையளிப்பதற்கு கடப்பாடுடையதாய் உள்ளது.

இவ்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களின் தேவையினை சந்திப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள கவனமாக வடிவமைக்கப்பட்ட, விருத்திசெய்யப்பட்ட மற்றும் பல்வேறு முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியது. இந்த முன்னெடுப்புகள் சந்தை சிச்கல்கள் பற்றி முதலீட்டாளர்களை கற்பிப்பது மாத்திரம் நோக்காகக் கொண்டிராது, அவர்களது நிதியியல் அக்கறைகளை பாதுகாப்பதற்கு அவசியமான அறிவினை அவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு செயலூக்கமான வழிமுறையாகும்.

## வெளிக்கள நிகழ்வுகள் - கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் கருவிகளுடன் நிதியியல் சந்தைகள் அதிகமான சிக்கலானவையாக வருகின்றன. மூலதனச் சந்தையின் வாழ்வாதாரமாக முதலீட்டாளர்கள் காணப்படுவதனால், அவர்களது சிறந்த நலனைப் பாதுகாத்தல் இ.பி.ப.ஆ. இன் ஒரு முன்னுரிமையாகும். தகவலறிந்த நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான தகவல்களை தனிநபர்கள் கொண்டிருக்கின்ற ஒரு சந்தையினை பராமரிப்பதானது மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு முக்கியமானதாகும்.

இவ்வாண்டின்போதான வெளிக்கள திட்டங்கள் முதலீட்டாளர் கல்வியினை மேம்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. இனால் மூலோபாயமாக வடிவமைக்கப்பட்டதுடன், இது வாழ்வின் அனைத்து வயதுடையோர் மற்றும் அவர்களது தொழில் பூராவும் ஒரு பரந்த அவையோரை எட்டும் குறிக்கோளைக் கொண்டதாகும். பொருளாதார உறுதியின்மை மற்றும் சவால்களைப் பொருட்படுத்தாது. நாம் ஆசிரியர்கள், முதலீட்டாளர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு டிஜிட்டல் வழியூடாக மற்றும் நேரிலான அமர்வுகளின் மூலம் தடையற்ற கற்றல் அனுபவத்தினை உறுதிசெய்தோம்.

வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தை கல்வி அணி

## ஆசிரியர் பயிற்சி செயலமர்வுகள்

பல்வேறு பாடங்களில் அறிவினை புகட்டுவதன் மூலம் மாணவர்களது கல்வி அபிவிருத்திக்கு ஆசிரியர்கள் அடித்தளத்தினை இடுகின்றார்கள். மூலதனச் சந்தை பற்றி ஆசிரியர்களை கற்பித்தல் முக்கியமானது ஏனெனில், இவர்கள் மாணவர்களுக்கு நிதியியல் சந்தைகள், முதலீட்டு கொள்கைகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றிலான அறிவினை புகட்டலாம்.

இதன் விளைவாக, மூலதனச் சந்தையில் மாணவர்கள் மதிப்புமிக்க அறிவினையும் நுண்ணறிவினையும் பெற்றுக்கொள்வதுடன், இது தகவலறிந்து தீர்மானங்களை மேற்கொள்வதனை இயலுமையாக்குவதுடன், எப்போதும் பரிணமிக்கின்ற மூலதனச் சந்தையினை நம்பிக்கையுடன் சமாளிக்கக் கூடியதாயுமுள்ளது. எனவே, ஆசிரியர் பயிற்சியில் முதலீடு செய்வதானது ஆசிரியர்களின் சொந்த நிதியியல் அறிவினை மாத்திரம் மேம்படுத்தாது நிதியியல் அறிவுள்ள சந்ததியினை வளர்ப்பதற்கும் பங்களிப்பு செய்கின்றது. இ.பி.ப.ஆ. தேசிய கல்வி நிருவகம் மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து நாடு பூராவும் மூன்று மொழிகளிலும் ஆசிரியர்களுக்கு 08 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

## பாடசாலை கருத்தரங்குகள்

மாணவர்களுக்கு பாடசாலை கருத்தரங்குகளை நடாத்துதல் நிதியியல் அறிவினை வளர்ப்பதற்கும் மூலதனச் சந்தையில் விழிப்புணர்வினை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. சேமிப்புகள், முதலீடுகள் மற்றும் இடர்களை புரிந்துகொள்ளுதல் போன்ற எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒரு இளம் வயதிலிருந்தே பொறுப்பான நிதியியல் தீர்மானம் மேற்கொள்வதற்கான அடித்தளத்தினை இடுகின்றது. இவ்வாண்டின்போது, பாடசாலை மாணவர்களுக்கு நாம் பின்னரும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தினோம்.

# மூலோபாய இலக்கு 4

## மூலதனச் சந்தையில் ஆர்வத்தையும் தகவலறிந்த முதலீட்டு தீர்மானம் மேற்கொள்ளுவதனையும் ஊக்குவித்தல்

- ஆனந்தா சாஸ்ட்ராலயா தேசிய பாடசாலை, மத்துகம
- புத்தளம் கல்வி வலயம், புத்தளம்
- சிலாபம் கல்வி வலயம், சிலாபம்
- கம்பளை கல்வி வலயம், கம்பளை
- பலாங்கொடை கல்வி வலயம், பலாங்கொடை
- கேகாலை கல்வி வலயம்
- கடவத்தை மத்திய கல்லூரி
- ஹொரவல மஹா வித்தியாலயம்
- தொடங்கொட மஹா வித்தியாலயம், தொடங்கொட
- பாணந்துறை பாலிகா மஹா வித்தியாலயம், பாணந்துறை
- பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி, மொரட்டுவ

### 100 பாடசாலை கழகங்கள் முன்னெடுப்பு

இ.பி.ப.ஆ., கொ.ப.ப., கல்வி அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் செயலகத்துடன் ஒருங்கிணைந்து பாடசாலைகளில் மூலதனச் சந்தை கழகங்களை நிறுவுவதன் மூலம் கல்வி முறைகள் பூராவும் நிதியியல் அறிவினை ஊக்குவிப்பதற்கான ஒரு முன்னெடுப்பினை ஆரம்பித்தது. இந்த முன்னெடுப்பினை தடையின்றி அமுல்படுத்தி நிறைவேற்றுவதற்காக, கல்வி அமைச்சிற்கும், இ.பி.ப.ஆ., கொ.ப.ப., மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

100 மூலதனச் சந்தை கழகங்களை நிறுவுவதற்காக தொடக்கவிழா மான்புமிகு. ஜனாதிபதி. ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையின் கீழ் நுகாவெல மத்திய கல்லூரியில் 31 ஆகஸ்ட் 2023 இல் இடம்பெற்றது. ஆரம்ப 11 பாடசாலைகள் வர்த்தகப் பிரிவிலுள்ள Z புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன. 100 மூலதனச் சந்தை கழகங்களுக்கான சாசனச் சான்றிதழ்கள் இந்த பாடசாலைகளுக்கு மாகாணரீதியாக வழங்கப்பட்டன.

### பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

பல்கலைக்கழக மாணவர்களின் நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கும் பிணையங்கள் சந்தையில் செயலூக்கமான பங்குபற்றலை ஊக்கமளிப்பதற்காகவும் அவர்களுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு திட்டங்களை நடாத்தும் எமது திட்டத்துடன் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களுடன் நாம் ஈடுபடுகின்றோம்.

இந்த முன்னோக்கமான அணுகுமுறையானது நிதியியல் கொள்கைகளின் புரிந்துணர்வினை ஆழமாக்குதல் நோக்கி தயாரிக்கப்பட்டுள்ளது மாத்திரமன்றி, மூலதனச் சந்தைத் துறைக்கு ஒரு திறன் தேக்கத்தினை வளர்ப்பது நோக்கியும் ஆகும். வருடம் பூராவும் நாம் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை பல்கலைக்கழகங்களில் ஒழுங்குசெய்தோம்.

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- கொழும்பு பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- சபரகமுவ பல்கலைக்கழகம்
- வயம்ப பல்கலைக்கழகம்

#### பல்கலைக்கழகச் சமர்கள் - பல்கலைக்கழகங்களுக்கிடையேயான வினா விடை போட்டி

இ.பி.ப.ஆ., கொ.ப.ப. உடன் கைகோர்த்து பல்கலைக்கழகச் சமர்கள் - பல்கலைக்கழகங்களுக்கிடையேயான புதிர் போட்டி 2023 இனை ஒழுங்குசெய்தது. இது பல்கலைக்கழக மாணவர்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்தும் நோக்கினைக் கொண்டுள்ளது.

இப்போட்டியானது உள்ளூர் மற்றும் சர்வதேச மூலதனச் சந்தைகளில் மாணாவர்களின் அறிவினை பரிசோதித்ததுடன், அதேசமயத்தில், பங்குச் சந்தையில் முதலீட்டினை ஊக்குவிப்பதுடன் மூலதனச் சந்தைத் துறையில் தொழில் வாய்ப்புக்களையும் வளர்க்கின்றது.

இப்போட்டியில் 13 தேசிய பல்கலைக்கழகங்கள் ஈடுபட்டதுடன், இது இரண்டு கட்டங்களை உள்ளடக்கியிருந்தது. பல்கலைக்கழகங்களுக்குள்ளேயே பீடங்களுக்கு இடையேயான போட்டி மற்றும் ஒரு தேசிய மட்டத்திலான போட்டியில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் முதல் மூன்று அணிகள் போட்டியிடும்.

இந்த ஒருங்கிணைப்பான முன்னெடுப்பினூடாக, இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இலங்கையின் பல்கலைக்கழக மாணவர்களிடையே நிதியியல் அறிவு மற்றும் முதலீட்டுக் கலாச்சாரத்தில் சாத்தியமான முன்னேற்றங்களை ஊக்குவிப்பதற்கு முயற்சித்தன.

### ச.பி.ஆ.ஒ. இன் உலக முதலீட்டாளர் வாரம் பிரச்சாரம்

உலக முதலீட்டாளர் வாரத்துடன் ஒத்ததாக, நாம் சமூக ஊடக மேடைகளினூடாக முக்கிய செய்திகளை பரப்புவதற்கும், முதலீட்டாளர்களது பரிணமிக்கின்ற ஆர்வங்களுக்கு பொருத்தமான மதிப்புமிக்க கற்றல் வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் வடிவமைக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை நாம் திட்டமிட்டோம். எமது சமூக ஊடகப் பிரச்சாரமானது, முதலீட்டாளர் மீளெழுச்சி, நிலைபேறுடைய நிதியளித்தல் மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பு போன்ற பல்வேறு கருப்பொருள்கள் உள்ளடக்கியிருந்தன.

டிஜிட்டல் நிலத்தோற்றத்தில் எமது சமூக ஊடக பிரசன்னத்தினை விரிவாக்குவதில், இ.பி.ப.ஆ. உலக முதலீட்டாளர் வாரத்துடன் ஒன்றிப் பொருந்துமாறு அதன் இன்ஸ்டகிராம் கணக்கினை ஆரம்பித்தது. மேலாக, உலக முதலீட்டாளர் வாரத்தின் முக்கியத்துவத்தினை ஊக்குவிப்பதற்காக கொ.ப.ப. உடன் இணைந்து ஒரு மணியடித்தல் வைபவம் இடம்பெற்றது.

மேலாக, பல்கலைக்கழகச் சமர்கள் - பல்கலைக்கழகங்களுக்கிடையேயான புதிர் போட்டி உலக முதலீட்டாளர் வாரத்துடன் ஒன்றிப் பொருந்துமாறு களணிய பல்கலைக்கழகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டது. இந்த நிகழ்வானது, பொறுப்புள்ள முதலீட்டு நடைமுறைகளை ஊக்குவிக்கும்வேளை விழிப்புணர்வினை எழுப்பி தனிநபர்களை நிதியியல் அறிவுடன் வலுவளிக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. இந்த முன்னெடுப்பானது மாணவர்களிடையே ஒரு ஆரோக்கியமான போட்டி மனநிலையினை வளர்த்தது மாத்திரமன்றி, பல்கலைக்கழக சமூகத்தினரிடையே நிதியியல் அறிவு மற்றும் முதலீட்டாளர் கல்வியினை மேம்படுத்தும் பரந்த இலக்கிற்கும் பங்களித்தது.

### இ.பி.ப.ஆ., கொ.ப.ப., கல்வி அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் செயலகத்துடன் ஒருங்கிணைந்து பாடசாலைகளில் மூலதனச் சந்தை கழகங்களை நிறுவுவதன் மூலம் கல்வி முறைகள் பூராவும் நிதியியல் அறிவினை ஊக்குவிப்பதற்கான ஒரு முன்னெடுப்பினை ஆரம்பித்தது

### இ.பி.ப.ஆ. /கொ.ப.ப. முதலீட்டாளர் கருத்துக்களங்கள்

மூலதனச் சந்தையில் விழிப்புணர்வினை வழங்கும் மற்றும் சிறந்த புரிந்துணர்வினை வளர்க்கும் ஒரு முயற்சியாக, இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. “நனவத் ஆயோஜனயகட்ட சவிமத் அத்வலக;” என்ற கருப்பொருளில் ஒரு தொடரான முதலீட்டாளர் கருத்துக்களங்களை ஒழுங்குசெய்தன.

இந்த முன்னெடுப்பானது சிற்றளவு முதலீட்டாளர்களிடமிருந்து செயலூக்கமான மற்றும் அறிவுபூர்வமான பங்குபற்றலை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். வருடம் பூராவும், மக்கள் நேரடியாக கலந்துகொள்ளும் பல இடங்களில் பிராந்திய முதலீட்டாளர் கருத்துக்களங்கள் இடம்பெற்றன. இவை பாணந்துறை, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு, அநுராதபுரம் மற்றும் பதுளை ஆகிய இடங்களை உள்ளடக்கியிருந்தன.

## “වර්තමාන කොටස් වෙළඳපොළ තුළ ඔබ කෙසේ හැසිරිය යුතු ද?” முதலீட்டாளர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்

“වර්තමාන කොටස් වෙළඳපොළ තුළ ඔබ කෙසේ හැසිරිය යුතු ද?” எனும் முதலீட்டாளர் கருத்துக்களத்தினை விருந்தோம்பலில், இலங்கையின் பொருளாதார தாக்கங்களின் அடிப்படையில் நடைமுறை பங்குச் சந்தையினை எவ்வாறு சமாளிப்பது என்பது ஒரு துறைசார் நிபுணரினால் கலந்துரையாடப்பட்டது.

இக்கருத்துக்களமானது துறையிலுள்ள ஒரு அனுபவம் வாய்ந்த தொழில்வல்லுநரிடமிருந்து நேரடியாக நுண்ணறிவினை பெற்றுக்கொள்ளும் ஒரு பெறுமதியான வாய்ப்பினை வழங்கியதுடன், முதலீட்டு இயக்காற்றல் மற்றும் சந்தை சிக்கல்களில் ஒரு ஆழமான புரிந்துணர்வினை வளர்க்கின்றது. கலந்துரையாடல்கள் சிங்கள மொழியில் நடத்தப்படுவதன் மூலம் நாம் ஒரு பரவலான அவையோருக்கான அணுக்கத்தினை உறுதிசெய்தோம்.

## ஆய்வுப் பகுப்பாய்வாளர்களுக்கான இ.பி.ப.ஆ. மற்றும் இலங்கை CFA சங்கத்தின் செயலமர்வு

இலங்கையின் CFA சங்கத்துடன் ஒன்றிணைந்து நாம் “ஆய்வின் நேர்மையினை மேம்படுத்தல்: பங்குத்தரகு நிறுவனங்களில் ஆய்வுப் பகுப்பாய்வாளர்களுக்கான சார்பற்ற நியமங்களைச் சமாளித்தல்” என்ற தலைப்பில் நாம் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்தினோம். இத்திட்டமானது சார்பற்ற நியமங்களை நிலைநிறுத்துவதற்கான பெறுமதியினை எடுத்துக்காட்டியதுடன், பங்குத்தரகர் துறையின் ஆய்வு நேர்மையினை பலப்படுத்தியதுடன், அனைத்து துறைகளிலும் ஆய்வு நடைமுறையின் தரத்தினை மேம்படுத்தியது.

## ஊடக ஒன்றுகூடல்

இ.பி.ப.ஆ. இன் மூலோபாய வரைபடத்தில் இற்றைப்படுத்தல்களை பகிர்ந்துகொள்வதற்காக ஒரே கூரையின் கீழ் துறைசார் முன்னோடிகள் மற்றும் செல்வாக்குள்ள ஊடகவியலாளர்களை ஒன்றுதிரட்டும் ஒரு ஊடக ஒன்றுகூடலை ஒழுங்குசெய்தது. இந்த நிகழ்வானது, இ.பி.ப.ஆ. இன் எதிர்கால பாதையில் ஒரு விரிவான கண்ணோட்டத்தினை வழங்கியதுடன், திறந்த கலந்துரையாடல்களுக்கும் நுண்ணறிவினை பரிமாற்றிக்கொள்வதற்கும் வசதியளித்தது. முக்கிய பங்காளிகள் மற்றும் ஊடக பிரதிநிதிகளை ஒன்றாக கொண்டுவருவதன் மூலம், இந்த ஒன்றுகூடலானது வெளிப்படைத்தன்மை மற்றும் ஒத்துழைப்பினை வளர்த்ததுடன், முதலீட்டாளர் நலன்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தை ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்தல் ஆகியவற்றில் இ.பி.ப.ஆ. இன் கடப்பாட்டினை வலுப்படுத்தியுள்ளது.

## சமூக ஊடகங்களூடாக நிதியியல் அறிவினை மேம்படுத்துதல்

இன்று, எமது உலகமானது வரலாற்றில் இளமையான பாரிய சந்ததியினருக்கு, விரைவான டிஜிட்டல் பரிணாம யுகத்தில், டிஜிட்டல் உட்கட்டமைப்பில் விரிவான முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு, பரந்துகாணப்படும் இணைய இணைப்புகள் மற்றும் ஸ்மார்ட் போன்களின் அதிகரித்த பயன்பாட்டிற்கான இல்லமாக காணப்படுகின்றது. இந்த வருடத்தில், ட்விட்டர் மற்றும் முகப்புத்தளம் போன்ற சமூக ஊடக மேடைகளினூடாக நாம் முதலீட்டாளர் கல்வி முயற்சிகளுக்கு முன்னுரிமையளித்தோம்.

எமது முயற்சிகள் இலக்குவைத்த சமூக ஊடக பிரச்சாரங்களூடாக நிதியியல் அறிவினை மிகையூட்டும் நோக்கினைக் கொண்டதுடன், பெண்கள் தினம் மற்றும் உலக முதலீட்டாளர் வாரம் போன்ற முக்கிய நிகழ்வுகளையும் பயன்படுத்திக்கொண்டோம். கவனமாக தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சமூக உள்ளடக்கத்தினூடாக, நாம் முதலீட்டு ஊழல்கள் பற்றிய விழிப்புணர்வினை எழுப்புவதற்காக வழக்கமாக உள்ளடக்கத்தினை பரப்புவதில் நாம் முன்னிறுத்தம் செய்வதுடன், புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளில் பொதுமக்களை கற்பித்தல், பங்குச் சந்தையில் எவ்வாறு முதலீடு செய்வது, மற்றும் இ.பி.ப.ஆ. ஆல் முன்கொண்டு செல்லப்படும் முதலீட்டாளர் பாதுகாப்பு முன்னெடுப்புகளையும் மேற்கொண்டோம்.

இ.பி.ப.ஆ. இன் யூடியுப் செனல் கல்விக் காணொளிகளை பகிர்வதுடன், முதலீட்டாளர்களுக்கு பெறுமதியான வளங்களை வழங்குவதற்கான எமது கடப்பாட்டினையும் வலியுறுத்தினோம்.

## மூலோபாய இலக்கு 5

# நிறுவனச் சிறப்பினை மேம்படுத்துதல்

### மனித வளங்கள் (ம.வ.) கண்ணோட்டம்

மனித வளங்கள் செயற்பாட்டின் பிரதான பொறுப்பானது பின்வருவன உள்ளடங்கலாக அனைத்து பணியாட்கள் தொடர்பான விடயங்களை முகாமைப்படுத்தல், மற்றும் கையாளுதலாகும். கொள்கை நிர்வாகம், ஆட்சேர்ப்புச் செயன்முறை, நலன்கள் நிர்வாகம், பணிக்கொள்ளல் மற்றும் தொழிலாளி சட்டங்களுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல், புதிய பணியாட்களின் ஆற்றுப்படுத்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, தனிப்பட்ட பதிவு தக்கவைத்தல், ஊதிய மற்றும் சம்பள நிர்வாகம் மற்றும் நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு துணைபுரியும் பணியாட்கள் உதவித் திட்டங்கள் போன்றவையாகும். மனித வளக் குழுவானது ஏனைய அனைத்து பிரிவுகளுடனும் அவர்களது தேவைகளுக்கு பதிலளிப்பதற்காகவும் துணைபுரிவதற்காகவும் நெருக்கமாக செயலாற்றுகின்றது.

### பணியமர்த்தல்

நிறுவனத்திற்கான பணியாட்களை சேர்த்துக்கொள்வதைப் பொறுத்தளவில் இது வெற்றிகரமான ஆண்டாகும். இ.பி.ப.ஆ. வெகு நாட்களாக காத்திருந்த பின்வரும் சிரேஷ்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்க இயலுமையாயிருந்தது, பணிப்பாளர் - சட்டம் மற்றும் வலியுறுத்தல், பணிப்பாளர் - புலனாய்வுகள் மற்றும் வலியுறுத்தல் (சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து தற்காலிக மாற்றல்), மற்றும் த.தொ. பிரிவிற்கு பிரதம டிஜிட்டல் அதிகாரி ஆகியோர். மேலும், 12 உதவி முகாமையாளர்களும், ஒரு அந்தரங்கச் செயலாளரும் மற்றும் த.தொ. அலகிற்கு துணைபுரிவதற்கு ஒரு கனிஷ்ட அதிகாரியும் கடமையினைப் பொறுப்பேற்றார்கள். இ.பி.ப.ஆ. அதன் குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் விழுமியங்களை எடுத்துக்காட்டும் ஒரு அறிமுகத் திட்டத்தினை மேற்கொள்வதன் மூலம் புதிய பணியாட்களை வரவேற்று ஒருங்கிணைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டது. அத்துடன், இத்திட்டமானது பங்குத் தரகர்கள் மற்றும் கொ.ப.ப. இன் பங்கில் புதிய பணியாட்களை கற்பிப்பதற்காக உரிய நிறுவனங்களுக்கான விஜயத்தின் மூலம் நீடிக்கப்பட்டது. (உருவங்கள் 22, 23, 24, 25, 26)

உருவம் 22: சேவைக்காலத் தகவல்கள்




உருவம் 23: தகைமை வரம்புறுகை




உருவம் 24: பால் ஆய்வியல்




உருவம் 25: வயது ஆய்வியல்




உருவம் 26: நடப்பிலுள்ள பணிச்சேனை



இளம் தொழில்வல்லுநர்கள் அவர்களது கல்வியிலிருந்து இற்றைப்படுத்தப்பட்ட அறிவு மற்றும் திறன்களை கொண்டுவருவதுடன், புத்தாக்கமான மற்றும் புதிய கண்ணோட்டத்திற்கு பங்களிப்பு செய்கின்றார்கள். எனவே, இவ்வருடத்தில் இ.பி.ப.ஆ. முகாமைத்துவ பயிலுநர்களை சேர்ப்பதற்கான முன்னெடுப்பினை மேற்கொண்டது. இது நாடு பூராவும் இருந்து திறன்படைத்த நபர்களை இனங்கண்டு விருத்திசெய்வதற்கும், எதிர்கால தலைவர்களுக்கான ஒரு வழிமுறையினை உறுதிசெய்தல் என்னும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயன்முறையானது இரண்டு மாதக் காலத்திற்கு விரிந்து காணப்பட்டது, ஏனெனில் விரிவான தகைமைத் திரட்டுக்கள், தெரிவுச் செயன்முறை பூராவும் பாகுபாடின்மைத் தேவை என்பவற்றாலாகும்.

சுருக்க பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு நாலந்தா கல்லூரியில் ஒரு போட்டித்தன்மையான பரீட்சைக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. நாலந்தா கல்லூரியின் அதிபர் மற்றும் பணியாட்கள் பாராட்டத்தக்க உறுதுணையினை வழங்கியதுடன் இச்செயன்முறையானது உயர்ந்த மட்டங்களிலான இரகசியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை பராமரிக்கப்பட்டதனை உறுதிசெய்தது. டிசம்பர் மாதத்தில், 60% இற்கும் அதிகமான மதிப்பெண்களை அடைந்த விண்ணப்பதாரிகள், அவர்களது திறன்கள், தொழில் அனுபவம் மற்றும் தனித்தன்மை என்பன இ.பி.ப.ஆ. இன் பணித் தேவைப்பாடுகளுடன் இணைந்துள்ளதா என மதிப்பிடுவதற்காக நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டன.

**எனவே, பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பது இ.பி.ப.ஆ. இன் ஒரு தொடர்ச்சியான மேம்படுத்தல் செயற்பாடாகும் என்பதுடன், இவை சந்தைப் போக்குகள், எமது அணியிலுள்ள தனிநபர்கள் மற்றும் வெளிப்படும் திறன்களை கருத்திலெடுக்கின்றது**

மனித வளங்கள் மற்றும் நிறுவன நிலைமாற்றல் அணி

## உள்ளிருப்புப் பயிற்சிகள்

இவ்வாண்டின்போது, மூலதனச் சந்தையின் முறைமைப்படுத்துபவர் தொழில் அறிவு மற்றும் பயிற்சியினை வழங்கும் நோக்கத்துடன் தேசிய பல்கலைக்கழகங்களில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு 9 உள்ளிருப்புப் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

## பதவி விலகல்கள்

இவ்வாண்டின்போது திறன்படைத்த இளம் தொழில்வல்லுநர்களை நிறுத்திவைத்தல் ஒரு கடுமையான சவாலாகக் காணப்பட்டது. பொருளாதார உறுதியின்மைகளின் காரணமாக அநேகமான இளம் தொழில்வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் அவர்களது குடும்பத்திற்கு துணையளிப்பதற்காக சிறந்த வாய்ப்புக்களை தேடினார்கள். இதன் பிரகாரம், பத்து பணியாட்கள் இடம்பெயர்ந்தார்கள். அத்துடன், உயர்ந்த வேதனம் மற்றும் சலுகைகளுக்காக நாட்டிலுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு எட்டு பணியாட்கள் நகர்ந்தார்கள். அத்துடன், இவ்வாண்டின்போது, 25 வருடங்களுக்கும் மேலாக இ.பி.ப.ஆ. இல் சேவையாற்றிய மூன்று சிரேஷ்ட அலுவலக உதவியாளர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்கள். இதன் பிரகாரம், இவ்வாண்டிற்கான தேய்மான வீதமானது, இரண்டு பணிப்பாளர்கள், மூன்று சிரேஷ்ட உதவி முகாமையாளர்கள், பன்னிரண்டு உதவி முகாமையாளர்கள், ஒரு தொலைபேசி இயக்குபவர் மற்றும் மூன்று சிரேஷ்ட அலுவலக உதவியாளர்களுடன் 21% இனை காண்பித்தது.

## பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஒரு உயர் தரத்திலான, விரிவான பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டமானது பணியாட்களுக்கு நிறுவனத்தின் செயன்முறைகள், செலாக்கங்கள் மற்றும் குறிக்கோள்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை வழங்குகின்றது. அத்துடன் அது அவர்களது பங்கினை வினைத்திறனாக செய்வதற்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களுடன் இயலுமையாக்குகின்றது.

எனவே, பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பது இ.பி.ப.ஆ. இன் ஒரு தொடர்ச்சியான மேம்படுத்தல் செயற்பாடாகும் என்பதுடன், இவை சந்தைப் போக்குகள், எமது அணியிலுள்ள தனிநபர்கள் மற்றும் வெளிப்படும் திறன்களை கருத்திலெடுக்கின்றது. சரியான மனப்பாங்கினை பொருந்துதல் மற்றும் கலத்தல், சிறப்பான செயற்திறனை அடைவதற்கு பண்புசார் மனப்பான்மை மற்றும் உயர் ஆக்கத்திறன் என்பனவாகும். இன்றைய இயக்காற்றலான மற்றும் போட்டித்தன்மையான தொழில் சந்தையில், பணியாட்கள் அவர்களது பங்கில் நடப்பில் காணப்படுவதற்கும் அவர்களது தொழிலில் முன்னேறுவதற்கும் தொடர்ச்சியான பயிற்சிக்கான ஒரு தீவிர விருப்பத்தினைத் தெரிவிக்கின்றார்கள்.

2023 ஆம் ஆண்டின்போது, வெளிநாட்டு பயிற்சிக்காக ரூபா 40 மில்லியன் பாதீடு செய்யப்பட்டதுடன் ரூபா 15 மில்லியன், கல்விக் கட்டணம் ஏதுமின்றி 15 வெளிநாட்டு பயிற்சி மற்றும் கருத்தரங்கு பங்குபற்றலுக்காக முதலீடு செய்யப்பட்டது. இ.பி.ப.ஆ. இன் முகாமைத்துவமானது வெளிநாட்டு பயிற்சி வெளிப்பாடுகளை, குறிப்பாக ச.பி.ஆ.ஒ. குறிப்பிடப்பட்ட திட்டங்களில், வழங்குவதற்கு கடப்பாட்டுடன் உள்ளவேளை, பரிமாற்றல் கட்டுப்பாடுகள் சவால்களைத் தோற்றுவித்தன. 2024 இல் இந்த கட்டுப்பாடுகளில் ஒரு தளர்வு காணப்படும் என நாம் எதிர்பார்ப்பதுடன், இது பணியாட்கள் திறன்களை மேம்படுத்தி மறுசீரமைத்தல் நிகழ்ச்சிநிரலை இயக்கும் ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு வசதியளிக்கும்.

ச.பி.ஆ.ஒ. வருடாந்த கருத்தரங்கு, குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் செயலமர்வுகள் ஊடாக உலகிலுள்ள பிணையங்கள் மற்றும் எதிர்வுகள் சந்தையிலிருந்து எழுகின்ற மிகவும் அத்தியாவசியமான முறைமைப்படுத்தல் அக்கறைகளை கலந்துரையாடுவதற்கான வாய்ப்பினை அதன் அங்கத்தவர்களுக்கு எப்போதும் வழங்கும் ச.பி.ஆ.ஒ. இற்கு நாம் எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். இவ்வாண்டின்போது, ஏனைய முறைமைப்படுத்தல் முகவரமைப்புகளான, ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC), சர்வதேச நாணய நிதியம் (IMF), மலேஷியாவின் பிணையங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு, எமது பணியாட்கள் நடைமுறை மூலதனச் சந்தைப் போக்குகள்

# மூலோபாய இலக்கு 5

## நிறுவனச் சிறப்பினை மேம்படுத்துதல்

மற்றும் அபிவிருத்திகளில் இணையாகக் காணப்படுவதற்காக பொருத்தமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வாய்ப்புக்களை வழங்கியமைக்காக நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு பிணையங்கள் சந்தையின் முறைமைப்படுத்துபவர்களுக்கான உலகளாவிய சான்றளிப்பு திட்டத்தினை பின்பற்றுவதற்கான ஒரு முற்றான புலமை உதவியானது ச.பி.ஆ.ஒ. மற்றும் PIFS - ஹவார்ட் சட்டக் கல்லூரி கேம்பிரிட்ஜ், அமெரிக்காவினால் வழங்கப்பட்டது. இந்த உலகளாவிய சான்றிதழானது ச.பி.ஆ.ஒ. அங்கத்தவர்களுக்கு ஒரு நிறைவேற்றுத்தர கல்வித் திட்டமாக வழங்கப்படுவதுடன், இது பிணையங்கள் சந்தை முறைமைப்படுத்துபவர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டதாகும். இந்தத் திட்டமானது ச.பி.ஆ.ஒ. இன் தொடர்ச்சியான கொள்திறன் கட்டியெழுப்புதல் முயற்சிகளுள் ஒன்றாகும் என்பதுடன், இதுவே முதற்தடவையாக இ.பி.ப.ஆ. இத்திட்டத்தினை பின்பற்றுவதற்காக பெற்ற புலமை உதவியாகும்.

2016 இனைத் தொடர்ந்து, இ.பி.ப.ஆ. இன் பணியாட்களுக்கு ASF டோக்கியோ வட்டமேசையில் பங்குபற்றுவதற்கான ஒரு முக்கியமான வாய்ப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொரு பங்குபற்றுநரும் அவர்களது பொருத்தமான சந்தையினை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை சித்தரித்து முகங்கொடுக்கும் சவால்களை முன்னிலைப்படுத்தி சாத்தியமான தீர்வுகளை கலந்துரையாடல் வேண்டும். மேலும், அனைத்து பங்குபற்றுநர்களுக்கும், ஜப்பானிலுள்ள டோக்கியோ பங்குச் சந்தை, நிதியியல் சேவைகள் முகவரமைப்பு மற்றும் பிணையங்கள் கண்காணிப்பு ஆணைக்குழு போன்ற பிரசித்திபெற்ற நிருவகங்களுக்கு விஜயம் செய்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

ச.பி.ஆ.ஒ. இன் செயற்பாடுகள் அதன் கொள்கை குழுக்களில் இடம்பெறுவதுடன், இ.பி.ப.ஆ. சிலவற்றில் பங்குபற்றியது, அவையாவன, வலியுறுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான குழு (குழு 4) மற்றும் சிற்றளவு முதலீட்டாளர்களிலான குழு (குழு 8) ஆகும். இ.பி.ப.ஆ. இன் அதிகாரிகள் மேற்குறிப்பிட்ட கூட்டங்களில் முறையே அமெரிக்கா மற்றும் மலேஷியாவில் பங்குபற்றினார்கள்.

2023 இல், செலவுமிக்க வெளிநாட்டு பயிற்சிகளுடன் ஒப்பிடும்போது பணியாட்கள் பல்வேறு உள்ளூர் பயிற்சி வாய்ப்புக்களை பெற்றதுடன் இதற்கு ரூபா 2.4 மில்லியன் மட்டுமே செலவாகியது. பணியிடத்தின் போக்கு மற்றும் பணியாட்களின் திறன்களை தரமுயர்த்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கு இணையாக பல்வேறு பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவை MS எக்செல் மற்றும் வங்கியியல் கற்கைக்கான மத்திய நிலையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மேம்பட்ட எக்செல் இல் சான்றிதழ் பாடத்திட்டம் போன்ற தகவல் தொழில்நுட்பங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளையும் டெய்லி FT மற்றும் CICRA ஹோல்டிங்ஸ் இனால் ஒழுங்குசெய்யப்பட்ட சைபர் பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்க இயலுமையாயிருந்தது.

இதற்கும் மேலாக, வங்கியியல் கற்கைக்கான மத்திய நிலையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட திறைசேரி பின்புலக் காரியாலய செயற்பாடுகளிலான திட்டமானது பணியாட்களுக்கு பயனுடையதாயிருந்தது. இலங்கையின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்திலான (PDPA) முன்னிறுத்தத்துடன் இலங்கை பணியாளர்கள் நிருவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட திட்டங்களிலும் சிறந்த ஆளகை, ஒரு சுயாதீன பணிப்பாளரின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மற்றும் புதிய கொ.ப.ப. பட்டியலிடல் தேவைப்பாடுகளிலும் பணியாட்கள் ஈடுபட்டார்கள். மேலாக, கூட்டாண்மை ஆளுகை விதிகளுக்கு பொறுப்பாயுள்ளோர், கூட்டாண்மை ஆளுகை விதிகளிலிலான திருத்தங்களை உள்ளடக்கிய, கூட்டாண்மை முகாமைத்துவ ஆலோசகர்களினால் விருந்தோப்பப்பட்ட ஒரு கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை பெற்றார்கள்.

இலங்கையிலுள்ள தொழில்சார் நிருவகங்களினால் ஒழுங்குசெய்யப்படும் உள்ளூர் பயிற்சித் திட்டங்களில் இ.பி.ப.ஆ. முதலீடு செய்தது. இது பணியாட்களின் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் ஏனைய திறன்களை தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதற்காகும். இதன் பிரகாரம், இலங்கை பொருளாதார உச்சிமாநாடு 2023 மற்றும் சர்வதேச இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட நடுவர் கருத்தரங்கு 2023, இலங்கை வழக்கறிஞர் சங்கத்தினானல் ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய சட்டக் கருத்தரங்கு 2023 மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் 44 ஆவது தேசிய கருத்தரங்கு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நியமங்களிலான தொடரான வெபினார்கள் போன்ற திட்டங்களில் பொருத்தமான பணியாட்கள் பங்குபற்றினார்கள்.

இதற்கும் மேலாக, பணியாட்களுக்கு சில உள்ளகத்தே கொள்திறன் கட்டியெழுப்புதல் திட்டங்களும் நடாத்தப்பட்டன. இத்திட்டங்கள் பணியாட்களிடையே அவர்களது தொழில்நுட்ப மற்றும் மென் திறன்களை விருத்திசெய்வதனையும் வலுவூட்டுவதனையும் நோக்காகக் கொண்டதுடன், இவை அவர்களது கடமைகளை மிகவும் வினைத்திறனான விதத்தில் நிறைவேற்றுவதனை இயலுமையாக்கும்.

பணியாட்களது கல்விக்கான கடப்பாட்டினை நிரூபிப்பதில், இ.பி.ப.ஆ. இன் பயிற்றுவித்தல் அங்கத்தினால் பணியாட்களுக்கு அவர்களது மூலதனச் சந்தை அறிவினை தரமுயர்த்துவதில் முன்னிறுத்தம் செய்யும் பாடத்திட்டங்களை பின்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இலங்கை CFA சங்கம் பாடத்திட்டங்களை மேலதிக கழிவு வீதங்களில் பின்பற்றுவதற்காக பணியாட்களுக்கு கல்வி உதவிகளை வழங்குகின்றது. இதற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. பட்டப்படிப்பின் பின்னரான பட்டங்கள் உள்ளடங்கலான உயர் கல்விகளை பின்பற்றுவதற்கு பணியாட்களுக்கு புலமைத் தொகைகளை வழங்குகின்றது, இது பாடத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் செயலகத்தில் இரண்டு வருடங்கள் சேவையாற்றுதல் வேண்டும் என்ற ஒரு உறுதிமுறிக்கு உட்பட்டதாகும். மேலும், உயர் கல்விக்கான புலமைத்தொகைகள் மற்றும் அங்கத்துவக் கட்டணங்கள் ஆகியவற்றுக்காக ஆட்பட்ட செலவினம் அண்ணளவாக ரூபா 3.5 மில்லியன் ஆகும்.

முகாமைத்துவ பயிலுநர்கள்

## பணியாட்கள் நலன்

இ.பி.ப.ஆ. அதன் பணியாட்களுக்கு, வெளிவாரி மருத்துவத் திட்டங்கள், நெகிழ்ச்சியான வருகைகள், ஒரு நெருக்கடி கடன் திட்டம், பண்டிகை முற்பணங்கள், தொழில்சார் அங்கங்களுக்கான அங்கத்துவக் கட்டணங்களின் செலவு ஈடு, நிறைவேற்றுநர் வாழ்வாதாரம், ஆரோக்கிய மற்றும் ஆயுள் காப்புறுதி காப்பீடுகள், சீருடை உதவி போன்ற பல்வேறு நலன்களை வழங்குகின்றது.

பத்தரமுல்லவிலுள்ள வோட்டர்ஸ் எட்ஜ் வளாகத்தில் 3 நவம்பர் 2023 இல் ஒரு மறக்கவியலாத விளையாட்டுத் தினம் ஒழுங்குசெய்யப்பட்டு மாலையில் ஒரு ஒன்றுகூடல் நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஒவ்வொரு பணியாளும் பங்குபற்றியதுடன், கணிசமான ஊக்கத்தினை வெளிப்படுத்தினார்கள். விளையாட்டு நடவடிக்கைகள் வாழ்வில், ஒழுக்கம், முன்னிறுத்தம், அர்ப்பணிப்பு, கடின உழைப்பு, கட்டுப்பாடு, கூட்டுப்பணி போன்றவற்றில் முன்னிறுத்தம் செய்வதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றன. மாலைநேர ஒன்றுகூடலானது, வெற்றி பெறுதல் அல்லது தோல்வியடைதல் பற்றி அக்கறை கொள்ளாது மகிழ்ச்சியடைவதில் முன்னுரிமையளித்து பணியாட்கள் மேலதிக ஊக்கத்துடன் அதேபோன்று சமமாக அனுபவித்தார்கள்.

பணியாட்களது வருடாந்த கிறிஸ்மஸ் ஒன்றுகூடலானது, பணியாட்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருடன் சமூக ஈடுபாட்டிற்கு ஆவலுடன் எதிர்பார்க்கும் வருடாந்த நிகழ்வாகும். மீளாய்வாண்டின்போது, வருடாந்த பணியாட்கள் ஒன்றுகூடலானது இரண்டு வெவ்வேறு நிகழ்வுகளாக பிரிக்கப்பட்டன. மாலைநேர நிகழ்வானது பிள்ளைகளுக்காக மாத்திரம் ஒழுங்குசெய்யப்பட்ட பிரத்தியேகமாக ஒன்றுகூடலாகும். பிரசித்திபெற்ற மூத்த இசையமைப்பாளரான விசாரத தீபிகா பிரியதர்ஷினி பீரிஸ் உடன் மிகவும் பிரபல்யமான பாரம்பரிய இசைக்குழுவின் பங்குபற்றலுடன் பிள்ளைகளுக்கு ஒரு மறக்கவியலாத அனுபத்தினை வழங்கியது. அதேசமயம், வயதுவந்தோருக்கான நிகழ்வானது இம்முறை பணியாட்களுக்கு மாத்திரம் ஒழுங்குசெய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டில், இ.பி.ப.ஆ. இன் பணியாட்களது பிள்ளைகளிடையே படைப்பாற்றலை எழுப்புவதற்காக 'ஒரு வாசகரை எழுப்புங்கள்' முன்னெடுப்பானது அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது பிள்ளைகள் அவர்களது கலைத்திறன்களூடாக அவர்களை அறியப்படுத்துவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. படைப்பாற்றலான நடவடிக்கைகளில் ஈடுபடுதலானது இளம் பிள்ளைகளுக்கு அவர்கள் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை சுதந்திரமாக ஆராய்வதற்கும், புதிய மற்றும் அசல் கருத்துக்களின் விருத்தியினை வளர்ப்பதற்கும் வலுவளிக்கின்றது. இந்த முக்கியத்துவத்தினை அறிந்துகொண்டு இ.பி.ப.ஆ. அதன் பணியாட்களுக்கு அவர்களது பிள்ளைகளுக்கு அதன் நல்வாழ்வு முன்னெடுப்புகளின் ஒரு பாகமாக புத்தாக்கமான எண்ணம் மற்றும் படைப்பாற்றலான வெளிப்பாடுகளுக்கான செய்முறையினை வழங்குவதன் மூலம் பணியாட்களுக்கு துணைபுரிவதற்கு முயற்சிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களுடன் இணையாக, 2023 ஆம் ஆண்டிற்கு மூன்று நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை 'கலை மற்றும் கைவினை – தெரிந்துகொள்வது ஒன்றுமில்லை; கற்பனை செய்வது அனைத்துமாகும்' எனும் கருப்பொருளில் ஆகும். இந்த நடவடிக்கைகள் மூன்று வேறுபட்ட பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வரைதல், நீங்களாக செய்யுங்கள், மற்றும் படைப்பாற்றலான எழுதுதல் ஆகும். வரைதல் மற்றும் நீங்களாக செய்யுங்கள் 10 வயதிற்கும் குறைவான பிள்ளைகளை இலக்குவைத்தவேளை, படைப்பாற்றலான எழுதுதல்கள் 7 வயதிற்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு திறந்ததாகும். படைப்பாற்றலான எழுத்து மூலம் பிள்ளைகள் அவர்கள் எதைக் காண்கின்றீர்களோ மற்றும் எதை உணர்கின்றீர்களோ அதை மிகவும் எளிமையான மற்றும் மிகவும் வினைத்திறனான விதத்தில் வெளிப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். இந்த அமர்வுகளின்போது, பிள்ளைகள் அவர்களது சொந்த அசல் கதைகளை விருத்திசெய்வதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டது. சிறந்த படைப்பாற்றல் எழுத்தாங்களை தொகுத்து ஒரு புத்தக வடிவில் பிரசுரிப்பதற்கு இ.பி.ப.ஆ. எண்ணியுள்ளது. இளம் மனங்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் முகமாக அனைத்து பங்குபற்றுநர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## தகவல் தொழில்நுட்பம்

2023 இல் இ.பி.ப.ஆ. அதன் டிஜிட்டல் பாதையில் கணிசமான முன்னேற்றத்தினை அடைந்தது. இ.பி.ப.ஆ. இன் டிஜிட்டல் முன்னெடுப்புகள் வினைத்திறன், பாதுகாப்பு, மற்றும் பங்காளிகளது அனுபவங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு முயற்சிப்பதுடன், இது நிறுவனத்தினை மிகவும் ஆக்கத்திறனான மற்றும் முன்னோக்கிய சிந்தனையுடைய எதிர்காலத்திற்கு நிலைப்படுத்தும்.

### 5 வருட த.தொ. மூலோபாயம் மற்றும் டிஜிட்டல் உருமாற்றல் வரைபடம்:

- 2022 இல் இ.பி.ப.ஆ. 2022 முதல் 2027 வரைக்குமான ஒரு விரிவான 5 வருட த.தொ. மூலோபாயம் மற்றும் ஒரு டிஜிட்டல் உருமாற்றல் வரைபடத்தினை ஆரம்பித்தது.
- இ.பி.ப.ஆ. இன் வணிகச் செயன்முறைகள் மற்றும் மூலோபாயங்களில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை உட்புகுத்தி உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகளுடன் ஈடுபாட்டினை மேம்படுத்துவது குறிக்கோளாகக் காணப்பட்டது.

### மூலோபாயமான டிஜிட்டல் முன்னுரிமைகள்:

இ.பி.ப.ஆ. அதன் டிஜிட்டல் உருமாற்றத்தினை இயக்குவதற்காக பல மூலோபாய முன்னுரிமைகளில் முன்னிறுத்தம் செய்தது:

- வணிகச் செயற்பாடுகளின் தன்னியக்கமாக்கல்: பல்வேறு செயற்பாட்டுச் செயன்முறைகளின் தன்னியக்கமாக்கல் மற்றும் சீராக்குதல்.
- வெளிவாரி பங்காளிகளுக்கான மேம்படுத்தப்பட்ட சேவைகள்: வெளிவாரி பங்காளிகளுடனான ஊடாட்டங்களை மேம்படுத்துதல்.
- உள்ளக வாடிக்கையாளர்களுக்கான சிறந்த சேவைகள்: நிறுவனத்தினுள்ளான சேவைகளை மேம்படுத்துதல்.
- போதுமையான கணினி வளங்கள்: வலுவான கணினி உட்கட்டமைப்பினை உறுதிசெய்தல்.
- தகவல் பாதுகாப்பு மேம்படுத்தல்: தரவுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளை பலப்படுத்துதல்.

### "டிஜிட்டல் சாதனைகள்"

### Office 365 தரமுயர்த்தல்:

டிஜிட்டல் உருமாற்றலின் ஒரு பகுதியாக இ.பி.ப.ஆ. நவீன முகில் சேவைகளை பயன்படுத்துவதற்காக அதன் தகவல் தொழில்நுட்ப மேடைகளை தரமுயர்த்தியது.

குறிப்பாக, இ.பி.ப.ஆ. உள்ளக சேவைகள் மற்றும் பணிப்பாய்வுகளுக்கு மைக்ரோசொவ்ட் எசூயர் இற்கு இடம்பெயர்ந்தது.

### மின்னஞ்சல் சேவைகளின் முகில் இடம்பெயர்வு:

இ.பி.ப.ஆ. அதன் மின்னஞ்சல் சேவைகளை இயங்கலை பரிமாற்றல் சேவைகளை பயன்படுத்தி Office 365 மேடைக்கு வெற்றிகரமாக இடம்பெயர்ந்தது.

### ஆவண முகாமைப்படுத்தல் மற்றும் காப்பகப்படுத்தல் தீர்வுகள் (DMAS):

இ.பி.ப.ஆ. இனுள் உள்ள அனைத்து பயனாளர்களும் DMAS தீர்விற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், இது மைக்ரோசொவ்ட் செயார்பொயின்ட் சேவைகளில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

### மைக்ரோசொவ்ட் டீம்ஸ்:

இ.பி.ப.ஆ. கூட்டுப் பணிக்காக ஒரு நிறுவனரீதியான இயங்கலை கூட்டமேடையாக மைக்ரோசொவ்ட் டீம்ஸ் இனை கடைப்பிடித்தது.

# மூலோபாய இலக்கு 5

## நிறுவனச் சிறப்பினை மேம்படுத்துதல்

### நிலைமாற்றம் மற்றும் செயன்முறை முன்னேற்றங்கள்:

#### தாள் அடிப்படையிலிருந்து இலத்திரனியல் செயன்முறைகளுக்கு நகர்வு:

இ.பி.ப.ஆ. பாரம்பரிய தாள் அடிப்படையிலான செயற்பாடுகளிலிருந்து விலகி இலத்திரனியல் ஆவணம் சார்ந்த வணிகச் செயன்முறைகளுக்கு நிலைமாறியது.

#### குறைக்கப்பட்ட மனிதப் பணி:

பல்வேறு த.தொ. பிரயோகங்களுக்கிடையே தன்னியக்க இடைமுகப்புகளை அமுலாக்குவதன் மூலம் இ.பி.ப.ஆ. மனித முயற்சியினை சிறுமமாக்கியது.

#### நம்பகமான கணினி வளங்கள்:

இ.பி.ப.ஆ. அதன் செயற்பாடுகளுக்கு துணைபுரிவதற்காக உயர் செயற்திறனுடைய கணினி வளங்களை உறுதிசெய்தது.

#### தகவல் பாதுகாப்பு முன்னிறுத்தம்:

இ.பி.ப.ஆ. அதன் அனைத்து தகவல்கள் மற்றும் தரவுகளுக்கு உயர் கிடைப்புத்திறன் மற்றும் வலுவான பாதகாப்பிற்கு முன்னுரிமையளித்தது.

தகவல் தொழில்நுட்ப அணி

# மேலதிகத் தகவல்கள்

## சந்தை இடையீட்டாளர்கள்

### 2021 இன் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்டவர்கள்

இ.பி.பஆ. இனால் கீழ்காணும் பிரிவுகளின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்களான, எல்லைக் கடன் வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர், ஒப்புரவாளர், கடன் தரப்படுத்தல் முகவர், பங்குத் தரகர், பங்கு வர்த்தகர் மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் முகாமைத்துவக் கம்பனிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

#### எல்லைக்கடன் வழங்குநர் பிரிவின் கீழான உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்;

1. எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. எஸட்லைன் வைனான்ஸ் லிமிட்டட்
3. பன்சாய் செக்கியூரிட்டீஸ் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
4. கெப்பிட்டல் ட்ரஸ்ட் கிரடிட் (பிரைவேட்) லிமிட்டட்
5. சிட்டிசன்ஸ் டெவலப்மன்ட் பிசினஸ் வைனான்ஸ் பிஎல்சி
6. கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
7. டிஎவ்சிசி பேங்க் பிஎல்சி
8. டயலொக் வைனான்ஸ் பிஎல்சி
9. ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி
10. ஜே பி கிரடிட் (பிரைவேட்) லிமிட்டட்
11. எல் ஓ எல் சி வைனான்ஸ் பிஎல்சி
12. மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பிஎல்சி
13. நேஷன் லங்கா கெப்பிட்டல் லிமிட்டட்
14. நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி
15. பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் பிஎல்சி
16. பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி
17. பி.எம்.எவ். வைனான்ஸ் பிஎல்சி
18. ஆர் பி சி மார்ஜின் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டடட
19. சம்பத் பேங்க் பிஎல்சி
20. செலான் பேங்க் பிஎல்சி
21. செங்கடகல வைனான்ஸ் பிஎல்சி

#### முதலீட்டு முகாமையாளர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்;

1. ஏசியா செக்கியூரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
2. எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
3. எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
4. இலங்கை வங்கி
5. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்
6. கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
7. சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
8. சி டி சி எல் எஸ் ஏ எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
9. வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
10. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
11. கார்டியன் வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
12. இனோவெஸ்ட் இன்வெஸ்ட்மனட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
13. ஜேபி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
14. லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
15. மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
16. நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
17. என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
18. ஒரியன் வன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
19. பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
20. சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
21. சொவட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
22. வோல்டொக் மெக்கன்சி லிமிட்டட்

#### ஒப்புரவாளர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்;

1. இலங்கை வங்கி
2. கொமர்ஷர் பேங்க் ஒவ் சிலோன் பி.எல்.சி.
3. டிஎவ்சிசி பேங்க் பி.எல்.சி.
4. ஹட்டன் நெஷனல் பேங்க் பி.எல்.சி.
5. மேர்ச்சனட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
6. நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.
7. சம்பத் பேங்க் பி.எல்.சி.
8. செலான் பேங்க் பி.எல்.சி

#### கடன் தரப்படுத்தல் முகவர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்;

1. விட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட்
2. லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிட்டட்

#### பங்குத்தரகர்கள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்;

1. எக்யூட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. அல்மாஸ் ஈக்கியுட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
3. அம்பியொன் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
4. ஆஷா செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
5. ஏகெப் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
6. ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
7. பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
8. கெப்பிட்டல் எலாயன்ஸ் பிஎல்சி (கடன் பிணையங்கள்)
9. கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
10. கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
11. சிடி சி எல் எஸ் ஏ செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
12. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
13. வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
14. வெர்ஸ்ட் கார்டியன் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
15. ஜே பி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
16. ஜோன் கீல்ஸ் ஸடொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
17. லங்கா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
18. எல்ஓஎல்சி செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
19. நேஷன் லங்கா ஈக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
20. என்டிபி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
21. நெஸ்ட்டர் ஸடொக் புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
22. ரிச்சட் பீரிஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
23. எஸ்சி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
24. சென்வின் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
25. சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
26. சமர்வில் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
27. வெல்த் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

# மேலதிகத் தகவல்கள்

பங்கு வர்த்தகர்கள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்;

1. ஏசியா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
3. கெப்பிட்டல் எலாயன்ஸ் பிஎல்சி (கடன் பிணையங்கள்)
4. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
5. ஜேபி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
6. நேஷன் லங்கா ஈக்கியுட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
7. நெஸ்டர் ஸடொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
8. செலான் பேங்க் பி.எல்.சி. (கடன் பிணையங்கள்)
9. எஸ்சி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட
10. சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
11. வெல்த் ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்கள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்;

1. ஹட்டாரா கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
2. கெப்பிட்டல் எலாயன்ஸ் பார்ட்னர்ஸ் லிமிட்டட்
3. என்.டி.பி. இன்வெஸ்ட்மன்ட் பேங்க் லிமிட்டட்
4. சி டி சி எல் எஸ் ஏ கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்

முகாமைத்துவக் கம்பனிகள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்களும் அவற்றின் கூட்டு முதலீட்டுத் திட்டங்களும்;

1. ஆர்பிக்கோ ஹட்டரக்சியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

i. ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா கேஷ் மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட் (சி.எம்.டி.)

ii. ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா ஈக்கியுட்டி இன்கம் வன்ட்

iii. ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா ரிபோ இன்வெஸ்ட்மன்ட் வன்ட்

iv. ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா ஸ்ரீலங்கா பொன்ட் வன்ட்

v. ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா யுஎஸ்டி விக்ஸ்ட் இன்கம் வன்ட்

2. ஏசியா செக்கியுரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

I. ஏசியா செக்கியுரிட்டீஸ் மணி மார்க்கட் வன்ட்

II. ஏசியா செக்கியுரிட்டீஸ் இன்கம் வன்ட்

III. ஏசியா செக்கியுரிட்டீஸ் கிள்ட் வன்ட்

IV. ஏசியா செக்கியுரிட்டீஸ் டைனமிக் கிள்ட் வன்ட்

V. ஏசியா செக்கியுரிட்டீஸ் ஈக்கியுட்டி ஒப்பர்ச்சியுனிட்டி வன்ட்

3. எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட

I. எஸ்ட்ரூ எக்டிவ் இன்கம் வன்ட்

II. எஸ்ட்ரூ அல்பா வன்ட்

4. எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்

I. எஸட்லைன் இன்கம் வன்ட்

II. எஸட்லைன் இன்கம் ப்ளஸ் குரோத் வன்ட்

5. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டட்

I. கெல் பெலன்ஸ்ட் வன்ட்

II. கெல் கோர்ப்பரேட் ட்ரஸரி வன்ட்

III. கெல் விக்ஸ்ட் இன்கம் ஒப்பச்சுனிட்டீஸ் வன்ட்

IV. கெல் கிள்ட் வன்ட்

V. கெல் கிள்ட் மணி மார்க்கட் வன்ட்

VI. கெல் கிள்ட் ட்ரேடிங் வன்ட்

VII. கெல் ஐ ஹீல்ட் வன்ட்

VIII. கெல் இன்கம் வன்ட்

IX. கெல் இன்வெஸ்ட்மன்ட் கிரேட் வன்ட்

X. கெல் மீடியம் ரிஸ்க் டெட் வன்ட்

XI. கெல் குவான்டிடேடிவ் இக்யுட்டி வன்ட்

XII. கெல் ஸ்ரீலங்கா டொலர் வன்ட்

XIII. கெல் வைவ் இயர் ஒப்ட்டிமம் வன்ட்

6. சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

I. சீபேங்க் சென்சரி குரோத் வன்ட்

II. சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (ஏ சீரீஸ்)

III. சீபேங்க் ஐ ஹீல்ட் வன்ட்

IV. சீபேங்க் சேவிங்ஸ் ப்ளஸ் மணி மார்க்கட் வன்ட்

V. சீபேங்க் சுரகும் கிள்ட் எட்ஜ் வன்ட்

VI. சீபேங்க் யுனிட் ட்ரஸ்ட் வன்ட்

7. சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்

i. சிலோன் டொலர் பொன்ட் வன்ட்

ii. சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்

iii. சிலோன் இன்கம் வன்ட்

iv. சிலோன் இன்டெக்ஸ் வன்ட்

v. சிலோன் ஐபிஓ வன்ட்

vi. சிலோன் மணி மார்க்கட் வன்ட்

vii. சிலோன் டுஹரிசம் வன்ட்

viii. சிலோன் டிரசரி இன்கம் வன்ட்

8. சி டி சி எல் எஸ் ஏ எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

I. ஐசி டி சி எல் எஸ் ஏ இக்யூட்டி வன்ட்

II. சி டி சி எல் எஸ் ஏ கிள்ட் எட்ஜ் வன்ட்

III. சி டி சி எல் எஸ் ஏ ஐ யீல்ட் வன்ட்

IV. சி டி சி எல் எஸ் ஏ குரொத் இக்யூட்டி வன்ட்

V. சி டி சி எல் எஸ் ஏ மணி மார்க்கட் வன்ட்

VI. சி டி சி எல் எஸ் ஏ இன்கம் வன்ட்

9. வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்

I. ஐவெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யுட்டி வன்ட்

II. வெர்ஸ்ட் கெப்பிட்டல் விக்ஸ்ட் இன்கம் வன்ட்

III. வெர்ஸ்ட் கெப்பிட்டல் கில்ட் எட்ஜட் வன்ட்

IV. வெர்ஸ்ட் கெப்பிட்டல் மணி மார்க்கட் வன்ட்

V. வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்

10. ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்

I. ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்

II. ஜே பி வான்டேஜ் சோர்ட் டேர்ம் கிள்ட் வன்ட்

III. ஜே பி வான்டேஜ் வெலியூ ஈக்யுட்டி வன்ட்

11. நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட லிமிட்டட்

I. நாமல் குரோத் வன்ட்

II. நாமல் ஐ ஹீல்ட் வன்ட்

III. நாமல் இன்கம் வன்ட்

IV. நெஷனல் இக்யுட்டி வன்ட்

12. என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்

I. என்டிபி வெல்த் கில்ட் எட்ஜ்ட் வன்ட்

II. என்டிபி வெல்த் குரோத் அன்ட் இன்கம் வன்ட்

III. என்டிபி வெல்த் குரோத் வன்ட்

IV. என்டிபி வெல்த் இன்கம் வன்ட்

V. என்டிபி வெல்த் இன்கம் ப்ளஸ் வன்ட்

VI. என்டிபி வெல்த் இஸ்லாமிக் மணி பிளஸ் வன்ட்

VII. என்டிபி வெல்த் மணி வன்ட்

VIII. என்டிபி வெல்த் மணி பிளஸ் வன்ட்

IX. என்டிபி வெல்த் டைனமிக் டிரசரி வன்ட்

13. பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட

I. பிரீமியர் குரோத் வன்ட்

II. பிரீமியர் மணி மார்க்கட் வன்ட்

14. சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

I. ஐசென்வின் டைனமிக் இன்கம் வன்ட்

II. சென்வின் டிவிடன்ட் வன்ட்

III. சென்வின் குரோத் வன்ட்

IV. சென்வின் மணி மார்க்கட் வன்ட்

V. சென்வின் ஷரியா பெலன்ஸ்ட் வன்ட்

VI. சென்வின் ஷரியா இன்கம் வன்ட்

VII. சென்வின் இன்சூரன்ஸ் செக்டர் வன்ட்

VIII. சென்வின் வைனான்சியல் சேர்விசஸ் வன்ட்

IX. சென்வின் கொன்சூமர் ஸ்டேபள்ஸ் வன்ட்

15. சொவ்ட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

I. சொவ்ட்லொஜிக் ஈக்கியுட்டி வன்ட்

II. சொவட்லொஜிக் மணி மார்க்கட் வன்ட்

16. லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்

I. லீனியர் வெல்த் மணி மார்க்கட் வன்ட்

II. லீனியர் வெல்த் டைனமிக் ஒப்பர்ச்சுனுட்ஏஸ் வன்ட்

III. லீனியர் வெல்த் இன்கம் வன்ட்

## சந்தை நிறுவனங்கள்

2021 இன் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்டவர்கள்

பரிவர்த்தனை, மத்திய வைப்பகம் மற்றும் தீர்வக இல்லம் ஆகிய பிரிவுகளின் கீழ் இ.பி.ப.ஆ. இனால் உரிமமளிக்கப்பட்ட சந்தை நிறுவனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: :

### உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனை;

1. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

### உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம்;

1. மத்திய வைப்பக முறைமைகள் (பிரைவேட்) லிமிட்டட்

### உரிமமளிக்கப்பட்ட மத்திய வைப்பகம்;

1. மத்திய வைப்பக முறைமைகள் (பிரைவேட்) லிமிட்டட்

## துணைச் சேவை வழங்குநர்கள்

2021 இன் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ்

கூ.மு.தி. இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்

இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு வங்கியாக இருத்தல் வேண்டும்.

செய்கைப் பத்திரம்

| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|
| வருடாந்த புரள்வு (ரூ.மில்.) உரித்துவம் | 171,408 | 396,882 | 1,173,157 | 686,602 | 410,629 |
| உள்ளூர் (ரூ.மில்.) | 109,003 | 318,354 | 1,112,769 | 634,408 | 371,360 |
| வெளியூர் (ரூ.மில்.) | 62,405 | 78,527 | 60,388.30 | 52,194 | 39,270 |
| சந்தை நாட்கள் (எண்.) | 241 | 209 | 240 | 231 | 242 |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூ.மில்.)உரித்துவம் | 711 | 3,217 | 4,888 | 2,977 | 1,697 |
| வர்த்தகம்செய்யப்பட்ட பங்குகள் (எண்.)உரித்துவம் | 9,855 | 21,349 | 59,771.69 | 29,048 | 16,989 |
| உள்ளூர் (ரூ.மில்.) | 7,091 | 19,808 | 57,904.52 | 28,142 | 15,889 |
| வெளியூர் (ரூ.மில்.) | 2,764 | 1,541 | 1,867.17 | 906 | 1,099 |
| வர்த்தகங்கள் (எண்.)உரித்துவம் | 1,197,205 | 3,070,021 | 8,131,208 | 6,057,233 | 3,618,960 |
| உள்ளூர் (எண்.) | 1,150,486 | 2,968,092 | 8,009,449 | 5,973,341 | 3,544,022 |
| வெளியூர் (எண்.) | 46,719 | 101,929 | 121,759 | 83,892 | 74,938 |
| புதிய பட்டியலிடல்கள் (எண்.) | 2 | 1 | 13 | 4 | 2 |
| பட்டியலிலிருந்து நீக்கம் (எண்.) | 10 | 7 | 3 | 11 | 1 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகள் | 289 | 283 | 296 | 290 | 290 |
| வர்த்தகம் செய்யப்பட்ட கம்பனிகள் | 279 | 266 | 280 | 236 | 276 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.) | 2,851.31 | 2,960.65 | 5,489.17 | 3,847.15 | 4,248.93 |
| வருட இறுதியியல் சந்தை விலை உழைப்பு விகிதம் (மடங்குகள்) | 10.83 | 11.3 | 13.63 | 5.0 | 11.1 |
| சந்தை மூலதனவாக்கத்திற்கு புரள்வு (%) | 6.01 | 13.4 | 21.4 | 17.8 | 9.7 |
| வருட இறுதியில் பங்கிலாப விளைவு (%) | 3.17 | 2.7 | 2.17 | 4.1 | 3.3 |
| வருட இறுதியியல் புத்தகப் பெறுமதிக்கு விலை (மடங்குகள்) | 1.14 | 1.1 | 1.67 | 0.9 | 0.9 |
| மொ.உ.உ. இன் சதவீதமாக சந்தை மூலதனவாக்கம் | 21.5 | 19.7 | 36.7 | 22.8 | 17.6 |

# மேலதிகத் தகவல்கள்

| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|
| விலைச் சுட்டிகள் | | | | | |
| அனைத்து பங்கு விலைச்சுட்டி (அ.ப.வி.சு.) | 6,129.21 | 6,774.22 | 12,226.01 | 8,489.66 | 10,654.16 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | 1.27 | 10.52 | 80.48 | (4.65) | 25.50 |
| S&P ஸ்ரீலங்கா 20 | 2,936.96 | 2,638.10 | 4,233.25 | 2,635.63 | 3,068.36 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | (6.32) | (10.18) | 60.47 | (13.05) | 16.42 |
| மொத்த விளைவுச் சுட்டிகள் | | | | | |
| அ.ப.வி.சு. இல் மொத்த விளைவுச் சுட்டி(ASTRI) | 8,203.82 | 9,078.65 | 16,423.75 | 11,404.60 | 14,617.77 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | 1.70 | 10.7 | 80.91 | (4.65) | 28.17 |
| S&P ஸ்ரீலங்கா 20 மொத்த விளைவுச் சுட்டி ( S&P ஸ்ரீலங்கா 20TRI) | 4,603.57 | 4,332.84 | 7,241.29 | 4,749.27 | 5,710.45 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | (1.77) | (5.9) | 67.13 | (10.71) | 20.24 |
| தேசியமல்லாத நடவடிக்கை * | | | | | |
| வருடாந்த புரள்வு (ரூ.மில்.) | 62,405 | 78,527 | 60,340 | 52,176 | 39,270 |
| கொள்வனவுகள் (ரூ.மில்.) | 56,537 | 52,889 | 34,016 | 67,488 | 41,451 |
| விற்பனைகள் (ரூ.மில்.) | 68,272 | 104,165 | 86,665 | 36,863 | 37,088 |
| தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல் | (11,735.3) | (51,275.7) | (52,649) | 30,625 | 4,363 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண். மில்.) | 2,764 | 1,541 | 1,866 | 905 | 1,099 |
| கொள்வனவுகள் (எண்.மில்.) | 3,896 | 928 | 1,308 | 884 | 1,099 |
| விற்பனைகள் (எண்.மில்.) | 1,631 | 2,154 | 2,425 | 927 | 1,254 |
| வர்த்தகங்கள் | 46,719 | 101,929 | 121,692 | 83,883 | 74,938 |
| கொள்வனவுகள் (எண்.) | 25,759 | 42,134 | 74,172 | 80,859 | 80,379 |
| விற்பனைகள் (எண்.) | 67,680 | 161,725 | 169,213 | 86,908 | 69,498 |
| கடன் சந்தை | | | | | |
| கூட்டாண்மைக் கடன் | | | | | |
| புரள்வு (ரூ.000) | 5,677,080 | 5,856,002 | 1,244,587 | 4,041,226 | 103,321 |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 234 | 243 | 93 | 90 | 45 |
| வர்த்தகம் செய்யப்பட்ட தொகுதிக்கடன்களின் எண்ணிக்கை (000) | 55,643 | 54,230 | 11,439 | 38,839 | 930 |
| யுனிட் ட்ரஸ்ட்கள் | | | | | |
| தேறிய சொத்தின் பெறுமதி (தே.சொ.பெ.)(ரூ.பில்.) | 104.79 | 200.94 | 194 | 143 | 407.74 |
| அலகுடைமையாளர்கள் (எண்.) | 46,481 | 51,707 | 59,426 | 67,912 | 93,450 |
| வழங்கப்பட்ட அலகுகள் (எண். 000) | 4,769 | 8,210 | 7,835 | 6,283 | 13,371 |
| உரித்துவத்திலான முதலீடு (ரூ.மில்.) | 9,841 | 14,019 | 17,586 | 11,856 | 18,506 |
| திறைசேரி உண்டியல்களிலான முதலீடு (ரூ.மில்.) | 9,150 | 28,613 | 28,755 | 88,879 | 315,239 |
| ஏனைய கருவிகளிலான முதலீடுகள் *(ரூ.மில்.) | 84,542 | 158,725 | 148,907 | 48,187 | 70,175 |

*வணிகத் தாள்கள், நம்பிக்கைப்பொறுப்புச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புக்கள் போன்றன.

மூலம்: முகாமைத்துவக் கம்பனிகளின் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்



# ஒரு வளமுள்ள தோற்றம்

## நிதியியல் அறிக்கைகள் ·

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு -கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 68 | நிதி நிலைமைக் கூற்று 73
நிதிச் செயற்திறன் கூற்று 74 | தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று 75
காசுப் பாய்ச்சல் கூற்று 76 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 77

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 90
நிதி நிலைமைக் கூற்று 94 | S நிதிச் செயற்திறன் கூற்று 95 | தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று 96
காசுப் பாய்ச்சல் கூற்று 97 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 98

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 103
நிதி நிலைமைக் கூற்று 107 | நிதிச் செயற்திறன் கூற்று 108 | தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று 109
காசுப் பாய்ச்சல் கூற்று 110 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 111

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 116
நிதி நிலைமைக் கூற்று 120 | நிதிச் செயற்திறன் கூற்று 121 | தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று 122
காசுப் பாய்ச்சல் கூற்று 123 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 124

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } BAN/G/SEC/FA/2023/2 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 16 May 2024

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் ஆணைக்குழுவினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் ஆணைக்குழுவின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு ஆணைக்குழு வேண்டப்படுகின்றது.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணைர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் ஆணைக்குழு நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.2 செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் ஆணைக்குழுவினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு ஆணைக்குழு இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 7 | 43,089,001 | 59,773,251 |
| அருவச் சொத்துக்கள் | 7.1 | 24,679,729 | 34,267,756 |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 8 | 2,216,963 | 4,159,956 |
| வருமதிகள் | 9 | 197,806,896 | 264,880,170 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | 10 | 662,333 | 654,244 |
| வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 11 | 63,454,247 | 65,837,245 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 12 | 18,112,305 | 52,147,144 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 350,021,474 | 481,719,766 |
| | | | |
| **நிதியங்களும் பொறுப்புக்களும்** | | | |
| **பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதியம் | 13 | - | - |
| | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| மானியம் - தீர்வை நிதியத்திலிருந்து மூலதனச் செலவினங்களுக்கான மாற்றல்கள் | 14 | 26,281,828 | 40,157,488 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | 15 | 97,520,914 | 68,889,206 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் - அரசாங்க மானியங்கள் நி.து.ந.தி. | | 35,266,382 | 47,631,620 |
| | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தவெண்டிய வரி | 16 | 147,384,953 | 245,819,781 |
| கடன்கொடுத்தோரும் அட்டுறுகளும் | 17 | 37,721,806 | 22,785,337 |
| விற்பனையாளருக்கு செலுத்தவேண்டியவை - நி.து.ந.தி. | 18 | - | 50,122,635 |
| முற்பணமாக பெற்றவை | | 5,845,591 | 6,313,699 |
| | | | |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | 350,021,474 | 481,719,766 |

பக்கங்கள் 77 முதல் 89 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்காகவும் அதன் சார்பிலும்

நிரோஷா கொடிகார
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

சிந்தக்க மென்டிஸ்
பணிப்பாளர் நாயகம்

வைசால் சாலி
தலைவர்

கொழும்பு
02 பெப்ரவரி 2024

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| உரிமமளித்தல் கட்டணங்கள் | | 4,100,649 | 3,449,164 |
| நிர்வாகக் கட்டணம் | | 6,522,148 | 6,152,213 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | | 11,629,061 | 8,671,966 |
| வட்டி வருமானம் | | 72,280 | 717,743 |
| ஏனைய வருமானம் | | 1,126,302 | 110,261 |
| பணியாட்கள் கடன்களிலான வட்டி | | 944,910 | 719,194 |
| நி.து.ந.தி. இலிருந்தான வருமானம் | 19 | 176,438,871 | 172,252,739 |
| மானியங்களின் அங்கீகாரம் | 14 | 18,087,517 | 19,350,111 |
| மொத்த வருமானம் | | 218,921,738 | 211,423,391 |
| | | | |
| செலவினம் | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 20 | (393,499,169) | (312,436,108) |
| நிர்வாக, நிலையச் செலவினங்கள் | 21 | (236,006,969) | (179,803,251) |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி செலவினங்கள் | 22 | (36,029,791) | (50,328,063) |
| நிதியியல் கட்டணங்கள் | 23 | (48,190) | (120,430) |
| மொத்தச செலவினம் | | (665,584,119) | (542,687,852) |
| | | | |
| வருமான வரிச் செலவினம் | | - | - |
| வருமானத்தினை விஞ்சிய செலவினம் | | (446,662,381) | (331,264,461) |
| | | | |
| வருமானத்தினை விஞ்சிய செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்டவை | | 446,662,381 | 331,264,461 |

பக்கங்கள் 77 முதல் 89 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று | திரண்ட நிதியம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|
| 1 ஜனவரி 2022 இல் உள்ளவாறான மீதி | - | - |
| வருடத்திற்கான வருமானத்தை விஞ்சிய செலவினம் | (331,264,461) | (331,264,461) |
| வருமானத்தை விஞ்சிய செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல்கள் | 331,264,461 | 331,264,461 |
| 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி | - | - |
| | | |
| 1 ஜனவரி 2023 இல் உள்ளவாறான மீதி | - | - |
| வருடத்திற்கான வருமானத்தை விஞ்சிய செலவினம் | (446,662,381) | (446,662,381) |
| வருமானத்தை விஞ்சிய செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல்கள் | 446,662,381 | 446,662,381 |
| 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி | - | - |

பக்கங்கள் 77 முதல் 89 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | | |
| தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல்களின் பின்னர் தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | | - | - |
| செம்மையாக்கல்கள் | | | |
| பெறுமானத்தேய்வு | 7 | 18,077,395 | 19,350,111 |
| பெறுமானத்தேய்வு - நி.து.ந.தி. | 7 | 2,777,212 | 522,195 |
| பெறுமதி குறைப்பு | 7.1 | 9,588,027 | 56,249 |
| மானியங்களின் அங்கீகாரம் | 14 | (18,087,517) | (19,350,111) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 15 | 34,938,816 | 19,639,458 |
| நிலையான சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம் | | (318,034) | - |
| தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | | 46,975,899 | 20,217,902 |
| தொழிற்பாட்டு மூலதனத்திலிருந்தான மாற்றம் | | | |
| இருப்புக்களிலான (அதிகரிப்பு) /வீழ்ச்சி | | 1,942,992 | (1,154,083) |
| வருமதிகளிலான (அதிகரிப்பு ) / வீழ்ச்சி | | 67,073,275 | (38,670,562) |
| வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளிலான (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | | 2,382,999 | (3,288,263) |
| முற்பணமாக பெற்றவைகளிலான அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | (468,107) | 194,390 |
| செலுத்தவேண்டிய வரியிலான அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | (98,434,827) | (77,199,191) |
| கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுகளிலான அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | 14,936,469 | 3,349,156 |
| செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | (50,122,638) | 50,054,501 |
| தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு பின்னரான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | (62,689,838) | (66,714,052) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு | | (15,713,939) | (46,496,150) |
| இவ்வாண்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (6,307,108) | (9,804,479) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | | (22,021,047) | (56,300,629) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் காசுப் பாய்ச்சல்கள் | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 7 | (4,170,358) | (14,690,841) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | 7.1 | - | (34,324,005) |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | (8,090) | (11,507) |
| ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பயையிலிருந்தான வருவாய் | | 318,034 | 0 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | | (12,365,238) | 47,631,620 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | | (16,225,652) | (1,394,732) |
| நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | | |
| தீர்வை நிதியத்திலிருந்தான மூலதன மாற்றல்கள் | 14 | 4,211,858 | 804,782 |
| நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | | 4,211,858 | 804,782 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு (குறைப்பு) | | (34,034,841) | (56,890,578) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் (குறிப்பு A) | | 52,147,145 | 109,037,723 |
| காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் (குறிப்பு B) | | 18,112,304 | 52,147,145 |
| குறிப்பு (A) | | | |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடுகள் | | - | 74,999,999 |
| வங்கியிலுள்ள காசு | | 52,107,145 | 33,997,724 |
| கையிலுள்ள காசு | | 40,000 | 40,000 |
| | | 52,147,145 | 109,037,723 |
| குறிப்பு (B) | | | |
| காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | | | |
| வங்கியிலுள்ள காசு | 12 | 18,072,304 | 52,107,145 |
| கையிலுள்ள காசு | 12 | 40,000 | 40,000 |
| | | 18,112,304 | 52,147,145 |

பக்கங்கள் 77 முதல் 89 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 பொதுவான தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது (இ.பி.ப.ஆ.) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் மற்றும், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் திருத்தியமைக்கப்பட்டு (பழைய இ.பி.ப.ஆ. சட்டம்), உருவாக்கப்பட்ட இலாபமீட்டாத ஓர் சட்டபூர்வமான சபையாகும். இந்த பழைய சட்டமானது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் (புதிய இ.பி.ப..ஆ. சட்டம் ) சட்ட நீக்கம் செய்யப்பட்டது.

இ.பி.ப.ஆ. இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசில் இடம்கொண்டுள்ளதுடன் அது கொழும்பு 1, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம், கிழக்குக் கோபுரம் 28 ஆம் மற்றும் 29 ஆம் மாடிகளில் அமைந்துள்ளது.

### 1.2 செயற்பாடுகளின் தன்மையும் பிரதான நடவடிக்கைகளும்

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 03 இன் பிரகாரம், சட்டத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் பின்வருமாறு,

(அ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை நிறுவுவதற்கு;

(ஆ) ஒரு நியாயமான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையினை உருவாக்குவதற்கு, பராமரிப்பதற்கு மற்றும் முறைமைப்படுத்துவதற்கு;

(இ) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பதற்கு; மற்றும்

(ஈ) பிணையங்கள் சந்தை தொடர்பான சேவைகளை வழங்குவதில் உயர் தரத்திலான நியமங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்தல்

### 1.3 இணக்கப்பாடு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது அதன் நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கங்களில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. இன் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தார்கள். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இ.பி.ப.ஆ. எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இ.பி.ப.ஆ. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் தீர்வை நிதியத்திற்கும் மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கும் தனித்தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தேறிய சொத்துகளின் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை மாத்திரம் உள்ளடக்குகின்றது.

இ.பி.ப.ஆ. இன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள், நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் தவிர்த்தலாக, அட்டுறு மற்றும் வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளைப் பொறுத்தளவில் தேறிய பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காலத்தின் இறுதியில் உள்ளவாறான நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளை அறிந்துகொள்வதற்காக, வட்டிச் செலவினம், நடைமுறை சேவைக் கிரயம், இக்காலத்தில் பதவி விலகியோருக்கு செலுத்தப்பட்ட /செலுத்தவேண்டிய பணிக்கொடை மற்றும் ஆயுள் எதிர்பார்ப்பு (இலாபம் )/நட்டம் தொடர்பாக பொருத்தமான சீரமைவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இ.பி.ப.ஆ. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புகளின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகையில் மிகவும் கணிசமானளவு விளைவினைக் கொண்டுள்ளவற்றில் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளில் மேற்கொள்ளப்படும் நியாயப்பாடுகள் பற்றிய தகவலானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு குறிப்பினில் விபரிக்கப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் கிரயமானது ஓர் காப்பீட்டுக் கணிப்பீட்டினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்பீடானது கழிவு வீதங்கள், எதிர்கால வேதன அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் போன்றவற்றைப் பற்றிய அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றன. இத்திட்டத்தின் நீண்டகால தன்மையின் காரணமாக, அத்தகைய மதிப்பீடுகள் கணிசமானளவு நிச்சயமற்றதன்மையினைக் கொண்டுள்ளன. காப்பீட்டுக் கணிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 1.8 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது இ.பி.ப.ஆ. இன் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் முன்னிலைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.9 பொருண்மை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை பொருண்மையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருமாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் இ.பி.ப.ஆ. இன் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

### 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

### 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற பொருண்மையான நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.13 கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

### 2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

சொந்த ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும் மற்றும் அருவச் சொத்துக்களும்

ஆதனங்களும், பொறித்தொகுதியும், உபகரணங்களும் (ஆ.பொ.உ.) மற்றும் அருவச் சொத்துக்களும் அவற்றின் மீதான ஏதேனும் தற்செயலான செலவுகளும் சேர்க்கப்பட்டு கொள்விலையில் குறிப்பிடப்பட்டு அவற்றின் உபயோகமுள்ள ஆயுள்காலத்தில் பெறுமானத்தேய்வு / பெறுமானக்குறைப்பு செய்யப்பட்டும் உள்ளன. மானியமாகப் பெறப்பட்ட சொத்துக்கள் அவற்றின் கிரயத்தில் கணக்கிற்கொண்டு வரப்பட்டு அவற்றின் மீதான பெறுமானத் தேய்வு /பெறுமானக் குறைப்பு அந்தந்த ஒதுக்கக் கணக்கிற்கெதிராக செலவு வைக்கப்பட்டுள்ளது. ஆ.பொ.உ. மற்றும் அருவச் சொத்துக்களுக்களில் பின்னர் ஏற்படும் செலவினங்கள் குறிப்பிட்ட சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களை அதிகரிக்குமாயின் மாத்திரம் அந்த சொத்துக்கள் சொத்தாகக் கருதப்படுகின்றன. ஏனைய அனைத்து செலவினங்களும் ஆட்பட்ட செலவினங்களாகக் கருதப்படுகின்றன.

பெறுமானத் தேய்மானம் / பெறுமானக் குறைப்பு நேர்கோட்டு அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்கள், காரியாலய உபகரணங்கள் மற்றும் மென்பொருள் உள்ளடங்களான ஈடிபி உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் என்பன சொத்துக்களின் பொருளாதாரப் பயன்பாட்டுக் காலத்தினைக் கருத்திற்கொண்டு பின்வரும் சதவீதங்களில் பெறுமானத்தேய்வு /பெறுமானக் குறைப்பு செய்யப்பட்டன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 10.00% |
| தளபாடம், பொருத்திகள் மற்றும் இணைப்புகள் | 12.50% |
| பயிற்றுவித்தல் உபகரணம் | 20.00% |
| மென்பொருள்ழ உள்ளடங்கலாக இலத்திரணியல் தரவு செயல்முறையாக்கல் (இ.த.செ.) உபகரணம் | |
| இ.த.செ. – வன்பொருள் | 20.00% |
| இ.த.செ. உபகரணம் - மென்பொருள் | 20.00 – 33.33% |
| இ.த.செ. உபகரணம் - கையடக்கத் தொலைபேசிகள் | 33.33% |
| இ.த.செ. உபகரணம் - ஏனையவை | 20.00 – 25.00% |
| அருவச் சொத்துக்கள் | 20.00 – 33.33% |

கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களுக்கும் அவை பாவனைக்கு கிடைக்கும் தினத்திலிருந்து பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வானது சொத்து அங்கீகார நீக்கம் செய்யப்படும் திகதி வரை ஒதுக்கப்படுகின்றது.

### 2.2 முதலீடுகள்

முதலீடுகள் உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளிலும், அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலை மற்றும் அறிக்கையிடும் காலப்பகுதி வரைக்குமான அட்டுறு வட்டி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.3 இருப்புக்கள்

இருப்புக்கள் கொள்விலையில் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் ஆகக் குறைந்த பெறுமானத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. இருப்புக்களது பெறுமதி முதல் உள் முதல் வெளியே (மு.உ.மு.வெ.) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

விரைவாக மாற்றமடையும் உலகச் சந்தை நிலவரங்களினால் மூலதனச் சந்தை தொடர்பான சட்டங்களும் விதிகளும் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருவதனால் கொள்கையளவில் நூலக புத்தகங்களின் பெறுமதியானது பதிவழிப்புச் செய்யப்படுகின்றது.

### 2.4 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 3. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

#### 3.1.1 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி./ஊ.ந.நி.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் அங்கத்தவர்களாவார்கள். இ.பி.ப.ஆ. ஊழியர்களது மொத்த ஊதியத்தில், வாகன மற்றும் எரிபொருள் படிகள் தவிர்ந்த, முறையே 12% மற்றும் 3% த்தை செலுத்துகின்றது.

#### 3.1.2 நிர்ணியிக்கப்பட்ட நலன் கடப்பாடு – பணிக்கொடை

பணிக்கொடை என்பது பணியின் பின்னரான நலனாகும். 1983 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய இ.பி.ப.ஆ. பணியின் பின்னரான நலனை செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. ஊழியர்களுக்கான

பொறுப்பு அவர்கள் 5 வருட தொடர்ச்சியான சேவையைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே எழுகின்றது. எவ்வாறாயினும், 01 ஜனவரி 2018 முதல் அமுலுக்கு வந்த SLPSAS 19 – 'ஊழியர் நலன்கள் ஏற்பாடுகளுக்கமைய நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறுப்பானது அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான நிர்ணயிக்கப்பட்ட ஊழியர் நலன் கடப்பாடுகளது நிகழ்காலப் பெறுமதியாகும். இப்பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை. அங்கீகரிக்கப்படாத காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் அல்லது நட்டங்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத முன்னைய மற்றும் நடைமுறைச் சேவைக் கிரயங்கள் என்பன உடனடியாக நிதியியல் செயற்திறன் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடானது ஓர் தகைமை பெற்ற காப்பீட்டுக் கணிப்பு நிபுணரினால் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறு SLPSAS 19 – 'ஊழியர் நலன்கள்' இல் பரிந்துரைக்கப்பட்டவாறு உத்தேச அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டுள்ளது.

### 3.2 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் கோரும் பட்சத்தில் செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.3 கொடைகள்

தீர்வை நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினங்கள் கொடையாகக் கருதப்பட்டு நிதியியல் செயற்திறன் கூற்றில் தொடர்புடைய சொத்தின் உத்தேச உபயோகமுள்ள ஆயுள்காலத்திற்கு ஓர் வருமானமாக ஓர் ஒழுங்குமுறை அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 4. நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வருவாய் அங்கீகரிப்பு

இ.பி.ப.ஆ. இன் வருவாயானது உரிமக் கட்டணம், நிர்வாகக் கட்டணம், பிரசுரங்களது விற்பனை, கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் முதலியவற்றிலான வருமானங்களை உள்ளடக்குகின்றது. மேற்கூறப்பட்ட சேவைகள் / கட்டணங்களிலிருந்து வரும் வருவாயானது அச்சேவைகள் நிறைவேற்றப்பட்ட காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினங்கள் என்பன நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 4.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. .

### 4.4 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலான இலாபம் அல்லது நட்டம்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது விற்பனையிலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டமானது நிதிச் செயற்திறன் கூற்றில் பின்வருமாறு கணக்கிலிடப்பட்டுள்ளது. இது விற்பனை வருமானத்திலிருந்து சொத்தின் கொண்டுசெல்லல் கிரயத்தினையும் அதனுடன் தொடர்பான விற்பனை செலவினத்தினையும் கழித்ததன் பின்னர் காணப்படும் மிகையாக கணிப்பிடப்படுகின்றது.

## 5. செலவின அங்கீகரிப்பு

நிதிச் செயற்திறனை உறுதிசெய்யும்போது இ.பி.ப.ஆ. இனைப் பராமரிப்பதில் ஏற்படும் சகல செலவினங்கள் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

## 6. காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 7 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| விபரம் | மோட்டார் வாகனங்கள் | தளபாடமும் பொறித்தொகுதியும் | அலுவலக உபகரணமும் ஈ.டி.பி. உபகரணங்கள் | பயிற்சி உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | |
| 01.01.2023 இல் உள்ளவாறான மீதி | 45,165,786 | 50,909,199 | 181,364,469 | 4,326,348 | 281,765,802 |
| இவ்வாண்டின்போதான மாற்றல்கள் | - | - | (41,500) | - | (41,500) |
| இவ்வாண்டின்போதான சேர்க்கைகள் | - | 3,535,293 | 676,565 | - | 4,211,858 |
| இவ்வாண்டின்போதான சேர்க்கைகள்- நி.து.ந.தி. | - | - | - | - | - |
| இவ்வாண்டின்போதான விற்பனைகள் | - | (438,358) | (787,413) | (708,000) | (1,933,770) |
| 31.12.2023 இல் உள்ளவாறான மீதி | 45,165,786 | 54,006,134 | 181,212,121 | 3,618,348 | 284,002,390 |
| திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | |
| 01.01.2023 இல் உள்ளவாறான மீதி | 34,845,131 | 41,773,301 | 141,049,389 | 4,324,731 | 221,992,551 |
| இவ்வாண்டின்போதான மாற்றல்கள் | - | - | (1,043) | - | (1,043) |
| இவ்வாண்டின்போதான பெறுமானத்தேய்வு | 2,863,341 | 2,715,750 | 12,497,730 | 1,618 | 18,078,439 |
| இவ்வாண்டின்போதான பெறுமானத்தேய்வு - நி.து.ந.தி. | - | - | 2,777,212 | - | 2,777,212 |
| விற்பனைகளிலான திரண்ட பெறுமானத்தேய்வு | - | (438,358) | (787,413) | (708,000) | (1,933,770) |
| 31.12.2023 இல் உள்ளவாறான மீதி | 37,708,472 | 44,050,693 | 155,535,875 | 3,618,348 | 240,913,389 |
| 31.12.2023 இல் உள்ளவாறான கு.எ.பெ. | 7,457,314 | 9,955,441 | 25,676,246 | - | 43,089,001 |
| 31.12.2022 இல் உள்ளவாறான கு.எ.பெ. | 10,320,655 | 9,135,898 | 40,315,080 | 1,618 | 59,773,251 |
| 31.12.2023 இல் உள்ளவாறான முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் (மேற்குறிப்பிட்ட கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன) | 16,552,286 | 30,350,708 | 107,575,353 | 3,618,348 | 158,096,694 |
| பயனுள்ள ஆயுட்காலம் (வருடங்களின் எண்ணிக்கை) | 10 | 8 | 3-5 | 5 | |

### 7.1 அருவச் சொத்துக்கள்

| விபரம் | கணினி மென்பொருள் |
|---|---|
| கிரயம் | |
| 01.01.2023 இல் உள்ளவாறான மீதி | 34,324,005 |
| இவ்வாண்டின்போதான சேர்க்கைகள் | - |
| இவ்வாண்டின்போதான விற்பனைகள் | - |
| 31.12.2023 இல் உள்ளவாறான மீதி | 34,324,005 |
| திரண்ட பெறுமதிகுறைப்பு | |
| 01.01.2023 இல் உள்ளவாறான மீதி | 56,249 |
| ஆண்டிற்கான பெறுமதிகுறைப்புக் கிரயம் | 9,588,027 |
| விற்பனையிலிருந்தான திரண்ட பெறுமானத்தேய்வு | - |
| 31.12.2023 இல் உள்ளவாறான மீதி | 9,644,276 |
| 31.12.2023 இல் உள்ளவாறான தே.பு.பெ. | 24,679,729 |
| பயனுள்ள ஆயட்காலம் (வருடங்களின் எண்ணிக்கை) | 3-5 |

## 8 இருப்புக்கள்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| எழுதுகருவி, முத்திரை மற்றும் ஈ.டி.பி. நுகர்வுப்பொருட்கள் இருப்பு | 2,216,963 | 4,159,956 |
| மொத்தம் | 2,216,963 | 4,159,956 |

## 9 வருமதிகள்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| நானாவித கடன்பட்டோர்கள் | 632,846 | 128,910 |
| உலக வங்கியின் நி.து.ந.தி. இலிருந்து வருமதியானவை | - | 66,561,467 |
| பண்டிகை முற்பணங்கள் | 1,525,000 | 1,780,000 |
| பணியாட்கள் கடன்கள் | 38,902,866 | 15,909,726 |
| தீர்வை நிதியத்திலிருந்த வருமதியானவை | 114,232,537 | 159,723,957 |
| இழப்பீட்டு நிதியத்திலிருந்து வருமதியானவை | 26,047,222 | 15,563,295 |
| தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திலிருந்து வருமதியானவை | 11,262,760 | 0 |
| தடைசெய்யப்பட்ட பணியாளிடமிருந்து வருமதியானவை | 5,212,815 | 5,212,815 |
| மொத்தம் | 197,806,896 | 264,880,170 |

## 10 நிலையான வைப்புகளில் முதலீடுகள்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| இலங்கை வங்கியுடனான நிலையான வைப்பு | 662,333 | 654,244 |
| மொத்தம் | 662,333 | 654,244 |

நிலையான வைப்புகளில் முதலீடுகளின் கீழ் அறிக்கையிடப்பட்ட தொகையானது இலங்கை வங்கிக்கு இ.பி.ப.ஆ. ஆல் செயற்பாட்டு விடயங்களுக்கான பிணையுரிமையின் கீழ் காணப்படும் நிலையான வைப்புகளின் பெறுமதியினை பிரதிநிதித்துவபப்டுத்துகின்றது.

## 11 வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| எரிபொருள் வைப்பு | 156,000 | 120,000 |
| மொபிடெல் - கூட்டாண்மை தரவுத் தொகுப்புகள் | 15,000 | 15,000 |
| மொபிடெல் - முற்செலுத்தப்பட்ட வின்கல்ஸ் | 12,000 | 12,000 |
| ரெலிகொம் லிமிட்டட் உடனான வைப்புகள் | 23,125 | 23,125 |
| டயலொக் உடனான வைப்புகள் | 8,500 | 8,500 |
| விரொஸ்ட்டி - சூடான மற்றும் குளிரான நீர் விநியோகம் | 12,899 | 12,899 |
| இலங்கை முதலாளிமார் சம்மேளனம் | 0 | 62,500 |
| DHL கூரியர் சேவை | 30,000 | 30,000 |
| ORCL - மெனேஜ்மன்ட் கோர்ப். கொன்டோமினியம் திட்டம் 1824 | 44,522,736 | 44,522,736 |
| வழங்குநர்களுக்கான முற்பணங்கள் | 18,673,987 | 21,030,485 |
| மொத்தம் | 63,454,247 | 65,837,245 |

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 12 காசும் காசுக்குச் சமனானவைகளும்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு | 18,072,304 | 52,107,145 |
| கையிலுள்ள காசு | 40,000 | 40,000 |
| மொத்தம் | 18,112,304 | 52,147,145 |

### 13 திரண்ட நிதியம்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 0 | 0 |
| வருடத்திற்கான வருமானத்தை விஞ்சிய செலவினம் | (446,662,381) | (331,264,461) |
| வருமானத்தை விஞ்சிய செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட மாற்றல்கள் | 446,662,381 | 331,264,461 |
| வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி | 0 | 0 |

### 14 மானியம் - மூலதனச் செலவினங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல்கள்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 40,157,488 | 58,702,817 |
| மூலதனச் செலவினங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்து மாற்றல் | 4,211,857 | 804,782 |
| மானியங்களின் அங்கீகாரம் | (18,087,517) | (19,350,111) |
| வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி | 26,281,828 | 40,157,488 |
| | | |
| குறிப்பு: | | |
| மானியங்களின் அங்கீகாரம் | | |
| மானியங்கள் பின்வரும் வீதங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன | | |
| மோட்டார் வாகனங்கள் | 10.00% | 10.00% |
| தளபாடமும் பொருத்திகளும் | 12.50% | 12.50% |
| அலுவலக உபகரணம் - இலத்திரணியல் தரவு செயல்முறை மற்றும் ஏனையவை | 20.00% to 33.33% | 20.00% to 33.33% |
| பயிற்சி உபகரணம் | 20.00% | 20.00% |

### 15 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

| | 2023 | 2022 |
|---|---|---|
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 68,889,206 | 59,054,227 |
| வட்டிச் செலவினம் | 12,400,057 | 6,791,236 |
| நடைமுறை சேவைக் கட்டணம் | 6,254,212 | 5,320,905 |
| இவ்வாண்டின்போது செலுத்தப்பட்ட பணிக்கொடை | (6,307,108) | (9,804,479) |
| தேறிக காப்பீட்டுக் கணிப்பு (இலாபம்)/ நட்டம் | 16,284,547 | 7,527,317 |
| வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி | 97,520,914 | 68,889,206 |

ஓய்வுபெறல் நலன் கடப்பாடானது ஒரு சுயாதீன தொழில்சார் மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ளப்படும் காப்பீட்டுக் கணிப்பின் அடிப்படையிலாகும். காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது கழிவிறக்க வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதங்கள், இறப்பு வீதங்கள் போன்றவற்றில் அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றத. திட்டத்தின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக, அத்தகைய மதிப்பீடுகள் நிச்சயமற்றதன்மைகளுக்கு உட்பட்டவையாகும். அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படும்.

பணியாள் நலன்களின் கிரயத்தினை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிரதான அனுமானங்கள்

| | 2023 | 2022 |
|---|---|---|
| ஓய்வுபெறல் வயது | 60 வருடங்கள் | 55 வருடங்கள் |
| கழிவிறக்க வீதம் | 13% p.a | 18% p.a. |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 10% p.a. | 15% p.a. |

## 15.1 பயன்படுத்தப்பட்ட அனுமானங்களின் உணர்திறன்

அனுமானங்களிலான ஒரு சதவீத மாற்றம் பொறுப்பில் பின்வரும் விளைவினை ஏற்படுத்தும்.

| | கழிவிறக்க வீதம் | எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் ரூ. |
|---|---|---|
| 1% அதிகரிப்பு | 93,186,040 | 102,803,449 |
| 1% குறைப்பு | 102,251,213 | 92,608,196 |

ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டின் ஒரு காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது 31 டிசம்பர் 2023 இல் ஒரு தொழில்சார் காப்பீட்டுக் கணிப்பாளரான, எக்சுயேரியல் அன்ட் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டினால் மேற்கொள்ளப்பட்டது. பொறுப்பின் பெறுமதியினை மதிப்பிடுவதற்காக காப்பீட்டுக் கணிப்பாளரால் பயன்படுத்தப்பட்ட பெறுமதியிடல் முறையானது, "எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறை (எஅ.வ.) ஆகும் என்பதுடன் இம்முறையானது இலங்கை அரசத் துறை கணக்கீட்டு நியமமான - SLPSAS 19 "பணியாளர் நலன்" இனால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 16 செலுத்தவேண்டிய வருமான வரி

| | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| செலுத்தவேண்டிய வருமான வரி வ/ம 2020/21 | (2,909,457) | (2,909,457) |
| செலுத்தவேண்டிய வருமான விரி வ/ம 2022/23 | - | 248,729,238 |
| செலுத்தவேண்டிய வருமான வரி வ/ம 2023/24 | 150,294,410 | 0 |
| மொத்தம் | 147,384,953 | 245,819,781 |

**16.1** வரி மதிப்பாண்டு 2020/21 இற்கான வருமதியான வருமான வரிக்காக, ஒரு வரி மதிப்பீடானது உள்நாட்டு இறைவரித் திணைகளத்தினால் வழங்குப்பட்டுள்ளது, இது பிரதானமாக திரண்ட நிதியத்திற்கான ஒரு மாற்றலினை அனுமதிக்காததனாலாகும், இதனை இ.பி.ப.ஆ. ஒரு தகுதியான கொடுப்பனவாக கருதியுள்ளது. இந்த மதிப்பீட்டிற்கு எதிராக ஒரு நிர்வாக மீளாய்வினை இ.பி.ப.ஆ. வேண்டியுள்ளதுடன், இது அவர்களது 11 மார்ச் 2024 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் உ.இ.றி. ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 17 கடன்கொடுத்தோரும் அட்டுறுகளும்

| | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| இ-தொடர்பாடல், தொலைபேசி மற்றும் இணையம் | 784,000 | 820,000 |
| மின்சாரம் | 1,650,006 | 477,161 |
| பணியாட்கள் தொடர்பான செலவினங்கள் | 5,236,710 | 4,110,502 |
| வெளிவாரி கணக்காய்வு கட்டணங்கள் | 600,000 | 650,000 |
| உள்வாரி கணக்காய்வு கட்டணங்கள் | 3,905,930 | 1,500,000 |
| சட்ட மற்றும் தொழில்சார் கட்டணங்கள் | 82,600 | 715,991 |
| பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் கருத்தரங்குச் செலவினங்கள் | 11,150,881 | 6,488,087 |
| சந்தை கண்காணிப்புச் செலவினம் | - | 1,546,875 |
| பிரயாணம் - உள்ளூர் | 199,762 | 101,319 |
| செலுத்தவேண்டிய வாடகை வைப்பு | 1,536,792 | 1,536,792 |
| செலுத்தவேண்டிய ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி. | 4,176,927 | 3,263,226 |
| பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 354,314 | 1,227,960 |
| உள்ளகப் பயிலுநர் படிகள் | 190,833 | 148,333 |
| செலுத்தவேண்டிய தொழில்சார் கட்டணம் | 21,850 | - |
| மோட்டார் வாகனங்கள் தொடர்பான செலவினங்கள் | 170,440 | - |
| செய்தித்தாள்களும் கூரியர் கட்டணங்களும் | 351,920 | - |
| பணியாளர் நலன் மற்றும் அலுவலக பராமரிப்பு | 237,500 | - |
| ஆலோசகர் படிகள் | 40,000 | - |
| ஆணைக்குழு அங்கத்தவர் கூட்டக் கட்டணம் | 48,869 | 90,669 |
| மூ.ச.க.ப. விரிவுரைக் கட்டணங்கள் | 12,500 | - |
| ஏனைய செலுத்தவேண்டியவை | 6,964,972 | 108,422 |
| செலுத்தவேண்டிய பி.வை.வ. | 5,000 | - |
| வர்த்தக வரி | 37,721,806 | 22,785,337 |

### 18 உலக வங்கியின் நிதியில் துறை நவீனமயப்படுத்தல் திட்டம் (நி.து.ந.தி.)

| | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| விற்பனையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை - நி.து.ந.தி. | 0 | 50,122,635 |
| மொத்தம் | 0 | 50,122,635 |

உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் (நி.து.ந.தி.) முடிவுறுத்தலின் பின்னர், உள்வாங்குதல் விண்ணப்பங்கள், முற்பணங்களது தீர்ப்பனவினை சமர்ப்பித்தல் உள்ளடங்கலாக திட்டத்தின் ஏதேனும் நிலுவையிலுள்ள நடவடிக்கையின் நிறைவுறலை விரைவுபடுத்தவும் ஏதேனும் பயன்படுத்தப்படாத நிதி மீதிகளை அமைச்சிற்கு திருப்பி அனுப்பமாறும் நிதி அமைச்சு அறிவுறுத்தியது. இதன் பிரகாரம், இ.பி.ப.ஆ. இத்திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவு செய்ததன் பின்னர், இ.பி.ப.ஆ. ஒரு காசோலை மூலம் ரூபா 445,139.93 இனை நிதி அமைச்சிற்கு திருப்பிச் செலுத்தியது. நி.து.ந.தி. இன் இரண்டு கூறுகளின் கீழ் பின்வருவன நிறைவேற்றப்பட்டன.

பின்வருவன நி.து.ந.தி. இன் இரண்டு கூறுகளின் கீழ் நிறைவு செய்யப்பட்டன.

"கூறு I - விளைவு அடிப்படையிலான நிதியளித்தல் கூறு

உலக வங்கியினால் பகிர்ந்தளிப்பு-இணைக்கப்பட்ட விளைவுகள் (DLRs) ஆக வெளிப்படுத்தப்பட்ட இனங்காணப்பட்ட கொள்கை சீர்திருத்தங்களின் வெற்றிகரமான நிறைவேற்றலைத் தொடர்ந்து ஒதுக்கப்பட்ட நிதிகள் இ.பி.ப.ஆ. இற்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இ.பி.ப.ஆ. கூறு I இன் கீழ் குறிப்பிடப்பட்ட அனைத்து கொள்கை நடவடிக்கை உருப்படிகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்ததுடன், ஒதுக்கப்பட்ட நிதிகள் தொகையானக மொத்தமாக USD 2 மில்லியனை பெற்றது (இது ரூபா 533,396,869..32 இற்குச் சமானானதாகும்).

"கூறு II - முதலீட்டு அடிப்படையிலான நிதியளித்தல் கூறு

நி.து.ந.தி. இன் கூறு II இன் கீழ், இனங்காணப்பட்ட பொருட்டகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மற்றும் பணியாட்களுக்கான கொள்திறன் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக செயலத்திற்கு நிதியளித்தல் கிடைக்கப்பெறுகின்றது. திட்டம் நிறைவடையும்போது, உலக வங்கியானது கூறு II இன் கீழ் இ.பி.ப.ஆ. இற்கு USD 519,059.54 (இது ரூபா 163,324,066.66 இற்கு சமனானதாகும்) இனை செலுத்தியது."

## 19 நி.து.நி. திட்டத்திலிருந்தான வருமானம்

| | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| FSMP - DLI நிதிகள் | 164,073,632 | 171,674,295 |
| FSMP - DLI அல்லாத நிதிகள் | 12,365,239 | 578,444 |
| மொத்தம் | 176,438,871 | 172,252,739 |

## 20 ஆளணிச் செலவினங்கள்

| | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| பணியாட்கள் சம்பளங்கள் | | 202,907,059 | 160,983,569 |
| தலைவரது படி | | 1,053,333 | 1,200,000 |
| சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு செலவீடுசெய்தல்கள் | | 2,261,652 | 6,319,668 |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் கூட்டக் கட்டணங்கள் | | 1,290,000 | 1,440,000 |
| ஆலோசகர்களது படிகள் | | 3,900,000 | 3,000,000 |
| பணியாட்கள் நல்வாழ்வு மற்றும் ஏனைய பணியாள் தொடர்பான கொடுப்பனவுகள் | | 49,696,830 | 37,965,470 |
| ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. | | 30,147,948 | 24,445,433 |
| பணியாட்கள் பணிக்கொடை | 15 | 34,938,816 | 19,639,457 |
| பணியாட்கள் மருத்துவ செலவினங்களும் காப்புறுதியும் | | 16,974,080 | 16,113,521 |
| பணியாட்கள் வீடமைப்பு கடன் வட்டி உதவித்தொகை | | 1,846,995 | 1,914,419 |
| பணியாட்கள் வாகனப் படிகள் | | 25,291,778 | 25,881,000 |
| வெளிநாட்டு பயிற்சி மற்றும் பிரயாணம் | | 13,522,257 | 7,081,485 |
| பணியாட்கள் பயிற்சி - உள்ளூர் | | 2,319,608 | 1,371,374 |
| அங்கத்துவத்திற்கான சந்தாப்பணம் மற்றும் கற்கைக்கான நிதியுதவி | | 2,003,525 | 1,769,646 |
| கல்விக்கான அனுசரணைகள் | | 142,123 | 222,784 |
| விளம்பரம் - ஆட்சேர்த்தல் | | 2,441,499 | 667,864 |
| உள்ளகப் பயிலுநர் படிகள் | | 2,761,667 | 2,420,417 |
| மொத்தம் | | 393,499,169 | 312,436,108 |

* உறுதிசெய்யப்பட்ட ஊழியர்களுக்கு மேற்படிப்பிற்காக ஆகக்கூடிய தொகையாக ரூபா 250,000 மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வழங்கப்படுகின்றது. இத்துடன் பரீட்சையில் முழுமையாக சித்தி எய்தியதன் பின்னர் இ.பி.ப.ஆ. இல் இரண்டு வருடங்கள் சேவையாற்றல் வேண்டும் என்ற ஒப்பந்தமொன்றையும் உள்ளடக்குகின்றது. ஊழியர் கற்கை நெறியினை ஏதேனும் காரணத்திற்காக பூர்த்தி செய்யத் தவறினால் அல்லது பதவி விலகினால், இ.பி.ப.ஆ. னால் செலவிடப்பட்ட கிரயத்தினை அந்த ஊழியர் முழுமையாக மீள்செலுத்துதல் வேண்டும். பரீட்சையில் சித்தி எய்தியதன் பின்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் ஊழியர் முழுமையாகச் சேவை செய்யத் தவறினால் இ.பி.ப.ஆ. னால் செலவிடப்பட்ட கிரயத்தை ஊழியர் விகிதாசாரப்படி எஞ்சிய ஒப்பந்தக் காலத்திற்கு மீள்செலுத்துதல் வேண்டும்

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 21 நிலைய மற்றும் நிர்வாகச் செலவினங்கள்

| | குறிப்பு | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|---|
| வாடகை மற்றும் வாகனத் தரிப்பிட வாடகை | | 140,069,454 | 110,895,458 |
| மின்சாரக் கட்டணங்கள் | | 8,624,452 | 4,833,475 |
| அலுவலகப் பராமரிப்பு | | 344,650 | 512,160 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பும் காப்புறுதியும் | | 1,891,059 | 2,134,086 |
| மென்பொருள் புதுப்பிப்பு மற்றும் பராமரிப்பு | | 15,202,944 | 10,741,282 |
| தொலைபேசி, இணையம், இ-தொடர்பாடல் மற்றும் தரவுச் செயன்முறை | | 10,338,868 | 8,868,781 |
| மோட்டார் வாகன எரிபொருள், பராமரிப்பு, உரிமம் மற்றும் காப்புறுதி | | 10,165,435 | 4,658,580 |
| தொழில்சார் கட்டணங்கள் | | 291,367 | 942,031 |
| கூட்டச் செலவினங்கள் | | 1,813,913 | 1,701,589 |
| செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் | | 720,190 | 589,802 |
| அச்சிடலும் எழுதுகருவியும் | | 6,194,704 | 6,866,091 |
| பிரயாணம் உள்ளூர் | | 2,591,423 | 1,380,062 |
| காப்புறுதி - அனைத்து இடர், பொது பொறுப்பு, காசு இடைவழியில் மற்றும் தீ | | 288,409 | 260,770 |
| அஞ்சல். முத்திரைத் தீர்வை மற்றும் கூரியர் கட்டணங்கள் | | 1,136,528 | 1,110,706 |
| சட்டச் செலவினங்கள் | | 3,368,860 | 2,646,930 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - உள்வாரி | | 1,850,000 | 1,424,100 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - வெளிவாரி | | 564,100 | 284,000 |
| பொதுச் செலவினங்கள் | | - | 4,212 |
| வர்த்தக வரி | | 5,000 | 5,000 |
| விருந்தளிப்பு | | 102,978 | 15,580 |
| பெறுமானத்தேய்வு / பெறுமானக்குறைப்பு - நி.து.ந.தி. | | 12,365,239 | 578,444 |
| பெறுமானத்தேய்வு | 7 | 18,077,395 | 19,350,111 |
| மொத்தம் | | 236,006,969 | 179,803,251 |

## 22 மூலதனச் சந்தை அபிவிருத்தி, வெளிவாரி உறவுகள், மூ.ச.க., கண்காணிப்பு மற்றும் புலனாய்வுச் செலவினங்கள்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் மூலதனச் அபிவிருத்தியும் | 21,773,762 | 29,328,796 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,959,364 | 1,678,495 |
| சர்வதேச அங்கத்துவக் கட்டணம் - ச.பி.ஆ.ஒ. | 7,000,543 | 7,334,807 |
| பகிரங்கம் மற்றும் விளம்பரம் | - | 147,015 |
| சந்தை கண்காணிப்பு கிரயம் | 5,278,991 | 11,820,060 |
| புலனாய்வு மற்றும் பரிசீலனை செலவினங்கள் | 17,131 | 18,890 |
| மொத்தம் | 36,029,791 | 50,328,063 |

## 23 நிதிச் செலவினங்கள்

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 48,190 | 120,430 |
| மொத்தம் | 48,190 | 120,430 |

## 24 பாதீட்டிற்கெதிரான உண்மையான வருமானம் மற்றும் செலவினத்தின் ஒப்பீடு

| | உள்ளபடியானது 2023 ரூ. | பாதீடு 2023 ரூ. | வேறுபாடு ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| உரிமமளித்தல் கட்டணங்கள் | 4,100,649 | 3,655,000 | 445,649 |
| நிர்வாகக் கட்டணம் | 6,522,148 | 2,000,000 | 4,522,148 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 11,629,061 | 8,357,500 | 3,271,561 |
| வட்டி வருமானம் | 72,280 | 0 | 72,280 |
| ஏனைய வருமானம் | 1,126,302 | 10,000,000 | (8,873,698) |
| பணியாட்கள் கடன்களிலான வட்டி | 944,910 | 840,000 | 104,910 |
| நி.து.ந.திட்டத்திலிருந்து வருமானம் | 176,438,871 | 176,269,484 | 169,387 |
| இ.பி.ப.ஆ. ஆல் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம் | 200,834,221 | 201,121,984 | (287,763) |
| கழி: செலவினங்கள் | | | |
| ஆளணிச் செலவினங்கள் | (370,321,656) | (369,645,760) | (675,896) |
| நிர்வாக மற்றும் நிலையச் செலவுகள் | (227,110,129) | (231,503,488) | 4,393,358 |
| தொழில்சார் அபிவிருத்தி | (18,707,703) | (57,166,110) | 38,458,407 |
| தொழில்சார் கட்டணங்கள் | (13,383,780) | (21,961,433) | 8,577,653 |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி | (36,012,660) | (54,634,337) | 18,621,677 |
| நிதியியல் கட்டணம் | (48,190) | (73,373) | 25,183 |
| மொத்த வருவாய்ச் செலவினம் | (665,584,119) | (734,984,500) | 69,400,381 |
| கழி: வருமான வரிச் செலவினம் | - | - | - |
| வருமானத்தினை விஞ்சிய மேலதிக வருவாய் செலவினம் | (464,749,898) | (533,862,516) | 69,112,618 |

## 24. மூலதனக் கடப்பாடுகள்

31.12.2023 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 25. நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2023 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 26. அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் ஏதேனும் செம்மையாக்கல்கள் அவசியமான பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

## 27. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

2023 ஆம் ஆண்டின்போது பதவிவகித்த ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளார்கள்:

- திரு. வைசால் சாலி, 15 பெப்ரவரி 2023 இல் தலைவராக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்.
- திரு. மனில் ஜயசிங்க, 10 ஜனவரி 2022 முதல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஜீவ முதலிகே, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அன்டன் கொட்விரி, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க, கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சய பண்டார, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திருமதி. ஈவட் பர்னாந்து, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திருமதி. ஏ. நிலந்தி ஜயகி டி அல்விஸ், 20 ஒக்டோபர் 2023 இல் நியமிக்கப்பட் ஒரு அங்கத்தவர்.
- திரு. ரஜீவ் அமரசூரிய, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி துறந்தார்கள்.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

- திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச., தலைவராக நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர், 09 ஜனவரி 2023 முதல் பதவியினை துறந்தார்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, 24 ஆகஸ்ட் 2023 முதல் பதவியினை துறந்தார்.
- திரு. ரஜீவ் அமரசூரிய, 02 மே 2023 முதல் பதவியினை துறந்தார்.

மீளாய்வாண்டின்போது பதவி வகித்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது தொடர்புகளை பின்வரும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. வைசால் சாலி | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டட் | 16 பெப்ரவரி 2023 வரைக்கும் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | தலைவர் - ஜூன் 2023 இல் பதவிக்காலம் நிறைவடைந்தது | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | ஜூன் 2023 இலிருந்து உடனடி கடந்தகால தலைவர் | பூச்சியம் |
| திரு. மனில் ஜயசிங்க | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் | 30 ஜூன் 2023 வரைக்கும் முகாமைப் பங்காளர் | பூச்சியம் |
| | டீசல் அன்ட் மோட்டர் இன்ஜினியரிங் கம்பனி லிமிட். | செப்டம்பர் 2023 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | சிலோன் ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி | ஒக்டோபர் 2023 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | NMJ லெசர் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. சுஜீவ முதலிகே | CIC ஹோல்டிங்ஸ் பிஎல்சி | பணிப்பாளர் | பூச்சியம் |
| | NDB பிஎல்சி | | பூச்சியம் |
| திரு. என்டன் கொட்விரி | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திருமதி. ஏ.நிலந்தி ஜயகி டி அல்விஸ் | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொதுத் திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிருவகம் | 02 ஜூன் 2023 முதல் தலைவர் | பூச்சியம் |
| திரு. சன்ஜீவ திசாநாயக்க | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழு | | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | | பூச்சியம் |
| திருமதி. ஈவட் பர்னாந்து | இலங்கை மத்திய வங்கி | சிரேஷ்ட பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| | இலங்கை கடன் தகவல் பணியகம் (CRIB) | தலைவர் | பூச்சியம் |
| | அப்பி வெனுவென் அப்பி நிதியம் | முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | ஆணைக்குழு அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| திரு. ஹேசன குருப்பு | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | 18 டிசம்பர் 2023 முதல் தலைவர் | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | குழும நிதியியல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் ஒட்டோமொபைள்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி லங்கா (பிரைவேட்) லிமிட்டட | | பூச்சியம் |
| | DP இன்வோடெக் (பிரைவேட்) லிமிட்டட் | நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | எலக்ட்ரோசென் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | பூச்சியம் |
| | எலக்ட்ரோசென் குளோபல் (பிரைவேட்) லிமிட்டட் | | பூச்சியம் |
| | எவினிட்டி இனொவேசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | நிறைவேற்றுநரல்லா தலைவர் | பூச்சியம் |
| | தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் | துணைத் தலைவர் | பூச்சியம் |

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டின்போது பதவி துறந்த தலைவர் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்களின் உறவுமுறையினை காண்பிக்கின்றது. .

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச. | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| திரு. சஞ்சய பண்டார | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவனம் | 18 டிசம்பர் 2023 வரைக்கும் தலைவர் | பூச்சியம |
| | பிரைம் லேண்ட் ரெசிடன்சீஸ் பிஎல்சி | | பூச்சியம |
| | அபான்ஸ் வைனானஸ் பிஎல்சி | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம |
| | லுமினெக்ஸ் பிஎல்சி | | பூச்சியம |
| திரு. அன்டனி சனில் பர்னாந்து | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

இ.பி.ப.ஆ. பின்வரும் மூன்று நடைமுறை கணக்குகளை இலங்கை வங்கியில் (இ.வ.) பராமரிப்பதுடன் அவற்றின் வங்கி மீதிகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன்

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி (ரூ.) | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 0000001694 | 25,650,638 | 63,384,501 |
| | 0009919753 | 676,000 | 1,488,143 |
| | 0083810081 | (3,500) | 17,255,538 |

2023 ஆம் ஆண்டின்போது பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன

| முதலீட்டின் வகை | இவ்வாண்டின்போது இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | இ.வ. இல் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| நிலையான வைப்பு | 0 | 662,333 |

இதற்கும் மேலாக, மீளாய்வாண்டில் பின்வரும் அட்டவணையானது நிறுவனங்களுடன் மேற்கொண்ட ஏனைய கொடுக்கல் வாங்கல்களை சித்தரிக்கின்றது. இவற்றுடன் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஆளுகை அங்கங்களுடன் அங்கத்தவர்களாக செயற்படுகின்றார்கள்.

| பணம் பெறுநர் | கொடுப்பனவின் விவரிப்பு | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | அங்கத்துவ புதுப்பிப்புகள், தேசிய கருத்தரங்கு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 544,300/- |
| பணிப்பாளர், வங்கியியல் கற்கைக்கான மத்திய நிலையம் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 381,000/- |

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } BAN/G/CESS/FA/23/3 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 16 May 2024

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழவினது தீர்வை நிதியத்தின் ("நிதியம்") 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தீர்வை நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணைர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 48,022,800 | 3,010,320,650 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 2,917,881,550 | 148,878,960 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | | 2,181,865,396 | 1,453,364,761 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 28,905,222 | 24,559,621 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டி | | 120,055,761 | 115,829,935 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 30,124 | 67,307 |
| வருமதியான தீர்வை | | 1,871,698 | 6,055,532 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 7 | 53,711,537 | 75,145,466 |
| மொத்த சொத்துக்கள் | | 5,352,344,088 | 4,834,222,233 |
| நிதியங்களும் பொறுப்புக்களும் | | | |
| பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும் | | | |
| திரண்ட நிதியம் | | 5,237,847,551 | 4,674,258,276 |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| இ.பி.ப.ஆ. இற்கு செலுத்தவேண்டியவை | | 114,232,537 | 159,723,957 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 264,000 | 240,000 |
| மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும் | | 5,352,344,088 | 4,834,222,233 |

பக்கங்கள் 98 முதல் 102 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

நிரோஷா கொடிகார
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

சிந்தக்க மென்டிஸ்
பணிப்பாளர் நாயகம்

வைசால் சாலி
தலைவர்

கொழும்பு
02 பெப்ரவரி 2024

# நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| இவ்வருடத்தின்போது பெறப்பட்ட தீர்வை | | 555,368,722 | 916,667,624 |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 282,231,921 | 323,891,505 |
| திறைசேரி உண்டியல்களிலான வட்டி | | 363,364,864 | 148,575,637 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி | | 68,042,515 | 22,753,914 |
| மொத்த வருமானம் | | 1,269,008,022 | 1,411,888,680 |
| | | | |
| செலவினம் | | | |
| செயற்பாட்டு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக இ.பி.ப.ஆ. இற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | | (450,883,659) | (332,084,732) |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (286,200) | (268,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (371,122) | (138,800) |
| மொத்த செலவினம் | | (451,540,981) | (332,491,532) |
| | | | |
| செலவினத்தை விஞ்சிய வருமானம் (வரிக்கு முன்) | | 817,467,041 | 1,079,397,148 |
| | | | |
| வருமான வரிச் செலவினம் | 8 | (253,877,766) | (289,517,197) |
| | | | |
| செலவினத்தை விஞ்சிய வருமானம் (வரிக்கு பின்) | | 563,589,275 | 789,879,951 |

பக்கங்கள் 98 முதல் 102 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# தீர்வை நிதியத்திலான மாற்றங்களின் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான தீர்வை நிதியத்திலான மாற்றங்களின் கூற்று | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| திரண்ட நிதியம் | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 4,674,258,276 | 3,884,378,325 |
| ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய வருமானம் | 563,589,275 | 789,879,951 |
| திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | 0 | 0 |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி | 5,237,847,551 | 4,674,258,276 |

பக்கங்கள் 98 முதல் 102 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| செலவினத்தை விஞ்சிய வருமானம் (வரிக்கு பின்) | 563,589,275 | 789,879,951 |
| செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 563,589,275 | 789,879,951 |
| **செயற்படு மூலதனத்திலான மாற்றங்கள்** | | |
| வருமதியான தீர்வையின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 4,183,835 | 21,234,418 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | (4,345,601) | 51,960,407 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | (4,225,826) | (115,829,935) |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 37,184 | 78,824 |
| செலுத்தவேண்டியவைகளில் அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (45,467,419) | (33,592,805) |
| | (49,817,828) | (76,149,090) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | 513,771,447 | 713,730,861 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்குள்ளான காசுக் பாய்ச்சல்கள்** | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 193,295,259 | 355,702,976 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | (728,500,635) | (1,453,364,761) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | (535,205,375) | (1,097,661,785) |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (21,433,929) | (383,930,924) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு A) | 75,145,466 | 459,076,390 |
| காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு B) | 53,711,537 | 75,145,466 |
| **குறிப்பு (A)** | | |
| **காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 73,757,104 | 452,265,730 |
| வங்கியிலுள்ள காசு | 1,388,362 | 6,810,660 |
| | 75,145,466 | 459,076,390 |
| **குறிப்பு (B)** | | |
| **காலப்பகுதியின் இறுதியல் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 51,917,248 | 73,757,104 |
| வங்கியிலுள்ள காசு | 1,794,289 | 1,388,362 |
| | 53,711,537 | 75,145,466 |

பக்கங்கள் 98 முதல் 102 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 1 பொதுவான தகவல்கள்

#### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியமானது (தீர்வை நிதியம் ) 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14பி (1) இன் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ) என்பவற்றால் திருத்தியமைக்கப்பட்டு நிறுவப்பட்டதுடன் இது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (புதிய இ.பி.ப.ஆ.) பிரிவு இலக்கம் 156 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 156 (1) இவ்வாறு கூறுகின்றது, "பிரிவு 155 இன் கீழ் விதிக்கப்படும் தீர்வை வருவாயினை வரவு வைப்பதற்காக ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படவேண்டிய "தீர்வை நிதியம்" என்றழைக்கப்படும் ஒரு நிதியம் நிறுவப்படல் வேண்டும்."

தீர்வை நிதியமானது இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் வாழ்வகத்தினைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு 01, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம் - கிழக்கு கோபுரம், 28 மற்றும் 29 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

#### 1.2 செயற்பாடுகளின் தன்மை மற்றும் பிரதான நடவடிக்கைகள்

21 செப்டம்பர் 2021 முதல் அமுலிலுள்ள 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க புதிய பி.ப.ஆ, சட்டத்தின் பிரிவு 156 (2) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தின் வரவில் தேங்கியுள்ள பணமானது பின்வரும் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படலாம்:

(அ) பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்தல்

(ஆ) இழப்பீட்டு நிதியத்தின் அல்லது இந்த பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துவதற்கு

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் செயற்படுத்தலில் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் ஆணைக்குழுவினை செயற்படுத்துவதில் ஆட்படும் அனைத்து செலவினங்களையும் சந்தித்தல்

(ஈ) ஆணைக்குழு பொருத்தமானது என்று கருதுகின்றவாறு ஆணைக்குழுவின் பணியாட்களுக்கு வீடமைத்தல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து தேவைகளுக்கு கடன் வழங்குதல்

(உ) பணிப்பாளர் நாயகம் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், வேலையாட்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்கள் மற்றும் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களது நலனுக்காக நிறுவப்படும் ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் ஏனைய நிதியங்களுக்கு பங்களிப்பினை மேற்கொள்வதற்கு; மற்றும்

(ஊ) ஆணைக்குழுவினால் நிரூபிக்கப்பட்ட தகுதி வாய்ந்தவர்கள் என தீர்மானிக்கப்பட்டவாறு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சேவையாட்களின் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆட்படும் கற்கைச் செலவுக்காக பணங்கட்டுவதற்கு.

மேலும், புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 156 (3) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தின வரவில் ஏதேனும் மிகையான பணம் இருப்பின், அதனை தீர்வை நிதியத்தினை விருத்திசெய்வதற்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

#### 1.3 இணக்கப்பாடு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தினது நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தீர்வை நிதியத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

#### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

#### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை தீர்வை நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தீர்வை நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

#### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ. தீர்வை நிதியத்திற்கு தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தீர்வை நிதியத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்குகின்றது

தீர்வை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் மற்றும் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

#### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவாகும். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 1.8 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தீர்வை நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் முன்னிலைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.9 பொருண்மை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை பொருண்மையானவையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் தீர்வை நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

### 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

### 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற பொருண்மையான நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.13 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2 சொத்துக்கள் மற்றும் அவற்றின் பெறுமதியிடலின் அடிப்படைகள்

### 2.1 முதலீடுகள்

முதலீடுகள் உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளிலும், அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலை மற்றும் அறிக்கையிடும் காலப்பகுதி வரைக்குமான அட்டுறு வட்டி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

### 3.1 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் கோரும் பட்சத்தில், செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4 நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் இருப்பின், அவை ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 5 செலவின அங்கீகரிப்பு

நிதியியல் செயற்திறனை உறுதிசெய்யும்போது தீர்வை நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டுறு அடிப்படையில் வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

## 6 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

## 7 காசும் காசுக்குச் சமனானவைகளும்

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடுகள் | 51,917,248 | 73,757,104 |
| வங்கியிலுள்ள காசு | 1,794,289 | 1,388,362 |
| மொத்தம் | 53,711,537 | 75,145,466 |

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 8 வருமான வரிச் செலவினம்

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2023<br>ரூ | 2022<br>ரூ. |
|---|---|---|
| இற்கான வருவான வரிச் செலவினம் Y/A 2021/2022 | 0 | (495,581) |
| இற்கான வருவான வரிச் செலவினம் Y/A 2022/2023 | (514,193) | 290,012,778 |
| இற்கான வருவான வரிச் செலவினம Y/A 2023/2024 | 254,391,959 | 0 |
| மொத்தம் | 253,877,766 | 289,517,197 |

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைய, திருத்தியமைக்கப்பட்டவாறு, கணிக்கப்படுகின்றது.

### 9 மூலதனக் கடப்பாடுகள்

31.12.2023 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

### 10 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2023 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

### 11 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களுக்கு ஏதேனும் செம்மையாக்கல்கள் அவசியமான பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

### 12 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

தீர்வை நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது.

- திரு. வைசால் சாலி, 15 பெப்ரவரி 2023 இல் தலைவராக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்.
- திரு. மனில் ஜயசிங்க, 10 ஜனவரி 2022 முதல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஜீவ முதலிகே, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அன்டன் கொட்விரி, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க, கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சய பண்டார, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திருமதி. ஈவட் பர்னாந்து, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திருமதி. ஏ. நிலந்தி ஜயகி டி அல்விஸ், 20 ஒக்டோபர் 2023 இல் நியமிக்கப்பட் ஒரு அங்கத்தவர்.
- திரு. ரஜீவ் அமரசூரிய, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி துறந்தார்கள்.
- திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச., தலைவராக நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர், 09 ஜனவரி 2023 முதல் பதவியினை துறந்தார்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, 24 ஆகஸ்ட் 2023 முதல் பதவியினை துறந்தார்.
- திரு. ரஜீவ் அமரசூரிய, 02 மே 2023 முதல் பதவியினை துறந்தார்.

மீளாய்வாண்டின்போது பதவி வகித்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது தொடர்புகளை பின்வரும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம் ஏதும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. வைசால் சாலி | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | எச்.என்.பி. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டட் | 16 பெப்ரவரி 2023 வரைக்கும் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | தலைவர் - பதவிக்காலத்தினை ஜுன் 2023 இல் நிறைவுசெய்தார். | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | ஜுன் 2023 முதல் உடனடி கடந்தகால தவைர் | பூச்சியம் |
| திரு. மனில் ஜயசிங்க | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் | முகாமைத்துவ பங்காளி 30 ஜுன் 2023 வரை | பூச்சியம் |
| | டீசல் அன்ட் மோட்டர் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டட் | செப்டம்பர் 2023 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | சிலோன் ஹொஸ்பிட்டல்ஸ் (டர்டன்ஸ்) | ஒக்டோபர் 2023 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | என்.எம்.ஜே. லெசர் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. சுஜீவ முதலிகே | CIC ஹோல்டிங்ஸ் பிஎல்சி | பணிப்பாளர் | |
| | NDB பிஎல்சி | | |
| | | | பூச்சியம் |
| திரு. என்டன் கொட்விரி | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொதுத் திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிருவகம் | 02 ஜுன் 2023 முதல் தலைவர் | பூச்சியம் |
| திரு. சன்ஜீவ திசாநாயக்க | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | | பூச்சியம் |
| | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | | பூச்சியம் |
| திருமதி. யூவட் பர்னாந்து | இலங்கை மத்திய வங்கி | பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| | இலங்கை கடன் தகவல் பணியகம் (CRIB) | தலைவர் | பூச்சியம் |
| | அபி வெனுவென் அபி நிதியம் | முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | ஆணையாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| திரு. ஹேசன குருப்பு | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | 18 டிசம்பர் 2023 முதல் தலைவர் | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | குழும நிதியியல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | டேவிட் பீரிஸ் ஒட்டோமொபைள்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி லங்கா (பிரைவேட்) லிமிட்டட | | |
| | DP இன்வோடெக் (பிரைவேட்) லிமிட்டட் | நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | எலக்ட்ரோசென் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | எலக்ட்ரோசென் குளோபல் (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | எவினிட்டி இனொவேசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | நிறைவேற்றுநரல்லா தலைவர் | பூச்சியம் |
| | தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் | துணைத் தலைவர் | பூச்சியம் |

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

மீளாய்வாண்டின்போது பதவி துறந்த ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களின் தொடர்புகளை கீழ் காணும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச. | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| திரு. சஞ்சய பண்டார | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவனம் | 18 டிசம்பர் 2023 வரைக்கும் தலைவர் | பூச்சியம் |
| | பிரைம் லேண்ட் ரெசிடன்சீஸ் பிஎல்சி | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | அபான்ஸ் வைனானஸ் பிஎல்சி | | பூச்சியம் |
| | லுமினெக்ஸ் பிஎல்சி | | பூச்சியம் |
| திரு. அன்டனி சனில் பர்னாந்து | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

இ.பி.ப.ஆ. இன் தீர்வை நிதியமானது பின்வரும் நடைமுறைக் கணக்கினை இலங்கை வங்கியில் பராமரிப்பதுடன் அதன் வங்கி மீதி கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி (ரூ.) | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம் | 0009834430 | 758,577 | 363,351 |

2023 ஆம் ஆண்டின்போது பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வாண்டின்போது இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | இ.வ. இல் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | 0 | 3,010,320,651 |
| திறைசேரி உண்டியல்கள் | 2,920,858,397 | 2,181,865,396 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 21,307,460,170 | 51,917,248 |
| மொத்தம் | 24,228,318,567 | 5,244,103,295 |

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/G/COM/FA/23/4    ඔබේ අංකය / உமது இல. / Your No.    දිනය / திகதி / Date 16 May 2024

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழவினது இழப்பீட்டு நிதியத்தின் ("நிதியம்") 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, இழப்பீட்டு நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

## 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

NAOSL
ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | - | 369,424,068 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 364,797,020 | 24,816,310 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | | 316,298,243 | 201,936,911 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 4,881,903 | 4,594,270 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டி | | 26,066,606 | 15,878,275 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 841 | 8,460 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 7 | 1,792,442 | 8,615,687 |
| மொத்த சொத்துக்கள் | | 713,837,055 | 625,273,981 |
| நிதியங்களும் பொறுப்புக்களும் | | | |
| பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும் | | | |
| திரண்ட நிதியம் | | 687,591,834 | 609,508,687 |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| இ.பி.ப.ஆ. இற்கு செலுத்தவேண்டியவை | | 26,047,221 | 15,563,294 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 198,000 | 202,000 |
| மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும் | | 713,837,055 | 625,273,981 |

பக்கங்கள் 111 முதல் 115 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

நிரோஷா கொடிகார
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

சிந்தக்க மெண்டிஸ்
பணிப்பாளர் நாயகம்

வைசால் சாலி
தலைவர்

கொழும்பு
02 பெப்ரவரி 2024

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

## நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 34,993,992 | 46,233,518 |
| திறைசேரி உண்டியல்களிலான வட்டி | | 53,151,838 | 17,168,552 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி | | 6,051,914 | 1,157,502 |
| இவ்வாண்டில் பெறப்பட்ட ஒத்திணங்கல் தண்டப்பணங்கள் | | 17,900,000 | 10,400,000 |
| மொத்த வருமானம் | | 112,097,744 | 74,959,572 |
| செலவினம் | | | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (223,700) | (200,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (252,622) | (72,180) |
| மொத்த செலவினம் | | (476,322) | (272,180) |
| செலவினத்தினை விஞ்சிய வருமானம் (வரிக்கு முன்) | | 111,621,422 | 74,687,392 |
| வருமான வரிச் செலவினம் | 8 | (33,538,275) | (20,749,823) |
| செலவினத்தினை விஞ்சிய வருமானம் (வரிக்கு பின்) | | 78,083,147 | 53,937,569 |

பக்கங்கள் 111 முதல் 115 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# இழப்பீட்டு நிதியத்தில் மாற்றங்களிலான கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களின் கூற்று | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| திரண்ட நிதியம் | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 609,508,687 | 555,571,118 |
| செலவினத்தினை விஞ்சிய மிகை வருமானம் | 78,083,147 | 53,937,569 |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி | 687,591,834 | 609,508,687 |

பக்கங்கள் 111 முதல் 115 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

## காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| செலவினத்திலும் மிகையான வருமானம் | 78,083,147 | 53,937,569 |
| செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 78,083,147 | 53,937,569 |
| செயற்படு மூலதனத்திலான மாற்றங்கள் | | |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | (287,633) | 8,407,946 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | (10,188,330) | (15,878,275) |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 7,620 | 4,945 |
| இ.பி.ப.ஆ. இற்கு செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 10,483,926 | 9,717,762 |
| ஏனைய செலுத்தவேண்டியவைகளில் அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (4,000) | 2,000 |
| | 11,583 | 2,254,379 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | 78,094,729 | 56,191,947 |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்குள்ளான காசுக் பாய்ச்சல்கள் | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 29,443,357 | 113,632,425 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | (114,361,332) | (201,936,911) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | (84,917,975) | (88,304,486) |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (6,823,245) | (32,112,539) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு A) | 8,615,687 | 40,728,226 |
| காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு B) | 1,792,442 | 8,615,687 |
| குறிப்பு (A) | | |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 8,000,000 | 40,000,000 |
| வங்கியிலுள்ள காசு | 615,687 | 728,226 |
| | 8,615,687 | 40,728,226 |
| குறிப்பு (B) | | |
| காலப்பகுதியின் இறுதியல் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 1,200,000 | 8,000,000 |
| வங்கியிலுள்ள காசு | 592,442 | 615,687 |
| | 1,792,442 | 8,615,687 |

பக்கங்கள் 111 முதல் 115 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 பொதுவான தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியமானது (இழப்பீட்டு நிதியம் ) 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 38 (1) இன் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ) என்பவற்றால் திருத்தியமைக்கப்பட்டு நிறுவப்பட்டதுடன் இது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (புதிய இ.பி.ப.ஆ. சட்டம்) பிரிவு இலக்கம் 158 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (1) பின்வருமாறு கூறுகின்றது: 'யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுவதாக ஆணைக்குழுவினால் கண்டறியப்பட்டு அதன் விளைவாக பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு வரையறுத்த இழப்பீட்டினை வழங்கும் நோக்கத்திற்காக "இழப்பீட்டு நிதியம்" என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.'

இழப்பீட்டு நிதியமானது இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் வாழ்வகத்தினைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு 01, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம் - கிழக்கு கோபுரம், 28 மற்றும் 29 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

### 1.2 செயற்பாடுகளின் தன்மையும் பிரதான நடவடிக்கைகளும்

21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (1) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுவதன் நோக்கம் யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுகின்றார் என ஆணைக்குழு கண்டறிந்து அதன் விளைவாக பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு வரையறுத்த இழப்பீட்டினை வழங்குவதற்காகும்.

மேலும், புதிய பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (2) இழப்பீட்டு நிதியம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றது

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிப்படக்கூடிய அத்தகைய பணத் தொகைகள்

(ஆ) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியத்திற்கு வரவு வைக்கக்கூடிய அத்தகைய பணத் தொகைகள் மற்றும்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

இதற்கும் மேலாக, புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (3) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

### 1.3 இணக்கப்பாடு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தினது நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இழப்பீட்டு நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இழப்பீட்டு நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்குகின்றன.

இழப்பீட்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் மற்றும் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன..

நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 1.8 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் முன்னிலைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் ஏதேனும் இருப்பின், யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.9 பொருண்மை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை பொருண்மையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

### 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

### 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.13 கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 முதலீடுகள்

உரிமமளிக்கப்பட்ட அரசாங்க வங்கிகளில், நிலையான வைப்புகள் மற்றும் குறுங்கால முதலீடுகள், அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. இவை கிரயத்தில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதிவரைக்குமான அட்டுறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்படுகின்றன.

### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

### 3.1 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள், கோரும் பட்சத்தில், செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4 நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 பெறப்பட்ட தண்டப்பணம்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இழப்பீட்டு நிதியத்தினால் பெறப்படும் தண்டப்பணம் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் இருப்பின், அவை ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 5 செலவின அங்கீகரிப்பு

நிதியியல் செயற்திறனை உறுதிசெய்யும்போது இழப்பீட்டு நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டுறு அடிப்படையில் வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

## 6 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

## 7 காசும் காசுக்குச் சமனானவைகளும்

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 1,200,000 | 8,000,000 |
| வங்கியிலுள்ள காசு | 592,442 | 615,687 |
| மொத்தம் | 1,792,442 | 8,615,687 |

## 8 வருமான வரிச் செலவினம்

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| வ/ம 2022/2023 க்கான வருமான வரிச் செலவினம் | 51,849 | 20,749,823 |
| வ/ம 2023/2024 க்கான வருமான வரிச் செலவினம் | 33,486,426 | - |
| மொத்தம் | 33,538,275 | 20,749,823 |

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்திற்கமைய, திருத்தியமைக்கப்பட்டவாறு, கணிப்பிடப்படுகின்றது.

## 9 மூலதனக் கடப்பாடுகள்

31.12.2023 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 10 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2023 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 11 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களுக்கு ஏதேனும் செம்மையாக்கல்கள் அவசியமான நிகழ்வுகள் எதுவும் ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

## 12 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள

இழப்பீட்டு நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டின்போது பதவிவகித்த ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளார்கள்:

- திரு. வைசால் சாலி, 15 பெப்ரவரி 2023 இல் தலைவராக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்.
- திரு. மனில் ஜயசிங்க, 10 ஜனவரி 2022 முதல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஜீவ முதலிகே, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அன்டன் கொட்விரி, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க, கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சய பண்டார, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திருமதி. ஈவட் பர்னாந்து, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் இவர் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திருமதி. ஏ. நிலந்தி ஜயகி டி அல்விஸ், 20 ஒக்டோபர் 2023 இல் நியமிக்கப்பட் ஒரு அங்கத்தவர்.
- திரு. ரஜீவ் அமரசூரிய, 24 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி துறந்தார்.

- திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச., தலைவராக நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர், 09 ஜனவரி 2023 முதல் பதவியினை துறந்தார்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, 24 ஆகஸ்ட் 2023 முதல் பதவியினை துறந்தார்.
- திரு. ரஜீவ் அமரசூரிய, 02 மே 2023 முதல் பதவியினை துறந்தார்.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

மீளாய்வாண்டின்போது பதவி வகித்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது தொடர்புகளை பின்வரும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. வைசால் சாலி | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | எச்.என்.பி. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டட் | 16 பெப்ரவரி 2023 வரைக்கும் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | தலைவர் - பதவிக்காலத்தினை ஜூன் 2023 இல் நிறைவுசெய்தார். | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | ஜூன் 2023 முதல் உடனடி கடந்தகால தலைவர் | பூச்சியம் |
| திரு. மனில் ஜயசிங்க | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் | முகாமைத்துவ பங்காளி 30 ஜூன் 2023 வரை | பூச்சியம் |
| | டீசல் அன்ட் மோட்டர் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டட் | செப்டம்பர் 2023 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | சிலோன் ஹொஸ்பிட்டல்ஸ் (டர்டன்ஸ்) | ஒக்டோபர் 2023 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | என்.எம்.ஜே. லெசர் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. சுஜீவ முதலிகே | CIC ஹோல்டிங்ஸ் பிஎல்சி | பணிப்பாளர் | பூச்சியம் |
| | NDB பிஎல்சி | | பூச்சியம் |
| | | | பூச்சியம் |
| திரு. என்டன் கொட்விரி | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொதுத் திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிருவகம் | 02 ஜூன் 2023 முதல் தலைவர் | பூச்சியம் |
| திரு. சன்ஜீவ திசாநாயக்க | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழு | | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | | பூச்சியம் |
| திருமதி. யூவட் பர்னாந்து | இலங்கை மத்திய வங்கி | பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| | இலங்கை கடன் தகவல் பணியகம் (CRIB) | தலைவர் | பூச்சியம் |
| | அபி வெனுவென் அபி நிதியம் | முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | ஆணையாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| திரு. ஹேசன குருப்பு | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | 18 டிசம்பர் 2023 முதல் தலைவர் | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | குழும நிதியியல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | டேவிட் பீரிஸ் ஒட்டோமொபைள்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி லங்கா (பிரைவேட்) லிமிட்டட | | |
| | DP இன்வோடெக் (பிரைவேட்) லிமிட்டட் | நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | எலக்ட்ரோசென் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | எலக்ட்ரோசென் குளோபல் (பிரைவேட்) லிமிட்டட் | | |
| | எவினிட்டி இனொவேசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | நிறைவேற்றுநரல்லா தலைவர் | பூச்சியம் |
| | தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் | துணைத் தலைவர் | பூச்சியம் |

மீளாய்வாண்டின்போது பதவி துறந்த ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களின் தொடர்புகளை கீழ் காணும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன, ஐ.ச. | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| திரு. சஞ்சய பண்டார | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவனம் | 18 டிசம்பர் 2023 வரைக்கும் தலைவர் | பூச்சியம் |
| | பிரைம் லேண்ட் ரெசிடன்சீஸ் பிஎல்சி | | பூச்சியம் |
| | அபான்ஸ் வைனானஸ் பிஎல்சி | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | லுமினெக்ஸ் பிஎல்சி | | பூச்சியம் |
| திரு. அன்டனி சனில் பர்னாந்து | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியமானது பின்வரும் நடைமுறைக் கணக்கிளை இலங்கை வங்கியில் பராமரிப்பதுடன் அதன் வங்கி மீதியானது கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி (ரூ.) | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம் | 75433985 | 592,441 | 615,687 |

2023 ஆம் ஆண்டின்போது பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வாண்டின்போது இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | இ.வ. இல் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | 0 | 369,424,068 |
| திறைசேரி உண்டியல்கள் | 347,189,119 | 316,298,243 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையில் முதலீடு | 1,806,216,154 | 1,200,000 |
| மொத்தம் | 2,153,405,273 | 686,922,311 |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය எனது இல. My No. | BAN/G/SGF/FA/23/5 | ඔබේ අංකය உமது இல. Your No. | දිනය திகதி Date 16 May 2024 |

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினது தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் ("நிதியம்") 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1998 ஆம் ஆண்டிற்கு முன்னிலைப்படுத்தப்பட்ட பாதீட்டின் முன்மொழிவான ஒரு நிதியத்தினை நிறுவுதல் தொடர்பாக 21.̇.22 மே 1998 திகதியிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புறுதி இலக்கம் 1376 இன் பந்தி 11 (டி) இன் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | - | 90,631,135 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | - | 300,000,000 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 90,631,135 | 104,229,240 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | | 1,146,692,978 | 555,183,888 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 4,937,500 | 8,451,206 |
| நிலையான வைப்புகளில் வருமதியான வட்டி | | - | 50,054,797 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டி | | 76,718,382 | 44,371,549 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 2,242 | 9,519 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 5 | 3,783,399 | 9,412,567 |
| மொத்த சொத்துக்கள் | | 1,322,765,636 | 1,162,343,902 |
| நிதியங்களும் பொறுப்புக்களும் | | | |
| பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும் | | | |
| மானியம் - திறைசேரி | | 50,000,000 | 50,000,000 |
| மானியம் - தீர்வை நிதியம் | | 100,000,000 | 100,000,000 |
| மானியம் - கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | | 100,000,000 | 100,000,000 |
| திரண்ட நிதியம் | | 1,028,305,407 | 891,173,149 |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 6 | 32,999,470 | 20,970,753 |
| இ.பி.ப.ஆ. இற்கு செலுத்தவேண்டியவை | | 11,262,760 | 0 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 198,000 | 200,000 |
| மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும் | | 1,322,765,636 | 1,162,343,902 |

பக்கங்கள் 124 முதல் 126 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள்

தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

சிந்தக்க மெண்டிஸ்
நம்பிக்கைப் பொறுப்பாளர் - தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

வைசால் சாலி
நம்பிக்கைப் பொறுப்பாளர் - தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

வைசால் சாலி
தலைவர்

கொழும்பு
02 பெப்ரவரி 2024

# நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி | | 18,650,158 | 4,438,743 |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 11,612,198 | 41,994,928 |
| திறைசேரி உண்டியல்களிலான வட்டி | | 153,122,102 | 47,443,738 |
| நிலையான வைப்புகள் முதலீடுகளிலான வட்டி | | 13,054,518 | 19,273,973 |
| மொத்த வருமானம் | | 196,438,976 | 113,151,382 |
| செலவினம் | | | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (225,700) | (291,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (292,036) | (106,480) |
| மொத்த செலவினம் | | (517,736) | (397,480) |
| செலவினத்திலும் மிகையான வருமானம் (வரிக்கு முன்) | | 195,921,240 | 112,753,901 |
| வருமான வரிச் செலவினம் | 7 | (58,788,983) | (28,067,832) |
| செலவினத்திலும் மிகையான வருமானம் (வரிக்கு பின்) | | 137,132,257 | 84,686,069 |

பக்கங்கள் 124 முதல் 126 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| திரண்ட நிதியம் | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 891,173,149 | 806,487,080 |
| ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய வருமானம் | 137,132,257 | 84,686,069 |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறன மீதி | 1,028,305,407 | 891,173,149 |

பக்கங்கள் 124 முதல் 126 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| செலவினத்திலும் மிகையான வருமானம் | 137,132,257 | 84,686,069 |
| செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 137,132,257 | 84,686,069 |
| செயற்படு மூலதனங்களின் மாற்றம் | | |
| ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 21,228,948 | (53,989,850) |
| செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு / (வீழச்சி) | 23,289,477 | 11,666,606 |
| | 44,518,425 | (42,323,244) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | 181,650,682 | 42,362,826 |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்குள்ளான காசுக் பாய்ச்சல்கள் | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 104,229,240 | 278,775,190 |
| நிலையான வைப்புகளிலான முதலீடுகள் | 300,000,000 | 0 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | (591,509,090) | (555,183,888) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | (187,279,850) | (276,408,698) |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (5,629,168) | (234,045,873) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு A) | 9,412,567 | 243,458,440 |
| காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு B) | 3,783,399 | 9,412,567 |
| குறிப்பு (A) | | |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 9,000,001 | 242,950,000 |
| வங்கியிலுள்ள காசு | 412,566 | 508,440 |
| மொத்தம் | 9,412,567 | 243,458,440 |
| குறிப்பு (B) | | |
| காலப்பகுதியின் இறுதியல் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 3,200,001 | 9,000,001 |
| வங்கியிலுள்ள காசு | 583,398 | 412,566 |
| மொத்தம் | 3,783,399 | 9,412,567 |

பக்கங்கள் 124 முதல் 126 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 1. பொதுவான தகவல்கள்

#### 1.1 இணக்கப்பாட்டு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது (தீ.உ.நி.) ஓர் இலாபமீட்டாத நம்பிக்கை நிதியமாகும். இது 1988 இல் நம்பிக்கை பொறுப்புறுதி இலக்கம் 1376, திருத்தியமைக்கப்பட்டவாறு, இன் காரணமாக நிறுவப்பட்டது. இதன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

தீ.உ.நி. இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்துவதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

#### 1.3 தயாரிப்பிற்கான அடிப்படை

தீ. உ. நி இன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்து வரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

#### 1.4 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### 1.5 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த ஆண்டில் கடைப்பிடிக்கப்பற்றவற்றுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன.

#### 1.6 ஒப்பிடப்படும் எண்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றல்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

### 2. சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

#### 2.1 முதலீடுகள்

முதலீடுகள் அரசாங்கத் திறைசேரி முறிகளிலும், உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்புகளிலும் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலும் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலையில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதி வரைக்குமான அட்டுறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளன.

#### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

#### 3.1 ஓய்வுபெறல் நலன்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய பணிக்கொடை செலுத்தவேண்டிய எவ்வித பொறுப்புக்களும் எழவில்லை. ஏனெனில் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தை நம்பிக்கைப் பொறுப்பாளர் நிர்வகிப்பதால் நிதியத்தில் உத்தியோகத்தர் எவரும் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

#### 3.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

செலுத்தவேண்டியவைகள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4. நிதிச் செயற்திறன் கூற்று

#### 4.1 வருமான அங்கீகரிப்பு

முதலீடுகளிலான வட்டி ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### 4.2 செலவின அங்கீகரிப்பு

தீ.உ.நி இனைப் பேணுவதில் ஏற்படும் சகல செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதியியல் செயற்திறனை அறிவதற்காக வருமானத்தில் இருந்து கழிக்கப்படுகின்றன.

#### 4.3 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமனானவையும், கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளிடம் மேற்கொள்ளப்பட்ட மூன்று மாதங்களுக்குட்பட்ட முதிர்வினைக் கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றது.

### 5. காசும் காசுக்குச் சமனானவைகளும்

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 3,200,001 | 9,000,001 |
| வங்கியிலுள்ள காசு | 583,398 | 412,566 |
| மொத்தம் | 3,783,399 | 9,412,567 |

### 6. செலுத்தவேண்டிய வருமான வரி

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| வ/ம 2021/2022 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | (101,382) | (101,382) |
| வ/ம 2022/2023 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | 0 | 20,970,753 |
| வ/ம 2023/2024 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | 33,100,852 | 0 |
| மொத்தம் | 32,054,470 | 20,970,753 |

## 7. வருமான வரிச் செலவினம்

| 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூ. | 2022 ரூ. |
|---|---|---|
| வ/ம 2022/2023 க்கான வருமான வரிச் செலவினம் | 12,611 | 28,067,832 |
| வ/ம 2023/2024 க்கான வருமான வரிச் செலவினம் | 58,776,372 | 0 |
| மொத்தம் | 58,788,983 | 28,067,832 |

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டது, ஏற்பாடுகளுக்கமைய வருமானவரிப் பொறுப்பானது கணிப்பிடப்பட்டுள்ளது

## 8. மூலதனக் கடப்பாடுகள்

31 டிசம்பர் 2023 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 9. நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31 டிசம்பர் 2023 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 10. அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

நம்பிக்கைப் பொறுப்பாளர் நிகழ்வுகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து தேவையேற்படும்போது ஐந்தொகைத் திகதியின் பின்னரான முக்கியமான நிகழ்வு தொடர்பாக பொருத்தமான விதத்தில் நடைமுறை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்களை மேற்கொள்வார்.

## 11. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்

நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

தீ.உ.நி. இன் கீழ்காணும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் 2023 இல் பதவி வகித்தார்கள்;

- திரு. வைசால் சாலி, தலைவர் இ.பி.ப.ஆ.
- திரு. சிந்தக்க மென்டிஸ், பணிப்பாளர் நாயகம், இ.பி.ப.ஆ.
- திரு. டில்ஷான் வீரசேகர, தலைவர், கொ.ப.ப.
- திரு. ரஜீவ பண்டாரநாயக்க, பிரதம நிறைவேற்று அதிகாரி, கொ.ப.ப.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, இ.பி.ப.ஆ. இன் ஆணையாளர் மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர்

பின்வரும் அட்டவணையானது இவ்வாண்டின்போது நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக பதவி வகிகத்தவர்களின் தொடர்புகளை வெளிப்படுத்துகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. வைசால் சாலி | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | எச்.என்.பி. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டட் | 16 பெப்ரவரி 2023 வரைக்கும் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | தலைவர் - பதவிக்காலத்தினை ஜுன் 2023 இல் நிறைவுசெய்தார். | பூச்சியம் |
| | இலங்கை பணிப்பாளர்கள் நிருவகம் | ஜுன் 2023 முதல் உடனடி கடந்தகால தவைர் | பூச்சியம் |
| திரு. தில்ஷான் வீரசேகர | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | தலைவர் | பூச்சியம் |
| | ஹட்டர் கோப் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 16.67% |
| | சென்ரல் டிப்பொசிட்டரி சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | தலைவர் | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் / பிநிஅ | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் டிரசரீஸ் பிஎல்சி | நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங் பிஎல்சி | முகாமைப் பணிப்பாளர் / பிநிஅ | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் / பிநிஅ | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் மார்க்ட்ஸ் லிமிட்டட் | பணிப்பாளர் / பிநிஅ | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்)லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ட்ரஸ்ட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் / பிநிஅ | பூச்சியம் |

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. ரஜீவ பண்டாரநாயக்க | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | வரையறுக்கப்பட்ட இலங்கை நிதியியல் சேவைகள் பணியகம் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொதுத் திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம்| |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிருவகம் | 02 ஜுன் 2023 முதல் தலைவர் | பூச்சியம் |
| திரு. சிந்தக்க மென்டிஸ் | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | பணிப்பாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | கட்டுமான உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டின்போது பதவி துறந்த நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்களின் தொடர்புகளை விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம் ஏதும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 09 ஜனவரி 2023 வரைக்கும் தலைவர் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

தீ.உ.நி. இலங்கை வங்கியில் (இ.வ.) பின்வரும் நடைமுறை கணக்கினை பராமரிப்பதுடன் அதன் மீதி கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | 1833 | 583,398 | 412,566 |

2023 ஆம் வருடத்தில் பின்வரும் முதலீடுகள் இ.வ. ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வருடத்தில் இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | 31 டிசம்பர் 2023 இல் இ.வ. இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | - | 90,631,135 |
| திறைசேரி உண்டியல்கள் | 1,228,296,019 | 1,146,692,978 |
| மீ.கொ.உ. இல் முதலீடு | 5,749,189,375 | 3,200,001 |
| மொத்தம் | 6,977,485,394 | 1,240,524,114 |

# கூட்டாண்மைத் தகவல்கள்

காரியாலய முகவரி

மாடி 28 மற்றும் 29
கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
எச்சிலன் சதுக்கம்
கொழும்பு 1.
இலங்கை

தொலைபேசி

+94 11 2143843

தொலைநகல்

+94 11 2439149

மின்னஞ்சல்

mail@sec.gov.lk

இணையம்

www.sec.gov.lk

கணக்கீட்டு வருடம்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
சம்பத் பேங்க் பிஎல்சி
கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி

Designed & produced by
emagewise
Digital Plates & Printing by Softwave Printing and Packaging (Pvt) Ltd

SEC

SECURITIES AND EXCHANGE
COMMISSION OF SRI LANKA